
கல்கி
புத்தாண்டுமலர்
15-4-62 KALKI 30 காசு


Surf
AMAZING BLUE POWDER
FOR THE WHITEST WASH!
வீட்டுச் சலவையின்
பெருமை
ஸர்ப் சலவையின்
அருமை



எந்நேரத்திலும்
எவ்விடத்திலும்
எச்சந்தர்ப்பத்திலும்
நீங்கள் எழில் மேம்படக் காண்கிறீர்கள்
கடாவ்
வாயில்களில்
E KHATAU MAKANJI SPG. & WVG. CO. LTD. ● Mills: Byculla, Bombay. ● Office: Laxmi Bldg., Ballard Estate Bombay 1
சில்லறை விற்பனை நிலையம் : 216, நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, சென்னை 1



ஏப்ரல்
13
முதல்
சென்னை
பிளாசா
பாரத்
மகாலட்சுமி
மற்றும் தென்னாடெங்கும்
தேவர்
பிலிம்ஸ்
தாயைக்காத்த
தனயன்
கதை, வசனம்.. ஆரூர்தாஸ்...பாடல்கள்..கண்ணதாசன்...சங்கீதம்.. K.V. மஹாதேவன்
ஒளிப்பதிவு.. C.V. மூர்த்தி...கலை...C. ராகவன்..ஸ்டூடியோ...விஜயா... வாஹினி...
டைரக்ஷன்· M.A. திருமுகம் · தயாரிப்பு-சாண்டோ M.M.A. சின்னப்பா தேவர்


ELEGANT



# கல்கி

## புத்தாண்டு மலர் ✻ பொருளடக்கம்

**சுபகிருது, சித்திரை-2, ஏப்ரல்-15, 1962**




"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





புகையிலையின் வரலாறு... 3.
புகையிலையைப்பற்றிய அறிவும் உபயோகமும் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும், பிற நாடுகளிலும் பரவியது. உருளைக் கிழங்கு, தக்காளி இனத்தைச் சேர்ந்த அதனை 1508-ல் போர்ச்சுக்கேசியர் நம் நாட்டிற்குக் கொணர்ந்தனர். அதுமுதல் புகையிலை இந்திய மண் மீது தழைத்து வந்துள்ளது. இந்தியாவில் இன்று புகையிலை உற்பத்திக்குப் பிரதானமான மாகாணங்கள்: பம்பாய், பீகார், ஆந்திரம், வங்காளம், சென்னை, மைசூர் ஆகியவையே.
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and fragrant smoke from selected Virginia Tobacco leaves
GTC
பனமா
ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது
பம்பாய்—57.
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.
GT.703 TM
Greens' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 37

# நல்லனவே செய்வோம்!

சுபக்ருத ஆண்டில் வீட்டிலும் நாட்டிலும் சுபங்கள் செழிக்க வேண்டுமென சுபங்களின் இருப்பிடமான இறைவனை இறைஞ்சுகிறோம். நம் ஏட்டினைக் கண்ணுறும் அன்பர்கள் யாவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

'சுபக்ருத்' என்றால் நலன்களைச் செய்வது என்று பொருள். உண்மையில் இந்த நலன்களைச் செய்வது என்னவோ ஆண்டு அல்ல. நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம் நாம்தான் இந்த ஆண்டை அதன் பெயருக்கேற்றபடி உருவாக்க வேண்டும்; நம்மால் கட்டுப்படுத்த முடியாத இயற்கை உற்பாதங்கள் ஏதும் விளையாமல் இந்த ஆண்டின் பெயரைக் காத்துத் தருமாறு காலத்தையும், ஞாலத்தையும் படைத்த மகா சக்தியைப் பிரார்த்திக்க வேண்டும்.

நமது நடவடிக்கை நம்முடைய வசம் உள்ளது என்ற ஆணவத்தை விட்டுச் சற்று சிந்தித்துப் பார்த்தால் நம்மை நல்வழிப்படுத்தி நற்பணிகளில் ஈடுபடுத்துமாறும் அந்தச் சக்தியையேதான் வேண்டிக் கொள்ள வேண்டும் என்பது தெரியும்.

'எண்ணிய முடிதல் வேண்டும்; நல்லவே எண்ணல் வேண்டும்'


என்று வேண்டினார் மகாகவி பாரதியார்.

நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதை விட நல்லவைகளையே எண்ண வேண்டுமென்பது முக்கியமாகும். இதயபூர்வமாக நன்மை செய்ய வேண்டும் என்ற துடிப்பு இல்லாமல் பெயருக்காகவும், புகழுக்காகவும் எவ்வளவோ நற்பணிகள் செய்யலாம். அவற்றால் மற்றவர் பயன் பெறலாம். ஆனால் அந்தப் பணிகளைப் புரிந்தவர்கள் அவற்றால் நன்மையும் மேன்மையும் பெறமாட்டார்கள். இதனால்தான் 'நல்லவே எண்ணல் வேண்டும்' என்றார் பாரதியார். எனவே சுப கிருத்தியத்துக்கு முன்பு சுப சிந்தனையை வளர்ப்போம். அதன் பின் அந்த நல்லெண்ணங்களைச் செயலில் காட்டத் தயங்காது எவ்வளவு எதிர்ப்பிருந்தாலும் உறுதியாக இருந்து தொண்டு புரிவோம்.

சிந்தனைக்கும் செயலுக்கும் இடையில் வருவது சொல். நல்லதை எண்ணாமலும், செய்யாமலுமே சொல்லில் மட்டும் நல்லவர்களாக இருந்து விடுவது எளிது. ஆண்டவன் சேவையிலிருந்து மக்கள் சேவை வரை எல்லாவற்றைப் பற்றியும்—தருமம், தியாகம், அன்பு, மனத் தூய்மை, கலைஞானம் யாவற்றைக் குறித்தும்—உள்ளம் கலக்காமலும், செயலுக்குக் கொண்டுவராமலும் சுப வாசகங்களைப் பொழிந்து தள்ளலாம்; தள்ளவும் செய்கிறோம். இந்தப் போலித்தனம் ஆத்ம நாசத்தில்தான் முடியும். எனவேதான், எண்ணிய முடித்துக் காட்டும் செயலையும் நல்லனவே எண்ணும் சிந்தையையும் வேண்டிய கவிஞர், அதே பராசக்தியிடம் 'சொல்லை வேறிடஞ் செல்ல வழிவிடாத'வாறு ஒப்புவித்தார்.

சாமானிய மக்களிலிருந்து நாடுகளை ஆள்கிற, அழிக்கிற தலைவர்கள் வரை யாவரும் இப்படிச் சிந்தனையையும், சொல்லையும், செயலையும் செம்மைப் படுத்திக் கொண்டு விட்டால் சுபக்ருத என்ற இந்த ஆண்டு அறம் செழித்த கிருத யுகமாகவே வளர்ந்து கொண்டு போகும்.

'நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை யெய்தவும்' பரம்பொருளின் அருளை நாடுகிறோம்.


இந்தக் கலைப்பு சோஷலிஸம் அப்பட்டமான மோசம்
தனியார் வியாபாரம் நம்முடைய கட்சியின் காமதேனு
தனியார் வியாபாரம் நம்பெயரைக் காப்பாற்றி வருகிறது. இருந்து விட்டுப் போகட்டும்!
இந்தப் பர்மிட் லைசென்ஸ் ராஜ்யத்தில் தானே நமக்குத் தனி யோகம்!
பட்நாயக்
எஸ்.கே.பாட்டீல்
பெரிய வியாபாரிகள்
Rai

(அட்டைப்பட விளக்கம்) **வாசிக்கும் யாழ்**

பேசி மனங்குளிரச் சொல்பிறவாப்
பேரன்புத் திளைப்பினிலே யிவர்கள்
பேசும் பேச்சொன்றும் பேசாத
உணர்வுகளாய்ப் பேசாமை பேச்சாகிக்

கூசும் கண்கள்நிறை நாணக்
குளமாகி யிருகைகள் இணைதழுவி
வாசிக்கும் யாழெல்லாம் கருத்தாகி
வனப்பை நடித்திருக்கக் கண்டிருப்பான்.

# அம்பை வென்ற அன்பு

குறி வைக்கத் தப்பாது ராமசரம் என்பது பழமொழி. ஆனால் அந்த ராமபாணத்தையும் குறி தப்ப வைத்திருக்கிறான் ஒருவன். வீரராகவனை வெற்றி கண்ட அந்த மகா புருஷன் காருண்ய ராகவனே தான்.

வனவாசத்தின் போது வைதேஹியின் மான் விழி சாமர மானென்றின் மீது பதிகிறது. குறிப்புணரும் பெருமான் உடனே அம்மானின் வால்புறத்தை நோக்கி அம்பை எய்கிறான். மானுக்கு மான உணர்வு பொங்குகிறது. தன் பெருமைக்குக் காரணமான அழகிய வாலைத் தனக்கு இறுதி நினைவு உள்ளவரை இழப்பதில்லை என உறுதி கொள்கிறது அது. உடனே தனது முகத்தைத் திருப்பி வாலை மறைத்துக் கொண்டு அம்புக்கு முகமன் கூறுகிறது. அவ்வளவுதான்! ராமபிரானின் பிரேமை அவனது பராக்கிரமத்தை வெல்கிறது. மற்றுமோர் அம்பைக் கடிது செலுத்தி அதனால் முதலில் எய்த பாணம் இலக்கை அடையுமுன்னரே அதைச் சிதற அடித்து வீழ்த்தி விடுகிறான் கருணை சமுத்திரன். ஆண்மையும் ஆற்றலும் அருளில் ான் உள்ளன என்பதை உணர்த்துகிறான்.

அ

வாக்குக்கு அப்பாற்பட்டது — வாசாமகோசரமே — என்று தொடங்கித் தியாகையர் பாடிப் போற்றும் இந்தச் சம்பவத்தையே நம் நோக்குக்கு உகந்த ஓவியமாக அடுத்த பக்கம் அளித்திருக்கிறார் திரு மணியம்.

மென்மையில்தான் மேன்மை இருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கும் சரிதம் ராமனுடையது. அகலிகை (அ - ஹல்யா) என்றாலே உழ முடியாத கடினமான நிலம் என்றுதான் பொருள். அந்தக் கல்லைப் பெண்ணாகக் கனிவித்த கருணாகரன் ராமன். ஸ்ரீராமநவமித் திருநாளில் அந்தச் சீதா ராமனை வணங்குவோம்; இறுமாப்பினால் இறுகிய நம் கல் மனங்களை இளக்கிக் கொள்வோம்.

ஆணவமும் அறியாமையும் உள்ள வரையில் கடக்க முடியாதது கால வெள்ளம். அதனைக் கோள்களின் போக்கைக் கொண்டே ஆண்டுகளாகப் பகுப்பதுபோல் பாவித்து மகிழ்கிறோம். கோள்கள் எப்படியெல்லாம் சஞ்சரித்தாலும் நிலையாக உள்ளது ஆண்டவனது அருள்தான். எனவே காலத்தைக் கடக்கும் நிலையைப் பக்தி பூர்வமான கானத்தினால் பெற்ற

## காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆசிச் செய்தி




சுபகிருது என்னும் நன்மைதரும் இந்தப் புத்தாண்டில் உலகம் முழுவதிலும் உள்ள எல்லாத் தேச மக்களும், குடும்பங்களும், ஜீவன்களும் எல்லாவித நன்மையையும் அடையவேண்டுமாக ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரஹம் செய்கிறார்கள்.



தியாகையர் 'க்ரஹ பலமேமி - ஸ்ரீராம (அ)நுக்ரஹ பலமே பலமு' என்று பாடியதற்கேற்ப, கிரகங்களைக் 'கைவச மாக்கி'க் கொண்ட ராமனின் அநுக் கிரகத்தை இப் புத்தாண்டு தினத்தில் நாடுவோம்.







# சோமசுந்தரம் பிள்ளை

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சோமசுந்தரம்பிள்ளை ஒரு வைதிக குடும்பத்தைச் சேர்ந்தவன். குழந்தைப் பருவம் முதல் தெய்வ பக்தியில் மனம் செலுத்தி இருபது வயது ஆனவுடன் காளிங்கபுர ஆதீனத்தில் சாஸ்திரம் படித்து முடித்து விட்டுத் தன் ஊராகிய வராகனூருக்குத் திரும்பி வந்தான். ஊரிலும் பண்டிதர்கள் உண்டு. அவர்களுடன் கலந்து தெய்வ மார்க்கத்திலேயே ஈடுபட்டு வந்தான். சொத்து கவனிப்பதில் அவன் மனம் செல்லவில்லை.

தகப்பனுருக்கு அவன் ஒரே மகன். வயது முதிர்ந்த அவன் தகப்பனுருக்கு இப்படி உலக விஷயங்களில் கவனம் செலுத்தாமல் இருக்கிற மகனைப் பற்றிக் கவலையும் வருத்தமும். வேறு வழியில்லை என்று மாப்பிள்ளை செல்லையாப் பிள்ளையை வீட்டிலேயே வைத்துக் கொண்டு அவரே தம் சொத்தை யெல்லாம் நிருவகிக்கச் செய்தார். செல்லையாப் பிள்ளைக்கு வயது நாற்பத்தைந்து. திறமைசாலி.

ஒருநாள் காசியிலிருந்து சந்நியாசி ஒருவர் வராகனூருக்கு வந்தார். வடக்கத்தியாராயினும் தமிழ் நன்றாகப் பேசுவார். சோமசுந்தரம் பிள்ளை அவரைச் சந்தித்துப் பேசி இருவருக்கும் மிகப் பிரியம் ஏற்பட்டது.

சந்நியாசி வராகனூரில் பதினைந்து நாட்கள் தங்கி ஊரில் உள்ள பெரியவர்களிடம் எல்லாம் நல்ல பெயர் எடுத்தார். திரும்பிச் சென்றபோது சோமசுந்தரம் பிள்ளையைக் கூட அழைத்துக் கொண்டு போனார். சிதம்பரத்தில் ஒரு வாரம் இருந்துவிட்டுக் காசிக்குத் தாம் திரும்புவதாகவும் அப்போது சோமசுந்தரனை வராகனூருக்கு அனுப்புவதாகவும் ஏற்பாடு.


ஒரு மாதம் ஆயிற்று. சோமசுந்தரம் திரும்பவில்லை. எங்கே சென்றான் என்பது தெரியவில்லை. தகப்பனாரும் கிழவித் தாயாரும் மிகவும் கவலைப் பட்டு, செல்லையாப் பிள்ளையைக் கொண்டு எங்கெங்கோ விசாரித்துப் பார்த்தும் துப்பு கிடைக்கவில்லை.

சரி, காசிக்குத்தான் போய்விட்டான் என்று தகப்பனாரும் தாயாரும் தீர் மானித்துக் கொண்டு வருத்தத்தில் ஆழ்ந்து காலம் கழித்தார்கள்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் திடீரென்று சோமசுந்தரம் திரும்பி வந்தான். மீசையும் தாடியுமாக இருந்த படியால் முதலில் அடையாளம் தெரிய வில்லை. தெரிந்தவுடன் பெற்றோரும் உறவினரும் மறைந்தவன் வந்து விட்டானே என்று மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஆனால் அவன் நடவடிக்கையைக் கண்டு முன்னைவிட அதிகக் கவலைகொண்டார்கள். முன்பு தெய்வ வழிபாட்டில் பக்தி கொண்டிருந்தவன், இப்போது அதற்கும் மேலாக யோகாப்பியாசத்தில் ஈடுபட்டுப் பல சித்திகளை அடைந்து அவற்றைக் கையாண்டு வருவதாகத் தெரிந்து இது எங்கே கொண்டுபோய் விடுமோ என்று பயந்தார்கள்.

வராகனூரில் பெரிய சாஸ்திரி வாஜபேய தீக்ஷிதர். பிள்ளைவாள் வீட்டுக்கு அவர் வந்து சோமசுந்தரனோடு வாசல் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். "என்ன என்ன சித்திகள் அடைந்தீர்?" என்று கேட்டார்.



# வரலாறு



"உங்கள் உள்ளத்தில் இருப்பதை நேரில் காண்பேன்" என்றான் சோமசுந்தரன்.

"அப்படியானால் இப்போது என்ன கண்டீர்?" என்றார் தீக்ஷிதர்.

"செல்லையாப்பிள்ளையிடம் சொல்லி இரண்டு படி உளுந்து கேட்டு வாங்கிப் போகலாம் என்று வந்திருக்கிறீர்கள்" என்றான் சோமசுந்தரம்பிள்ளை.

தீக்ஷிதர் திடுக்கிட்டார். சோமசுந்தரம் சொன்னது உண்மை. நமஸ்கரித்துவிட்டு வீட்டுக்குள்ளே செல்லையாப் பிள்ளையைக் காணச் சென்றார்.

சில நாட்கள் கழித்து மறுபடியும் சோமசுந்தரம் எங்கேயோ போன இடம் தெரியவில்லை. ஓர் ஆண்டு வரையில் காத்திருந்து பிறகு நிராசை பண்ணிக் கொண்டார்கள்.

சோமசுந்தரம்பிள்ளை பல ஊர்கள் சென்று தான் கற்ற வித்தையைப் பரிசோதித்து வந்தான். சித்தியை அடைந்தது உண்மையேயாயினும் உள்ளத்தில் நிம்மதியில்லை. எங்கே சென்றாலும் அதருமத்தைக் கண்டான். தன்னுடைய சித்தியை உபயோகித்து எல்லாருடைய உள்ளங்களிலும் எதிர்பாராத அவலட்சணங்களைக் கண்டான். 'ஐயோ, உலகம் இப்படி இருக்கிறதே!' என்று வாடி வதங்கினான்.

காசிக்குத் தன் குருவினிடம் மறுபடி சென்றான்.

"பிறர் உள்ளத்தில் இருப்பதை அறிவதில் நான் ஒரு சுகமும் பயனும் காணவில்லை" என்று குருவினிடம் சொன்னான்.

"நான் சொன்னதுதானே அது?" என்றார் சந்நியாசி.

"ஆமாம். சாஸ்திரமும் அதுவே. ஆனாலும் அந்தத் தவறான வழியில் என் மனம் இழுத்துச் சென்றது. நான் செய்தது பெரும் பிழை" என்றான் சோமசுந்தரம்.

"இப்போது என்ன செய்யப் போகிறாய்?" என்றார் சந்நியாசி.

"கங்கையில் விழுந்து சிவனடி செல்லப் போகிறேன்" என்றான் சீடன்.

"மடையனே! அகால மரணத்தினால் சிவனடி சேர மாட்டாய்! பிசாசாய் அலைவாய்!" என்றார்.

"பின் என்ன செய்யச் சொல்கிறீர்கள்? எனக்கு இப்போது உயிரில் கொஞ்சமும் பற்று இல்லையே?" என்றான் சோமசுந்தரம்.

"மகனே! அது தவறு. நீ உண்மையைக் காணவில்லை" என்று சமாதானப் படுத்தி ஒரு மாத காலம் சோமசுந்தரனைத் தம் கூடவே வைத்துக் கொண்டு உபதேசம் செய்து வந்தார் சந்நியாசி.

வராகனூரில் பெரிய கொண்டாட்டம். சோமசுந்தரம் பிள்ளை தாடி மீசை இல்லாமல் அழகிய முகத்துடன் கிரகஸ்தனாக ஊருக்குத் திரும்பி வந்து விட்டான்.

அவனுக்கு விவாகம் நிச்சயமாகிப் பந்தலில் நிச்சய தாம்பூலம் நடக்கிறது. ஊரில் எல்லா ஜாதியாரும் வகுப்பினரும் சைவர்களும் வைஷ்ணவர்களும் மிகக் குதூகலமாகப் பந்தலில் கூடியிருக்கிறார்கள். அக்காளின் பெண், செல்லையாப் பிள்ளையின் மகள்தான் மணமகள். முகத்தில் இயற்கைக் களையுடன் முகூர்த்தத்தின் சந்தோஷமும் சேர்ந்து நடனமாடுகிறது. மங்களம்.

# சென்னை கூட்டுறவு மத்திய வீடு அடமான பாங்க் லிட். நெ. 406

6, ராஜரத்தினம் தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை-10

( டெலிபோன் : 62918 )

**தலைவர் : திரு ஆர். கே. வெங்கிடசாமி**

| | | |
|---|---|---|
| திரு வி. வெங்கடாசலம், பி.ஏ. | ... | *உப தலைவர்* |
| திரு ஜி. வாகீசம் பிள்ளை | ... | *பொருளாளர்* |
| சென்னை மாநில கூட்டுறவு ரிஜிஸ்திரார் | ... | *டைரக்டர்* |
| தமிழ்நாடு அரசாங்க கைத்தொழில் கூட்டுறவு இலாகா கூட்டுச் செயலாளர் | ... | *டைரக்டர்* |
| ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் பிராந்திய மானேஜர், சென்னை | ... | *டைரக்டர்* |
| திரு எம். எஸ். பழனியப்ப முதலியார், பி.ஏ. | ... | *டைரக்டர்* |
| திரு ஆர். சீனிவாசய்யர், பி.ஏ.,பி.எல். | ... | *டைரக்டர்* |
| திரு எம். ச. ராஜா | ... | *டைரக்டர்* |

| | | | |
|---|---|---|---|
| **அதிகாரம் பெற்ற மூலதனம்** | ... | ரூ. | **20,00,000** |
| **செலுத்தப்பட்ட மூலதனம்...** | ... | ரூ. | **11,27,900** |

( சென்னை சர்க்காரால் செலுத்தப்பட்ட பங்குத் தொகை ரூ. 5 லட்சம் உள்பட )

## நிறைந்த பாதுகாப்புடன் கூடிய சிறந்த முதலீடு

சென்னை ராஜ்யத்தில் முனிசிபல் நகரங்களிலிருக்கும் பிரதம கூட்டுறவு வீடு அடமான பாங்குகளுக்குச் சென்னை சர்க்காரின் கூட்டுறவு சப் ரிஜிஸ்திராரின் மேற்பார்வை பாதுகாப்புடன் வீட்டின்பேரில் கடன் வழங்க இந்தத் தலைமை கூட்டுறவு வீடு அடமான பாங்கு நிதி உதவி செய்கிறது.

சர்க்கார் உத்திரவாதத்தின் பேரில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் இந்த பாங்குக்கு நிதி வசதி செய்கிறது.

இந்த பாங்கு, கீழ்க்கண்ட விகிதப்படி பிக்சட் டிபாசிட்டுகளை ஏற்றுக் கொள்கிறது

| | | |
|---|---|---|
| **இந்த பாங்கியில் போடப்படும் பிக்சட் டிபாசிட்டுகளின் வட்டிக்கும் அசலுக்கும் தமிழ்நாடு அரசாங்கம் உத்திரவாதம் அளித்துள்ளது** | ஒரு வருடமும் அதற்கு மேலும் | 4¼% |
| | இரண்டு வருடங்களும் அதற்கு மேலும் | 4½% |
| | மூன்று வருடங்களும் அதற்கு மேலும் | 4¾% |
| | நான்கு வருடங்களும் அதற்கு மேலும் | 5 % |
| | ஐந்து வருடங்களும் அதற்கு மேலும் | 5½% |

ஏ. பி. பாலசுப்ரமணியம், எம். ஏ.

டிபுடி ரிஜிஸ்திரார் — காரியதரிசி

# அன்பே உருவான ஆசாரிய புருஷர்



புது வருடமானது மகான் ஒருவரின் நினைவுடன் தொடங்குகிறது. சுபகிருத் என்ற பதங்களுக்கு என்ன பொருளோ அதனையே அவர் தமது திருநாமமாகக் கொண்டுள்ளதாலேயே உள்ளத்தை நிறைவு செய்யும் இந்த நினைவு ஏற்படுகிறது. பெயரால் மட்டுமின்றி, செயலாலும் மங்களங்களைச் செய்து வரும் அந்த சங்கராசாரியப் பெருந்தகையின் திருவடிகளைப் பணிந்து புத்தாண்டில் அடி வைக்கிறோம்.


'காலம் ஓடிக் கொண்டே இருக்கிறது; ஆயுளும் கழிந்து கொண்டே இருக்கிறது; எனினும் ஆசை மட்டும் விட்டபாடில்லை' என்று பாடினார் ஆதிசங்கர பகவத்பாதர். நம்மைப் போன்ற சாமானிய மக்களின் ஆயுளைக் காலம் விழுங்கிக் கொண்டே தான் போகிறது. காலத்தை வென்று வாழும் அமர நிலையை அடையாதவர்கள் நாம். ஆண்டு ஆண்டாகச் செல்லச் செல்லக் காலம்தான் நம்மை வென்று ஆண்டு கொண்டே போகிறது. நம்முடைய காலம் முடிந்தபின் நம்மை நல்ல முறையில் உலகம் நினைத்துக் கொள்ள நாம் எதனையாவது விட்டுச் செல்வோமா என்றே ஐயமாக இருக்கிறது. ஆனால் தமது புனித எண்ணங்களாலும், அநுபவங்களாலும், செயல்களாலும், காலத்தை ஆண்டு காலாதீதமான தத்துவத்தின் விளக்கமாக வாழும் ஒரு சில பெரியவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகைய பெரியவர்களுக்கெல்லாம் பெரியவராக வாழ்கிறார்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்கள்.

ஜகத்குரு என்று உலகம் போற்றும் இந்தச் சான்றோர்கள் தம் வாழ்நாள் முழுதும் காலத்தின் மாணுக்கராக இருந்து, வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு படிப்பினையாகப் பெற்றே காலத்தைக்கடந்திருக்கிறார்கள். இன்று அவருடைய பரிவைப் பற்றி நாடெல்லாம் புகழ் பாடுகிறது. ஆனால் அந்தப் பரிவையும்விட எல்லையற்ற, ஆழங்காண முடியாத பணிவுதான் அவரை என்றென்றும் மாணுக்கராக இருந்து போதனை பெறச் செய்திருக்கிறது.

தொன்மை வாய்ந்த காமகோடி பீடத்தின் அறுபத்தெட்டாவது பீடாதிபதிகளாக எழுந்தருளியுள்ள பெரியவர்களுக்குத் தம்முடைய அறுபத்தெட்டாண்டு வாழ்க்கையில் அறுபத்தைந்து ஆண்டுகள் நினைவிலிருக்கின்றன. அன்றிலிருந்து அவர் பெற்று வந்த படிப்பினைகளை எல்லாம் சென்ற 26–2–1961 கல்கி இதழில் கூறியிருக்கிறார்கள். அவை நமக்கும் வழிகாட்டியாக விளங்கி நம்மை விளக்குமுறச் செய்யக் கூடியனவாகும்.

மூன்று வயதுப் பாலன் சுவாமிநாதன் – அதுதான் பெரியவர்களின் பூர்வாசிரமப் பெயர் – மர நாயொன்று ஒரு வெல்லத் தோண்டிக்குள் தலையை இட்டுக் கொண்டு வெளியே எடுக்க முடியாமல் படாத பாடு படும் காட்சியைக் கண்டான். ஆனால் மற்றக் குழந்தைகளைப் போல் அதைக் கண்டு சிரித்துக் கும்மாளமிட்டு விட்டுப் போகவில்லை. 'இப்படியும் ஒரு சபலமா? இந்தப் பேராசையும் பெரு வேட்கையும் எங்கிருந்து வந்தன? அதன் பலனாக அல்லவோ இத்தனை குமைச்சலும் உண்டாகியிருக்கிறது?' என்று முதிர்ந்த கருத்துக்களை எண்ணமிட்டது அந்த இளம் உள்ளம். 'ஆசை விட்டபாடில்லை' என்று ஆதிசங்கரர் கூறினாரே அந்த ஆசை அப்பிஞ்சு உள்ளத்திலிருந்து நீங்கியது.

நாலு பிராயத்து சுவாமிநாதனை ஏமாற்றி அவனுடைய பொற்காப்புக்களை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான் ஒருவன். இதிலிருந்து பல உண்மைகளைக் கற்றான் சிறுவன். வாழ்க்கையில் மோசம் போய் விடாமல் உன்னிப்பாக நம்மை நாமே பராமரித்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு அப்போதே சுவாமிநாதனுக்கு உண்டாயிற்று. அதோடு இக உலக லாபத்துக்காகக் குறுக்கு வழியில் பாயும் மோசடியும் குரூரமாக உருவெடுத்து அவன் முன் நின்றது.



'வாழ்க்கையில் மோசம் போகக் கூடாது' என்ற சாதாரணமான கருத்தே 'வாழ்க்கை எனும் மோசத்துக்கு—மாயைக்கு— ஆட்படக் கூடாது' என்ற வேதாந்த மனப்பான்மையாக மாறியது. இந்த வேதாந்தம் தோன்றிய பின் முன்னே கண்ட பேராசையும் வஞ்சகமும் பொருள் நாட்டமும் எல்லாமே புல்லியனவாகி சுவாமிநாதனுடைய இதயத்தின் பின்னணிக்குச் சென்று விட்டன. ஆனால் அதுவும் தவறு என்றே காலம் போகப் போகத் தாம் கற்றதாகக் கூறுகிறார்கள் ஸ்ரீ பெரியவர்கள். 'குருவாய் அரற்கு உபதேசம் வைத்த' சுவாமிநாதனின் பெயரைத் தரித்தவர் இப்போது உண்மையிலேயே ஜகத்குரு காமகோடி பீடாதீசுவரராகி விட்டார். 'தம்மையே மையமாகக்கொண்டு உலகைப் பார்ப்பதும் சுயநலம் தானே? மக்களின் நிலையில் தாமும் இருந்து அவர்கள் மெய்யென்று நம்பும் இக வாழ்க்கையையும் அதன் இன்னல்களையும் தாமும் மெய் போலவே எண்ணி அநுபவித்தால் தானே அவர்களுக்காகக் கசிந்துருகி அவர்களை உய்விக்க முடியும்?' என்றே எண்ணலானார் அவர். தவத்திலும், ஆராதனையிலும், ஆத்மாநுபவத்திலும் நாளுக்கு நாள் பழுத்துக் கொண்டே வந்த போதிலும், தமது வீடுதலையைக் கூடப் பிறருக்காக இழக்கும் தியாகப் பான்மையே இவற்றைவிடத் தமக்குத் தேவையானது என்று எண்ணியது அவரது பக்குவமடைந்த திரு உள்ளம்.


''நன்னெறிகளிலும், தருமத்திலும் ஆழ வேரூன்றி நிற்கும் சில ஆத்மாக்கள் பிறருக்கென்றே உயிர் வாழ்கின்றனர். இதற்காகத் தங்கள் இக உலக லாபங்களையும் போகங்களையும் துறப்பதுமட்டுமின்றித் தங்கள் ஆத்ம வளர்ச்சிக்கான சாதனையைக் கூடத் தியாகம் செய்கின்றனர்'' என்பதாகத் தியாக சீலர்களைப் பற்றியே தாம் எண்ணியதாகக் கூறுகிறார்கள் பெரியவர்கள். தமது வாழ்க்கையில் தாம் கற்றுக் கொண்ட ஒரே பாடம் ''பிறருக்காக மட்டுமே வாழ்வதற்கென்று பகவான் சில ஆத்மாக்களைப் படைத்திருக்கிறான்'' என்பது தான் என்கிறார்கள்.

அப்பேர்ப்பட்டவர்களில் சிரோமணியாக விளங்குபவர் குருமணியாம் பெரியவர்களே தாம் என்பது இன்று பக்தர்கள் கருத்து. காலத்தை வென்று, பிறவித் தளைகளிலிருந்து விடுபட்டு, அமர நிலை பெற வேண்டுமானால் ஆசைகளை அறுக்க வேண்டும். மூன்று வயதிலேயே, ஆசை வாய்ப்படுவதன் அல்லலை உணர்ந்த பெரியவர்கள் அதனை அறவே அறுத்ததால்தான் ஆசைகள் முடியும் எல்லை நிலமாகிய காமகோடி பீடத்தில் ஆரோகணித்தார்கள். எனினும் அந்த ஆசையொழிந்த ஆனந்தத்தில் தாம் ஒன்றி விடுவதால் ஆசைகளால் அலைப்புறும் மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்க முடியாதோ என்று எண்ணலானார்கள். எனவே, உலகைத் துறந்து சந்நியாசி ஆன அவரே அந்தத் துறவு உணர்வையும் துறந்து மக்களிடம் கரையத் தொடங்கி விட்டார்.

அப்புறம் என்ன? அறிவை விட அருள் பெரிதாயிற்று. ஞானத்தை விடக் கருணை பெரிதாயிற்று. தவத்தை விடத் தயை பெரிதாயிற்று. பக்தியைவிடப் பரிவு பெரிதாயிற்று. யோகத்தைவிடத் தியாகம் பெரிதாயிற்று. அன்புருவாய் நிற்கும் ஆசாரிய புருஷராக இன்று அவர் நம்மைக் காத்து வருகிறார்.

பிறர் துன்பத்தைத் துடைக்கிறார். அவர்களைத் துன்ப நிலையிலிருந்தும் கடக்கச் செய்கிறார். ஆனால் அதே சமயம் துன்ப நிலையைக் கடந்த தாம் அந்நிலையிலிருந்து இறங்கி வந்து மக்களின் துன்பத்தில் கரைந்து போக விரும்புகிறார். இதைப் போன்ற விந்தையான அருட்பான்மையை யாரேனும் கேட்டதுண்டா?

கால வெள்ளத்தில் மாழ்ந்தவரை ஏற்றிச் சென்று கரை சேர்க்கும் ஒரு தெப்பம் என்றே பெரியவர்களை எண்ணத் தோன்றுகிறது. ஆம், பிறரைக் கரை சேர்ப்பதற்காகத் தான் வெள்ளத்திலேயே இருக்கும் படகு போல் கருணை வெள்ளம் பெருக்கிக் கொண்டிருக்கிறார் அவர். அந்தக் கருணை நமக்கு இன்னும் பல்லாண்டு பல்லாண்டு கிடைக்க வேண்டுமெனக் காலகாலனை சங்கரனை வேண்டுவோமாக! — கணபதி



# க்ரைமிக்ஸ் போட்டி




## ரொக்கப் பரிசுகளாக ரூ. 8,000 பெறுங்கள்

**உங்கள் குழந்தையை ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வைப்பதோடு இந்த மதிப்புள்ள ரொக்க பரிசுகளையும் பெறுங்கள்.**

எல்லாவற்றிலும் சிறந்த க்ரைப் மிக்சர்தான் உங்கள் குழந்தைக்கு மிக உகந்தது. அதனாலேயே விவேகமுள்ள தாய்மார்கள் க்ரைமிக்ஸையே கேட்டு வாங்குகிறார்கள். குடல் வலி, வாயு மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளிலிருந்து க்ரைமிக்ஸ் அதிசீக்கிரமாக நிவாரணமளிக்கிறது. பல் முளைக்கும் பருவத்திலும் தாய்ப்பாலை மறக்கடிக்கும் சமயத்திலும்கூட குழந்தையை சந்தோஷத்துடனிருக்க வைக்கிறது. பூட்ஸின் தரமுள்ள தயாரிப்பான க்ரைமிக்ஸை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள்.

**விதிகளும் முறைகளும்:**

1) குழந்தை பராமரிப்பு பற்றிய கீழ்க்கண்ட ஆறு குறிப்புகளை நீங்கள் கருதும் முக்கியத்துவப்படி வரிசைப்படுத்தி வையுங்கள். உதாரணமாக, நீங்கள் 4-வது குறிப்பு எல்லாவற்றிலும் அதிக முக்கியமானதென நினைத்தால், 4-வது குறிப்பின் எதிரேயுள்ள கட்டத்தில் "1" என்று போடவும். 2-வது குறிப்பு அதற்கடுத்தபடியாக அதிக முக்கியமானதாகத் தோன்றினால், அப்போது 2-வது குறிப்பின் எதிரேயுள்ள கட்டத்தில் "2" என்று போடவும். இதேபோல மற்றவைகளையும் வரிசைப்படுத்துங்கள்.

2) பூர்த்தி செய்த போட்டிக் கூப்பனையும் க்ரைமிக்ஸ் அட்டைப் பெட்டியின் மேற்பாகத்துடன் இணைத்து, "க்ரைமிக்ஸ் போட்டி", தபால்பெட்டி 680, பம்பாய்-1 என்ற விலாசத்திற்கு 1962, மே 31-ம் தேதிக்கு முன் அனுப்பவும்.

3) போட்டிக் கட்டணம் கிடையாது. நீங்கள் உங்கள் விருப்பப்படி எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு போட்டிக் கூப்பனுடனும் க்ரைமிக்ஸ் அட்டைப் பெட்டியின் மேல் பாகத்தைச் சேர்த்து அனுப்பவேண்டும்.

4) போட்டியில் சேர்த்த எந்த ஒரு கூப்பனுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகள் வழங்கப்பட மாட்டாது.

5) இந்தியாவில் வசிப்பவர்கள் மட்டுந்தான் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம். பூட்ஸ் ப்யூர் ட்ரக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் மற்றும் [illegible] அட்வர்டைஸிங் ஸர்வீஸ் பிரைவேட் லிமிடெட் கம்பெனிகளின் ஊழியர்களும் வேலை செய்வோரும் அவர்களது குடும்பத்தினரும் இப் போட்டியில் கலந்துகொள்ள அருகதையற்றவர்கள்.

6) ஜட்ஜுகளின் தீர்ப்பே முடிவானது. எவ்விதமான சந்தர்ப்பங்களிலும் இதைப்பற்றிய கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளக்கூடாது.

7) முதல் மூன்று பரிசு பெற்றவர்களின் பெயர்கள் முக்கியமான தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இதர பரிசு பெற்றவர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள்.

முதல் பரிசு
ரூ. 3,500
2-வது பரிசு
ரூ. 1,000
3-வது பரிசு
ரூ. 500

மற்றும்
30 பரிசுகள்
ரூ. 100 வீதம்

**முடிவு தேதி**
**1962, மே 31**



ஒவ்வொரு கூப்பனும் ஒரு க்ரைமிக்ஸ் அட்டைப் பெட்டியின் மேற்பாகத்துடன் சேர்த்தே அனுப்பப்பட வேண்டும். க்ரைமிக்ஸ் Boots பூட்ஸின் தரமுள்ள தயாரிப்பு




— போட்டிக் கூப்பன் —

**"க்ரைமிக்ஸ் போட்டி."**
தபால் பெட்டி செ. 680, பம்பாய்-1

**ஒரு குழந்தை ஆரோக்கியமாயும் மகிழ்ச்சியாயும் இருப்பது...**

1. சுத்தமான வெளிச்சம் மற்றும் காற்றோட்டத்திலும்
2. க்ரைமிக்ஸ் ஒழுங்காகச் சாப்பிடுவதால்
3. உணவில் சுத்தமான பால் சேருவதால்
4. அதைக் குழந்தைகளின் குழுவில் வளர்ப்பதால்
5. பெற்றோர்கள் அன்புடன் கொஞ்சுவதாலும் பிரியம் காட்டுவதாலும்
6. தவறாமல் குளிப்பாட்டுவதால்

| என் விருப்ப வரிசைக்கிரமம் | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

பெயரும் விலாசமும் (கொட்டை எழுத்துக்களில்) ______________________

______________________

இந்தப் போட்டியில் கலந்துகொள்வதால், என் போட்டியின் விதிகள் மற்றும் முறைகளுக்கு கட்டுப்படுவதுடன் ஜட்ஜுகளின் தீர்மானத்தை முடிவானதென்று ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்.

______________________ கையொப்பம்

NATIONAL BC1762


போர்முனை
கி. ராஜேந்திரன்

# போர்முனை

## அத்தியாயம் 1

## மறப்பதா? வெறுப்பதா?

நெஞ்சில் நிறைந்தவள் என்று அவன் யாரைக் கருதி யிருந்தானோ அவள் இப்போது தேனூரில் இல்லை. கடைசி முறையாக அவளைப் பார்த்துக் கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேலாகப் போகின்றன. அவளை விட்டுப் பிரிய நேர்ந்தது குறித்து அவன் அடைந்த துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. தன் வாழ்க்கையில் எந்த விதமான சிறிய மாறுதல் கூட ஏற்படாதது போல அவன் அன்றாட அலுவல்களைக் கவனித்துக்கொண்டு போனாலும், அவளைக் காண்பதென்பது இனிக் கனவில் மட்டும்தான் என்ற உண்மை அவன் உள்ளத்தில் உறைக்க ஆரம்பித்ததும் அவன் கதறி அழுதது அவன் இதயத்துக்குத் தெரியும்; இதயத்துக்கு மட்டுமே தெரியும். ஏனென்றால் அழுதது அவனல்ல அவன் நெஞ்சம்தான்.

மிகுந்த பிரயாசைப்பட்டுத் தன் உணர்ச்சிகளைப் பிறருக்குப் புலப்படாதவாறு அவன் உள்ளடக்கிக் கொண்ட தன் நோக்கம், அவற்றை வெளிக்காண்பித்துக் கொண்டால் ஊராரின் கண்டனத்துக்கு ஆளாக நேரிடும் என்பதுதான். நொந்து போன உள்ளத்தைக் கடுசொற்களை வீசி மேலும் புண்படுத்துவது அவர்களுக்குப் பழக்கமானதும் பிடித்தமானதுமான காரியம். ஆகவேதான் பிரிவாற்றாமையினால் வருந்துவது போன்ற எண்ணமே அவர்களுக்கு உண்டாகக் கூடாது என்ற தீர்மானத்துக்கு வந்த வடிவேலு துயரத்தையெல்லாம் துடைத்தெறிந்து விட்டதுபோலப் பாவனை செய்தான். அத்துடன் பார்வையிலும் தோற்றத்திலும் எந்த விநாடியும் மல்யுத்தத்துக்குத் தயாராக இருப்பது போல் காட்சி யளிக்கத் தொடங்கினான். எதிர்ப்பு உருவாகும் என்று எதிர்பார்த்தால் எட்டவே நின்று விடுவார்கள் ஊரார் என்பது அவன் அபிப்பிராயம். வடிவேலுவினுடைய இந்தத் திட்டம் ஓரளவுக்கு வெற்றி பெறவும் செய்தது. நேருக்கு நேராக அவனைச் சந்தித்து வசை புராணங்களைப் படிக்கவோ அல்லது வாழ்க்கையில் அவன் கடைப் பிடிக்க வேண்டிய நன்னெறிகளைப் பற்றி உபதேசிக்கவோ யாரும் துணியவில்லை. மாறாக அவனைக் கண்டதும் வேறுபுறமாகத் தலையைத் திருப்பிக் கொண்டு ஓர் ஓரமாகச் சென்றுவிட முயன்றார்கள். தன்னிடமிருந்து ஒதுங்குகிறார்களா அல்லது தன்னை ஒதுக்குகிறார்களா என்பது இன்னும் தெளிவாக விளங்கவில்லை வடிவேலுவுக்கு.

அப்படியே தப்பித் தவறி யாரேனும் பேசினாலும் அது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதாகத்தான் இருந்தது. இனிக்கப் பேசுவது போல இடித்துக் காட்டினார்கள். ஏற்றிச் சொல்வது போல ஏளனம் செய்தார்கள். சில சமயங்களில் அபூர்வமாக அவன் முகத்தைப் பார்க்கும்போது முகமன் கூறுவது போல அரும்பும் மென் முறுவல், முதுகு திரும்பியதும் விஷமப் புன்னகையாக மாறி, காது கேட்காத தூரத்துக்கு அவன் போய்ச் சேர்ந்ததும் பரிகாசச் சிரிப்பாவதை அவன் கேட்டதில்லைதான்; ஆனால் உணராமலும் இருக்க முடியவில்லையே? தேனூரிலுள்ளோர் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு தங்கள் வாழ்நாள் முழுதும் வம்பளந்தாலும் திகட்டாத ஒரு விஷயதானம் செய்திருக்கிறோம் என்பதை அவன் ஊகித்து அறிந்திருந்தான். பேசுவதற்குச் சுவையான நிகழ்ச்சி. இலேசில் விட்டு விடுவார்களா அதை?

இதனாலெல்லாம் வடிவேலுவுக்கு ஏற்பட்ட மன வேதனை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்து, தன் கருத்தில் ஒன்றியவள் என்று நினைத்து வந்த ஒருத்தியைப் பற்றி இனிக் கேள்விப் படக் கூடப் போவதில்லை என்பதனால் உண்டான துன்பம் ஒன்றுமேயில்லை என்று நினைக்கும் அளவுக்குப் பெருகி விட்டது மட்டுமல்ல, வெறுப்பே வளரத் துணை புரிந்தது.

'வெறுப்பதா? அவளையா?' என்று யோசித்தான் வடிவேலு. கோபுரத்தின் உச்சியில் நின்று செங்குத்தாகக் கீழே எட்டிப் பார்த்தால் உண்டாகுமே ஒரு தலை சுற்றல் அது போலக் கிறங்க வைக்கும் சக்தி பெற்ற கண்கள்—கோடைக் காலத்து உச்சிவெய்யில் நேரத்தில் இளஞ்சிவப்பு நிறம் கொண்ட பனம் நுங்குச் சுளையைக் கையிலேந்தி அதன் இளநீரைப் பேராசையுடன் பருக யத்தனிக்கிறவனுக்கு ஏற்படுமே ஓர் இன்ப போதை; அதை நினைவூட்டும் அவள் இதழ்கள்—ஆளையே விழுங்கி விடுகிற தன்மை படைத்த அவள் விழிகளை உற்று நோக்கித் தன்னை மறந்து அதில் லயித்து விட்டாலோ; மரக் கிளையிலிருந்து குளத்தில் குதித்து மூழ்கிக் கீழே கீழே போய்க் கொண்டிருப்பது போன்ற ஒரு ரசமான

அனுபவம்—இலேசாக முற்றிய தாழம்பூ மடலின் நிறமும் மணமும் கூடிய அவள் முகமண்டலம்—இவற்றை வெறுப்பதா? சாத்தியமான காரியமா அது?

'இல்லை; இல்லை. நான் அவளை வெறுக்கவில்லை' என்று அச்சம் கலந்த அவசரத்தோடு தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டான் வடிவேலு. நான் வெறுப்பதெல்லாம் எங்களைப் பிரித்து வைத்துவிட்ட சக்திகளை—அந்தச் சூழ் நிலையை—அதில் நடமாடி விபரீதங்கள் விளையக் காரணமாக இருந்த சில மனித ஜன்மங்களை.

வடிவேலு ஏதேதோ சிந்தனைகளுடன் வயல் வரப்பின் மேலே நடந்து சென்றான். மாலை ஒளி மங்குகிற சமயம். இன்னும் சற்று நேரம் போனால் கழனிகளில் வேலை செய்து கொண்டிருப்போரெல்லாம் வீடு திரும்ப ஆரம்பித்துவிடுவார்கள். அதற்கு முன்னால் அன்றையக் காரியங்களெல்லாம் சரிவர நடைபெற்றிருக்கின்றனவா என்று ஒருமுறை மேலெழுந்தவாரியாகவேனும் பார்த்துவிட வேண்டுமென்று விரும்பினான் அவன். இந்த நோக்கத்தோடு நடையைத் துரிதப்படுத்தவே வரப்பின் ஓரமாக ஒரு கால், அழுந்த இடமில்லாமல் சறுக்கி விட்டது.

'ஏன் இப்படிக் கிழவனைப் போலத் தள்ளாடுகிறேன்? இப்போதுதான் புதிதாக இதுபோன்ற குறுகலான வயல் வரப்புக்களில் நடக்கப் பயிலுகிறேனா? பொழுது விடிந்தால் கொடியிலிருந்து உருவிய துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நிலங்களைச் சுற்றி வருவதுதானே வேலை எனக்கு? அதிலும் கடந்த ஆறு மாதகாலமாக,—குடும்பத்துக்கு நேர்ந்த அபகீர்த்தியைப் பொறுக்க முடியாமல் வெளியே தலை காட்டுவதையே அடியோடு நிறுத்தி விட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்க அப்பா முற்பட்ட பிறகு,—வெள்ளி முளைக்கும் நேரத்தில் கிளம்பி வீதியில் இறங்கினால் விளக்கு வைக்கும் சமயத்தில்தானே திரும்புகிறேன்? அப்படி யிருக்க ஏன் இந்தத் தடுமாற்றம்?' மறுபடியும் முன் போலவே அவனது வலது கால் அவனை ஏமாற்றியது. இம்முறை கூர்மையான ஒரு கல் அவன் கணுக்காலைப் பதம் பார்த்தும் விட்டது. வரப்பின் மீது அப்படியே உட்கார்ந்து ரத்தம் கசியச் செய்த அந்தக் கல்லைக் கையில் எடுத்தான் வடிவேலு. ''தாறுமாறாக அவர்கள் பேசுவதையெல்லாம் தாங்க மாட்டாது நேராக நிமிர்ந்து நடக்கும் திறனையே இழந்து தவிக்கிறேன் நான். இந்தத் தருணத்தில் ஊரார் என் பிராணனை வாங்குவது போதாதென்று நீ வேறு குத்திக் காட்ட வேண்டுமா?'' என்று உரக்கக் கேட்டவாறே கோபத்துடன் அதனை வீசி எறிந்தான்.

அடுத்து, ''கோழைகள், கோழைகள்!'' என்று முணுமுணுத்தது அவன் வாய். ''தைரியம் இருந்தால் என் எதிரேவந்து முகத்தைப் பார்த்து என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்களோ அதைச் சொல்லட்டும். அதுவன்றி, 'அவர்கள் இருவரும் அப்படிப் பேசிக் கொண்டதைக் கேட்டதாக இவர் என்னிடம் சொன்னார். அது எவ்வளவு தூரம் நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது' என்று கர்மசிரத்தையாகச் சுற்றிவளைத்துக் கூறுவானேன்?'' அப்படிப் பட்ட மனிதர்களை எண்ணிய போது அடி வயிற்றிலிருந்து ஆத்திரம் பொங்கித் திரண்டு வந்து தொண்டையை அடைத்தது. சுடச் சுடப் பதில் கூறி அவர்களுடைய அற்ப புத்தியை அடக்கி ஆளும் வன்மையை நாவுக்கு அவனால் தர முடியாததால் அது கசந்து வழிந்தது. வடிவேலு எச்சிலைக் கூட்டித் துப்பினான். வயலின் குறுக்கே நடந்து போய் அப்பால் சலசலத்து ஓடிய வாய்க்காலில் வாயைக் கொப்புளித்துக் கழுவினான். கசப்பு இலேசாகக் குறைந்திருப்பது போல ஒரு பிரமை உண்டாயிற்று. கழனியில் செழித்து வளர்ந்திருந்த முள்ளங்கிச் செடிகள் மீது அவன் பார்வை விழுந்தது. அவற்றுள் ஒன்றினைப் பிடுங்கினான். இடுப்பில் முடிந்து வைத்திருந்த சாவிக் கொத்தை உருவி எடுத்து அதில் தொங்கிய பேனாக் கத்தியை விரித்தான். ஒரே வீச்சில் செடியின் தழைகள் துண்டிக்கப்பட்டு விழுந்தன. அடுத்தாற் போல் மண்ணும் வேரும் ஒட்டிக் கொண்டிருந்த புறத் தோலை மேல் துண்



டால் துடைத்து விட்டுச் சீவ ஆரம்பித்தான். அதிலே விநோதமான புதியதோர் உற்சாகம் பிறந்தது அவனுக்கு. வரப்பில் ஆர அமர உட்கார்ந்துகொண்டு அந்தக் காரியத்தைத் தொடர்ந்தான்.

''அவன் மட்டும் இப்போது என்னிடம் அகப்பட்டால் அவன் தோலை உரித்து விடுவேன்!''

திடுக்கிட்டு எழுந்தான் வடிவேலு. யார் கூறியது அந்த வாக்கியத்தை? சுற்றுமுற்றும் கண்ணோட்டம் செலுத்தியதில் ஒருவரும் தென்படவில்லை. முள்ளங்கியின் புறத் தோல் சீவப்பட்டு நுனியில், கீழே விழுவோமா வேண்டாமா என்பது போல ஊசலாடிக் கொண்டிருந்தது. அப்படியே அதை வாய்க்காலில் வீசிவிட்டுக் கத்தியை மடக்கினான் அவன். அழுக்குப் படிந்து விட்ட கையைத் தட்டிச் சுத்தம் செய்தவாறே மேலே நடந்தான் விரைவாக.

''ஏலே! என்னடா, மாடு மேயுது, சும்மா நிக்கிறே?'' ஓர் அதட்டல் போட்டான் வடிவேலு.

''பார்க்கலீங்களே!''

''போடு தப்பல்ன்னுனும்! ஏண்டா, சுவாமி முதுகிலே கண்ணு வைக்காமல் போயிட்டாரா உனக்கு? ஓட்டுடா, கழுதை!''

'கழுதை' மாட்டை விரட்டியது.


''மேலண்டைப் பக்கம் தண்ணி சரியாப் பாஞ்சுதாடா? கவனிச்சியா?''

''மடையைத் தொறந்து விட்டால் பாயாமே கூடப் போயிடுங்களா?''

''கேட்டதுக்கு உண்டு இல்லேன்னு பதில் சொல்லிட்டுப் போயேண்டா, உதவாக்கரை!''

வடிவேலு பண்ணையாட்கள் மீது இப்படிப் பாய்ந்தானே ஒழிய உள்ளூற அவன் மனம் புழுங்கித் தத்தளித்தான். ஆட்கள் அவனுடன் சண்டை போடவில்லை, தர்க்கத்தில் ஈடுபடவுமில்லை. அவன் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் அலட்சியம் செய்தார்கள். மண்டையே பிளந்து விடும் போலிருந்தது வடிவேலுவுக்கு. தன் சிரத்தை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டான். நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பார்களே அதன் அவசியத்தை, கிராமத்தில் தன் நிலையை ஸ்திரப் படுத்திக் கொள்ள இந்த ஆறு மாதங்களாக அவன் நடத்தும் போராட்டம் நன்றாக அறிவுறுத்தி விட்டது அவனுக்கு.

பதில் சொல்ல இந்தப் பண்ணையாட்களுக்கு எங்கிருந்து தெம்பு வந்தது. கேட்பானேன்? தன்னிடமிருந்துதான்! சிரமப்பட்டுச் சம்பாதித்த நல்ல பெயராலும் அதற்கு ஒரு களங்கம் ஏற்பட்ட உடனே எல்லாம் தலைகீழாகவல்லவோ மாறி விடுகின்றன. 'நீ ஒழுங்காயில்லாத போது மற்றவர்களைப் பற்றிக் குறை கூற உனக்கென்ன அதிகாரம்? நீயே தவறு செய்கையில் மற்றவர்களைத் திருத்துவதும் தண்டிப்பதும் எப்படி நியாயமாகும்? கண்ணாடி மாளிகையில் இருந்து கொண்டு கல்லெறியலாகுமா?' என்று அவர்கள் வாய்விட்டுக் கேட்காது போனாலும் அந்த மனப்பான்மையோடு தான் அவன் இட்ட பணிகளை ஏனோ தானோ என்று நிறைவேற்றி வந்தனர். ஊரிலே கொஞ்சம் அந்தஸ்துள்ளவர்கள்தான் ஒரு மாதிரியாக நடந்து கொண்டார்கள் என்றால் கூலிக்கு வேலை செய்யும் இவர்களுக்குக் கூடவா இளக்காரமாகப் போய் விட்டது? உழவர்கள் அவனுக்காக உழைத்துச் சலித்துவிட்டது போல ஊதியம் கேட்டார்கள். களை பிடுங்க வேண்டியவர்கள் களைத்து விட்டது போல் கண் துடைப்பு வித்தைகளைச் செய்தார்கள். 'தடிப்பயல்கள்! தினவு எடுத்துப் போய்த் திரிகிறார்களே' என்று எண்ணிய வடிவேலு, ''கூலி



வாங்கறச்சே பாதியாகக் கொடுத்தால் சம்மதிப்பீங்களா? வேலை மட்டும் அரை குறையாக நிக்குதே ஏன்?'' என்று கேட்டான், களை பிடுங்கி விட்டதாகப் பாவனை செய்து கொண்டிருந்த பத்துப் பேர்களை.

''ஆளுங்க பத்தாதுங்களே'' என்று மறுமொழி கிடைத்தது.

''நீயை வைச்சால் பத்துண்டா!'' என்று சீறினான் வடிவேலு. தோளிலிருந்த துண்டை உதறி முண்டாசாகத் தலையில் கட்டினான். மடித்துக் கட்டியிருந்த வேஷ்டியைப் பிரித்து மூலைக் கச்சமாக இழுத்துப் பின்னால் செருகினான். விடுவிடுவென்று அவர்களுடைய அசிரத்தை காரணமாகப் பாக்கி யிருந்த புல் பூண்டுகளைப் பற்றி இழுப்பதில் முனைந்தான்.

''சின்னையா! என்னங்க இது? நீங்க இந்தண்டை வாங்க! நான் கவனிச்சுக்கறேன்!''

எல்லனின் குரல் கேட்டதும் ஆர்வத்துடன் திரும்பி ஒரே பாய்ச்சலில் அவனுக்குப் பக்கத்தில் வந்தான் வடிவேலு. அவன் சொற்படி நடக்க வேண்டும் என்ற அவாவினால் அல்ல. எல்லன் டவுனிலிருந்து திரும்பி விட்டான் என்றால் அவனுடன் அன்றையத் தினசரிப் பத்திரிகைகளும் வந்துள்ளன என்பது அர்த்தம்.

''பயலுக ரொம்பத் துளுத்துப் போயிட்டானுக'' என்றபடியே பத்திரிகைகளைக் கைநீட்டிப் பெற்றுக்கொண்டு நடக்க ஆரம்பித்தான் வடிவேலு. எட்டடி கூட எடுத்து வைத்திருக்க மாட்டான். அதற்குள், ''என்னடா சொன்னே? ஒனக்கு அடுக்குமாடா, முண்டம்!'' என்று எல்லன் போட்ட கூச்சலும் அதை அடுத்துப் பளார் பளாரென அறைகள் விழும் ஓசையும் கேட்டன. திடுக்கிட்டுப் பின்புறமாய்ப் பார்த்த வடிவேலு, எல்லனுக்கும் மற்றொரு பண்ணையாளுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டிருப்பதைக் கண்டான். ஓட்டமாய் ஓடி அவர்களை அணுகுவதற்குள் சுற்றி வளைத்த எல்லனின் கரத்துக்கு இடையில் அந்தப் பண்ணையாளின் கழுத்து சிக்கிக் கொள்ள, அவன் விழிகள் கோலிகுண்டுகளாக விண்டு விழுந்து உருளும் போலத் தோன்றின; மூச்சுத் திணற அவன் வயிறு இறுகியது, மார்பு புடைத்துக் கொண்டது. பலம் அத்தனையையும் பிரயோகித்துத் தாக்கி அவர்களைத் தனித்தனியே உருட்டித் தள்ளுவதென்பது இயற்கைச் சூழலிலும் உழைப்பின் மத்தியிலும் வளர்ந்ததால் உரமேறிய வடிவேலுவின் இரும்புக் கைகளுக்கே கடினமாய்த்தான் இருந்தது. மரணப்பிடி என்பார்களே அது இதுதானோ?

''எல்லா! உனக்கென்ன பைத்தியம் புடிச்சுடுத்தா? இன்னும் ஒரு கணம் நான் தாமதிச்சு இருந்தால் கொன்று போட்டிருப்பாயே இவனை?''

''சாகட்டுமே சின்னையா! உங்க வீட்டு உப்பைத் தின்னு ருசி பார்த்துச் சப்புக் கொட்டிய நாக்கு தானே பேசியது? பிதுங்கட்டுமே அது அவன் சாகும் போது!''

புழுவாய்த் துடித்தான் வடிவேலு. 'வேண்டாம், எல்லா! அவன் என்ன சொன்னான் என்பது எனக்குத் தெரியாமலே இருந்து விட்டுப் போகட்டும். அதைக் கூறி விடாதே!' என்று மானசிகமாகக் கெஞ்சினான். அதையே உரக்கப் பேசினால் அந்த உழவர்களின் சொல்லுக்கு அஞ்சியதாக வல்லவோ ஆகிவிடும்?

''சக்குபாய் அம்மா என்ன ஆனாங்க, எங்கே போயிருக்காங்க என்கிறதைப் பற்றி ஏதாவது துப்பு கிடைக்குமான்னு தான் நீங்க தினம் தினம் டவுனிலேயிருந்து செய்தித் தாளை வாங்கியாறச் சொல்லித் தேடித் தேடித் துருவிப் பார்க்கிறீங்களாம்!''

எல்லனின் உதடுகள் அசையத் தொடங்கியதுமே அவற்றினூடே உருவாகி நாராசமாய் ஒலித்த சொற்கள் புக முடியாதபடி காதுகளை அழுத்திப் பொத்தி விடப் பரபரத்த தன் கரங்களை மிகுந்த பிரயாசைப்பட்டுத் தொங்க விட்டுக் கொண்டிருந்தான் வடிவேலு.

''ஐயோ, எனக்கென்னங்க தெரியும்? மெத்தை வூட்டு ஐயா ஏதோ சொல்லிக்கிட்டிருந்தாரு. நெசம்னு நெனச்சுக்கிட்டேன்!'' பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்பதாகச் சுட்டிக் காட்டினான் பண்ணையாள்.

வடிவேலுவின் நெஞ்சின் ஆழத்திலிருந்து ஒரு விம்மல் கிளம்பியது. பண்ணையாட்கள் எதிரே பச்சைக் குழந்தை போலத் தேம்பி அழுவதை அவன் விரும்பவில்லை. அவர்களைத் திகைக்க வைக்கும் வகையில் அங்கிருந்து தலை தெறிக்க ஓடிச் சென்றான். ஒரு கரத்தில் பத்திரிகைகள் கசங்கின; மற்றொரு கரம் வெடித்து விடும் போலக் குமுறிய மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டது. முள் வேலிகளைத் தாண்டியபோது அவற்றில் மாட்டிக் கொண்டு வேஷ்டியின் நுனி பல இடங்களில் கிழிந்ததையோ சகதியில் வழுக்கி விழுந்ததால் உடம்பு முழுதும் சேறானதையோ பொருட்படுத்தாமல் அவன் பறந்தான். ஊருக்கு அப்பால் ஓர் ஒதுக்குப் புறமான இடத்தில், பாயுமிடங்களிலெல்லாம் பொற்கதிர்களென நெற்கதிர்களை விளையச் செய்த காவிரி ஆற்றங்கரை மணல் பரப்பில் அமர்ந்தான் வடிவேலு.



அத்தியாயம் 2

## உலக அரங்கம்

அதுவரைக்கும் அடக்கி அடக்கிப் பார்த்த அழுகை இப்போது பீரிட்டுக் கொண்டு வந்தது வடிவேலுவுக்கு. ஊரார் தூற்றி விட்டார்களே, அதற்கு நாம் ஆளாகி விட்டோமே என்பதற்காக உகுத்த கண்ணீரை விடப் புறங்கூறுவதையே தொழிலாகக் கொள்ளும் கோழைகள் என்று அவர்களைப் பழித்துரைத்த தானே கோழையாக மாறி ஓடி வரநேர்ந்ததே என்பதால் பெருக்கிய கண்ணீரே அதிகமா யிருந்தது. அத்துடன் இழந்து விட்ட குடும்ப கௌரவத்தை இந்தக் கிராமத்தில் எப்படியும் நிலை நாட்டி விடலாம், பல நாட்கள் மாதங்கள் சென்றேனும் திரும்பப் பெற்று விடலாம் என்ற நம்பிக்கையும் தகர்ந்து, தவிடு பொடியாகி விட்டது.

இந்த ஆறு மாதங்களில் அவனுக்கு ஓரளவுக்கேனும் ஆறுதல் அளித்து வந்த விஷயம் ஒன்று உண்டென்றால் அது தினசரிகளைப் படிப்பதுதான். ஹிந்துவையும் சுதேசமித்திரனையும் அவன் வாங்கிப் படிப்பதற்குச் சுற்றிலுமிருந்தோர் இப்போது தனி அர்த்தத்தைக் கண்டு பிடித்துப் பரிகசிக்கத் தொடங்கியதும் அவன் திட சித்தமெல்லாம் தவிடு பொடியாகி விட்டது. கிராமத்தாரின் இழிவுபடுத்தும் பிரசாரத்தை எதிர்த்து மௌனமாக அவன் நடத்திய போராட்டம் தோல்வியில் முடிந்து போனதாக அவன் ஒப்புக் கொள்ளத் தயாரானான்.

அன்றாடம் அரசியல் விவகாரங்களில் ஆழ்ந்து போகும் அரை மணி நேரமோ ஒரு மணி நேரமோ அவனுக்கு இந்தச் சோர்வு தரும் சூழ் நிலையிலிருந்து விடுதலை பெற உதவி வந்தது. கிராமப்புறத்திலிருந்து கிளம்பிச் சென்று, உலக அரங்கிலே உலவத் தொடங்குவான் வடிவேலு. தேசத் தலைவர்களுடன் அவன் உறவாடுவான்.

ஸ்வஸ்திகச் சின்னத்தின் நிழல் ஐரோப்பா மீது நீண்டு படருவதைக் கண்டு கலங்கியவன், சீனா மீது இரண்டாம் முறையாகப் படையெடுத்த ஜப்பானியரின் கல் நெஞ்





சத்தை எண்ணி உடல் சிலிர்த்தான். ரோம் — பெர்லின் உடன் பாட்டையும் பின்னால் அதில் ஜப்பானும் சேர்ந்து கொண்ட விந்தையையும், ஸ்பெயினில் பிராங்கோவுக்கு உதவிய ஹிட்லரின் உள் நோக்கத்தையும் புரிந்து கொண்டான். மலைவிழுங்கி மகாதேவனைப் போல அடுத்தடுத்து ஆஸ்திரியாவையும் செக்கோஸ்லாவாகியாவையும் கபளீகரம் செய்த ஹிட்லரை அவன் பீதி கலந்த வியப்புடன் நோக்கினான்.

ஹிட்லரிடமிருநது அவரையும் முசோலினியையும் சந்திக்குமாறு தமக்கு அழைப்பு வந்திருப்பதாய் சேம்பர்லின் அறிவித்ததைக் கேட்க, நேருஜியுடன் வடிவேலுவும் லண்



டன் பாராளுமன்றத்தில் இருந்தான்! அப்புறம் அல்பேனியாவை முசோலினி கைப்பற்றிக் கொண்டதையும் ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என ருஷ்யாவுடன் ஜெர்மனி ஒப்பந்தச் சூழ்ச்சி புரிந்ததையும் பற்றிப் படித்துப் பதறினான்.

போலந்தில் ஹிட்லரின் படைகள் அடிவெடுத்து வைத்ததும் வைஸ்ராய் லார்ட் லின்லித்கோ, இந்தியத் தலைவர்களையோ சட்ட சபைகளையோ கலந்தாலோசியாமல் இந்தியாவைப் போர்முனையில் ஈடுபடுத்தியது குறித்துக் கொதிப்படைந்தான் வடிவேலு. பிரிட்டிஷ் அரசாங்கம், ஜனநாயகத்துக்காகவும் விடுதலைக்காகவுமே தாங்கள் யுத்தம் செய்வதாகக் கூறிய போது, ''யாருடைய விடுதலைக்கு?'' என்று திருப்பிக் கேட்ட நேருஜியின் அஞ்சா நெஞ்சத்தைப் போற்றினான். அதோடு மட்டுமா? காந்திஜிக்கு அவன் சிரம் தாழ்த்திக் கரம் குவித்தான்; நேதாஜியுடன் வாதாடிப் பார்த்து அவர் தம் கொள்கைகளிலிருந்து இம்மியளவு கூட அசைந்து கொடுக்க மாட்டார் என்பதைக் கண்டு கொண்டான்; ஐக்கிய இந்தியா பற்றிய அறிவுரைகளை ஜனாப் ஜின்னாவுக்குத் தாராளமாய் வழங்கினான்.

இனி, இம் மானசிக அரசியல் மேடைக்குக் கூட ஆபத்து வந்து விட்டது!

இமைகளைக் கொட்டிக் கொட்டிக் கண்களில் ததும்பி நின்ற கடைசித் துளி நீரையும் வெளிப்படுத்தி விட்டுப் பத்திரிகையைப் பிரித்தான் வடிவேலு. **''நாடெங்கிலும் காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜினாமா''** என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்பு அச்சாகி யிருப்பதைக் கண்டதும், சற்று முன் நடந்த நிகழ்ச்சிகளை மட்டுமல்ல, சுயப்பிரக்ஞையையே இழந்து அந்திப் பொழுதின் மங்கலான வெளிச்சத்தில் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு உன்னிப்பாகப் படிக்க ஆரம்பித்தான். இந்த ராஜினாமாவின் பின் விளைவுகள் என்னவாயிருக்கும் என்று சிந்திக்கையிலேயே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ராஜதந்திரம் அவனுக்கு விளங்கியது. மந்த புத்தி உள்ளவர் என்று லின்லித்கோவைச் சிறுமைப் படுத்துவார்களே அந்த மூளை எவ்வளவு சாமர்த்தியமாக் வேலை செய்திருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்ந்தான். இந்தியாவை உலகப் போரிலே இழுத்து விட்ட பின்னர் யுத்த முயற்சிகளில் அதைத் தீவிரமாக முனையச் செய்ய அதிகமான அதிகாரங்கள் தேவைப் பட்டது பிரிட்டனுக்கு. எதேச்சாதிகாரமாகவே இருந்து விட்டால் நல்லது தான். இதற்கு இடையூறாக ஆங்காங்கே இருந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் ஆங்கிலேயனின் கண்களை உறுத்தின: அவற்றை 'டிஸ்மிஸ்' செய்து விட்டாலோ மக்களின் அதிருப்தியைத் தேடிக் கொண்டதாகும். ஜனங்களின் ஒத்துழைப்பு தேவையான இக்கட்டான சமயத்தில் அவர்களுடைய கோபத்தைச் சம்பாதித்துக் கொள்வதா? ஆகவே, பிரிட்டனுக்கு யுத்தத்துக்கான ஆயத்தங்களில் உதவுவது குறித்துக் காங்கிரஸுக்குள்ளேயே இருந்த கருத்து வேற்றுமைகளைப் பயன் படுத்திக் கொண்டதுடன், தாசானுதாசர்களான சுதேச சமஸ்தான மன்னர்களைக் கையில் போட்டுக் கொண்டும் சிறுபான்மையினரை — முக்கியமாக முஸ்லிம்களை — தூண்டி விட்டுப் பகைமையை உருவாக்கி வளர்த்தும் காங்கிரஸ் மந்திரி சபைகள் இயங்குவதற்குப் பல இன்னல்களை விளைவித்தது ஆங்கிலேய ஆட்சி பீடம். அதன் மூலம் அம் மந்திரி சபைகளைக் கலைத்து மக்களின் கண்டனத்துக்கு ஆளாவதற்குப் பதிலாக அவர்களையே ராஜினாமா செய்ய வைத்தது!

இவ்வாறான யோசனைகளில் ஈடுபட்ட வாறே பக்கங்களைப் புரட்டிய வடிவேலுவின் கண்களில் ஒரு விளம்பரம் தட்டுப் பட்டது.

**'நாம் எல்லோரும் என்ன செய்ய வேண்டும்? நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை ஒழிக்க வேண்டும்; தேசியப் போர் முனையில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்!......'**

'பலே!' என்று நினைத்துக் கொண்டான் வடிவேலு. ஒரு புறம் வேற்றுமைகளைத் தீனி போட்டு வளர்த்துவரும் அரசாங்கம் மறுபுறம் வேற்றுமைகளை ஒழிக்க வேண்டும் என்று பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்கும் அதிசயம் அவனை மறுபடியும் ஒரு 'பலே' போட வைத்தது. வாய் விட்டுச் சிரித்தான் வடிவேலு. 'அடேயப்பா! வெள்ளைக்காரன் கெட்டிக்காரன்தான்! காங்கிரஸ் மந்திரி சபைகளை ராஜினாமா செய்ய வைக்க உருவான வேற்றுமைகள், போர் முனையில் உழைக்க ஒன்றுபட வேண்டுமோ?' சட்டென்று வடிவேலுவின் சிரிப்பு நின்றது. 'போர்முனை!' மின்னலைப் போல் அவன் மூளையைத் தாக்கியது அந்தச் சொற்றொடர். துள்ளி எழ வைத்தது அவனை. தன் பிரச்னைகளையெல்லாம் தீர்த்து வைக்க ஒரு வழி புலப்பட்டு விட்ட குதூகலத்தில் அவன் முகம் மலர்ந்தது. கட்டுக்கடங்காத சந்தோஷத்தில் கையிலிருந்த பத்திரிகையை வானத்தில் வீசி எறிய அது காவிரி ஆற்றில் வீழ்ந்து சக்கர வட்டமாய் ஒரு முறை சுழன்று, பின்னர் ஆனந்தமாய் மிதந்து சென்றது. ''போர்முனை!''



# நதி

○

மலைதவழ் முகில்கள் அன்னை
மருவிடும் காற்றே தந்தை
உலவிடும் உருவம் பெற்ற
ஒரு கதை சொல்வேன் கேளீர்!

மழையெனும் பெயரைப் பெற்றேன்
மண்ணெனும் தாயணைத்தாள்
தழுவிடும் பாறையூடே
தவழ்ந்து நான் ஓடையானேன்.

ஓடையான் வளர்ந்து போதில்
ஓடியே காட்டாறுக்
கோடையில் பெற்ற நீரால்
குமரியாம் ஆறுமானேன்.

அணங்குநான் ஆற்றுக்கன்னி
அளவிலாத் தொலைவுநீக்கி
வணங்கினேன் ஆழிவேந்தை
வாழ்த்தினன் இருகைசேர்த்தே!

மலைவழிப் பிறந்த மங்கை
முறைவழி கடந்துபோந்து
அலைதவழ் கடலில் காதல்
அடைந்துநான் உய்ந்தேன் காணீர்!

— சோலையன்



என்று கூச்சல் போட்டுக் கொண்டே ஓர் உறுதியான தீர்மானத்துடன் திரும் பினான் வடிவேலு.

''எல்லா! டேய் எல்லா!''

''இதோ, இங்கேதானுங்களே இருக் கேன் நான். எதுக்குக் கூப்பாடு போட நீங்க?'' தறி கெட்டு ஓடிய எஜமான னுக்கு என்னவோ ஏதோ என்று கலங் கிப் போய் அவனைத் தேடியும் வந்த எல்லன், வடிவேலு இப்படித் தொண்டை கிழியக் கத்துவது கேட்டு ஒன்றும் புரி யாமல் விழித்தான்.

''அப்படித்தாண்டா சத்தம் போடு வேன்'' என்று முன்னைக் காட்டிலும் அதிகமாய் இரைந்தான் வடிவேலு, உற்சாக மிகுதியில். ''இப்படி வாடா! டேய், அப்பாவை நல்லபடியா கவனிச் சுக்குவியாடா?''

''என்னங்க சாமி சொல்றீங்க? நீங்க இருக்கறச்சே பெரியய்யாவை நான் என்ன பார்த்துக்கிடறதுங்க?''

''நான் போறேண்டா! நாலஞ்சு வரு ஷத்துக்கு இந்தப் பக்கமே தலை காட்ட மாட்டேன்! திரும்பியேவராமல் ஒரேயடி யாகப் போனாலும் போய் விடுவேன்!''

''சாமி! நீங்க பண்ணறது ஒண்ணும் நல்லா இல்லீங்க!'' என்றான் எல்லன், எல்லாவற்றையும் அறிந்து கொண்டு விட்டவனைப் போல. ''ஊரிலே நாலு மடப் பசங்க எதுனச்சும் உளறிக்கிட்டுத் தான் இருப்பாங்க. அவங்களுக்குப் பாடம் கற்பிக்கறதுக்குப் பதில் பயந்துக் கிட்டு ஓடலாமா நீங்க?''

''முட்டாள்! யாருடா பயப்படுகிற வன்? பட்டாளத்திலே சேரப் போகி றேண்டா நான்!''

''ஐயய்யோ! மகாராஜா வூட்டுப் புள்ளே, உங்களுக்கு எதுக்குங்க இந்த வம்பு தும்பெல்லாம்?''

''சற்று முன்னாடி நீயே காரணத்தைச் சொன்னியேடா! நான் பயந்தவனில்லே கையாலாகாதவனும் இல்லே என்று இந் தப் பரதேசிப் பசங்களுக்கு நிரூபிச்சுக் காட்டப் போறேண்டா! எட்டு மெடலே மாட்டிக்கிட்டு நான் இங்கே திரும்பி வந்தேனுனால் இந்தப் பயலுகள் என்னைக் கேலி செய்யத் துணிவாங்களா?'' என்று கேட்ட போது நாத்தழுதழுத்தது வடிவேலுவுக்கு. ''ஒரு வேளை யுத்தத் திலே குண்டு பாய்ந்து நான் செத்துப்

போனாலும் வீரன்னு பாராட்ட மாட்டாங்களா?''

''அட, நீங்க விடுங்க சின்னையா! இதையெல்லாம் சட்டை செய்யாமல் இருந்துட்டாத் தானா சந்தடி அடங்கிப் போகும்!''

''அடங்காது எல்லா! ஆறு மாசமா நீடிக்கிற பேச்சு இனிமேல் நிற்கப் போகிறதில்லே. இந்த எக்காளத்துக்கு ஒரு முடிவு கட்டணும்னு இந்த ஜனங்களின் எண்ணத்திலே நான் ஒரேயடியாக உயரணும். சந்தர்ப்ப வசத்தாலே எங்க குடும்பத்துக்கு நான் பழி தேடித் தந்து விட்டது நிஜமானாலும் பெருமையும் தேடித் தர முடியும் என்கிறதைச் செய்து காட்டணும்!''

இதைத் தொடர்ந்து தன்னிடமே பேசிக் கொள்வது போல, ஆகாயத்தை அண்ணாந்து நோக்கியவாறே சொன்னான் வடிவேலு: ''நான் கோழை இல்லே என்பதை நிரூபிக்க வேண்டுமென்றேன். அது இந்தக் கிராம மக்களுக்காக மட்டுமில்லே. எனக்கு நானே உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் அதை! ''

எல்லனுக்குப் புரிந்ததாகத் தெரியவில்லே. தலையைச் சொறிந்த போது, அவிழ்ந்த முண்டாசை மீண்டும் இறுகக் கட்டினான். ''விளங்கலிங்களே?''

''உனக்குப் புரியாதுடா. அதனால் பரவாயில்லே. மாரியாத்தாள் மீது ஆணையாக நான் சொல்வது போலச் செய்வதாய் சத்தியம் பண்ணுவியா?''

''ஆகட்டுமுங்க.''

''முதலாவது, அப்பாவை நல்லபடியாகக் கவனிச்சுக்கணும். அவருக்கு அடிக்கடி கழனிக்கு வர முடியாது; மனசு ஒடிஞ்சு போயிருக்கிறார். நான் அந்தண்டை போனதும் அவருக்குத் தொந்தரவு கொடுக்க ஆரம்பிச்சுடாதே! குடும்பத்திலே ஒருத்தனா உன்னை நெனச்சுக்கிட்டிருக்கிறேன். அந்த நம்பிக்கைக்கு மோசம் பண்ணிடாதே!''

''இதையெல்லாம் நீங்க சொல்லணுங்களா? தோலைச் செருப்பாத்தைச்சுப் போடக் கடமைப் பட்டிருக்கேனுங்க!''

''இரண்டாவது, நான் சொல்லிக்காமல் கொள்ளாமல் ஊரை விட்டுப் போகப் போகிறேன். இல்லேன்னா என்னைப் போக விட மாட்டாங்கங்கற சந்தேகம் இருக்கு. அதனாலே அப்பாவும் மற்றவங்களும் என்னைத் தேடினாலும் கூட வாயைத் திறக்காதே! சரியா ஒரு வாரத்துக்கு அப்புறம், ஐயாகிட்டே அவர் தனியா இருக்கறப்போ நாம இங்கே பேசிக்கிட்டிருந்ததையெல்லாம் சொல்லு. உனக்குப் புரியாததையும் சொல்லு. அவர் புரிஞ்சுக்குவார்.''



''ஆகட்டுமுங்க.''

''போய் விட்டு வரேன், எல்லா! மறுபடியும் உன்னை எப்போ பார்க்கப் போகிறேனோ?''

வடிவேலு நடந்தான், எல்லனை ஒரு குழப்பத்தில் தான் ஆழ்த்திவிட்டதை அறியாமல். இதற்குள் இருள் நன்கு சூழ்ந்து விட்டது. இங்கொன்றும் அங்கொன்றுமாய் நட்சத்திரங்கள் எட்டிப் பார்த்துக் கண் சிமிட்டின. வீதி முனையில் கருங்கல் தூண் ஒன்றின் மீது, அஷ்டகோணலாக அமர்ந்திருந்த லாந்தர் விளக்கு 'முணுக் முணுக்' என்று எரிந்து கொண்டிருந்தது. கிராமத்தை நெருங்க நெருங்க வடிவேலுவின் மூளை தீவிரமாக வேலை செய்தது. இரவோடு இரவாகப் பெட்டி படுக்கையைச் சுற்றி எடுத்துக் கொண்டு யாருமறியாமல் வீட்டிலிருந்து கிளம்பி விடுவது என்பது அவன் போட்ட திட்டம். ஆனால் வாசலை அடைந்ததும், திண்ணையில் தன் பெட்டி படுக்கைகள் ஏற்கெனவே தயாராகக் கட்டி வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்துப் பிரமித்தான் வடிவேலு. ஒரு கையில் தண்ணீர் நிறைந்த கூஜாவையும், இன்னொரு கரத்தில் சிம்னி விளக்கு ஒன்றையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்தது ஒரு பெண்ணுருவம். விளக்கைப் பிறையிலும் கூஜாவைத் திண்ணையிலும் வைத்துவிட்டு அண்ணனை ஆர்வத்துடன் ஏறிட்டு நோக்கினாள் தங்கை பார்வதி.

(தொடரும்)


'HAZELINE'
BRAND
TALCUM
POWDER

# மக்ளீன்ஸ் பற்களை வெண்மையாக்குகிறது என்பதற்கான ஆதாரம்

## 1 அதை உணருங்கள்

பற்களில் கறை படிந்திருக்கிறதா? அது இயற்கையான வெண்மையை மறைக்கிறது. இப்போது மக்ளீன்ஸ்கொண்டு பல் துலக்கி அது கறையை எவ்வாறு அகற்றுகிறதென்று உணருங்கள்.

## 2 அதை ருசியுங்கள்

நீங்கள் அனுபவிக்கும் அந்த குளுமையான ருசிக்குக் காரணம் மக்ளீன்ஸில் இருக்கும் 3 கலவைப் பொருள்களும் திறம்பட வேலை செய்வதால்தான். அவை பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கி பாதுகாக்கின்றன.

## 3 அதைப் பாருங்கள்


உங்கள் புன்முறுவலில் காணும் வெண்மையைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள். உங்கள் பற்களை முன்பிருந்ததைவிட மக்ளீன்ஸ் பற்பசை இன்னமும் வெண்மையாக்குகிறது. நீங்களே இதைப் பரீட்சித்துப் பாருங்கள்.




வெள்ளை அல்லது குளோரோபில் சேர்ந்தது.

இன்றே மக்ளீன்ஸ் உபயோகிக்கத் தொடங்குங்கள். இப்பொழுது எளிதில் கிடைக்கிறது.

MTP/1/P/4/61-TAM




காவிய வசந்தம்
காணும் வசந்தம்
ஐயா இருக்கிறாரா?
தூங்கறாரு!
ஐயா ஜிமிக்கி கொண்டு வரச் சொன்னாரு! கொண்டு வந்திருக்கேன்!
மெள்ள இதை அவர் காதில் போட்டு விட்டாப் போதும்...
விசிறிகள்
பெருங்குடி மகனர்
இட்ட அடி நோக எடுத்த அடி கொப்புளிக்க..
சாமா



# ஏழையின் இலக்கியம்

காரர் நாற்பது, களவழி நாற்பது என்று எத்தனையோ பழைய பிரபந்தங்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். இன்று இப்போது கேள்விப்படுகிற பிரபந்தத்தின் பெயரே புதுமையானது. 'வறுமை நூறு' என்று ஒரு பிரபந்தம். பாட்டுக்குப் பொருளாக அமைந்த விஷயம் தான் வறுமையே ஒழியப் பாட்டு மிகவும் வளமானது. வேறு விதமாகச் சொன்னால் ஏழைமை இலக்கியம் என்று இதைச் சொல்லலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் லால்குடியில் வாழ்ந்த தமிழ்ப் பண்டிதர் இராமசாமி ஐயர் பாடிய நூல் இது. ஔவையாரிலிருந்து சத்திமுற்றப் புலவர் வரை வறுமையைப் பற்றி எத்தனையோ பேர் பாடியிருக்கிறார்கள். எத்தனையோ விதமாகப் பாடியிருக்கிறார்கள். ஆனால் இந்த வறுமை நூறு ஏழைமையையும் வளமாகச் சொல்வதற்கு என்றே தோன்றிய நூல். யதார்த்த உலகத்தின் சாதாரணத் துன்பங்களை இலக்கியச் சுவையோடு கூறுகிற முனைப்பை இன்று பாராட்டுகிறோம்.




''சாதாரண வாழ்க்கையின் சாதாரணத் துன்பங்களே எழுத்துக்கு வளமான விஷயமாக முடியும். அந்த யதார்த்த வாழ்வின் எதிர்பாராத தன்மைகளும், கலப்பில்லாத தனி நிலைகளும், நிறைவடையாத வேறுபாடுகளும், மாறுபாடுகளும் முடிவில்லாத துன்பங்களும் தான் எழுத்துக்குப் பொருளாகின்றன'' என்று ஸாமர்ஸெட் மாம் என்ற நவீன இலக்கிய ஆசிரியன் தன் அனுபவங்களை விவரிக்கும்போது சொல்லுகிறான். அப்படிப்பட்ட இலக்கிய அழகை ஒரு தலைமுறைக்கு முந்திய தமிழ்ப் பிரபந்தமாகிய இந்தப் பாடலில் காண்கிறோம்.

இந்த அருமையான பிரபந்தம் இதுவரை அச்சுவாகனம் ஏறவில்லை. மிக்க ஏழைமையும் வறுமைத் துன்பங்களும் நிறைந்து தவிக்கும் ஒரு மனத்தின் குமுறல் இந்தப் பிரபந்தத்தின் பாடல்களில் எதிரொலிக்கிறது.

திருத்தவத் துறைப் பிராட்டியிடம் வறுமை தீர வேண்டுவதாகத் தொடங்குகிறது வறுமை நூறு. மனிதனுடைய துக்கத்தில் பிறக்கிற இலக்கியத்துக்கு நிறைந்த உருக்கம் உண்டு. வறுமையை அநுபவிக்கிறவனுடைய வாழ்வின் நிகழ்ச்சிகள் ஏழையின் இலக்கியம். அவை உலகம் உள்ளளவும் தீராதவை. வறுமையை அநுபவிக்கிறவனுக்குப் பிரபுக்களாயிருக்கிற அத்தனை பேர் மேலும் பொறாமை ஏற்படுகிறது. தன்னைப் போல ஒருவன் ஏழையாயிருக்க நேர்ந்ததற்கு அந்தப் பிரபுக்கள் அத்தனை பேரும் காரணமோ என்று கூடத் தோன்றுகிறது வறியவனுக்கு.





# மழவராஜன் கும்மி





பந்தாடும் காட்சி

கண்டல்விற்று உயர்பிரபுக்கள்
தோல்புலாலில் ஆம்பிரபு
அண்டையார் குடிகெடுத்ததாற்
பிரபு பெண்டாற் பிரபு
பெண்டை அஞ்சு வீரமாப்
பிரபுக்களாக அளகையாய்
பண்டிலாத நூதனப்
பிரபுக்கள் கொக்கரிப்பரே.

என்று பிரபுக்களின் குலமுறை கிளத்துப் படலத்தையே கொதிப்போடு சொல்லுகிறார் வறுமை நூறு ஆசிரியர். பிரபுக்களின் அகங்காரத்தைப் பார்த்து ஏழைக் கவிக்குக் கோபமே வந்து விடுகிறது.

'நாலுபேர் மதிக்கவென்று
நாலிரண்டை விசுவார்
ஞாலம் முற்றும் நான்
கொடுத்தேனுக்குமென்று பேசுவார்

என்று கொதிப்படையத் தோன்றுகிறது கவிக்கு. இப்படியே நயமான பகுதிகள் பலவற்றைக் கொண்டு விளங்குகிறது வறுமை நூறு என்னும் அச்சேறாத பிரபந்தம். ஏழைக்குக் கவியுள்ளம் இருந்தால் தன்னுடைய ஏழைத்தனத்தையும் பாட்டாக்கி விடமுடிகிற அற்புதத் தன்மையை இந்த நூலில் காண்கிறோம். 1890-ல் இருந்து 1922 வரை லால்குடியில் வாழ்ந்த இராமசாமிஐயர் என்னும் இந்தப் புலவர் சிறிது காலம் போர்டு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயிருந்திருக்கிறார். தம் காலத்தில் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையோடும் இராமநாதபுரம் சமஸ்தானாதிபதிகளிடமும் நெருங்கிப் பழகியிருக்கிறார். வேறு பல நல்ல பிரபந்தங்களும் எழுதியிருக்கிறார். அவற்றில் புதுமை நயம் பெற்று விளங்குவது வறுமை நூறுதான். வறுமையைப்பற்றி நூறு பாட்டுப் பாடுவதற்கு வறுமையில் அப்படி என்னதான் சிறப்பு இருக்கிறது என்று நமக்கு மலைப்பும், பயமும் ஏற்படலாம். ஆனால் உணர்ச்சி வாய்த்த மனமும், சுறுசுறுப்பான கவிச் சிந்தனையும் உள்ளவர்களுக்கு எதைப் பற்றியும் பாட முடியும் என்பதற்கு வறுமை நூறு ஓர் உதாரணம்.

"நாடிநாடி நாடிநாடி
நான்புகழ்ந்து பாடியே
ஓடிஓடி யோடியோடி
யுனையடுத்து வந்தனன்"

என்று இறுதியில் திருத்தவத்துறை அம்மனை வேண்டிக் கொண்டு வறுமை நூறு நூல் நிறைகிறது. எதைஎதையோ நாடி நாடி அலுத்த பின் இறுதியில் உன்னை நாடி வந்தேன்'—என்று தெய்வத்தை வேண்டுவது எத்துணை சோகமாயிருக்கிறது பாருங்கள்.

அவருடைய பல பிரபந்தங்கள் இன்னும் கையெழுத்துப் பிரதிகளாகவே இருக்கின்றன. சென்னை அரசாங்கக் கீழ்த்திசை ஏட்டுப்பிரதிச் சாலையினர் பல பழம் பிரதிகளைத் தேடி அச்சிட்டு வருவதைப் போல் இவருடைய நூல்களையும் வெளிக் கொணர முயலலாம். வறுமை நூறு என்ற புதுமைப் பிரபந்தத்தையாவது அவசியம் அச்சிட வேண்டும். லால்குடி அம்மன் மேல் இவர் பாடியுள்ள 'பந்தடி' பிரபந்தம் புகழ் பெற்றதாகும். அதிலிருந்தும் மழவராஜன் கும்மி என்ற இவரது மற்றொரு பிரபந்தத்திலிருந்தும் ஓரோர் காட்சியை ஓவியர் சித்திரலேகா முன் பக்கங்களில் வழங்கியிருக்கிறார்.

திருத்தவத்துறையில் கோயில் கொண்டுள்ள அம்மன் பந்தாடுங் காட்சியைக் கவிஞர் பின்வருமாறு சொற்களால் புனைந்து பாடியுள்ளார்:—

"முத்து வடமும் ரத்ன வடமும்
மோகன மாலையுமாடவே
மைத்த குழல் நற் சடையு
மொய்த்த வண்டுமண்டியாடவே
மணிக்கர வளையாடக் கிளியு
மறைப் பொருள் விரித்தாடவே
தத்துவங்களும் மறையும் கலையும்
நித்தியென நின்றாடவே
சரணச் சதங்கையாடக் கணபதி
தாசனுங் களித்தாடவே
பத்தர் சூழுந் திருத்த வத்துறை
பதியும் பலரு மாடவே
பதியெலாம் புகழ் பெருந்திரு அம்மை
பதினோர் பந்தெடுத் தாடினளே."

காவிரிக் கரையில் முத்து வடமும் இரத்தின வடமும் அணிந்து தெய்விகப் பெண் ஒருத்தி கந்தர்வ நங்கையர்கள் சூழப் பந்தாடுவதாகப் புலவர் பாடியுள்ளார். மழவராஜன் கும்மி என்ற கும்மி நூலிலே பெண்கள் மழவராஜனின் புகழைச் சொல்லிக் கொண்டு வட்டமாகக் கூடி நின்று கும்மியடிக்கும் காட்சி இக் கவிஞரால் பின் வருமாறு பாடப் பெற்றுள்ளது.

"ஆயிரம் பொன் பெற்ற விழையாலே
நெய்த பொன் மயப்பட்
டாடையிடை மேலுடுத்தும்
ஹைமவதீ நீ வாடி
செல்லை வைத்த கூந்தலைப் பின்
சினிவிட்டுப் பின்னலிட்டுத்
திலகமிட்டு விழிமருட்டும்
செகதம்பா நீ வாடி....."

என்று கோவிலில் ஒவ்வொருவராக அழைத்துக் கொண்டு கூடி இளநங்கையர்கள் கும்மி யடிக்கிறார்கள். —நா. பா




பவழத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
15
சேனாபதி நந்திவர்மரின் செய்தியைக் கொண்டு சென்ற ஜம்பு, மங்கள நாட்டத்தின் படைகளை அவர் இருக்குமிடத்திற்கு அழைத்து வருகிறது.
படைகளைப் பாடி அமைத்து ஒழுங்கு படுத்திய சேனாபதி........
கந்தா, நமது படைகளை இத்தனை விரைவில் இங்கு கொண்டு வந்து சேர்த்த ஜம்புவின் திற... மையை எப்படிப் பாரா...ட்டுவது என்றே தெரி... யவில்லை.
ஒரு நாள்..
கந்தா, நானும் உன்னைப் போல் உடையணிந்து கொள்ளப் போகிறேன். கானகத்துச் சூழ்நிலைக்கு அதுதான் சௌகரியம்..
ஆனந்தா, அதோ பார்!
அன்றொரு நாள் அங்கு பார்த்த கிழவன் ஞாபகமா? நம்மைப் பின் தொடர்ந்து வர வேண்டிய காரணமென்ன? இவன் ஆபத்தானவன் கந்தா.
கிளம்பி விட்டான். பின் தொடர்ந்து பார்த்து வரலாம் வா.
கந்தா, இவன் நடையைப் பார்த்தாயா? உண்மையில் இவன் கிழவனல்ல.
அதோ அந்தப் பெரிய வீட்டினுள் நுழைகிறான் பார்.



கதவைத் திற... சீக்கிரம்....
அந்த மாளிகை மீதும் இந்தக் கிழவனிடமும் ஏதோ மர்மமிருக்கிறது.
இதெல்லாம் துலபாணியின் பிரதேசங்கள்.
ஆனந்தா, அதோ ஒரு பட்டாளம் போகிறது. துலபாணியின் ஆட்கள்தான் இருக்க வேண்டும். அந்தக் கட்டடத்தை நோக்கியே போகிறார்கள். இப்படியே ஒளிந்திருந்து கண்காணிப்போம்.
அந்த மாளிகையின் எதிரில் பிச்சைக்காரர்களைப் போல உட்கார்ந்து விடுவோம். யோசிக்காதே.
கந்தா! அவர்கள் நம்மைக் கடந்து போகிறார்கள். இனிப் பயமில்லை. இருட்டும் நேரமாகி விட்டது. அந்த வீட்டைச் சோதனை போட்டுப் பார்க்க வேண்டும்.
ஆனந்தா. நாம் சேனாபதியிடம் அறிவிக்காமல் வந்திருக்கிறோம். அவர் கவலைப் படுவார்.
இருக்கட்டும். அதோ மாடி அறையில் விளக்கு வெளிச்சம் தெரிகிறது, பார்.


ஆனந்தன் மரத்தின் மீது ஏறி..
இவர்களைப் பார்த்தால் இந் நாட்டவராகத் தெரியவில்லை. ஒரு வேளை கைதிகளாக இருக்குமோ? குரல் எழுப்பிக் கூப்பிட முடியாது. ஆனால் இவர்கள் கவனத்தை என் பக்கம் திருப்புவது எப்படி? ஆ... இந்தப் பழங்கள்!
ஆனந்தன் எறிந்த பழம் காவல் கிழவன் மீது தவறி விழவே...
இந்த வௌவால்களின் தொந்தரவு சகிக்க முடியவில்லை.
ஆனந்தனின் அடுத்த முயற்சி பலனளிக்கிறது.
நீ... நீ... என் அம்மாவின் தாதி வஸந்தா இல்லை?....
அதே சமயம் உணர்ச்சி வயப்பட்ட ஆனந்தனின் பிடி தளரவே....

தொடரும்.



நான பலவீனமடைந்து களைப்புற்று வீட்டு வேலைகள் செய்ய முடியாமல் சிரமப் பட்டேன்.
எங்கள் அடுத்த வீட்டு மாமி தினமும் இரண்டு வேளை போர்ன் வீடா அருந் தவேண்டுமென்று சொன் ஞள்.
அவர்களுடைய டாக்டரும் அதையேதான் சொன்ஞ ராம். நானும் அதைக் கடை பிடித்தேன். சக்தியும் பல மும் பெற்றேன்.
இப்பொழுது உடம்பும் முன் போல நன்ருகிவிட்டது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் என் வேலேகளை சக்தியுடன் செய்து வருவதற்குக் காரணம்
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்

# நந்தவனம்





சோமு

## 15. வாசலிது வாசல்

செண்பகக் காட்டிலிருந்த சத்திரத்தின் பலகணி வழியாக நந்தவனத்துக்குள்ளே பார்த்த வில்வநாதன் அப்படியே வியப்பில் மூழ்கினான்! காற்றிலே மிதந்து வந்த குரலின் இனிமைக்கு மனித வடிவம் கொடுத்து, அந்த வடிவத்தை அப்படியே நந்தவனத்தில் நடந்து போகும்படி செய்தால் எப்படியிருக்கும்! அப்படியிருந்தது அந்தக் காட்சி!

இட்ட அடிநோவ
எடுத்தஅடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து
மருங்கு ஒசிய—

என்ற அடிகளை இதற்கு முன்பு எப்பொழுதோ எங்கோ கேட்டிருக்கிறான் வில்வநாதன்! அந்த அடிகள் இப்பொழுது அவன் நினைவுக்கு வந்தன!

எழிலும் இளமையும் அலை வீசிக் கொண்டிருக்கிற மேனி. மாலைக் கதிரவனின் மஞ்சள் வெயில் அந்த மேனியிலே தவழ்ந்தபோது, உடம்பு முழுதும் மின்னுவது போன்ற தோற்றம்! கையில் ஒரு தட்டு. அதில் பழங்களும் பூக்களும்! அவற்றுக்கு மத்தியில் ஒரு சிறு கிண்ணம். கோவில் விளக்குக்கு நெய் வார்ப்பதற்குச் செல்கிறாள் என்பதை ஊகித்துக் கொண்டான் வில்வநாதன்.

பலகணியின் அருகிலே சாய்ந்தவாறு அந்த எழிற் கன்னியை இமை கொட்டாமல் பார்த்தான் ஓவிய இளைஞன்!

அடி மேல் அடியெடுத்து நடந்து சென்றாள் அவள், அந்தக் கானகப் பாதையிலே! நேரே செண்பகநாயகி கோவிலையொட்டி நின்ற முருகன் சந்நிதிக்குச் சென்றாள். தாம்பாளத்தைக் கீழே வைத்தாள். பூக்களை யெடுத்து முருகனுடைய பாதத்திலே கொட்டினாள். கிண்ணத்திலிருந்த நெய்யை விளக்கிலே வார்த்தாள். தட்டில் வைத்திருந்த ஒரு சிறிய காகிதப் பொட்டலத்தை அவிழ்த்து அதிலிருந்த சூடத்தை வெளியே எடுத்தாள். சந்நிதியின் முன்பு வைத்துப் பொருத்தினாள். இரண்டு கைகளையும் கூப்பி வணங்கினாள். பிறகு முருகனுடைய சந்நிதியிலே கீழே விழுந்து வணங்கி எழுந்தாள். சூடத்தைக் கண்ணிலே ஒற்றிக் கொண்டாள். அந்தச் சந்நிதியைச் சுற்றி மூன்று முறை வலம் வந்தாள். நின்றாள். கண்களை மூடி ஏதோ மனத்துக்குள் பிரார்த்தனை செய்து கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள். எந்தப் பாதை வழியாக வந்தாளோ, அதே பாதை வழியாக மீண்டும் நடக்க ஆரம்பித்தாள், அதே நீல மயில் வாகனப் பாடலைப் பாடிக் கொண்டே!

வில்வநாதன் மெய்ம் மறந்த நிலையிலே நின்றான்! அந்தக் காலத்தில் அவனுடைய தந்தை அடிக்கடி




சொல்லுவார், ராகங்களையும், பண் வடிவங்களையும் பற்றி! ஏழு ஸ்வரங்களைக் கொண்டு எத்தனையோ நூறு ராகங்களைப் படைப்பது போலத்தான், சாய வர்ணங்களைக் கொண்டு ஓவியங்களை நிர்மாணிப்பதும் என்று சிவகாமிநாதன் கூறுவதுண்டு! ஒலியிலே உலவுகிற ராகங்களுக்கு, வர்ணங்களிலே ஓவிய வடிவம் கொடுப்பது என்பது அரிய பெரிய கலை என்று சிவகாமிநாதன் சொல்லுவார்! சங்கீதக் கற்பனைகளிலே மிதந்து வருகிற ராகங்களுக்குக் கண்ணும், மூக்கும், நெற்றியும், மேனியும் கொடுத்து, மனித உருவமாக உலவும்படி செய்தால், அந்த ஒலி வடிவம் இந்தச் சுந்தரியைப் போன்றுதான் இருக்கும் போலும் என்று நினைத்தான் வில்வநாதன்! இப்படி அவன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அங்கிருந்து நடந்து சென்று, அவனுடைய பார்வையிலிருந்து மறைந்தாள் அந்தப் பெண்! அவளுடைய பாடல் அவள் மறைந்த பிறகும் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகு அதுவும் மறைந்தது! ஆனால் அதன் பிறகு?....

பாடிய மங்கை பார்வையிலிருந்து மறைந்தாள். அவள் பாடிய பாடலும் செவியிலிருந்து நலிந்தது. ஆனால் அந்த அழகுக் கன்னியின் எழில் மேனியோ? அது வில்வநாதனுடைய பார்வையிலிருந்து மறையவில்லை!

இதற்கு முன்பு வில்வநாதன் எத்தனையோ அழகிகளை ஓவிய வடிவங்களாகப் பார்த்து வியந்திருக்கிறான். ஏன்? தாமரைச் செல்வியின் அழகிய தோற்றத்தில் அவன் வியப்புக் கொள்ளவில்லையா? கொண்டான்! ஆனால் அதெல்லாம் ஒரு காட்சி யனுபவம்! ஒரு மலரிலிருந்து வாசனை வரும்போது நமது இதயத்தில் ஓர் இன்பம் ஏற்படுகிறதல்லவா, அப்படிப்பட்ட இன்பமே அது! ஆனால் இப்பொழுது? இந்த அனுபவம் முற்றிலும் புதிதாக இருந்தது வில்வநாதனுக்கு! அவனையும் மீறி ஏதோ ஒன்று அவனை இழுத்தது. அவனுடைய உள்ளத்தை அவனுடைய உடம்புக்குள்ளிருந்து வெளியே ஈர்த்தது ஏதோ ஒன்று!

'இதெல்லாம் வெறும் மனமயக்கு! வெறும் கற்பனை.





எங்கோ ஒரு கானகத்தில், ஏதோ ஒரு பாடலைப் பாடிக் கொண்டு வந்த யாரோ ஒரு பெண்! அவளுக்கும் நமக்கும் என்ன தொந்தம்! ஒன்றுமில்லை. முருகனுடைய சித்திரத்தை வரைய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு, அவள் முருகனைப் பற்றிப் பாடியதும் ஒரு பரவசம் உண்டாயிற்று. அவ்வளவுதான். அதற்கு மேல் அவள் யாரோ! நான் யாரோ!'

இப்படித் தனக்குள் சொல்லிக் கொண்டே வில்வநாதன், பறந்து செல்லச் சிறகடித்து நின்ற தனது மனப் பறவையை மடக்கி ஒடுக்கி, உடற் கூண்டுக்குள்ளே பிடித்து நிறுத்த முயன்றான்! ஆனால் பறவை பிடிக்குள் அகப்படாமல் நழுவப் பார்த்தது.

வன தேவதைகளுக்குப் பூஜை போடச் சென்ற கம்பர் திரும்பி வந்தார்.

''தம்பி! என்ன இது! சித்திரங்களை யெல்லாம் மறந்து விட்டுக் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேனே! நீங்கள் என்ன இப்படிப் பலகணியிலே சாய்ந்து ஒரே சிந்தனையிலே உட்கார்ந்து விட்டீர்கள்!''

இவ்வாறு கேட்டார் கம்பர்.

''ஒன்றுமில்லை, கம்பரையா!'' என்று சொல்லும் போதே, வில்வநாதனுடைய முகத்தில் தாபம் கவிந்தது.

''தம்பி! என்னிடம் மறைக்காதீர்கள்! உங்கள் கண் சிவந்திருப்பதைப் பார்த்தால், ஏதோ தீவிரமான யோசனையில் இருக்கிறீர்கள் என்று தெரிகிறது. என்னிடம் மறைக்காமல் சொல்லி விடுங்கள்! ஆமாம்!'' என்று கேட்டார் கம்பர்.

''கம்பரையா! முருகப் பெருமானுடைய சித்திரங்களை வரைய வேண்டும் என்று சுந்தரேசப் பட்டர் யோசனை சொன்னார். அதிலிருந்து நினைவு முழுதும் கந்தபுராணக் கதையிலேயே மூழ்கியிருந்தது. ஆறுமுகப் பெருமான் சரவணப் பொய்கையிலே தவழ்ந்த காட்சியை, எப்படி வரையலாம் என்று யோசித்துக் கொண்டேயிருந்தபோது, சற்று முன்பு அந்த அவதார தத்துவத்தை அப்படியே கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிற ஒரு பாடலைக் கேட்டேன்—''

வியப்பும் ஆனந்தமும் பொங்கியவனாக வில்வநாதன் இப்படிச் சொன்னதும் கம்பர் கேட்டார்:

''பாட்டா? இங்கேயா? சற்று முன்பா?''

கம்பர் இப்படிக் கேட்டதும் வில்வநாதன் சொன்னான்:

''சற்று முன்பு உங்கள் எதிரே யாராவது ஒரு பெண் நடந்து செல்வதைப் பார்த்தீர்களா?''

''ஆமாம். செண்பகம் போகிறது. அதைப் பார்த்தேன்!''

கம்பர் இத்தனை சுதந்திரத்தோடும் உரிமையோடும், அந்தப் பெண்ணை அஃறிணையிலே குறிப்பிட்டதும் வில்வநாதனுக்கு ஆவல் பொங்கியது.

''செண்பகமா?'' என்று கேட்டான்.

''ஆமாம். செண்பகசுந்தரி என்று பெயர். அற்புதமான குரல்! மனம் விட்டுப் பாடிற்று என்றால், இந்த மலையும் கல்லும் அப்படியே உருகி விடும்!''

கம்பர் இவ்வாறு சொன்னபோது அவருடைய கண்கள் கலங்கின. ஏனோ வில்வநாதனுக்கும் கண் கலங்கிற்று!

''தம்பி! செண்பகசுந்தரி என்று பெயர். சேற்றிலே மலர்ந்த ஒரு செந்தாமரை அது!'' என்றார் கம்பர் மறுபடியும்!

''ஐயா! உங்களுக்கு அந்தப் பெண்ணைத் தெரியுமோ?'' என்று கேட்டான் வில்வநாதன்.

''சரியாய்ப் போயிற்று! எனக்கு அந்தப் பெண்ணை மட்டுந்தானா தெரியும்! அந்தக் குடும்பத்தையே தெரியும்! பத்து வருஷங்களுக்கு முன்பு வரை, இந்தப் பெண்ணின் தாயார் நாட்டியம் ஆடாத திருவிழாவே இல்லை இந்த வட்டாரத்தில்! அவளுடைய சதிர்க் கச்சேரியில்லாத ஜமீன் கலியாணமே கிடையாது! குமுதவல்லி என்று பெயர்! அழகும் கலையும் அப்படியிருந்தது அவளிடம்! ஆனால் குணமும் நடத்தையுமோ! தம்பி, அந்தப் பேச்செல்லாம் உங்களுக்கு எதற்கு? இளம் பிள்ளை நீங்கள். இத்தனை சொன்னதே தப்பு!''

இப்படிச் சொல்லிப் பேச்சை முடித்தார் சங்கர நமச்சிவாயக் கம்பர். வில்வநாதனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அந்தப் பெண்ணைப் பற்றி இன்னும் கொஞ்சம் பேச மாட்டாரா என்றிருந்தது அவனுக்கு!

''ஐயா! நான் கேட்பதை வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதீர்கள். எந்தச் சித்திரத்துக்கு நான் கற்பனைகள் தேடினேனோ, அந்தச் சித்திரக் கற்பனைகளை யெல்லாம் அப்படியே கண் முன் வழங்குகிற பாடலை அந்தப் பெண் பாடினாள். அதற்கு மேலும் அவள் பாட மாட்டாளா என்று தோன்றிற்று! அதனால்தான் கேட்டேன்!'' என்றான் வில்வநாதன்.


''தம்பி! அவளுடைய பாட்டைப் பற்றித்தான் ஆரம்பத்திலேயே சொல்லி விட்டேனே. கல்லே உருகிவிடும் என்

# பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் வனிதைக்கு ஒரு பெயரை அளித்து

# ஒரு சிறந்த பரிசைப் பெறுங்கள்!




அவள் யார்? அவளுடைய பெயர் என்ன?
அவள், ஏற்கனவே, **பாண்ட்ஸ்** ட்ரீம்ப்ளவர் விளம்பரங்கள் மூலம், உங்களுக்குப் பரிச்சயமானவள் தான்! பெயரா? நீங்கள் தான் அவளுக்கு ஒரு பொருத்தமான பெயரை அளியுங்களேன்! இன்றே ஒரு பெயரைத் தேர்ந்தெடுங்கள்—இந்தப் பரிசுகளில் ஒன்றை நீங்கள் பெறக்கூடும்!









1ம் பரிசு:
லாம்ப்ரெட்டா ஸ்கூட்டர்



2ம் பரிசு:
7-வால்வ் பிலிப்ஸ் ரேடியோ



3ம் பரிசு:
ஒமேகா தங்க கைக் கெடியாரம்



4ம் பரிசு:
கோத்ரெஜ் 'ஸ்டோர்வெல்' பீரோ



5ம் பரிசு:
ஹெர்குலிஸ் ஸைக்கிள்

**மற்றும், பரிசுப் பத்திரங்களாக இதர 100 பரிசுகள்!**

விதிகளும் கூபன்களும் உங்களுக்கருகில் உள்ள பாண்ட்ஸ் வியாபாரியிடமிருந்தோ அல்லது கீழ்க்கண்ட விலாசத்திலிருந்தோ பெறலாம்:

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
தபால் பெட்டி 1612, பம்பாய்-1

**சேரக் கடைசி தேதி 8-5-1962**

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

னால் நம்மைப் போன்ற மனிதர்கள் எம்மாத்திரம்! அதிலும் சித்திரமும் ஒவியமும் வரைகின்ற உங்களைப் போன்ற கலை உள்ளம் கொண்ட மனிதர்களின் மனம் உருகுவதில் ஆச்சரியமே இல்லை. ஆனால் இளம் பிள்ளை நீங்கள்! அப்படியெல்லாம் மனம் உருகி விடக் கூடாது உங்களுக்கு! ஏனென்றால் இந்தப் பெண்ணின் தாய் இருக்கிறாளே அவள் ஒரு நீலி! இந்த ஜமீன் வட்டாரத்தில் ஒரு காலத்தில் அவளை முன் விட்டு எத்தனையோ கொலைகள் நடந்திருக்கின்றன. எத்தனையோ கேஸ்கள் ஹைகோர்ட் வரை போயிருக்கின்றன! இப்பொழுது பத்து வருஷங்களாகத் தான் அந்த அம்மாளுக்கு முடக்கு வாதம்! வழக்குகளும் முடங்கிக் கிடக்கின்றன! அதையெல்லாம் பற்றி இந்த ஜமீன் வட்டாரத்துக்குள் இருந்து கொண்டு பேசுவதே குற்றம்!''

வார்த்தைகளை அடக்கி மெல்லிய குரலிலே பேசி முடித்தார் கம்பர்! வில்வநாதன் அதோடு திருப்தி அடையவில்லை.

''கம்பரையா! இந்தப் பெண்ணின் குடும்பத்தைத் தெரியும் என்கிறீர்களே, யார் இவர்கள்?''

''தம்பி! இவர்கள் எல்லாரும் கோவில் திருவிழாக்களிலே நடனம் ஆடுகிற தேவதாசியரின் பரம்பரையிலே வந்தவர்கள். இவர்களுடைய முன்னோர்களிலே பலர் தெய்வ கடாட்சம் பெற்ற பெரிய கலைஞர்கள்! பல கோவில்களிலே இந்தக் குடும்பத்தாருக்கு என்று இன்றும் சாசனங்கள் உண்டு!''

''அவ்வளவு புகழ் நிரம்பிய ஒரு குடும்பமா?''

''ஆமாம். அப்படிப்பட்ட கலைப் பரம்பரையிலே ஒரு கொடுமைக்காரி தோன்றினள் குமுதவல்லி என்று! சங்கீதமும் நடனமும் அவளிடம் போய் அடைக்கலம் புகுந்தன. ஆனால் அந்தக் கலையிலே ஈடுபட்டு அங்கே சென்ற மனிதர்கள் எல்லாம் சூழ்ச்சிகளுக்கும் பாதகங்களுக்கும் உள்ளானார்கள்! என்ன செய்வது! தலை விதி! அப்படிப்பட்ட ஒரு நீலியின் மகளாகப் பிறந்து, நல்ல வாழ்வு வேண்டும் என்று தினமும் முருகனை வழிபடுகிறாள் இந்தச் செண்பக சுந்தரி. தங்கமான பெண்! சேற்றிலே தாமரையும், சிப்பியிலே முத்தும், வண்டின் வாயிலே தேனும் இல்லையா! அப்படி அந்த அம்மாளுடைய வயிற்றிலே வந்து பிறந்திருக்கிறாள் இந்தப் பெண்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே எழுந்தார் கம்பர்.

''தம்பீ! உங்களிடம் இப்படியெல்லாம் பேசவே பயமாக இருக்கிறது! ஏதோ ஜமீந்தாருடைய கட்டளைப்படி ஒரு முக்கிய திருப்பணியை முடிப்பதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள். வந்த வேலையை முடித்துக் கொண்டு நீங்கள் நல்லபடியாக ஊர் போய்ச் சேர வேண்டும். அதற்கு வேண்டிய காரியங்களைப் பாருங்கள். அனவரதர் அன்பிலே கடலைப் போன்றவர்! ஆனால் அந்தக் கடலை விபரீதமாகக் கடைந்து விட்டோமானால், ஆலகால விஷம் தோன்றிவிடும்! ஜாக்கிரதையாக இருங்கள். அவ்வளவு தான் சொல்லுவேன்.''

இப்படிச் சொல்லி விட்டு நடந்தார் கம்பர்.

வில்வநாதனுடைய உள்ளத்தில் திகிலும், அந்தத் திகிலோடு சேர்ந்து இனம் புரியாத ஒரு பிரமையும் படர்ந்தன. அன்றிரவு அவன் உறங்கவில்லை!

மறுநாள் வில்வநாதனுக்குத் தனது சித்திர வேலைகளிலே மனம் செலுத்த முடியவில்லை. காற்றிலே மிதந்து வந்த அந்தப் பாட்டும், அதைத் தொடர்ந்து நந்தவனத்திலே நடந்து வந்த அந்த நங்கையின் தோற்றமும் ஒவிய நினைவுகளையே இப்பொழுது குழப்பியடித்தன!

நேற்றுத் தற்செயலாக மிதந்து வந்த அந்தப் பாடல், இன்று மறுபடியும் கேட்காதா என்று ஏங்க ஆரம்பித்தான் வில்வநாதன். இதுவரை குகையிலேயே இறகும் கையுமாக இருந்த ஒவியன் இன்று சத்திரத்துப் பலகணிக்கு அருகிலே, நந்தவனத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மீண்டும் பாடல் கேட்டது! இன்று கேட்டது, வேறொரு பாடல்:

வாசலிது வாசலிது
வளர்ந்தோங்கும் வாசலிது!
காசிகன்யா குமரிமுதல்
காசினிஎல் லாம்புகழும்
வாசமிகு செந்தில்நகர்
வடிவேலன் வாசலிது!
பத்தர் சித்தர் முத்தர்களும்
பாடகரும் நாடகரும்
வித்வத் சபை கூடிநித்தம்
விவகரிக்கும் வாசலிது!
தம்புரு வீணைகள் மீட்டி — ஓம்
சரவண பவாஎனவே
தும்புரு நாரதர் முதலோர்
துதிமுழங்கும் வாசலிது!

நாததநாமக்ரியா ராகத்தில், செந்திலாண்டவனுடைய சந்நிதியை அப்படியே ஒலிச் சித்திரமாக, நாதக் கோவிலாக, நிர்மாணித்துக் கண் முன் நிறுத்தி விட்டது அந்தப் பாடல்!

சத்திரத்திலிருந்து வெளியே வந்தான் வில்வநாதன். தயங்கித் தயங்கி நின்று கொண்டே மறுகினான் அவன்!

அவள்? வழக்கப்படி முருகனுடைய சந்நிதானத்திலே விளக்கை ஏற்றினுள். தீபம் காட்டினுள். வலம் வந்தாள். விழுந்து வணங்கி எழுந்தாள். திரும்பி விட்டாள்!

வில்வநாதன் அவளைக் கூர்ந்து பார்த்தான். அவளும் தனது பாதையின் நடுவிலே சந்நிரந்து வாசலில் நின்ற அந்த ஓவிய இளைஞனைப்பார்த்தாள். ஒரு விநாடி சந்தித்து நின்ற அவனுடைய கண்களிலே, ஓர் இனிய திகைப்பு ஊடாடியது! மறுகணம் அவள் பாதையிலே நடந்து சென்று விட்டாள்!

வில்வநாதன் அன்றிரவும் உறங்க வில்லை!

'என்ன பாடல்! என்ன பாடல்! எத்தகைய குரல்! என்ன இனிமை! என்ன எழில்! எத்தகைய வண்ண மேனி!'

இவ்வாறு எண்ணமிட்டான் வில்வநாதன். அந்த இளம் மேனி கூரிய இரண்டு கண்களும், நெஞ்சகத்தை அள்ளிக் கொள்ளுகிற காந்த சக்தியுமாக எதிரே நின்றது! அந்த மேனி! செம்மையும் மஞ்சளும் கலந்த வண்ண மேனியின் சோபை! வில்வநாதன் சிந்தனை செய்தான். ஓவியத்துக்காகக் கிண்ணங்களிலே கூட்டிச் சேர்க்கிற வண்ணங்களையெல்லாம் எண்ணிப் பார்த்தான். மஞ்சள் என்று ஒரு வர்ணம்! சிவப்பு என்று ஒரு வர்ணம்! ஆனால்இவளுடைய மேனியோ? மஞ்சளிலே ஒரு சிவப்பு. சிவப்பிலே ஒரு மஞ்சள்! அப்படி ஒரு நிறம்! தெய்வ ஓவியன் இந்த மேனியைப் படைக்கும்போது சிவப்பையும் மஞ்சளையும் எப்படிக் கலந்து பூசினுனே! செம்பருத்தி மலர் போன்று தனிச் சிவப்பு இல்லை அது! பொன் கொன்றை மலர் போன்ற முழு மஞ்சள் நிறமும் இல்லை அது! மாதுளம் பழத்தின் தோட்டிலே மஞ்சளுக்கு மத்தியில் குங்குமத்தைச் சிதறினுனே பரமன், அவனுடைய தெய்வ இறகு இந்தச் செண்பக சுந்தரியின் மேனியிலே இப்படி ஒரு வண்ண மாயத்தைச் செய்திருக்கிறது!

இவ்வாறு வியந்தான் வில்வநாதன்.

''பாடலைப் பின்தொடர்ந்த மனம் இப்பொழுது பாடகியின் மேனியைச் சூழ்ந்து குமைகிறதா!'' — இப்படி ஓர் எண்ணம்! உள்ளத்தில் தீப்பட்டது போல இருந்தது! ஆனாலும் அந்தத் தீயிலேயே விழுந்து விழுந்து துடிக்கத் துடித்தது வில்வநாதனின் மனம்!

தாமரைச்செல்வியின் காதல் மொழிகளை நினைத்துப் பார்த்தான் வில்வநாதன்! அந்தச் சிங்கம்புத்தூர்க் குமரியின் அத்தனை மொழிகளைக் கேட்டபின்பும், அவளுடைய இதயத்தின் ஒலிகளோடு கருதி சேர்ந்து ஒலிக்காமல் திமிறி நின்ற தனது இதயம், இப்பொழுது ஏன் இப்படி விபரீதமாகத் துடிக்கிறது! ஒரு வார்த்தைகூடப் பேசி அறியாத ஒரு பெண்ணின் வண்ணக் கோலத்திலே தனது மனம் இப்படி மயங்கி அழிந்து போவது ஏன்? இதுதான் ஜன்ம ஜன்மாந்தரத் தொந்தமோ? ஐயோ! தன்னுடைய தந்தை உயிரோடு இருந்தால் இதைக் கண்டு அவர் மனம் என்ன பாடு படும்! நல்ல வேளை! அவர் இறந்து போனுரோ, பிழைத்தாரோ! இல்லையென்றுல், இதற்காகவே இப்பொழுது அவருடைய உயிர் போய் விடும்!

இப்படி ஒரு விநோதமான எண்ணம்! வில்வநாதன் கண்களைத் துடைத்துக் கொண்டான். ஆனாலும் அந்தக் கண்களுக்குள்ளே தெரிந்த செண்பகசுந்தரியின் தோற்றத்தைத் துடைத்துவிட முடியவில்லை!

மலை உச்சியிலிருந்து கால் தவறிக் கீழே விழுவது என்றுல் எத்தனை நேரம் பிடிக்கும்! இப்பொழுது காதலிலே கால் சறுக்க ஆரம்பித்து விட்டதே என்று கலங்கினுன் வில்வநாதன்! கீழே உருளுகிறோம் என்று தெரிந்தது அவனுக்கு! ஆனாலும் உருண்டு கொண்டே இருந்தான் அவன்!

மூன்றும் நாள் வில்வநாதன் பல கணிக்கு அருகிலே உட்காரவில்லை. வெளியே வந்து கோவிலுக்கு அருகிலே நின்று கொண்டான். அவள் வந்தாள்! இவன் நின்றதைத் தொலைவிலிருந்தே பார்த்து விட்டாள் போலும்! பாட்டுப் பாடாமல் மௌனமாகவே நடந்து வந்தாள். விளக்கை ஏற்றி வழிபாட்டை முடித்துக் கொண்டு மௌனமாகவே திரும்பி நடந்தாள்! அந்த மௌனத்தை, அவளுடைய அந்த மோன விரதத்தைக் கலைத்து விடுவது என்று துணிந்து விட்டான் வில்வநாதன்!

''மன்னிக்க வேண்டும். உங்களை ஒன்று கேட்கலாமோ?''

இவ்வாறு அவளுடைய மோனப் பாதையிலே குறுக்கிட்டான் ஓவியன்!

திகைப்பைச் சமாளித்துக் கொண்டவளாக அந்த அழகி அவனையே பார்த்தாள். பேசவில்லை! ஒரு விநாடி மௌனமாக நின்றுள். இதழின் கோடியிலே ஒரு முறுவலின் கோடு, மெல்லிய இறகினுல் ஓடவிட்ட ஒரு சிறு கோடு தெரிந்தது!

''எத்தனை அற்புதமாகப் பாடுகிறீர்கள் நீங்கள்! இறகுக்குள் அகப்படாத எண்ணங்களையெல்லாம் அனுயாசமாகக் காற்றிலே உதிர்த்துவிட முடிகிறதே உங்களால்!''

வில்வநாதன் இப்படிச் சொன்னதும், குங்கும மஞ்சள் வண்ணம் குலவி நின்ற வதனத்திலே, செந்நிறம் செறிந்தது! நாணத்தால் தலை குனிந்து நின்ற செண்பக சுந்தரியின் இதழ்களிலே நகை மலர்ந்தது.

''என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? இறைவனுக்கு அர்ப்பணமாக வேண்டிய ஒரு காணிக்கை என்னுடைய பாடல்! அதில் அழகு இருந்தால் அதுவும் இறைவனையே சேர வேண்டியது!''

இப்படிச் சொன்னாள் சுந்தரி! அந்த வார்த்தைகளை இரண்டு செவிகளும் குளிரும்படியாக வாங்கினான் வில்வநாதன்! பேச்சா அது! வீணையும் புல்லாங்குழலும் ஏழு ஸ்வரங்களை வாசிப்பதற்குப் பதிலாக, மனித பாஷையிலே பேச ஆரம்பித்தால் எப்படியிருக்குமோ, அப்படியிருந்தது அது, வில்வநாதனுடைய செவிகளுக்கு!

''என்னுடைய கற்பனைகளுக்கு உரிய பொருள் எங்கேயிருக்கிறது என்று இது வரை காடும் மலையும் தேடினேன்! கண்டுபிடித்து விட்டேன்!''

போதையிலே பேசுவது போல் இப்படிப் பேசினான் ஓவிய இளைஞன். அவனுடைய முகத்தில் நின்ற லயத்தைக் கண் இமையாமல் பார்த்தாள் செண்பகசுந்தரி. அவளுடைய உடம்பெல்லாம் அலைவீசிற்று!

''ஐயா! இந்தக் கோவிலிலே சித்திரத் திருப்பணி நடந்து வருகிறது என்பதை அறிவேன். இதுவரை குகையிலே மனம் ஒன்றியிருந்து, வர்ணத் தவம் செய்து வந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும். இப்பொழுது அந்தத் தவத்தை என்னுடைய பாடல் கலைத்து விட்டதா! ஐயோ! என்ன விபரீதம் இது! குகையிலிருந்து ஏன் வெளிவந்தீர்கள் நீங்கள்?''

இப்படிக் கேட்டபோது செண்பக சுந்தரியின் குரலிலே துயரம் பொங்கிப் பெருகிற்று!

''அப்படியெல்லாம் துயரத்தோடு பேசாதீர்கள்! குகையில் நான் செய்த பணி வெறும் சாயப் பூச்சுதான்! மங்கியிருந்த இடங்களைப் புதுப்பித்தேன். அவ்வளவுதான். நானாக என்னுடைய கற்பனையைக் கொண்டு வரைய வேண்டிய பணி, இனிமேல்தான் இருக்கிறது! அதற்கு எண்ணங்கள் வழங்குவதற்காகத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள். என் கற்பனைக்குரிய பொருளை எனக்குக் காட்டுவதற்காகத்தான் உங்கள் பாடல் ஒலித்தது. உண்மையில் என் சிந்தனையைக் கலைக்கவில்லை நீங்கள். அதற்கு வழி வகுத்துத் தருகிறீர்கள்! அதுதான் உண்மை! உங்களுடைய பாடல் ஒவ்வொன்றும் ஓர் ஒலிச் சித்திரம்! உங்களுடைய குரலிலே இழைகிற ஒவ்வொரு பண்ணும் ஓர் ஒலி ஓவியம்! அதை வர்ணத்திலே வாங்கி வடிப்பது தான் என்னுடைய கவர் ஓவியம்!''

இப்படிச் சொல்லிக் கொண்டே போனான் வில்வநாதன். அவனுடைய முகத்திலே பெருகிய இன்பக் கோலாகலமும், அவனுடைய குரலிலே பொங்கி ஓடிய ஆனந்தப் பரவசமும், செண்பக சுந்தரியின் மெல்லிய உள்ளத்தை அள்ளிச் சென்றன. அவள் வில்வநாதனுடைய விழிகளையே பார்த்தவாறு நின்றாள்.

''நீங்கள் பாடிய பாடலின் ஒவ்வொரு அடியையும் மீண்டும் பாட வேண்டும் நீங்கள்! மீண்டும் மீண்டும் மீண்டும் பாட வேண்டும்! அந்தப் பாடலின் சொல்லும், அந்தச் சொல்லோடு இழைகிற குரலின் ஆழமும், இறகிலே பாய வேண்டும், வர்ணத்திலே இணைந்து கலந்து பாட வேண்டும்! அப்படிப் பாய்ந்து விட்டால், அவ்வாறு இணைந்து விட்டால், இந்தச் செண்பகக் காட்டிலேயுள்ள செண்பக மலர்களோடு என்றென்றும் கலைமணம் கமழும் ஓவிய மலர்கள் பூத்து நிற்கும்! மரத்திலே பூத்த செண்பக மலர்கள் வாடிவிடும். ஆனால் செண்பக சுந்தரியின் குரலிலே பூத்த ஒலி மலர்களும், அந்த ஒலி மலர்களிலிருந்து உருவாகிய ஓவியப் பூக்களும், என்றென்றும் வாடாமல் நின்று, இந்தச் செண்பகக் காட்டின் நந்தவனத்திலே, மனித இதயங்களின் அமர உணர்ச்சிகளையெல்லாம் நித்திய வாசனையாகக் கமழச் செய்து கொண்டே இருக்கும்! சந்தேகமில்லை!''

இப்படிச் சொல்லிக் கொண்டே வில்வநாதன் செண்பக சுந்தரியின் எழில் முகத்தையே பார்த்தான்! அப்போது சுந்தரி சொன்னாள்:

''ஓவியரே! சித்திரங்கள் வரைவதற்கான பாடல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதானே உங்கள் எண்ணம்! என்னைவிட என் அன்னையிடம் இதுபோன்ற எத்தனையோ பாடல்களைத் தெரிந்து கொள்ளலாம் நீங்கள். அந்த இசைக் கடலில் இருந்து எழுந்த ஒரு சிறு மேகந்தான் நான். நீங்கள் ஒரு நாள் மலை அடிவாரத்தில் உள்ள எங்கள் வீட்டுக்கு வருவீர்களானால், ஆயிரம் ஆயிரம் பாடல்கள் உங்களுக்குக் கிடைக்கும். ஆனால், ஆனால், நீங்கள் எப்படி அங்கே வர முடியும்? நீங்கள் அங்கே வந்தால் பிறகு——''

''ஏன், ஏன், சொல்லுங்கள், நான் ஏன் அங்கே வரக் கூடாது?'' என்று கேட்டான் வில்வநாதன்! (தொடரும்)

# பவானி வந்தாள்,!



காலை நான்கு மணிக்கே ராமர் கோவில் பெரிய மணி கேட்டு விடுகிறது. அதன் ஓசைத் துடிப்பு வின்னென்று அவளைச் சுற்றிக் குமைகிறது. கையால் துடிப்பைத் தொட்டு விடலாம் போலிருக்கிறது.

''பவானி வருகிறாள்! பவானி வருகிறாள்!''

அந்தக் கட்டியத்தைத் தான் மணி தன் வெண்கல நாவால் உச்சரிப்பது போலிருக்கிறது.

''பவானி வருவாளா?''

என்றும் போல் இருள் அகல்கிறது. வீட்டிலும் தெருவிலும் ஜீவன் தளிர்த்துப் புழங்க ஆரம்பித்து விடுகிறது.

விஜயம் மேலே வருகிறாள். ''என்ன அம்மா! இவ்வளவு சீக்கிரமாக எழுந்து விட்டீர்கள்?'' என்கிறாள்.

''என்றைக்கும் நான் இப்படித் தான் எழுந்திருக்கிறது வழக்கம்!'' என்று பதில் சொல்கிறாள்.

போது நன்றாக விடிகிறது. இருந்த இடத்தை விட்டு இன்னும் எழுந்திருக்க மனம் வரவில்லை. அவளிடம் யார் மதிப்புக் கொடுத்துப் பேசுவார்கள்?

அப்பாவும் பிள்ளையும் மௌனமாகவேயிருக்கிறார்கள். வீட்டில் புகுந்த நிசப்தம் இன்று இறுகி இறுகி வீடு முழுவதும் அழுத்தத்தைக் கொடுக்கிறது. அதன் பாரத்தைத் தாங்காது, வெளியில் போய் விடலாம் போலிருக்கிறது. இல்லை; அதாகவே அவளைத் தள்ளி விடுமோ?

மாலையில் கோவிலுக்குப் போய் விடுகிறாள். குழந்தைகள் கும்மாளமிட்டு இரைகிறார்கள். பிராகார மணலில் அமர்கிறாள். மதில் சுவர் விளக்குகளில் ஒளி ஒட்டிக் கொள்கிறது.. மேலே பார்க்கிறாள். நீலத் துணியில் கொலுச் சித்திரம் வரைந்தது போல் வானத்திடை கோபுரம் வளர்ந்து கொண்டே போகிறது.

''அம்மா, ரங்கவல்லி! என் துக்கங்களை என்று களையப் போகிறாய்?'' என்கிறாள்.

சாரி சாரியாகப் பெண்கள் போகிறார்கள். யாரைப் பார்த்தாலும் பவானியின் நினைவு வருகிறது.

''பவானி! பவானி!'' உள் மனம் கூவி யழைக்கிறது. கண்களில் நீர் திரையிட்டு விடுகிறது. வீட்டுக்கு மெள்ள வருகிறாள். கூடத்தில் அமர்கிறாள். நினைவையெல்லாம் பிரமை மூடி விடுகிறது.

ரயிலில் அவள் அமர்ந்திருக்கும் காட்சி தென்படுகிறது. அவள் கையிலுள்ள பொட்டலம் பிரிந்து கதம்பத்தின் மணம் இமிறிப் பரவிக் கொண்டிருக்கிறது. முந்திய நாளிரவில் திருச்சி சந்திப்பில் வாங்கியது! பவானிக்குத் தன் கையால் கொடுக்க வேண்டுமென்று ஆவல்!

''பவானி எங்கே?''

கேள்வி ரயில் நிலையத்திலிருந்தே குமுறிக் கொண்டிருக்கிறது. அவளைச் சந்திப்பதற்குப் பவானி ரயிலடிக்கு வரவில்லை.

''ஏன் வரவில்லை?'' என்று உடனே கேட்கவும் வெட்கமாக இருக்கிறது.

''பெண் மீது இருக்கிற பாசத்தைப் பார்!'' என்று அவர் கேலி செய்தாலும் செய்வார். அவருக்கும் ஆசையில்லாமலா இருக்கப் போகிறது? அவள் நெஞ்சத்தின் விழைவு கேள்வியாக வெடித்து வந்து விட்டது. தோரண வெடிகளில் முதல் வெடி அவள். சற்றுப் பின் இரண்டாவது வெடிக்கப் போகிறவர் அவர். தெரியாமலா இருக்கிறது?

வந்ததிலிருந்து கோபு சாமான்களை எடுத்து ஒழுங்குபடுத்துவதிலேயே இருக்கிறான். அம்மாவிடம் எண்ணி இரண்டு வார்த்தைகள் பேசி விருப்பானோ என்னவோ? கல்யாணம் ஆகி விட்டாலும் 'சின்னதுகள் சின்னதுகள்' தான்! பெரியவர்களின் உள் உணர்வுகளை எங்கே உணர்ந்து கொள்ளப் போகிறார்கள்?

''பவானி எங்கேடா?''

''எல்லாம் சொல்றேன்.'' பெரிய பெட்டியை, இரண்டு கைகளாலும் மிருதங்கத்தைத் தூக்குவது போல் தூக்கியவாறு உள்ளே போய் விடுகிறான்.

ஈஸிசேரில் அவர் சாய்ந்து கொண்டு விடுகிறார். அவள் கதம்பத்துடன் உள்ளே நுழைகிறாள்.

''விஜயம்! என்ன இது? பவானி எங்கே?''

''வெளியே போயிருக்கிறாள்; வந்து விடுவாள்....!''

''ஊரிலிருந்து நாங்கள் வருவது அவளுக்குத் தெரியாதா?''

''தெரியுமே; தெரிஞ்சுதான் போயிருக்கிறாள்!''

மாலை மங்க ஆரம்பித்து விடுகிறது. வானம் முழுவதும் மெல்லிய நீலம் விரித்திருக்கிறது.

அப்பாவும் பிள்ளையும் வெளியே போய் விடுகிறார்கள். அவள் வாசல் திண்ணையில் அமர்ந்து கொண்டிருக்கிறாள். உள்ளே விஜயம் விளக்கை வணங்கிப் பாடுவது கேட்கிறது.

''அம்மா நீங்கள் சாப்பிட வருகிறீர்களா?'' விஜயம் வந்து நிற்கிறாள்.

ஸ்ரீ வேணுகோபாலன்

''பவானி வர வேண்டாமா?''

''அவளை அழைத்துக்கொண்டு வரத்தானே அவர்கள் போயிருக்கிறார்கள்!''

''எல்லோரும் வந்து விடட்டும். சாப்பிட வருகிறேன்!'' என்கிறாள்.

எதிரே நடேசமுதலியார் பார்க் தெரிகிறது. நெட்டிலிங்க மரங்களின் இலைகளினிடையே நியான் விளக்குகள் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. இலேசாகப் படிந்த ஒளியில் கல் வாழைகள் பூத்துக்குதறியிருப்பது தெரிகிறது. அந்தப் பூங்கா முழுதும் நனவும் கனவுமற்ற ஒரு நடு நிலைக் காட்சியில் தெரிவது போன்றிருக்கிறது.

பவானியின் நினைவு வருகிறது. அவளை இவ்வளவு நாட்கள் பிரிந்திருக்கக் கூடாதுதான். காலேஜில் படிக்கிறாளாம்! படிக்க வேண்டியதுதான் ஒரு தரமாவது லீவில் கிராமத்துக்கு வந்து அவளைப் பார்த்து விட்டுப் போயிருக்கக் கூடாதா? ஒழிச்சல் இல்லையாம்! என். ஸி. ஸி.யாம்! சமூக சேவையாம்!

இதெல்லாம் யாருக்கு வேண்டிக் கிடக்கிறது?

அரவம் கேட்கிறது. அவள் சட்டென்று எழுகிறாள். அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். முதலில் 'அவர்'! பின்னால் கோபு! அதற்கும் பின்னால்......

கண்களால் துழாவிப் பார்க்கிறாள். ஒருவரும் தெரியவில்லை. எல்லாம் வெறுமைதான்!

''பவானி எங்கே?''

அவர் அவளை ஏறிட்டுப் பார்க்கிறான்.

''அவளைப் பற்றிப் பேசாதே!''

அவள் வெலவெலக்கிறாள்! உள்ளே போய் விடுகிறாள். விஜயம் சுவாமி படத்தின் முன் கும்பிட்டுக் கொண்டிருப்பது தெரிகிறது. அவள் அருகில் செல்கிறாள். அவள் கைகளும் தாமாகவே கூம்புகின்றன.

''சுவாமி! யாரிடமிருந்து என்ன செய்தி வரப் போகிறது?''

கைகளைத் தணித்தவாறு விஜயத்தின் அருகில் வருகிறாள்.


''விஜயம், இதென்ன எல்லோரும் மூடு மந்திரம் பண்ணுகிறீர்கள்? பவானி எங்கே?''

விஜயம் திரும்புகிறாள். சுவாமி முன் உள்ள திருவிளக்கின் சுடர் அவள் கண்களில் தொத்திக் கொண்டாற் போல் நீர் பளபளக்கிறது.

''நேற்று இரவே இந்த வீட்டை விட்டுப் போய் விட்டாள், அம்மா?''

''எங்கே போனாள்?''

''தெரியவில்லை; கடிதம் எழுதி வைத்திருக்கிறாள். அவளைத் தேட வேண்டாமாம்! அவள் வாழ்க்கையை அவளே வகுத்துக் கொண்டு விட்டாளாம்!''



''நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லை, விஜயம்! அவன் யார் வீட்டிலே போய்த் தங்குவான்? அவனை யாராவது என்னமாவது சொன்னீர்களா?''

''ஐயோ, அம்மா! அதெல்லாம் உங்களுக்குத் தெரியாது! உங்கள் பிள்ளையே சொல்வார், கேளுங்கோ!''

இரவில் ஒருவருமே சாப்பிடவில்லை.

மெதுவாகக் கூடத்துக்குள் எட்டிப் பார்க்கிறாள். அவர் கத்திக் கொண்டிருப்பது தெரிகிறது. அவள் உடம்பு நடுங்குகிறது.

''அந்த அயோக்கியனை உன்னை யார் வீட்டில் ஏற்றச் சொன்னது?''

''நல்லவனாகத்தான் அப்பா இருந்தான்!''

''இருந்தான்! உன் பிள்ளைக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறேன் பேருன்னு,— உள்ளே கூடத்திலே போய் உட்கார்ந்து அவனோடு பேசுகிற வரைக்கும் அனுமதித்திருக்கிறாயே! உனக்கு முன் யோசனை ஏதாவது இருக்கிறதா? இல்லை, உன் மனைவியாவது கவனித்துக் கண்டித்தாளா?''

''அவள் கவனித்துச் சொன்ன பிறகுதான் டியூஷனை நிறுத்தி விட்டேன்!''

அவன் உள்ளே போய் விடுகிறான். விஜயம் இப்போது விசித்துக் கொண்டிருக்கிறாள்.

''நீங்ககேட்டீர்களாம்மா! என்னைப் பற்றி இப்படிச் சொல்கிறாரே! நான் என்ன செய்வேன் அம்மா!''

விஜயம் கண்ணீர் உகுக்கிறாள். அவள் பேசாமல் நிற்கிறாள். அவளுக்கே இருட்டி வருவது போலிருக்கிறது. கீழே அமர்ந்து உட்காருகிறாள். மூச்சு இரைக்கிறது. விஜயம் அவள் கைகளைப் பற்றிக் கொள்கிறாள்.

''இங்கே வாருங்......''

விஜயம் எழும்பவிருந்த குரலை, அவளது வாயைப் பொத்தி நிறுத்தி அவள் கண்டத்துள்ளேயே நிறுத்தி விடுகிறாள்.

''எனக்கு ஒன்றுமில்லைடீ! ஊரைக் கூட்டிடாதே! ....அம்மா, விஜயம்! அவருக்கு முன் கோபம்! ஏதேனும் சொன்னாலும் மனசிலே எடுத்துக்காதே, அம்மா!''

இரவு இருளுள் இறுகி விடுகிறது. இமைகள் மூடவில்லை. வெளி வராத துக்கம் இதயத்துள் நிரம்பி அலை கட்டிக் கொண்டிருக்கிறது. கண்ணீரை உடைத்து விட்டால் தான் நிம்மதி பிறக்கும் போலிருக்கிறது.

படுக்கையிலிருந்து எழுந்து முற்றத்துக்கு வருகிறாள். விஜயம் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் திடுக்கிடுகிறாள். அவள் அருகில் போய் அமர்கிறாள். இருவரது செயல்களின் காரணங்களும் இருவருக்கும் தெரியும். அதனால் வினா எழாத அமைதி பல கணம் அங்கே மொய்த்துக் கொண்டிருக்கிறது.

''அப்புறம்?''

அவளாகவே கேட்கிறாள், விஜயம் திரும்புகிறாள்.

''அவன் யாருடீ?''




''நம்ப சீனுவுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க வந்தவன்.''

''எங்கே இருக்கிறான்?''

''அதுதான் தெரியவில்லை, அம்மா! டியூஷனை அப்போதே நிறுத்தியாச்சு!''

அவள் மௌனமாகிறாள்.




K.T.R. பொன்னாங்கண்ணி
தைலம் (மூலிகைகளின் சாரம்)
மூளைக்குக் குளிர்ச்சி
முகத்திற்குப் பொலிவு
K.T.R. வாசனாதி திரவிய சாலை
விஜயபுரம் (P.O.) தஞ்சை ஜில்லா
சென்னை நகர பூரண விநியோகஸ்தர்கள் : ஸ்ரீ ரகுநாத் ஏஜென்ஸிஸ், 38/2, அருண்டேல் தெரு மயிலாப்பூர், சென்னை-4


Exide
ஸில்வர்
எக்ஸைட்
Silver
Exide
சென்னை, ஆந்திரா, கேரளம் மற்றும் மைசூர் ராஜ்யங்களுக்குப் பிரதம ஏஜெண்டுகள்
ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட், லிமிடெட், சென்னை-2
கிளைகள் : கோயமுத்தூர், பெங்களூர் மற்றும் செகந்திராபாத்


SRI GANESHRAM'S
777
BRAND
FOOD PRODUCTS · MADRAS · I · S · INDIA
ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்
இடர் தக்காளி சாம்பார் - ரசம்
(2 தனி பவுடர்கள்)
கொதிக்கும் தண்ணீரில் கலந்த
3 நிமிஷங்களில் தயார்!
சக்கரம் பிராண்ட்
ஊறுகாய்கள்
இனிப்பு - சப்பு - காரம்
(3 ருசிகளில்) 14 ரகங்கள்
CHAKRAM BRAND
FOOD PRODUCTS · MADRAS · INDIA
ஸ்ரீ கணேஷ்ராம் & கோ., (போன் : 23665) 46, தம்பு செட்டித் தெரு, சென்னை-1

''பவானியோடு அவனும் காலேஜில் படித்தவனும்! நல்லவனாகத்தான் எனக்குப் பட்டது!''

''அப்படிப்பட்டவன் இந்தக் காரியத்தைச் செய்வானா?''

விஜயம் அவளைத் திரும்பிப் பார்த்தாள். ''அது அவரவர் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. இந்தக் காலத்திலே....'' என்று இழுத்து நிறுத்துகிறாள். அந்தக் குறை வாக்கியத்தின் புதை பொருள் முழுதும் அவனுக்குப் புரிந்து விடுகிறது.

காலை கண் மலர்கிறது. கதிர்கள் வான் வெளியில் விசிறியாய் விரிகின்றன.

அவர் கைத்தடியுடன் வெளியே போய் விடுகிறார். அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. திணற் றடியில் போய் நிற்கிறான். அவன் முன் நிழல் தட்டுகிறது. கோபு நிற்கிறான். அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் பேசினால் தான் அவன் பேசலாம். இல்லாவிட்டால் எரிந்து விழுவான்.

''இந்த மாதிரி நம்ப குடும்பத்துக்கு அவமானம் உண்டு பண்ணி விட்டாள், பார்த்தாயா?'' அவன் பேசுகிறான்.

''அவள் இப்போது எங்கேடா இருக்கிறாள்?''

''எல்லாம் அந்த டியூஷன் வாத்தியாரோடு தான்!''

''இடம் தெரியுமா?''

''அதுதான் தெரியவில்லை; பழைய இடத்தைக் காலி பண்ணிப் புது இடத்துக்குப் போய் விட்டானாம். கண்டுபிடிக்க முடியவில்லை. கண்டு பிடித்து விட்டால் அவன் காதைப் பிடித்துக் கரகரவென்று....'' அவன் பற்களை நறநறக்கிறான். தாடை எலும்பு சதையைத் தள்ளிப் புடைக்கிறது.

ஒளியிலும் இருளிலும் புகுந்து காலம் நடக்கிறது. நாட்கள்தான் எப்படிப் பறக்கின்றன?

வெளியே தென்னங் கீற்றுக்கள் சலசலக்கின்றன. உள்ளே காற்று தண்மையோடு வீசிச் சாளரக் கதவுகளை ஆட்டி விட்டு ஓடுகிறது. கோடை மழை எங்கேயோ பெய்து கொண்டிருக்க வேண்டும்.

அன்று காலையில் மேளம் கேட்கிறது. விஜயத்தின் கைக் குழந்தைக்கு ஆண்டு நிறைவு!

ஹோம மந்திரம் கேட்கிறது. ஹோமப் புகை கவ்வி வருகிறது. புதுப்புடவை உடுத்தியிருக்கிறாள். ஆனால் உடலைப் போல் மனமும் அதில் ஒட்டி உறவு கொள்ளவில்லை.

மாடிக்கு விஜயம் வருகிறாள். அவள் அங்கே சுவரில் சாய்ந்து காலை நீட்டி 'ட' போல் அமர்ந்திருக்கிறாள்.

''அம்மா! ஆரத்தி சுற்ற வருகிறீர்களா?''

மூக்கை வழித்து, கண்களில் அரும்பும் நீரைத் துடைத்து விடுகிறாள்.

''நான்தான் வரணுமா, விஜயா! வேறே ஒருத்தரும் இல்லையா?''

''வேறு யாரை அழைத்திருக்கிறோம்? வீட்டிலே உள்ளவர்கள் தானே! நீங்கள் தான் வர வேண்டும்!''

ஆரத்தி சுற்றுகிறாள். தட்டில் மங்கள நீர் புடைத்தெழுந்து சுற்றிச் சுற்றி வருகிறது.

பிறகு ஆயாசத்தோடு மாடி ஏறி வந்து, அமர்ந்து விடுகிறாள்.

பவானி இருந்தால்.....

'மங்களம் ஜய மங்களம்' என்று எத்தனை இழைவுகளுடன் பாடுவாள்? அவள் குரல் இன்னிசையாய்க் கரைந்து மங்கள நீரைப் போல் சுற்றிச் சுற்றிப் பரந்து வரும். இன்று அவள் இருந்து.......நினைவு பிரமையாய்—வழுவுகிறது.

''அம்மா!'' அவளது இனிமை வழிந்த குரல் கேட்கிறது.

''எனக்கும் ஆரத்தி சுற்றம்மா!''

அவள் ஏறிட்டுப் பார்க்கிறாள். பவானி நெற்றிச் சரத்தோடு நிற்கிறாள். ராக்குடியிலிருந்து பூவும் குழலுமாய்ப் பின்னித் தொங்கிய கூந்தல் வாகுவமாய்ப் புரள்கிறது. அணியும் துணியும், உடம்பெல்லாம் லட்ச தீபம் ஏற்றினாற் போல் சுடர்களாய்த் தெளிக்கின்றன.

''ம்...சீக்கிரம் ஆரத்தி சுற்றம்மா!''

அவள் பிரமை கலைகிறது. பிரமையில் கண்ட காட்சியின் தழும்பு மனத் திரையில் மறையாது நீடிக்கிறது. ''பவானி!'' என்று பொருமுகிறாள். கண்ணில் நீர் ஊற்றெடுக்கிறது.

இரவில் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவள் பரிமாறுகிறாள். அவளுக்கு ஒன்றுமே இறங்கமாட்டேனென்கிறது.

வாசலில் கார் ஒன்று வந்து நிற்கிறது. கதவுகள் திறக்கப்படும் சத்தம் கேட்கிறது. தட்டை அப்படியே கீழே வைக்கிறாள். உன்மத்த முற்றாற் போல் ஓடுகிறாள். கதவின் தாழைத் திறக்கிறாள்.

''பவானியாடீ?''

காரிலிருந்து ஒரு பெண் இறங்குகிறாள். யாழ் வாசிக்கும் பாவனையில் கைகளை மடித்து மேல் துகிலைச் சரி செய்து கொள்கிறாள்.

''பவானி!''

அவள் சிரித்துக் கொண்டே வருகிறாள். பின்னால் முழுக்கை சட்டையணிந்து அவன் வருகிறான்.

''பவானி இல்லை! மாலதி!''

அவள் ஆர்வம் அணைகிறது.

''வாருங்கள்! வாருங்கள்!'' பின்னால் திரும்புகிறாள். அவரும் பாதிக் கலத்திலிருந்து எழுந்து வந்து நிற்பது தெரிகிறது.

''அக்கா பையன் ரங்கனும் அவன் மனைவியும் வருகிறார்கள்.''

''வாருங்கள்; வாருங்கள்!''

எல்லோரும் உள்ளே நுழைகிறார்கள்.

சாப்பாடு முடிகிறது. அவள் மொட்டை மாடிக்குச் சென்று விடுகிறாள். ''சித்தி!'' என்று குரல் கேட்கிறது. ரங்கன் வருகிறான்.

''பவானி எங்கே சித்தி?''

''ஹாஸ்டலில் அவள் சிநேகிதியோடு இருக்கிறாள்!''

''பொய் சொல்லாதே சித்தி! எனக்குத் தெரியும். நீ சொன்னால் நான் உனக்கு அவளைப்பற்றி வேறு விஷயம் சொல்கிறேன்!''

அவள் திகைக்கிறாள்.

''சொல்லு சித்தி!''

''என் வாயாலே நான் என்னடா சொல்லுவேன்?'' விம்மல்கள் தொடர்ச்சியாகச் சுழன்று வருகின்றன. அவள் முகம் சோர் வடைகிறது.

''அழாதே, சித்தி.''

''நீ எங்கேடா பார்த்தாய்?''

''நீ தயங்கறதைப் பார்த்த பிறகு தான் நான் பார்த்த பெண் நம்ப பவானி என்று நிச்சயமாகிறது. இதற்கு முன் நான் அவளைப் பவானி என்று நினைக்கவில்லை. கொஞ்ச நாளுக்கு முன்பு நானும் எங்க ஆபீஸரும் திருநீர்மலைக் கோவிலுக்குப் போயிருந்தோம். அங்கே ஒரு கல்யாணம் நடந்து கொண்டிருந்தது. கூட்டமே கிடையாது. எண்ணிப் பத்து பேர். நான் பெண்ணைப் பார்த்தேன். பவானி மாதிரி யிருந்தது. ஆனால் நிச்சயமாகவும் தோன்றவில்லை! அவளும் என்னைப் பார்த்துப் பிரமிக்கிற மாதிரி இருந்தது.''

''நீ விசாரிக்கவில்லையா?''

''சந்தேகம் தோன்றினால் தானே விசாரிக்கப் போகிறேன்? நாங்கள் உடனே திரும்பி விட்டோம்!''

அவள் காதுகளில் மீண்டும் பவானியின் குரல் கேட்கிறது.

''அம்மா ஆரத்தி சுற்றும்மா!''

அவள் மனக் கண் முன் பவானி நிற்கிறாள். நெற்றி சரம், ராக்குடி, புதுப்புடவை, பூப் பின்னல் இவை அனைத்தும் கொண்ட திருமணக் கோலத்தில் நிற்கிறாள்.

அவளது கால்களைச் சுற்றிலும் தாமரைக் கோலம் இதழ்களை விரிப் படர்த்திக் கண்ணைப் பறிக்கிறது.

''அம்மா! நான் வந்திருக்கிறது தெரியவில்லையாம்மா!'' பவானி கேட்பது செவியுள் புகுகிறது.

தண்ணீர் முகத்தில் பட்டதும் பிரமை கலைகிறது.

''எனக்கு இப்படித் தாண்டா ரங்கு! இருட்டிக் கொண்டு வருகிறது. அப்புறம் சரியாகப் போய் விடுகிறது.!''

''நீ அதிக துக்கம் கொள்ளக் கூடாது, சித்தி!''

''அவள் புருஷன் எப்படிடா இருக்கான்?''

''லக்ஷணமாக இருக்கிறான். நீ கவலையே படாதே! நடந்தது நடந்ததுதான். இன்னும் எவ்வளவோ நடக்கப் போகிறது. பார்க்கப் போகிறோம். மனம் ஒத்துப்போனான்! பண்ணிக் கொண்டாள்! அதற்கு மேல் விசாரணை ஏது?''

''பையன் பரம ஏழையாம்!''

''அதனாலே?''

''எப்படிப் பண்ணிக்கலாம்னு அவர் குதியாய்க் குதிக்கிறார்!''

''சித்தப்பாவுக்கு இன்னும் உலகம் புரியவில்லை....''

அன்று காற்றில் சலனமேயில்லை. புழுக்கந்தான் மிகுதியாக இருக்கிறது. அவள் வாயில் திண்ணையில் அமர்ந்திருக்கிறாள். விஜயம் நிலையைப் பிடித்துச் சிலையாய் நிற்கிறாள்.

எதிரே பூங்காவிலுள்ள நெட்டிலிங்க மரம் சோர்ந்து, இலை சரிந்து, துக்கமே எழுந்து நின்றது போல் நிற்கிறது.

டாக்ஸி ஒன்று வந்து நிற்கிறது. கோபு இறங்குகிறான். மெள்ள இறங்கும் அவரையும் பிடித்து அழைத்து வருகிறான்.

அவள் எழுந்திருக்கிறாள். அவருக்கு என்ன உடம்பு? கேட்க வேண்டுமென்று ஆவல்தான். ஆனால் அந்தக் கேள்வியே அவர் கோபத்தைக் கிளறி விட்டுவிடும்.

இருவரும் உள்ளே போகிறார்கள். ''அங்கே போய்விட்டுத்தான் வந்திருக்கிறார்கள் '' — என்று விஜயம் தணிந்த குரலில் முணுமுணுக்கிறாள். பின்னால் காலடியோசை கேட்கிறது. கோபு நிற்கிறான்.

''படுகிறான் கஷ்டம்; நன்றாகப் படட்டும்''

''என்ன படுகிறான்?''

''தரித்திரப் பயலோடு ஓடினால் பின்னே எப்படி இருப்பாள்? ஒன்று ரெண்டு டியூஷனைத் தவிர வேறு வேலை கிடையாது. காலிலே விழுந்து கெஞ்சறது. 'சாகு' என்று சொல்லி விட்டு வந்து விட்டோம்!''

அவ்வளவுதான்! துண்டை உதறிக்கொண்டு அவன் போய் விடுகிறான்.

கூடத்துக்குள் செல்கிறாள். உடல் நடுங்குகிறது. கஞ்சியை ஆற்றி அவர் முன் வைக்கிறாள். அவர் ஒரு விழி விழிக்கிறார்.

''அனுபவிக்கிறாள்டி! நல்லா அனுபவிக்கிறாள்!''

அவள் பேசவில்லை.

''பணம் வேணுமாம், பணம்! ஒரு காசு வராதுன்னுட்டேன். வீட்டுக்கு வா! ஆனால் தனியாக வரணும்! சாப்பிட்டுக்கொண்டு சரியாக இரு என்றேன்!''

அவள் மௌனம் சாதிக்கிறாள்.

''இந்தக் கல்யாணத்துக்கு நாம்ப சம்மதிக்க மாட்டோம்னுதான் நாம் வரதுக்கு முன்னாடி போய் விட்டாளாம்! என்ன திமிர் பார்!''

அவளுக்கு வயிற்றை ஏதோ செய்கிறது. அங்கிருந்து நகர்ந்து விடுகிறாள்.

விஜயம் முற்றத்தில் தனியே நின்று கொண்டிருக்கிறாள்.

''விஜயம்! ஒரு காரியம் செய்யணுமே!''

''என்ன?''

''பவானி குடியிருக்கும் வீட்டுக்கு விலாசம் தெரிய வழி?''

''எதற்கம்மா?''

''நான் போகணும்!''

விஜயம் வாய் புதைத்து நிற்கிறாள்.

''அவர்கள் காதிலே பட்டால் என்ன ஆகும்?''

''இல்லை விஜயம்! எனக்குப் பவானியை அவசியம் பார்த்தாகணும்!'' அவள் கண்களில் நீர் முட்டி நிற்கிறது. ஏதாவது மறுத்துக் கூறினால் அழுகையில் குளித்து விடுவாள் போல் தோன்றுகிறது.

''விலாசம் கிடைக்கிறதான்னு பார்க்கிறேன்!'' என்றாள் விஜயம்.

இரவில் விளக்கு வைத்தாகி விட்டது. நட்சத்திர முனைகளில் இருள் திரையைக் கட்டித் தொங்க விட்டிருப்பது போல் இரவு தோன்றுகிறது.

விஜயம் வருகிறாள்.

''விலாசம் கிடைச்சுதா?''

''ஊஹூம்! அவர் சொல்கிற வழியாக இல்லை. உனக்கு எதுக்கு விலாசம்னு எரிஞ்சு விழுகிறார்!''


அவளுக்கு அழுகை குமுறலிடுகிறது. 'இப்படி அம்மா மனத்தைத் தெரிஞ்சுக்காத பின்னை இருக்குமா?' என நினைவு எழுகிறது.

பொழுது விடிகிறது. முற்றத்தில் அவள் நீர் எடுத்துக் கொண்டிருக்கிறாள். காலைக் கதிர்கள் பட்டுத் துளசியின் நிழல் தரை மீது தேம்பல் கவடுகளாய் விழுந்திருக்கிறது.

''கங்கே ச யமுனே ச ஏவ....'' அவள் வாய் கங்கையையும் யமுனையையும் அழைக்கிறது.



உங்கள் டி.எம்.பி வண்டிகளைப் பராமரிக்க வழிகள் பல உண்டு
...ஆனால், இடையூறு ஏதுமின்றி ஆயிரக் கணக்கான மைல்கள் ஓட, மாதமொரு முறை, நியமனம்பெற்ற டெல்கோ டீலர் சேவைக் கேந்திரத்தில் பழுது பார்ப்பதொன்றே நிச்சயமான வழி.
தக்க லூப்ரிகேஷன், பழுது பார்த்தல் ஆகிய வற்றின் மூலம் உங்கள் டாடா-மெர்ஸிடஸ்-பென்ஸ் வண்டி கூடுதலான பாரத்துடன், நீண்ட நெடுந்தூரம் ஓடும் சக்தியைப் பெறுகிறது.
லாபகரமாய் முதலீடு செய்ய ஏற்றது டாடா-மெர்ஸிடஸ்-பென்ஸ். நல்ல முறையில் பராமரித்து வந்தால், ஆயுள் பூராவும் நல்ல ஆதாயம் உண்டு.
வலுவான டாடா-மெர்ஸிடஸ்-பென்ஸ் வண்டிகள் தற்போது மேலும் வலுவாக்கப்பட்டுள்ளன
நல்வாழ்வு நல்கும் நட்சத்திரம்
டாடா-மெர்ஸிடஸ்-பென்ஸ்
டாடா என்ஜினீயரிங் & லோகோமோடிவ் கம்பெனி லி.
விற்பனை ஆபீஸ்கள்: 148, மகாத்மா காந்தி ரோட், பம்பாய் 1
T. 774A TM



''அம்மா! அம்மா!'' வேலைக்காரி விரைவு பொங்க ஓடி வருகிறாள்.
''என்ன முத்தம்மா!''
''நான் அந்தப் பிள்ளையைப் பார்த்தேனுங்க!''
''எந்தப் பிள்ளையை?''
வேலைக்காரி அந்தப் பிள்ளையின் உறவு முறை சொல்லத் தெரியாது திகைக்கிறாள். அவள் அதைப் புரிந்து கொண்டு விடுகிறாள். கிணற்றில் இழுத்த கயிற்றை நழுவவிடுகிறாள். சொம்பு, கிணற்றுள் 'தொம்'மென்று முக்குளிக்கிறது.
''எங்கே பார்த்தாய்?''
''என் வீட்டுக்காரர் வேலை செய்யும் வீட்டிலே பார்த்தேனம்மா! அந்த வீட்டுப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்.''
''நீ பேசினாயா?''
''இல்லேயம்மா! என்னைப் பார்த்ததும் தலையைக் குனிஞ்சுக்கிட்டாரு! கவலை போல இருக்கு! ஆள் துரும்பாக இளைச்சுப் போய் விட்டாரு!''
''எனக்கு ஒன்னு செய்யணும் முத்தம்மா! அவர் விலாசம் விசாரிக்கணுமே!''
''கேட்கிறேன் அம்மா!''
''இப்போதே போய்த் தெரிந்து கொண்டு வா!'' வேலைக்காரி போகிறாள்.
விலாசம் கிடைத்து விடுகிறது. நாட்கள் ஓடுகின்றன. ஒவ்வொரு இரவிலும் ஆண்களுக்குத் தெரியாமல் வெளியே செல்ல யோசிக்கிறார்கள். ஏதாவது தடை கண்டு நின்று விடுகிறார்கள்.

அன்று நிலவு துளிர்த்திருக்கிறது. கட்டடங்கள் மீது குளுமை பூத்திருக்கிறது. மரங்களில் ஒரு பாதி நிழலில் கறுத்தும், ஒரு பாதி நிலவில் குளித்தும் காண்கின்றன. கீழே வெள்ளித் துணுக்குகள் சிதறினாற் போல அதன் அடிவாரத்தில் நிலவின் சிதறல்கள் காணப்படுகின்றன.
அவளும் விஜயமும் புறப்படுகிறார்கள்.
''இது வரை அவருக்கு எதிராக ஒரு காரியமும் செய்ததில்லை'' என்கிறாள் அவள்.
''அவர்களுக்கு என்ன? பெண்களின் மன நிலையை உணரவா போகிறார்கள்? நீங்கள் கவலைப்படாமல் வாருங்கள்!'' என்கிறாள் விஜயம்.
பஸ்ஸில் பிரயாணம் செய்கிறார்கள். அவள் மனம் ஏன் இப்படித் துடிக்கிறது?
''பதினெட்டாம் நம்பர் வீடு இதுதானே?''
''இப்படியே போய் அந்தச் சந்தில் திரும்புங்கள்!''
பதினெட்டாம் வீட்டு முற்றத்தில் நிற்கிறார்கள். மூன்று வாயிற்படிகள் தெரிகின்றன. ஒன்றிலும் வெளிச்சம் இல்லை.
ஒரு வாசல் சற்றுத் திறந்திருக்கிறது. விஜயம் கதவைத் தட்டுகிறாள்.
''யார்?''
சட்டென்று விளக்கொளி நிரம்பி விடுகிறது. கட்டமிட்ட சேலையைக் கட்டியவாறு ஓர் அம்மாள் வெளியே வருகிறாள்.
''பவானி என்கிற பெண்....''
அந்த அம்மாள் யோசிக்கிறாள். ''பவானியா? சிவப்பா, ஒடிசலாக இருப்பாளே! அந்தப் பெண்தானே? அவள் புருஷன்கூட வாத்தியார்!''
''ஆமாம், ஆமாம்!''
''இந்த வீட்டிலேதான் இருந்தார்கள். வாடகை சரியாகக் கொடுக்கவில்லையென்று வீட்டுக்காரர் காலி பண்ணச் சொல்லி விட்டார். போன நாலாம் நாள் காலி பண்ணிக் கொண்டு போய் விட்டார்கள்.''
''எங்கே போனார்கள்?''
''தெரியாது!''
அவளுக்கு அழுகை ததும்புகிறது. ''அவர்கள் எப்படிக் குடித்தனம் நடத்தினார்கள்? சந்தோஷமாக இருந்தார்களா?''
''என்ன சந்தோஷம் போங்கள். அந்தப் பெண் கவலையும் அழுகையுமாகத்தான் இருந்தது. பிள்ளைக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் இருந்தது. ஆஸ்பத்திரியிலே கொஞ்ச நாள் இருந்துவிட்டுப் பிறகு குணமாகி வீட்டுக்கு வந்துவிட்டார். அவர் உடம்பைத் தேற்றுவதற்குப் பணம் இல்லையென்று அந்தப் பெண் வருத்தப்பட்டது பாருங்கள்! அப்படி ஒரு வருத்தம்!''
அவள் அந்த வீட்டை ஏறிட்டுப் பார்க்கிறாள். ஓடுகள் சரிந்திருக்கின்றன. கம்பிகள் பெயர்ந்திருக்கின்றன. சுவர்களில் பாசிகள் படர்ந்திருக்கிறது.
''இந்த வீட்டிலேயா பவானி இருந்தாள்?''
வீட்டின் வாசலில் அமர்ந்து பொருமி அழ வேண்டும் போல் இருக்கிறது. விஜயம் 'வாருங்கள்' என்று இழுக்கிறாள்.
வீடு திரும்புகிறார்கள். அவர்களுக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. வாசல் வராந்தாவில் கோபுவும் அவரும் நிற்கிறார்கள்.
''எங்கே போய் வருகிறீர்கள்?'' என்று அதட்டுகிறான் கோபு.
''செண்பகத்தின் வீட்டுக்குப் போய் வருகிறோம்'' என்று நடித்துக் கூறுகிறாள் விஜயம்.
''இத்தனை மணிக்கு மேல் செண்பகத்தின் வீட்டுக்கா? யாரிடம் பொய் சொல்கிறாய்?''
அவர் எழுந்து நிற்கிறார். அவளை விழித்துப் பார்க்கிறார். ''எங்கே போயிருந்தாய்?'' என்று வினவுகிறார். அவள் மௌனமாக இருக்கிறாள்.
''சொல்லு, உண்மையை!''
''பவானியைப் பார்க்கத்தான் போனேனும். ஆனால் அவளைப் பார்க்க முடியவில்லை.'' அவள் குரலில் நடுங்குகிறாள்.
''ஓ!''
அவர் உறுமிவிட்டு ஒரேயடியாக இருமுகிறார். உடலெல்லாம் அலைகளாய் மடிகின்றன. அவள் அவரைப் பிடிக்கிறாள். தன் மீது பட்ட கைகளை அவர் பிடுங்கி வீசி எறிகிறார்.
கோபு அவளைப் பிடித்துக் கொள்கிறான். இருவரும் உள்ளே போகிறார்கள்.
இரவில் அழுதவாறு அமர்ந்திருக்கிறாள். நடுநிசியாகி விடுகிறது. சப்தங்கள் ஒடுங்கிச் சுருண்டு பூமியின் கர்ப்பத்துள் உறங்கிவிடுகின்றன.
அரவம் கேட்டு அவள் திடுக்கிடுகிறாள்.
''லக்ஷ்மி!'' அவர்தான் நிற்கிறார். அவள் எழுந்திருக்கிறாள். அழுகையாய் வருகிறது.
''உன் மனசு எனக்குத் தெரியும் லக்ஷ்மி! இருந்தாலும் இதிலே மானம், அவமானம்னு ஒண்ணு இருக்கு! பவானியைப் பார்க்க நீ போயிருக்கக் கூடாது. எனக்குப் பிடிக்கவில்லே! அவ்வளவுதான் சொல்லுவேன்!''

அவர் போய்விடுகிறார். அவர் பேசிய வார்த்தைகள் கூர் அம்புகளாய் அவளைச் சுற்றி ஆர்ப்பரிக்கின்றன.

காலையில் எழ முயல்கிறாள். முடியவில்லை. உடலில் அப்படி ஒருகனம் வந்து விடுகிறது.

வெளியே குருவிகள் ஆடிப் பறக்கின்றன. சாளரங்கள் பளீர் எனக் கதிர்களில் மின்னத் தொடங்குகின்றன. இதென்ன உடம்பை அசைக்கக் கூட முடியவில்லை

பவானி வந்து நிற்பது தெரிகிறது. அவள் அழைப்பது தெரிகிறது. ஆனால் காது மந்தித்து விட்டதா? சப்தம் கேட்கவே இல்லை! பேச முயல்கிறாள்! ஆனால் வாயைத் திறக்க முடியவில்லை.

சிறிது நேரத்தில் கோபுவும் அவரும் வந்து நிற்பது தெரிகிறது. அவளைப் பார்த்து அழுவதும் தெரிகிறது. அவளுக்கு என்ன நேர்ந்திருக்கிறது

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ''கோபு!'' என்கிறாள் வாய் இப்போது பேசி விடுகிறது. எல்லோரது கண்களும் மலர்கின்றன. கோபு அவளது கைகளைப் பற்றிக் கொள்ளுகிறான்.

மாலை வருகிறது. எழுந்து உட்காரலாம் போல இருக்கிறது. படுக்கையில் மெதுவாக எழுகிறாள். சுவரில் சாய்ந்து கொள்கிறாள்.

கோபு வருகிறான் அவன் கண்கள் கலங்கியிருக்கின்றன. அவள் அவனைப் பார்த்து மெள்ளப் புன்னகை கூட்டுகிறாள்.

''அம்மா!''

''என்னடா கோபு?''

அவன் கண்களிலிருந்து துளிகள் சிந்துகின்றன. 'காலையில் உன் உடம்பைப் பார்த்துப் பயந்து விட்டோம். அம்மா நல்ல வேளை! குணமாகி விட்டது!'' என்கிறான்.

''கோபு!'' என்கிறாள் அவள். ''நான் உயிரோடு இருக்கணும் என்றால்....''

''ஏம்மா அப்படிச் சொல்கிறாய்?''

''ஆமாம். உயிரோடு இருக்கணும் என்றால் ஒரு காரியம் செய்யணும்! நான் பவானியை அவசியம் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் என் நெஞ்சு தாங்காது!''

''ஏற்பாடு பண்ணறேன் அம்மா! அப்பாவுக்குத் தெரியாமல் ஏற்பாடு பண்ணுகிறேன். அவள் விலாசம் தெரியவில்லை. தேடிக் கண்டு பிடிக்கிறேன்!''

அவள் உடலுள் குளிர் மழை சொரிகிறது. ''இப்போதாவது என் விருப்பத்தைப் புரிந்து கொண்டாயேடா!'' என்கிறாள்.

ஃ ஃ

நினைவுகளிலிருந்து காட்சிகள் விடைபெறுகின்றன. அவள் மீண்டும் தன் நிலையை அடைந்து விடுகிறாள்.

அவளுக்குப் பனிச்சென்று எல்லாம் தெளிந்தாற்போல் தோன்றுகிறது. எங்கும் மங்கள இசை முழங்குவது போல் இருக்கிறது.

''பவானி வருகிறாள்! பவானி வருகிறாள்!''

ராமர் கோவில் மணி கட்டியங்களை ஆடி ஆடிச் சிதற விடுகின்றன.

''பவானி வருகிறாள்!'' நட்சத்திரங்கள் பொரிந்து சிரிக்கின்றன.

இரவெல்லாம் கண்ணுறக்கமில்லை. நீளிரவும் குறுகி ஓடுவதாகத் தெரிகிறது. கோழிகள் கூவிவிடுகின்றன. புள்ளினங்கள் ஆர்த்துச் சிலம்புகின்றன. பூகர்ப்பத்தில் அடங்கிய ஓசை அரக்கனது பலம் பெற்று மெள்ள எழுந்து விடுகிறது.

''பவானி வருகிறாள்!''

அவள் கைகளில் ஏனோ பரபரப்பு! கோபு அழைத்துவருமுன்னரே பவானி வந்துவிடுவாளா? கண்கள் துடிக்கின்றன. பவானி எப்படியாவது இன்று வந்து விடுவாள். அவளை எப்படி வரவேற்பது?

வானத்தில் இருள் சிறிது சிறிதாக வடிந்து கொண்டிருக்கிறது. முற்றத்தில் மெள்ளப் போய் நிற்கிறாள். இன்னும் வீட்டில் ஒருவரும் எழவில்லை. துளசியைத் தொட்டு ஒத்திக் கொள்கிறாள்.

பவானியை எப்படி வரவேற்பது? உடலைச் சில நாட்களுக்குமுன் வாட்டிய நோய் அதற்குள் மறைந்து ஒரு தெம்பு பிறந்திருக்கிறது. பரபரப்புடன் உள்ளே போகிறாள். பாத்திரத்தில் மங்கள நீர் கரைக்கிறாள்! பார்த்தால் 'பைத்தியம்' என்று சொல்வார்கள். அதனாலென்ன? பவானி வந்தவுடன் ஆரத்தி சுற்ற வேண்டும் !

வெளி வராந்தாவில் நிற்கிறாள். திடீரெனக் 'கேட்' அருகில் யாரோ நிற்பது தெரிகிறது.

''பவானியா?''

உடலெல்லாம் வியர்க்கிறது. போய்க் கதவைத் திறக்கிறாள். ஏறிட்டுப் பார்க்கிறாள். கண்கள் கூசுகின்றன. பவானியேதான் அவள்!

''பவானி.... இரு,இரு! இதோ வரேன்'' என்று பரபரப்பு கொள்ளாது உள்ளே ஓடுகிறாள். மங்கள நீரை எடுத்து வருகிறாள்.

''கிழக்கே பார்த்து நில். பவானி!''

''அம்மா!'' பவானி அவளது கைகளைப் பற்றுகிறாள்.

''சும்மா நில். பவானி! ஆரத்தி சுற்ற வேண்டும்!''

''ஐயோ அம்மா! ஆரத்தி சுற்றாதே ! சுற்ற வேண்டாம் அம்மா!''

அவள் நிமிர்ந்து பார்க்கிறாள். பவானியின் கண்களில் நீர்

''என்னைத் தனியாக வந்தால்தான் அப்பா சேர்த்துக் கொள்வேன் என்று சொன்னார்! தனியாகவே வந்துவிட்டேனம்மா!''

அவள் திகைக்கிறாள்.

''பவானி. என்ன சொல்கிறாய்?''

''ஆமாம்மா! தனியாக வந்து விட்டேன்! அவரைப் போக்கி விட்டுத் தனியாகவே வந்து விட்டேன்! வாழ்க்கை முழுவதும் தனிதான்!''

அவள் வெல வெலத்து நிற்கிறாள். பவானியின் நெற்றி வெறுமையாயிருக்கிறது. கழுத்து மூளியாக இருக்கிறது. எல்லாம்... அவளுக்குப் புரிந்து விடுகிறது.

மங்களம் இழந்துவிட்டவள்!

''அடி பாவி!'' அவள் கைகளிலிருந்து ஆரத்தி கீழே விழுகிறது. அதில் தேங்கிக் கிடந்த மங்களம் முழுவதையும் மண் விரைவாக உறிஞ்சி விடுகிறது.



கண்ணைக் கவரும்,
களங்கமில்லா வெள்ளை
அழுக்கை அறவே அகற்றி வெள்ளைத் துணியை மேலும் வெண்மையாக்க... வண்ண ஆடையை மேலும் பொலிவுடன் விளங்க வைக்க வல்லது—காவேரி பார் சோப். இல்லாள் கைகண்ட அற்புதச் சலவை சாதனம்...இன்றே வாங்கி பலன் அடையுங்கள்!
காவேரி
பார் சோப்
CAUVERY BAR SOAP
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S.
சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்
MC-551




# நாள் முழுவதும், உடல் பூராவும் பூவின் புதுமையுடன் இருக்க...

சருமங்களில் கறைகளையும், வியர்வை நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளை நாசம் செய்யும் உலகப் பிரசித்தி பெற்ற ஜி-11* கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட் பவுடரில் அடங்கியிருப்பதால்தான், இப்பவுடர் இதர பவுடர்களைவிட மிகச் சிறந்ததாக விளங்குகிறது.

இத்துடன் சிந்தால் டாய்லெட் பவுடரில் உள்ள வசீகரிக்கும் வாசனையால் நாள் பூராவும் நறுமணமும், புத்துணர்ச்சியும் டாய்லெட் பவுடருக்குள் இப் பவுடர் ஒன்றில்தான் கிடைக்கிறது.

## ...ஜி-11 அடங்கியுள்ள பவுடர் இது ஒன்றுதான்

வேர்க்குரு போன்ற சரும உபாதைகளுக்கு துரிதமாக நிரந்தர நிவாரணமளிக்கிறது—குழந்தைகளுக்கு ஓர் வரப் பிரசாதம்.

பூர்ண பாதுகாப்புக்கு சிந்தாலினால் ஸ்நானம் செய்த பிறகு உபயோகியுங்கள்.

## கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட் பவுடர்

• "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவசமான ஆங்கிலப் பக்கத்திற்கு 'கோத்ரெஜ்', பம்பாய்-12 க்கு எழுதுங்கள்

# வெறும் மனிதன்

## ஜெகசிற்பியன்

**ப**ச்சை ஒளியிடமிருந்து விடை பெற்றுக் கொண்ட அந்தச் 'சிறிய உலகம்' மெள்ள நகர ஆரம்பிக்கிறது.

தலைக்காடுகளுக்கு மேலே உயர்ந்த கரங்கள் அசைகின்றன. கைக்குட்டைகளும் ஆடிப் பறக்கின்றன.

''மறந்துடாம கடுதாசி போடுங்க! அவங்களை ரொம்பக் கேட்டதாகச் சொல்லுங்க. பெட்டி பத்திரம்! குழந்தை பத்திரம்! பலாப்பழம் நசுங் கிடப் போவுது! நெய்த் தூக்கைச் சாய்ச்சுடாம கொண்டு போய்ச் சேர்க் கணும்! ஜன்னலிட்டே உட்கார வேணும். ஏறும் போதும் இறங்கும் போதும் ஜாக்கிரதை! ஆடிப் பதி னெட்டுக்கு ஒரு பயணம் வந்து போங்க. முழுக்குத் திருநாளுக்குக் குடும்பத்தோட இங்கிருக்கணும்.''

பிளாட்பாரத்துப் புழுதிப் படலம் கழித்துக் கொண்டு மேலெழும்பு கிறது. சிரக் கம்பங்கள் சாய்கின்றன. கைக் குட்டைகள் மறைகின்றன. பின்தங்கிச் சிறுத்த பச்சைவிளக்கு மட்டும் இட வலப்புறமாக இன்ன மும் அசைகிறது.

உஷ்ணச் செறிவின் புழுக்கத்திலிருந்து விடு பட்ட அந்தச் 'சிறிய உலகம்' இப்போது குளிர்ந்த காற்றில் முக் குளித்து விரைகிறது. 'மாயவரம் — சந்திப்பு' என்ற மஞ்சள் நிறப் பெரிய போர்டு பின்னால் ஓடி மறைகிறது. இருப்புக் கோடு களின் இடைச் செருகல்களாக ஆங் காங்கே வந்து இணையும் துணைக் கோடுகளை நீவிக் கொண்டு தமக் கென வகுத்த நேர்க் கோட்டைப் பற்றித் தங்கு தடையின்றி உருண்டு செல்லும் சக்கரங்களின் 'கர்ர்-கிர்ச்' என்ற வெற்றிப் பேரொலி!


''மிஸ்டர்! கொஞ்சம் கதவைத் திறந்து விடுகிறீங்களா! பிளீஸ்!''

அந்தச் சிறிய மரப் பெட்டி உல கத்தின் ஒரு சின்ன அறையில் குடி யேறியிருந்த அத்தனை ஜனங்களும் சாளரங்கள் வழியே தம் பார்வையை வீசுகின்றனர்.

சிறகிடும் காற்றின் போக்கில் சிகை கலைந்து பறக்க, வெளியே ஒரு மனித உருவம் தொற்றித் தொங்க லாடிக் கொண்டிருப்பது தெரிகிறது.

''சார்! தயவு பண்ணிக் கதவைத் திறங்க. கையிலே கனத்தை வைச் சுக்கிட்டு அவஸ்தைப்படறேன்.''

''அதெல்லாம் முடியாது. இங்கே இடமில்லே.''—உள்ளிருந்து பல குரல் கள் சீற்றத்துடன் கிளம்புகின்றன.



"கோபிச்சுக்காதீங்க. கொஞ்சம் தயவு பண்ணுங்க."

"நான்சென்ஸ்! யாரு மேன் உன்னே இப்படி ஓடி வந்து ஏறச் சொன்னது?"

"லேட் ஆயிடுத்து பிரதர்! லெவன்த் அவர்லே புறப்பட்டுட்டேன். கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்கோ."

"கண்ட்ரீபுரூட்ஸ்! கோட்டும் சூட்டுமா டிரஸ் செய்துக்கிறதுக்குத்தான் தெரிஞ்சிக்கிறீங்களே தவிர, அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்கத் தெரியறதில்லே!"

"மிஸ்டர்! நீங்களாச்சும் கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்களேன்."

"அட, யாரய்யா நீ! இங்கே நிற்கக் கூட இடமில்லாமல் தவிக்கிறோம். நீ வேறே வந்து உபத்திரவப்படுத்தறே! அடுத்த பெட்டியைப் பாரு, போ!"

"வண்டி ஓடிக்கிட்டு இருக்குது. தம்பி! அடுத்த பெட்டிக்கு எப்படிப் போறது?"

"இந்தப் புத்தி ஏறுகிறதுக்கு முன்னாடியே இருக்கணும்."

"கதவை மட்டும் திறங்க சார். கையிலே இருக்கிற பெட்டியை உள்ளே போட்டுட்டு நான் புட்போர்டிலேயே நின்னுக்கிறேன்."



"என்ன இது, நியூஸென்ஸ்! இங்கே பாரு மிஸ்டர், கதவுக்கடியிலே பெட்டிகளும் மூட்டைகளுமாக அடுக்கிக் கிடக்குது. பக்கத்திலே ஒரு குழந்தை வேறு தூங்குது. கதவை எப்படித் திறக்கிறதாம்?"

"பெரியவரே! நீங்களாச்சும் கதவைத் திறவுங்களேன். கைப்பிடி நழுவுது! கால் வேறே வழுக்கிக்கிட்டுப் போகுது!"

"போகட்டும்; போகட்டும். ஒரு முறை கீழே விழுந்து செத்தால்தான் இன்னொரு முறை இப்படி ஓடற வண்டியிலே ஓடி வந்து ஏற மாட்டாய்."

வண்டி ஓடும் இரைச்சலையும் மேவிக் கொண்டு அந்தப் பெட்டியில் சிரிப்பொலி எழுந்து நிறைகிறது.

"அப்போ கதவைத் திறக்க மாட்டீங்க? சரி; உங்க கண்ணுக்கு எதிரே ஒருத்தன் கீழே விழுந்து, மண்டை பிளந்து, மூளை சிதறி, கைவேறு கால் வேறாகச் சின்னாப் பின்னப் பட்டுச் சாகிற காட்சியையாவது பாருங்க!"

வெளியே தொங்கலாடிக் கொண்டிருந்த மனிதரின் தலை சட்டென்று மறைகிறது.

பெட்டிக்குள்ளே ஒரே பரபரப்பு! 'ச்சு' கொட்டல்!

"யோவ்! யோவ்! விழுந்துடப் போறே! இரு; இதோ கதவைத் திறக்கிறோம்!"

பதறியடித்துப் பாய்ந்தோடி வந்து கதவைப் படீரென்று திறக்கிறார், கையில் தங்கக் காப்பு அணிந்த ஒருவர்.

அங்கே—

பெட்டியின் கதவோரம் வெளிப்புறமாகப் பொருத்தப்பட்டிருந்த கைப்பிடியை இறுகப் பற்றியவண்ணம், புட்போர்டின் கீழ்ப் பலகையில் கால்களை ஊன்றி, மேல் பலகையில் சுகமாக உட்கார்ந்து கொண்டிருந்த அந்த வாலிபன் மெல்லச் சிரித்தவாறு எழுந்து, "ரொம்ப தாங்ஸ்! ரொம்ப நன்றி!" என்று சொல்லிக் கொண்டே வாகவமாகப் படிகளில் ஏறி உள்ளே வருகிறான்.

குறுகலான காவேரிப் பாலத்தைக் 'கட கடா' ஒலியுடன் கடந்து செல்கிறது அந்தச் சிறிய மரப்பெட்டி உலகமான ரயில் வண்டி.

அவனுக்கு அதிகப்படியாக இருபத்தெட்டு வயசு மதிக்கலாம். களையான முகம். அலட்சிய மிடுக்குடன் கூடிய கவர்ச்சி மிக்க கண்கள். திடகாத்திரமான உடற்கட்டு. சாம்பல் நிற 'டுவீட்—பாண்ட்'. நீலம் பாரித்த ஸ்லாக் ஷர்ட். இடது தோளில் ஒரு கான்வாஸ் பை தொங்க, வலக் கையில் ஒரு தோல் பெட்டி—இத்தியாதி கோலத்தில் விளங்கும் இந்த நாகரிக வாலிபனை, சற்றுமுன் ரயில் பெட்டிக்கு வெளியே சன்னல் கம்பியைப் பிடித்துத் தொங்கலாடிக் கொண்டு கதவைத் திறக்கும்படி பிச்சைக்காரனைப்போல் பல்லைக் காட்டிக் கெஞ்சிக் குழைந்து எல்லாருடைய வசவுகளுக்கும் உள்ளானவன் என்பதை நம்பவே முடியவில்லை!

கதவைத் திறந்த தங்கக் காப்புக்காரர் முகத்தில் அசடு வழிய அந்த வாலிபனையும், அப்பெட்டிக்குள்ளிருந்த மற்றப் பிரயாணிகளையும் மாறி மாறிப் பார்த்தார்.

"உங்களுக்கெல்லாம் ரொம்பவும் சிரமம் கொடுத்து விட்டேன். மன்னிக்கணும்" என்று யாருடைய முகத்தையும் பார்க்காமல் புன்முறுவலுடன் கூறிக் கொண்டே தன் கையிலிருந்த பெட்டியை ஒரு பக்கமாக வைத்துவிட்டு நிமிர்ந்த அவன், இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வந்ததால் ஏற்பட்ட கண்ணின் மசக்கையோடு அந்த ரயில் பெட்டிக்குள் நிதானமாகப் பார்வையை ஓட்டினான்.

சற்று முன் இந்தப் பெட்டியிலுள்ள பிரயாணிகள் அனைவரும் சேர்ந்து—ஒரே குரலாகச் சேர்ந்து—'இங்கே நிற்கக்கூட இடம் இல்லை' என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள் அல்லவா? அவர்கள் சொன்னது போல் அப்படியொன்றும் அதிக நெரிசல் இருப்பதாகத் தோன்றவில்லை. சுமார் முப்பது அல்லது நாற்பது பிரயாணிகளே இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தாராளமாக உட்காரப் போதிய இட வசதியும் இருந்தது. ஆனால், அவர்களில் சிலர் ஐந்தாறு ஆசனங்களை முழுதுமாகக் கைப்பற்றித் தூங்குவது போன்ற பாசாங்குடன் படுத்துக் கொண்டிருந்ததாலும்

பெட்டி, படுக்கைமூட்டைமுடிச்சுக்களை ஒழுங்கில்லாமல் பரப்பிப் போட்டு வைத்திருந்ததாலும், லக்கேஜ் போர்டில் சிலர் வெறுமனே படுக்கையை விரித்துவைத்திருந்ததாலும்தான் பலர் உட்கார இடமின்றித் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது! இவை தவிர, கன்யாகுமரிக்கு யாத்திரை போய் வரும் ஒரு வடநாட்டுக் குடும்பம் பெட்டியின் கடைக் கோடியில் கால்வாசி இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் வெகு நிதானமாகச் சுற்றிவளைத்துப் பார்த்த அந்த வாலிபன், தன்னை உள்ளே விட மறுத்து எதிர்ப்புக் காட்டிப் பேசிய ஒவ்வொருவரையும் அலட்சியப் புன்முறுவலுடன் கூர்ந்து நோக்கினான். அவர்களோ அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கம்பார்ட்மென்டிலிருந்த அனைவரது பார்வையும் தன்மீதே கவிந்திருப்பதைக் கவனித்துக்கொண்ட அவன் சட்டென்று நிமிர்ந்து, ''மட சாம்பிராணிகள்! ஒருத்தனை உள்ளே விடக் கூடாதென்பதிலே எவ்வளவு ஒற்றுமை! இரண்டு ரூபாய்க்கு டிக்கட் வாங்கி விட்டால் இந்த ரயிலையே விலைக்கு வாங்கி விட்டதாக நினைப்பு! இது என்ன, இவர்கள் அப்பன் வீட்டுச் சொத்தா? இங்கே காலை நீட்டிப்போட்டுத் தூங்குகிறவர்களை எழுப்பி உட்காரச் சொல்ல யோக்கியதை இல்லை; அவசரத்துக்கு ஓடி வருகிறவனை உள்ளே விடாமல் தடுப்பதற்கு மட்டும் ஒற்றுமை உணர்ச்சி வந்து விடுகிறது. நான்சென்ஸ்! கண்ட்ரிபுரூட்ஸ்!'' என்று உரத்த குரலில் கத்தியவாறு தன் காலடியிலிருந்த தோல் பெட்டியை ஓங்கி ஓர் உதை விட்டான். அந்தப் பெட்டி விர்ரென்று தேய்ந்து கொண்டு போய், சற்று முன் அவனை உள்ளே விட மறுத்த 'நான்சென்ஸ்! கண்ட்ரிபுரூட்' என்று திட்டிய ஒரு கல்லூரி மாணவன் அமர்ந்திருக்கும் பெஞ்சுக்கு அடியில் புகுந்தது. அவனுடைய இந்த ஆவேசக் கூப்பாட்டைக் கேட்டு அங்கிருந்த பிரயாணிகள் கலவரத்துடன் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். ஆசனங்களில் தூங்கிக் கொண்டிருந்த சிலர் இந்தச் சத்தம் கேட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டனர். லக்கேஜ் போர்டுகளில் படுக்கை விரித்து விட்டுக் கீழே உட்கார்ந்திருந்தவர்கள் அவசரம் அவசரமாக மேலே ஏறிப் படுக்க ஆரம்பித்தனர்.




''வருத்தப்படாதீங்க, தம்பி! உங்க நன்மைக்குத்தான் அப்படிச் சொன்னோம். ஓடற வண்டியிலே ஓடி வந்து ஏறலாமா? தப்பித் தவறிக் கீழே விழுந்தா என்ன ஆகும்?...'' என்றார் அவனுக்குக் கதவைத் திறந்து விட்ட தங்கக் காப்புக்காரர்.

''என்ன ஆகும்? பட்டணத்துக்கு டிக்கட் வாங்கியிருக்கிற நான், பரலோகத்துக்கு டிக்கட் வாங்கும்படியாகும்; அவ்வளவுதானே!'' என்று அலட்சியச் சிரிப்புடன் சொல்லிக் கொண்டே விறைப்பாக உள்ளே சென்ற அவன், வலப்பக்க லக்கேஜ் போர்டில் படுத்துக் கொண்டிருந்த ஓர் இளைஞனை முரட்டுத்தனமாகக் கீழே இழுத்து இறக்கி விட்டு, தன் தோளில் தொங்கிய கான்வாஸ் பையை மிக ஜாக்கிரதையாகக் கழற்றி எடுத்து அந்தச் சாமான் பலகை மீது நலுங்காமல் வைத்தான். பிறகு அங்கு சுருண்டுகிடந்த படுக்கை விரிப்பைச் சரியாக இழுத்து விட்டு, தன் அருகில் கோபமும் கொதிப்புமாக விறைத்து நின்று கொண்டிருந்த அந்த இளைஞனைக் குண்டுக் கட்டாகத் தூக்கிப் பலகை மேல் தொப்பென்று போட்டு, ''தூங்கு தம்பி, இந்தப் பையைத் தலைக்கு அணையா வைச்சுக்கிட்டு நல்லாத் தூங்கி எழு!'' என்று கூறியவாறு திரும்பினான்.

அவனுடைய இந்தப் 'பலாத்கார' வீம்புச் செயலைப் பயப்பிராந்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர் மற்றப் பிரயாணிகள். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அவர்களிடம் காணப்பட்ட ஒற்றுமை புணர்ச்சி இப்போது கடுகளவும் தலைகாட்டவில்லை. ஆனால் கல்லூரி மாணவன் மட்டும் அவனை எரித்து விடுவது போல் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கதவைத் திறக்க முடியாதென்று கட்டுப்பாடாகப் பேசியவர்களில் ஒருவர் தம் இருப்பிடத்தை விட்டு எழுந்து, ''நிற்கிறீங்களே, இப்படி உட்காருங்க சார்!'' என்று பணிவுப் புன்முறுவலுடன் சொன்னார்.

ஆனால் அந்த வாலிபன் இதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் அசட்டையாகத் திரும்பி, ஆசனத்தில் படுத்துத் தூங்கிய ஓர் ஆளைப் பலவந்தமாகத் தூக்கி உட்கார வைத்து விட்டு, வெகு நேரமாகக் கைக்குழந்தையுடன் கால் கடுக்க நின்று கொண்டிருந்த பெண்மணியொருத்தியைப் பார்த்து, ''இந்தாங்கம்மா, இப்படி வந்து உட்காருங்க!'' என்றான் கட்டளையிடும் குரலில்.



தூங்கும் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு நின்ற அந்த நோஞ்சலான பெண்மணி தயக்கத்துடன் வந்து அமர்ந்தாள். இதுவரை மூட்டை முடிச்சுக்களுடன் கீழே உட்கார்ந்து கொண்டிருந்த அவளுடைய கணவன் சட்டென்று எழுந்து அவள் பக்கத்தில் போய் நெருக்கியடித்துக்கொண்டு அமர்ந்து கொண்டான். அந்த வாலிபன் எங்கே தன் மனைவியின் பக்கத்தில் உட்கார்ந்துவிடுவானோ என்ற பயம் அவனுக்கு!

இதையெல்லாம் இன்னோர் ஆசனத்தில் படுத்தபடி கவனித்துக் கொண்டிருந்த ஒரு ஊட்டுக்காரர், அந்த வாலிபனின் கெடுபிடிக்குத் தானும் உள்ளாக நேரிடுமோ என்று பயந்தவராய் — ஆனால் அங்கு நடந்த எதுவுமே தமக்குத் தெரியாத மாதிரி — மெள்ள எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''இப்ப வண்டி எந்த ஸ்டேஷனைத் தாண்டி இருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே சன்னல் பக்கம் எட்டிப் பார்த்தார்.

''வண்டிதானே? வைத்தீகவரன் கோயிலே நெருங்கிக்கிட்டிருக்கு!'' என்று கேலிப் புன்முறுவலுடன் சொன்னவாறு அவரருகில் போய் 'ஹாய்'யாக அமர்ந்தான் வாலிபன்.

மழை பெய்து ஓய்ந்தது போன்ற அமைதி.



வைத்தீகவரன் கோயிலில் வண்டி நின்றது. அந்தக் கம்பார்ட்மென்டிலிருந்து யாரும் இறங்கவுமில்லை; ஏறவுமில்லை.

வண்டி புறப்படும் சமயம், ஆயுத பாணியாய் இருந்த ஒரு போலீஸ்காரன் அவசரமாக விரைந்து வந்து அந்தக் கம்பார்ட்மென்டுக்கு வெளியே நின்று யாரையோ தேடுவது போல் ஒவ்வொரு சன்னலாக எட்டி எட்டிப் பார்த்தான். பிறகு அதே வேகத்தில் அடுத்த பெட்டியை நோக்கி விரைந்தான். வண்டி புறப்பட்டது.

மிஸ்டர் அவசரம் — அதாவது, அவசரமாக ஓடி வந்து ஏறிய அந்த வாலிபன் — அவசரமாகத் தன் பெட்டியைத் திறந்து ரயில்வே கால அட்டவணைப் புத்தகமொன்றை எடுத்துப் பரபரவென்று புரட்டிக் கொண்டே கைக் கடிகாரத்தில் மணி பார்த்தான். ''சே, பத்து நிமிஷம் லேட்!'' என்று முணுமுணுத்தவாறு புத்தகத்தைப் பெட்டிக்குள் விசியெறிந்தான். சற்று நேரம் எதைப் பற்றியோ ஆழ்ந்து சிந்திப்பவன் போல் கண்களை மூடிக் கொண்டு இருக்கையின் பின்னால் சாய்ந்தான். பிறகு சட்டென்று நிமிர்ந்து தன் ஜேபியிலிருந்த சில துண்டுக் கடிதங்களை எடுத்துப் பிரித்துப் பார்த்து விட்டு மீண்டும் அவற்றை மடித்து ஜேபியில் திணித்துக் கொண்டு யோசனையில் மூழ்கினான். அங்கிருந்த பிரயாணிகள் அனைவரும் அவனுடைய செய்கைகளை மிகவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டிருந்தனர். கல்லூரி மாணவனின் முகத்தில் மட்டும் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

தூங்கும் குழந்தையை மடியில் போட்டுக் கொண்டிருந்த அந்த நோஞ்சலான பெண்மணி தன் கணவனிடம் ஏதோ கவலையுடன் கிசுகிசுத்தாள். ''அடுத்த ஸ்டேஷனிலே வண்டி நிற்கும்போது பார்த்துக்கலாம்'' என்றான் அவன்.

யோசனையில் ஆழ்ந்திருந்த மிஸ்டர் அவசரம் கழுத்தை நீட்டி, ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று ரொம்பவும் பதவிசாக விசாரித்தான்.


''ஒண்ணுமில்லீங்க.... வந்து....'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள் கைப்பிள்ளைக்காரி. உடனே அவள் கணவன் அவளுடைய முதுகைச் சீண்டி ஒரு முறை முறைத்தான். அவள் வாயை மூடிக் கொண்டு தலை குனிந்தாள்.

இதைக் கவனியாதவன் போல் விசிலடித்துப் பாடியவாறு தொடையில் தாளம் போட்டுக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம், — எதையோ நினைத்துக் கொண்டவனாய் அவசரமாகப் பெட்டியைத் திறந்து ஒரு பிளாஸ்டிக் உறையை எடுத்தான். அந்தப் பை நிறையப் பல நிறக மிட்டாய்கள் இருந்தன. அவற்றைப் பிடி பிடியாக வாரி, அங்கு தூக்கம்

உவகையூட்டும் **உற்சாகமும்**

# தென்றலின் குளுமையும்


பரப்பும்



# விஜய்

16" A/C சுழலும் (Oscillating)

## டேபிள் மின் விசிறிகள்




நவீன ப்ரஸ் பட்டன் கண்ட்ரோலுடன்கூடிய இந்திய மின் விசிறி

கவர்ச்சிகரமான கண்ணுக்கினிய வண்ணங்களில் உள்ள விஜய் மின் விசிறி உங்கள் இல்லத்தை மேலும் அழகுறச்செய்கிறது.

சப்தமில்லாத இயக்கத்திற்கும், நீடித்த கடின உழைப்பிற்கும் உறுதியளிக்க விஜய் மின் விசிறிகளில் சம நிலையில் இயங்கும் ரோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

விஜய் மின்விசிறிகள் இரண்டு வருடகால உத்தரவாதத்துடன் கூடியவை.

*பூரண விநியோகஸ்தர்கள்:*

**ஒபுல் ரெட்டி ஏஜென்ஸீஸ்**

துன் பில்டிங்ஸ், சென்னை - 2

*தயாரிப்பாளர்கள்:*

**நேஷனல் எலெக்ட்ரிகல்ஸ்,**


இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை - 32

Vijay

EP/OBA/TH/5

# ரெக்ஸ்

## ஜெல்லி



## இன்பமான காட்சி...மிகுந்தசுவை...மிகவும்நல்லது!

இது சுவை மிகுந்தது. பழங்களின் மணம் கொண்டது. எளிதில் தயாரிக்கக்கூடிய ஒரு பண்டம். ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டல்களை வெந்நீரில் கலந்தால் போதும். பிறகு போதுமான அளவு குளிர்ந்த ஜலம் அதோடு சேர்த்து அந்தக் கலவையை ஒரு பைன்டுக்கு, (அதாவது 20 அவுன்ஸ்) சமமாக ஆக்கிக்கொள்ளுங்கள். அதை அச்சியில் ஊற்றி, ஐஸின் மேல் ஜெல்லியை உறைய வையுங்கள்.

அது குடும்பத்தார் விரும்பும் போஷகமளிக்கும் லேசான பண்டம். வியாதியிலிருந்து சுகமடைந்தவருக்கும் கூட நல்லது.

ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டல்கள் 6 சுவைகளில் கிடைக்கின்றன. ராஸ்பெரி, ஸ்ட்ருபெரி, லெமன், பைனாபிள், ஆரஞ்சு, செர்ரீ.






கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

தென் இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்: பாரி & கம்பெனி லிமிடெட்

பிடிக்காமல் சிணுங்கிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர்க்கெல்லாம் விநியோகம் செய்தான். இதைப் பார்த்த மற்றவர்கள், 'இவன் ஏதாவதொரு மிட்டாய்க் கம்பெனியின் பிரசாரகனாய் இருப்பானோ' என்று எண்ணினர்.

தான் வழங்கிய மிட்டாய்களைச் சிறுவர்கள் சுவைத்துக் கொண்டிருப்பதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம் சடாரென்று எழுந்து, மேலேயிருந்த தன் கான்வாஸ் பையைத் திறந்து நன்றாகப் பழுத்திருந்த அரை டஜன் மாம்பழங்களைக் கைநிறைய அடுக்கிக் கொண்டு திரும்பினான். தன்னை உள்ளே விட மறுத்தவர்கள் எங்கெங்கே உட்கார்ந்திருக்கிறார்களென்பதை ஒரு நோட்டம் விட்டுப் பார்த்துக் கொண்ட அவன், அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு பழத்தை நீட்டி, ''இந்தாங்க, பாதிரி மாம்பழம்!'' என்றான்.

ஏதோ ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றதும் மிஸ்டர் அவசரத்தின் பக்கத்தில் அமர்ந்திருந்த ஆசாமி, பெட்டி, படுக்கைகளுடன் கீழே இறங்கினார். புதிதாக ஏறிய ஒரு வயோதிக முஸ்லிம் அந்த இடத்தில் வந்து அமர்ந்தார். கைப்பிள்ளைக்காரி தன் கணவனிடம் முன் போலவே கவலையுடன் ஏதோ சொன்னாள். அவன் எழுந்து போய்ச் சன்னலுக்கு வெளியே தலையை நீட்டி அங்குமிங்குமாகப் பார்த்து விட்டுத் திரும்பி வந்து, ''அடுத்த ஸ்டேஷனில் வாங்கிக்கலாம்'' என்றவாறு உட்கார்ந்தான்.

இஞ்சின் விசில் ஊதின சமயம், அந்தப் போலீஸ்காரன் முன் போலவே ஓடிவந்து அவசரமாகப் பெட்டிக்குள் எட்டிப் பார்த்து விட்டு மறைந்தான்.

இச்சமயம் அந்த நோஞ்சலான பெண்மணியின் மடியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்தது. தாய்க்காரி அதைச் சமாதானப்படுத்தித் தூங்க வைக்க முயன்றாள். ஆனால் அக்குழந்தையோ அடம் பிடித்து ஓரேயடியாகக் கத்தத் தொடங்கியது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த மிஸ்டர் அவசரம் சட்டென்று திரும்பி, ''அடே போக்கிரி! அழாதேடா!....இதோ பார், உனக்கு ஒரு நல்ல பாட்டு வாசிக்கப் போறேன். கேட்கிறாயா?'' என்று கொஞ்சலாகக் கூறிக் கொண்டே, தன் கால் சட்டை ஜேபியிலிருந்து எடுத்துக் 'கீங், கீங்' என்று ஊதினான். அப்புறம் இந்தி சினிமாப் பாட்டு ஒன்றை வாசிக்கவே ஆரம்பித்து விட்டான்.

ரயில் வண்டி ஓடும் இரைச்சலையும் மேவிக் கொண்டு அந்த இசைக் கருவியின் இனிய நாதம் கும்மென்று பரவி நிறைந்தது. சளசளவெனப் பேசிக் கொண்டிருந்த பிரயாணிகள் அனைவரும் காந்தத்தால் கவரப்பட்டவர்கள் போல் ஒரு சேரத் திரும்பினர். இதொன்றையுமே கவனியாத மிஸ்டர் அவசரம், குழந்தைக்கு நேரே திரும்பி உட்கார்ந்து கொண்டு, கன்னங்கள் உப்ப, கண்கள் விரிந்து கொண்டு பாட்டின் தாளத்துக்கேற்ப உடம்பையும் தலையையும் அலுக்கிக் குலுக்கி நெளித்து வெகு உற்சாகமாக வாசிக்கலானான். ஆகா! அந்தச் சின்னஞ்சிறு இசைக் கருவியைத்தான் அவன் எப்படியெல்லாம் வாசித்தான்!

குழந்தையின் அழுகை இப்போது போன இடம் தெரியவில்லை. தன் பிஞ்சுக் கரங்களை ஆட்டி அவனைப் பார்த்துச் சிரிக்கவே ஆரம்பித்து விட்டது அது. இதனால் மேலும் உற்சாகமடைந்த அவன் தொடர்ந்து வாசித்துக் கொண்டேயிருந்தான்.

இந்தச் சமயம், அந்தக் கம்பார்ட்மென்டின் எங்கோ ஒரு திசையிலிருந்து 'களுக்' கென்ற சிரிப்பொலி கேட்கவே, திடுக்குற்றவன் போல் நிமிர்ந்த மிஸ்டர் அவசரம், வாசிப்பதை நிறுத்தி விட்டுச் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். அப்படிப் பார்த்தவனின் கண்கள், இரண்டாவது வரிசையில் இருந்த ஓர் ஆசனத்தில் போய் நிலைகுத்தி நின்றன.

தன்னை மறந்த நிலையில் அந்த இரண்டாவது வரிசை ஆசனத்தையே பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம் அசட்டுச் சிரிப்புடன் மெல்லத் திரும்பி ''என்னடா, போக்கிரிப் பயலே! பாட்டுக் கேட்டது போதுமா?'' என்றவாறு மௌத்—ஆர்கனைத் துடைத்து, ஜேபியில் போட்டுக் கொண்டான். பிரயாணிகள் தமக்குள் ஏதோ கேலியாகப் பேசிச் சிரிப்பதையும் அவன் கவனித்துக்கொள்ளவில்லை. தன்னை மீறிய வெட்க உணர்ச்சியால் குன்றிக் குறுகியவன் போல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான் அவன்.

சிரித்துக் கொண்டிருந்த குழந்தை மறுபடி வீரிட்டழ ஆரம்பித்தது. தாயார்க்காரி தவித்தாள். எப்படி யெப்படியோ அதைச் சமாதானப்படுத்த முயன்றாள். எரிச்சல் மிகுதியால் பளீரென்று ஓர் அறையும் வைத்தாள். இவை எதற்குமே அடங்காமல் அந்த அடங்காப்பிடாரிக் குழந்தை அழுது கொண்டே தான் இருந்தது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான் மிஸ்டர் அவசரம். இப்போது அக் குழந்தையின் அழுகுரல் அவன் செவிகளில் விழுகிறதா இல்லையா என்பதே சந்தேகமாயிருந்தது.

சில விநாடிகளுக்குப் பின் அவசரமாகத் தன் ஜேபியிலிருந்த சிறிய சீப்பொன்றை எடுத்துக் கலைந்து கிடந்த தலைக் கேசத்தை அழகாக வாரி விட்டுக் கொண்ட மிஸ்டர் அவசரம் அதே பரபரப்புடன் பெட்டியைத் திறந்து ஓர் ஆங்கில நாவலையும் ஒரு கூலிங் கிளாஸையும் எடுத்துக்கொண்டு நிமிர்ந்தான். அந்தக் கறுப்புக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்ட அவன், புத்தகத்தை முகத்துக்கு நேரே பிரித்து வைத்தபடி வெகு தீவிரமாகப் படிக்க ஆரம்பித்து விட்டான்!

இரவு நேரத்தில் கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு படிக்கும் அந்த நவநாகரிக வாலிபனைப் பார்த்துக் கண் சிமிட்டி நகைத்தனர் மற்றப் பிரயாணிகள். கல்லூரி மாணவன் மட்டும் இந்தக் கேலிச் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை. மிஸ்டர் அவசரம், ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் இப்படிக் கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு படிப்பது போல் 'பாவலா' செய்கிறான் என்று அவனுக்குப் பட்டது. பாம்பின் காலடி பாம்புக்குத் தானே தெரியும்? அவன் தன் இருப்பிடத்தை விட்டு மெள்ள எழுந்து வெளியே எட்டிப்

பார்ப்பது போல் நின்று கொண்டு கறுப்புக் கண்ணாடிக்குள் மறைந்திருக்கும் மிஸ்டர் அவசரத்தின் கண்களை ஊடுருவி நோக்கினான். அவன் சந்தேகப்பட்டது சரியாகப் போயிற்று. உண்மையில் மிஸ்டர் அவசரம் அப்போது நாவல் படிக்கவில்லை. அவனுடைய கண்கள் அப்புத்தகத்தின் மேலே சென்று, எதிரே இரண்டாவது வரிசை ஆசனத்தையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவை வட்டமிடும் திசை நோக்கித் தன் பார்வையையும் செலுத்தினான் மாணவன்.

அங்கே, அந்த இரண்டாம் வரிசை ஆசனத்தில் ஓர் அழகிய யுவதி உட்கார்ந்திருப்பது தெரிந்தது! புன்னகை தவழும் முகத்தினளாய் அமர்ந்திருந்த அவள் மிஸ்டர் அவசரத்தையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்!

சீர்காழியில் வண்டி நின்றது. அந்தக் குழந்தையின் அழுகை மட்டும் இன்னமும் நிற்கவில்லை. சிலர் இறங்கினர்; சிலர் ஏறினர். பின்னைக்காரி தன் கணவனிடம் முன்போல் முணுமுணுத்தாள். உட்கார்ந்தபடியே உறங்கி விழுந்து கொண்டிருந்த அவன், கூஜாவை எடுத்துக் கொண்டு சோம்பலுடன் கீழே இறங்கிச் சென்றான்.

இதுவரை நாவல் படிக்கும் பாவனையில் அந்த நவநாகரிக யுவதியையே பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம், கறுப்புக் கண்ணாடியைக்கழற்றிவிட்டுப்பின்னைக்காரியை நோக்கி, ''ஏம்மா, உங்கள் கணவர் குழந்தைக்குப் பால் வாங்கத்தானே போகிறார்? குழந்தை பசியால்தான் அழுகிறதென்று எனக்கு அப்பவே தெரியும். இந்த ஸ்டேஷனிலே பசும்பால் கிடைக்கிறது கஷ்டமாச்சே!''—என்றான். பிறகு தன் பெட்டியிலிருந்து ஒரு பிளாஸ்கை எடுத்துக் கொண்டு ''இருங்க, நானும் போய்ப் பார்க்கிறேன்'' என்றவாறு கீழே இறங்கி ஓடினான்.

அவன் சென்ற சில விநாடிகளுக்குப் பின் துப்பாக்கியும் பைனட்டுமாக விரைந்துவந்த அந்தப் போலீஸ்காரன் பெட்டிக்குள் எட்டிப் பார்த்தான். அவனுடைய பார்வை மிஸ்டர் அவசரம் உட்கார்ந்திருந்த ஆசனத்தை நோக்கித்தான் சென்றது. அங்கு அவன் இல்லாததாலோ என்னவோ போலீஸ்காரனின் முகத்தில் ஒருவிதப் பரபரப்புக் குறி காணப்பட்டது. திகைத்து நின்றபடி ஸ்டேஷன் பிளாட்பாரத்தைச் சுற்றிப் பார்த்த அவன் சட்டென்று திரும்பி அடுத்த பெட்டிக்குப் போய் விட்டான். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வண்டி நிற்கும்போது அந்தப் போலீஸ்காரன் இந்தப் பெட்டிக்குள் எட்டிப் பார்த்து விட்டுச் செல்வதை அங்கிருந்த பிரயாணிகளில் சிலர் கவனிக்கத் தவறவில்லை. ஆனால் அது பற்றி அவர்கள் அக்கறை ஏதும் காட்டவில்லை.

பால் வாங்கச் சென்ற நோஞ்சான் பெண்ணின் கணவன் வெறும் கூஜாவோடு திரும்பி வந்தான். குழந்தை இன்னமும் பசியால் துடித்து அழுது கொண்டுதான் இருந்தது. ''என்ன இது தொல்லை! இந்த ஸ்டேஷனிலே பசும்பால் கிடைக்காதாமே!'' என்றவாறு வந்து உட்கார்ந்தான் அவன். பின்னைக்காரி இதைக் கேட்டுப் பதறினாள். ''நான் மாயவரம் ஸ்டேஷனிலேயே சொன்னேன்; கேட்டால்தானே? இப்ப என்ன பண்ணறது? குழந்தை, கையில் காலில் தங்காமல் துடிக்குதே!'' என்று விம்மினாள் அவள். ''துடிச்சால் துடிக்கட்டும்; தரித்திரப் பிண்டம்!'' என்று அலுத்துக் கொண்டான் ஆடவன்.

**வ**ண்டி புறப்பட்டது. ஆனால் மிஸ்டர் அவசரம் இன்னமும் திரும்பிவரவில்லை. சன்னலோரம் உட்கார்ந்திருந்த அந்த அழகிய யுவதி கவலையோடு வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டாள். அவளுடைய தம்பி போல் காணப்பட்ட ஏழு வயதுச் சிறுவனொருவன் அவளிடம் ஏதோ தொணதொணவென்று பேசிக் கொண்டிருந்தான்.

ஸ்டேஷன் பிளாட்பாரத்தை வண்டி கடக்கும் போது தலைதெறிக்க ஓடி வந்த மிஸ்டர் அவசரம் சடாரெனப் பாய்ந்து ஏறினான். அதே சமயம், அவன் கையிலிருந்த பிளாஸ்க் கதவில் மோதிப் படீரென உடைந்து கீழே விழுந்து விட்டது!

''என்ன தம்பி, எங்கே போயிட்டு இப்படி ஓடி வருகிறீங்க?'' என்று கேட்டார் தங்கக் காப்புக்காரர்.

வேர்த்து விறுவிறுத்துத் தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் மலைத்து நின்ற மிஸ்டர் அவசரம், ''ஹூம்!... இவ்வளவு கஷ்டப்பட்டு ஓடிப் போய் வாங்கி வந்த பால் இப்படி வீணாப்போயிடிச்சே!'' என்று இரைப்பு வாங்க முணுமுணுத்தான்.



சென்னை • சாந்தி
(ஏர்கண்டிஷண்ட்)
ஸ்ரீ கிருஷ்ணா
உமா
மதுரை சிந்தாமணி
மற்றும் தென்னாடெங்கும்.
தனலக்ஷ்மி பிலிம்ஸ்
அளிக்கும்...
பத்மா பிலிம்ஸ்...
வளர் பிறை
டைரக்ஷன் • D.யோகானந்த்
Elegant

''பால் போனாலும் பரவாயில்லே, பிளாஸ்க்கையுமில்லே உடைச்சுட்டீங்க!'' என்று பரிதாபப்பட்டார் தங்கக் காப்புக்காரர்.

இதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் இருப்பிடத்தை நோக்கி நடந்தான் மிஸ்டர் அவசரம். அவனை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்த யுவதி. ஆனால், அவன் அவளை இப்போது துப்புரவாக மறந்து விட்டான் போல் தோன்றியது. கல்லூரி மாணவன் அவ்விருவரையும் கவனித்துக் கொண்டிருந்தான். குழந்தை இன்னமும் அழுது கொண்டுதான் இருந்தது. அதைச் சமாதானப்படுத்தப் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தாள் தாயார்க்காரி. அவளது கணவனோ பிடிருடித்த வண்ணம் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

கவலை தேங்கிய முகத்துடன் குழந்தையையும் அதன் தாயாரையும் பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம், தன் 'மௌத் ஆர்கனை' எடுத்து மீண்டும் வாசிக்க ஆரம்பித்தான். அடுத்த ஆசனத்தில் அமர்ந்திருந்த யுவதி ஆனந்தப் பரவசமுற்றாள். ஆனால், பசியால் துடிக்கும் குழந்தையோ அவனுடைய பாட்டைக் கேட்க மறுத்து முன்னிலும் அதிகமாகக் கத்த ஆரம்பித்தது. அவன் வாசிப்பதை நிறுத்தினான்.

இச்சமயம், வாயு வேகமாக விரைந்து கொண்டிருந்த ரயில் வண்டி ஏனோ தன் வேகத்தைக் குறைத்தது. பிறகு நின்றே விட்டது. அடுத்த ஸ்டேஷன் எங்கே இருக்கிறதென்றே தெரியவில்லை. அது இன்னும் பல மைல் தொலைவுக்கு அப்பால் இருக்கலாம். வண்டி நின்ற இடம் சரியான பொட்டல்காடு. ஒரே இருட்டு. ஏன்தான் இப்படி வண்டி நிறுத்தப்பட்டதோ, தெரியவில்லை. பலர் பல விதமாகப் பேசிக் கொண்டார்கள். ஒரு மணி நேரமாகியும் வண்டி கிளம்புவதாயில்லை. சலிப்படைந்த பிரயாணிகள், ரயில் பெட்டிகளை விட்டுக் கீழே இறங்கி உலாவ ஆரம்பித்தனர்.

'குழந்தைப் பசியோ, கொள்ளிப்பசியோ' என்று சொல்வார்களே அது முழுக்க முழுக்க உண்மைதான். அந்தக் குழந்தை பசி தாளமாட்டாமல் துடியாய்த் துடித்தது. அழுது அழுது தொண்டை கூடக் கம்மி விட்டது. அடுத்த ஸ்டேஷனை எப்போது அடைவது, அதற்குப் பால் எப்போது கிடைப்பது? அங்கேயும் இந்த இரவு நேரத்தில் பால் கிடைக்கிறதோ இல்லையோ! இப்படியே இன்னுங் கொஞ்ச நேரம் அது கத்திக் கொண்டிருந்தால் வயிறு உப்பி, நெஞ்சு உலர்ந்து செத்துப் போய் விடும் போல் இருக்கிறதே!...பின்னைக்காரியின் தவிப்பைப் பார்க்கச் சகிக்க முடியவில்லை. ரயில் வண்டியோ செத்த பாம்பு போல் நின்று கொண்டிருந்தது.

அப்படியும் இப்படியுமாக நெளிந்து கொண்டிருந்த மிஸ்டர் அவசரம், ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் பரபரப்புடன் கீழே இறங்கி ஓடினான்.

அவன் சென்று சற்று நேரங்கழித்து அந்தப் போலீஸ்காரன் அப் பெட்டிக்குள் வந்து ஏறினான். மிஸ்டர் அவசரம் உட்கார்ந்திருந்த இடம் காலியாயிருப்பதைக் கண்டு திடுக்குற்று நின்ற அவன், பக்கத்திலிருந்த சாயபுவைப் பார்த்து, ''இங்கே உட்கார்ந்திருந்த ஆசாமி எங்கே?'' என்று கேட்டான். ''இப்பத்தான் கீழே இறங்கிப் போனார்'' என்றார் சாயபு. ''ஓகோ'' என்று தலையசைத்துக் கொண்ட போலீஸ்காரன், லக்கேஜ் போர்டின் மேல் இருந்த மிஸ்டர் அவசரத்தின் கான்வாஸ் பையைத் தொட்டுப் பார்த்து விட்டு, சட்டென்று கீழே இறங்கிப் போய் விட்டான். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பிரயாணிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. பல்வேறு சந்தேகங்கள் கிளைத்துப் படர, ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். ஆனால், அந்த யுவதி மட்டும், மிஸ்டர் அவசரம் சென்ற திசையையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஐந்து நிமிஷங்களுக்குப் பின், அவசர அவசரமாக ஓடி வந்தான். அவன் பின்னால், ஏழைமைக் கோலத்திலிருந்த நாட்டுப்புறப் பெண் ஒருத்தியும், அவளுடைய கணவனும் வந்து நின்றனர். ஆடவனின் தோளில் ஆறு மாதக் குழந்தை யொன்று தூங்கிக் கொண்டிருந்தது. சன்னல் பக்கமாக வந்து நின்ற மிஸ்டர் அவசரம், அந்தப் பிள்ளைக்காரியின் கணவனைக் கூப்பிட்டு, அவன் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னான். அதைக் கேட்டு முகம் களித்த அவன், தலையைச் சொறிந்துகொண்டு போய்த் தன் மனைவியிடம் ஏதோ கிசுகிசுத்தான். உடனே பிள்ளைக்காரியின் முகம் மலர்ந்தது. பசியால்





துவண்டு கிடந்த குழந்தையுடன் அரக்கப் பரக்கக் கீழே இறங்கினான் அவன்.

"ஐயோ, பாவம்! இந்தக் குழந்தைதானா?" என்ற அங்கலாய்ப்புடன், நோஞ்சல் பெண்ணிடமிருந்து குழந்தையை வாங்கிக்கொண்ட அந்த நாட்டுப்புறத்துப் பெண், சற்றுத் தள்ளிப் போய்க் கட்டாந்தரையில் உட்கார்ந்து, குழிந்த வயிற்றுடன் பிரக்ஞையிழந்து கிடந்த பாலகனை மடியில் வளர்த்திக் கொண்டு தாய்மைப் பரிவோடு பாலூட்டினாள்!

ஒரு பக்கமாக ஒதுங்கி நின்ற நோயாளிப் பெண்ணின் கண்கள் பனித்தன. அவள் தன் நெஞ்சை இரு கைகளாலும் போர்த்திக் கொண்டு, மிஸ்டர் அவசரத்தையும் அந்த நாட்டுப்புறப் பெண்ணையும் பயபக்தியோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

வண்டி கிளம்புவதற்கு அறிகுறியாக இஞ்சின் விசில் ஊதியது. கீழே இறங்கி நின்ற பிரயாணிகள் அவசரமாக ஓடிப் போய் அவரவர் பெட்டிகளில் ஏறிக் கொண்டனர்.

பாலூட்டிக் கொண்டிருந்த ஏழைப் பெண் பரபரப்புடன் எழுந்து வந்து குழந்தையை அதன் தாயிடம் கொடுத்தாள். அந்தப் பொல்லாத குழந்தை தன் தாயின் முகத்தைப் பார்த்துப் பொக்கை வாய் காட்டிச் சிரித்தது. பூரித்துப் போன பிள்ளைக்காரி, அமுததானம் அளித்த அந்த நாட்டுப்புறப் பெண்ணை ஆரத் தழுவிக் கொண்டாள். குழந்தையும் அவளைப் பார்த்துப் புன்னகை காட்டியது.

"சரி, சரி; நீங்க உள்ளே ஏறுங்கம்மா, வண்டி புறப்படப் போகுது!" என்று துரிதப் படுத்திய மிஸ்டர் அவசரம், நாட்டுப்புற ஆடவனைத் தனியே அழைத்துப் போய் அவனிடம்ஐந்துரூபாய்நோட்டொன்றை எடுத்துக் கொடுத்தான். நன்றிப் பெருக்கால் குன்றிக் குறுகிப் போன அந்த ஏழைத் தம்பதி அவனைக் கும்பிட்டு விட்டு, தாம் ஏற வேண்டிய பெட்டியை நோக்கி ஓடினர்.

நீண்ட நேரமாக நின்று கிடந்த ரயில் வண்டி, ஊதிக்கொண்டு கிளம்பியது. மிஸ்டர் அவசரம், அவசரமாக வண்டியிலேறித் தன் இருப்பிடத்தில் வந்து அமர்ந்தான். பிள்ளைக்காரி அவனை நன்றியுடன் பார்த்தாள். அவள் கையிலிருந்த குழந்தை தன் தந்தையிடம் தாவிச் செல்ல முயன்றது. ஆனால் அவனோ, அக் குழந்தையின் புடைத்த வயிற்றை அருவருப்புடன் பார்த்து, "சனியன்! எந்த ஜாதிக்காரியிடமோ பாலைக் குடிச்சுட்டு வந்திருக்குது!" என்று முணுமுணுத்தான்.

இதைக் கேட்ட மிஸ்டர் அவசரத்தின் முகத்தில் ஓர் இளம் புன்னகை தவழ்ந்து மறைந்தது. அவன் முன் போலக் கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு நாவல் 'படிப்பதில்' மூழ்கினான். தொலைவில் உட்கார்ந்திருந்த யுவதியின் கண்களில் குறும்புத்தனம் குமிழி விட்டது. கல்லூரி மாணவன் வெறுப்போடு முகம் சுளித்தான். காற்றைக் கிழித்துக் கடுகிச் சென்றது ரயில் வண்டி.

"தம்பி! உங்களை யாரோ ஒரு போலீஸ்காரர் வந்து கேட்டுட்டுப் போனாரே!" என்று மெலிந்த குரலில் இழுத்தார் சாயபு.

"அப்படியா?" என்று எவ்விதப் பரபரப்புமின்றிக் கேட்டுக் கொண்டே மிஸ்டர் அவசரம், நாவல் படிப்பதிலேயே கவனமாக இருந்தான்.

வண்டி ஏதோ ஒரு சிறிய ஸ்டேஷனில் நின்றது. அந்தப் போலீஸ்காரன் ஓடி வந்து பெட்டிக்குள் எட்டிப் பார்த்து விட்டு மறைந்தான். வேறெங்கோ கவனமாயிருந்த மிஸ்டர் அவசரம் இதைக் கவனிக்கவில்லை. ஆனால், மற்றப் பிரயாணிகள் வெகு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். சிலர் தமக்குள் இரகசியம் பேசிக் கொண்டனர்.

வண்டிபுறப்படச் சிலவிநாடிகளே இருந்தன. திடீரென்று துள்ளி எழுந்த மிஸ்டர் அவசரம், பிரயாணிகளை இடித்துத் தள்ளிக்கொண்டு பாய்ந்து போய், கம்பார்ட்மெண்டின் மறு பக்கக் கதவைத் திறந்து கொண்டு வெளியே குதித்தான். அடுத்த கணம், அங்கே ஒரு துவந்த யுத்தம் நடந்தது!

ஆமாம்; கல்லூரி மாணவனின் பெட்டியை அவனுக்குத் தெரியாமல் கிளப்பிக் கொண்டு செல்ல முயன்ற ஒரு முரடனைப் பேய்ப் பிடியாகப் பிடித்துநிறுத்திச் செம்மையாக உதைத்துக் கொண்டிருந்தான் மிஸ்டர் அவசரம். அந்தத் திருட்டுப் பயலும் அவனை எதிர்த்துத் தாக்கினான். 'பிடி, விடாதே உதை' என்று பல குரல்கள் எழுந்தன. பெட்டியைக் கீழே போட்டு விட்ட திருடன், மிஸ்டர் அவசரத்தின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துக் குத்திவிட்டு இருளில் ஓடி மறைந்தான்.

வண்டி கிளம்பியது; கீழே கிடந்த பெட்டியுடன் தட்டுத் தடுமாறி மேலே ஏறி வந்தான் மிஸ்டர் அவசரம். அவனுடைய வலக் கன்னத்தில் இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது.

அதை ஒரு கையால் அழுத்திப் பிடித்தவண்ணம், தூக்கக் கிறக்கத்திலிருந்த மாணவனைப் பார்த்து, ''ஏன் சார், நீங்களே இப்படி அஜாக்கிரதையாக இருக்கலாமா?'' என்று புன்னகையுடன் கேட்டுக் கொண்டே பெட்டியை அவனிடம் கொடுத்தான். ஆனால் அந்த மாணவனோ விறைப்பாக முகத்தை வைத்துக் கொண்டு, ''ஐ—ஆம்—சாரி! நீங்கள் ஏன் இந்தச் சின்ன விஷயத்துக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்? என்னுடைய பொருளைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியாதா? '' என்றான் செருக்குடன். மிஸ்டர் அவசரம் அவனை இதமாக ஏறிட்டுப் பார்த்து, ''தவறுதான். மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றவாறு தன் இருப்பிடத்தில் போய் அமர்ந்து கொண்டான். தொலைவில் உட்கார்ந்திருந்த யுவதியின் கண்கள் கலங்கின.

மிஸ்டர் அவசரம் வெகு நிதானமாகப் பெட்டியைத் திறந்து, 'டிஞ்சர் அயோடின்' இருந்த ஒரு சிறிய பாட்டிலை எடுத்து, அந்த மருந்தைப் பஞ்சில் நனைத்துத் தனது கன்னத்துக் காயத்தில் போட்டுக் கொண்டு நிமிர்ந்தான். 'முதல் உதவி' க்குத் தேவையானவை கூட அவன் வசம் இருப்பதைக் கண்டு, சக பிரயாணிகள் வியந்தனர்.

சிதம்பரத்தில் வண்டி நின்றது. பெட்டி படுக்கையுடன் கீழே இறங்கினான் கல்லூரி மாணவன். அவன் போகும் போது, மிஸ்டர் அவசரத்தை ஒரு கறுவல் பார்வை பார்க்கத் தவறவில்லை. பிள்ளைக்காரியும் அவள் கணவனும் கூட அந்த ஸ்டேஷனில் இறங்கி விட்டனர். தூங்கும் குழந்தையை அணைத்துக் கொண்டு பிளாட்பாரத்தில் நின்ற அவள், மிஸ்டர் அவசரத்தைப் பார்த்து, ''போயிட்டு வரேன் அண்ணா!'' என்றாள் அடைத்தகுரலில். ''போயிட்டு வாங்க, சகோதரி! குழந்தை பத்திரம்!'' என்று தன்னை மீறிய பாசப் பரிவுடன் விடைகொடுத்தான் வாலிபன். வண்டி புறப்பட்டது. அரக்கப் பரக்க ஓடி வந்த போலீஸ்காரன் அந்தப் பெட்டிக்குள் எட்டிப் பார்த்து விட்டு மறைந்தான்.

இரவு மணி ஒன்றுக்குமேல் ஆகி விட்டது. கம்பார்ட்மெண்டில் நெருக்கம் குறைந்து விட்டதால், கிடைத்த இடத்தைப் பிடித்துக் கொண்டு படுக்கையை விரித்தனர் சிலர். படுக்க இடம் கிடைக்காத மற்றும் சிலர் உட்கார்ந்த வாக்கிலேயே 'சாமியாடத்' தொடங்கினர். இப்போது அங்குள்ள பிரயாணிகள் ஒவ்வொருவரையும் பார்க்க, வெகு வேடிக்கையாக இருந்தது. ஒரு சுவை மிக்க கேலிச் சித்திரம் போல் அந்தக் கம்பார்ட்மெண்ட் தோற்றம் அளித்தது.

கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு நாவல் 'படிப்பதில்' முனைந்திருந்த மிஸ்டர் அவசரம், ''மாமா!'' என்ற குரல் கேட்டுத் திடுக்குற்று நிமிர்ந்தான்.

''உங்களிடம் ஏதாவது நாவல் இருந்தால் என் அக்கா படிக்கக் கேட்குது!'' என்றவாறு அங்கு வந்து நின்றான் அந்தச் சிறுவன்.

ஒன்றும் புரியாமல் திருதிருவென விழித்த மிஸ்டர் அவசரம், சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, அசடு வழியச் சிரித்தபடி, ''நாவல்தானே தம்பி? இந்தா, இதைக் கொண்டு போய்க் கொடு!'' என்றவாறு கையிலிருந்த நாவலையே நீட்டினான். சிறுவன் அதைப் பெற்றுக் கொண்டு தன் அக்காளிடம் தாவினான்.

மிஸ்டர் அவசரத்தின் கண்கள் எதிர்த் திசையில் பார்க்கக் கூசி, கீழே கவிழ்ந்தன. அவன் நெடு நேரம் தலைகுனிந்து கொண்டேயிருந்தான். அவனுக்குப் பக்கத்திலிருந்த சாயபு 'கோழித் தூக்கம்' போட்டுக் கொண்டிருந்தார்.

வண்டி, பரங்கிப் பேட்டையைக் கடந்து கொண்டிருந்தது.

''இந்தாருங்கள்! இந்த நாவலை நான் ஏற்கெனவே படித்து விட்டிருக்கிறேன். மிக்க நன்றி....''

ஜலதரங்கம் போன்ற இந்த இனிய குரல் கேட்டுச் சட்டென்று தலைநிமிர்ந்த மிஸ்டர் அவசரத்தின் மடியில் அவனுடைய நாவல் புத்தகம் வந்து தொப்பென்று விழுந்தது. அந்த அழகிய யுவதி விர்ரென்று திரும்பிப் போய்த் தன் இருப்பிடத்தில் அமர்ந்தாள்.

மிஸ்டர் அவசரத்தின் உடல் ஒரு குலுங்குக் குலுங்கியது. மடியில் கிடந்த புத்தகத்தை எடுத்து அதன் பக்கங்களை வெறுமனே புரட்டினான். என்ன ஆச்சரியம்! அதனுள் அவனுக்குச் சொந்தமல்லாத ஒரு கடிதம் மடித்து வைக்கப் பெற்றிருப்பது தெரிந்தது. அந்தக் கடிதத்தை எடுத்து அவசரமாகப் படித்தான். அவன் முகம் வெளுத்துச் சிறுத்தது. தலையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் சற்று நேரம் எதைப் பற்றியோ ஆழ்ந்து சிந்தித்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவன் போல் அவசரமாகத் தன் பேனாவை எடுத்து, அதே கடிதத்தின் பின்னால் பரபரவென எழுதினான். அப்படி எழுதிய கடிதத்தை மடித்து அதே புத்தகத்தில் வைத்து மூடி, ''மன்னிக்க வேண்டும். இந்நாவலை மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள். மிக நல்ல நாவல் இது'' என்றவாறு அதை வெகு லாகவமாக அந்த யுவதியின் மடியில் போட்டு விட்டுச் சட்டென்று உட்கார்ந்து விட்டான்!

இந்த விநோத நாடகத்தைக் கவனிக்கும் நிலையில் இல்லை, அங்கிருந்த பிரயாணிகள்! வண்டி, கேப்பர்குவாரி ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருந்தது.

மிஸ்டர் அவசரம் தன் மௌத்—ஆர்கனை எடுத்து மிக இனிமையாக வாசிக்கலானான். தான் வாசிக்கும் இசையில் தானே லயித்துப் போனவன் மாதிரி கண்களை இலேசாக மூடிக் கொண்டான். அந்த இசைக் கருவியிலிருந்து எழுந்துகொண்டிருந்த இனிய நாதம், மெல்ல மெல்லத் தேய்ந்து போய்க் கொண்டிருந்தது.

கடலூரில் வண்டி நின்றது. கண் மூடித் தியானத்தில் இருப்பவன் போல் காணப்பட்ட மிஸ்டர் அவசரத்தின் முகத்தில் அவனுடைய நாவல் புத்தகம் பளீரென்று அறைந்த மாதிரி வந்து விழவே திடுக்குற்று விழித்துச் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தான். ஒரு சிறிய டிரங்க் பெட்டியுடன் வண்டியை விட்டுக் கீழே இறங்கிய அந்த அழகிய யுவதி, திரும்பிக் கூடப் பார்க்காமல் ஒயிலாக நடந்து போய்க் கொண்டிருந்தாள். அவளைப் பின்தொடர்ந்து சென்றான் சிறுவன்.


Ideal gifts for your Home & Office all the year
waco
RADIO ELECTRONIC INDUSTRIES
Factory: Ulhasnagar-4. Dist. Thana (Maharashtra State) Phone: 140
Office: 421, Lamington Rd., Bombay 4. Phone. 71051 Grams: 'WESTCOY'



# கயிற்றுத் தளவிரிப்புகள்

(COIR CARPETS)

# உபயோகித்து உங்கள் வீடுகளை அழகுமிக்கதாக ஆக்குங்கள்

கயிற்றுத் தளவிரிப்புகள் விரிக்கப்பட்ட அறைகளில் வசிப்பது மனமகிழ்ச்சி ஊட்டுகிறது. கயிற்றுத் தளவிரிப்புகள் கவர்ச்சி கரமானவை. நீடித்து உழைப்பவை. கண்கவர் வர்ணங்களில் கிடைக்கின்றன. ஒரு கயிற்றுத் தளவிரிப்பிற்காகச் செய்யப் படும் முதலீடு லாபகரமானது. உங்கள் பணத்திற்குரிய சிறந்த பயனை நீங்கள் பெறுகிறீர்கள்.

உங்களுக்கு அருகிலுள்ள காயர் போர்டு ஷோருமில் உள்ள உன்னத ரகங்களைப் பார்வையிடுங்கள்.

## காயர் போர்டு

## ஷோரூம் & ஸேல்ஸ் டிபோ

- 5. ஸ்டேடியம் ஹவுஸ், சர்ச்கேட், பம்பாய்.
- 16-A, ஆசப் அலி ரோடு, புது டெல்லி-1. போன்: 26988
- 1/155, மவுண்ட் ரோடு, மதராஸ்-2. போன்: 85787.
- 1-A, மஹாத்மா காந்தி ரோடு, பெங்களூர்-1. போன்: 70216.
- 22, லவுடன் தெரு, (வாசல் பார்க் தெருவில்) கல்கத்தா-16. போன்: 44-5287

காயர் போர்டு (இந்திய அரசாங்கம்) எர்ணாகுளம்

EP

திறந்த வாயை மூட மறந்த நிலையில், அவள் போவதையே பார்த்துக் கொண்டு சிலைபோல் உட்கார்ந்திருந்தான் மிஸ்டர் அவசரம். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சுடன் திரும்பினான். ரயில் வண்டியும் பெருமூச்சு விட்டுக்கொண்டு கிளம்பியது.

வாகல்பட்டி ஸ்டேஷனை வண்டி கடக்கும் வரை ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கிடந்த அவன் தூக்கத்திலிருந்து விழித்தவனைப்போல் மெள்ள நிமிர்ந்து உட்கார்ந்தான்.

காலடியில் விழுந்து கிடந்த நாவல் புத்தகத்தை எடுத்து மெல்லப் புரட்டிக் கொண்டிருந்த அவசரம், அதை மூடி வைத்து விட்டு வேறொரு பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான். அங்கே, 'லாட்ரின்' கதவோரமாக ஓர் இளம் பெண் தன்னந் தனியே ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள். பதினாறு அல்லது பதினேழு வயசு தான் இருக்கும். களையான முகம்; துறுதுறுப்பான அழகிய கண்கள். அந்த இயற்கையழகை அவள் அணிந்திருந்த போலியான அணிமணிகளும் கண்ணியமற்ற ஆடை அலங்காரமும் மாசுபடுத்தி வைத்திருந்தன. அதிகப்படியான வறுமையை மறைத்து அதிகப்படியான வளமையைக் காட்ட வேண்டுமென்னும் ஆவேச அடிப்படையில் மேற்கொண்ட அலங்காரமாக அவை தோன்றின. அவளிடம் பெட்டிப் படுக்கை மூட்டை முடிச்சு எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும், அவையெல்லாம் வேறெங்கோ இருப்பது போன்ற பாவனையில் அலட்சிய மிடுக்குடன் நின்று கொண்டிருந்தாள் அவள். கடலூர் ஸ்டேஷனில் தான் அவள் ஏறியிருக்க வேண்டும்.

பண்ணுருட்டியில் வண்டி நின்றது. லாட்ரினுக்கு எழுந்து போனான் அவசரம். அந்தப் போலீஸ்காரன் அவசரமாக ஓடி வந்து பெட்டிக்குள் எட்டிப் பார்த்தான். அங்கு மிஸ்டர் அவசரம் இல்லாததைக் கண்டு தயங்கிய அவன், பாதித் தூக்கத்திலிருந்த தங்கக் காப்புக்காரரைச் சீண்டி, ''அந்தச் சீட்டில் இருந்த ஆசாமி எங்கே?'' என்று தணிந்த குரலில் கேட்டான். உள்ளடங்கிய பயத்துடன் 'லாட்ரினை'ச் சுட்டிக் காட்டினார் இன்னொரு பிரயாணி. ''ஓகோ'' என்று தலையசைத்தபடி நடந்தான் போலீஸ்காரன்.

சற்று நேரங் கழித்து, ''என்னங்க இது! அந்தப் பிள்ளையாண்டானை இந்தப் போலீஸ்காரன் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வந்து பார்த்து விட்டுப் போகிறானே?'' என்று இரகசியக் குரலில் கேட்டார் தங்கக் காப்புக்காரர்.

''நானும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அந்த மைனர் ஒரு கேடியாய் இருக்கலாமோ? அல்லது குற்றம் செய்து விட்டுப் போலீஸிடமிருந்து தப்பிச் செல்கிறவனாயிருக்கலாம். அல்லது போலீஸ் பாதுகாப்பில் அழைத்துப் போகிறவனாகவும் இருக்கலாம். இதை யெல்லாம் மறைக்கத் தான் அவன் நல்லவன் போல் இங்கே நடித்துக் கொண்டிருக்கிறான். அல்லது ஏதோ ஒரு பெரிய சதி செய்யத் திட்டம் போட்டுக் கொண்டு அதற்கான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறானோ என்னவோ ? எனக்கென்னவோ அவனைப் பார்த்தால் யோக்கியனாகப் படவில்லை'' என்று கிசுகிசுத்தார் இன்னொரு பிரயாணி.

''பெரிய இடத்துப் பிள்ளை போல் இருக்கிறானே....?''

''போக்கிரிகள், பார்வைக்கு அப்படித்தான் இருப்பார்கள்!''

''வாஸ்தவம், வாஸ்தவம்! எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ, யார் கண்டது?''

லாட்ரின் கதவு திறக்கப்படவே சட்டென்று பேச்சை நிறுத்தி விட்டார் தங்கக் காப்புக்காரர்.

சுற்றுப் பார்வையிட்டு நிதானமாக வந்த மிஸ்டர் அவசரம், அங்கு நீண்ட நேரமாக நின்று கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்து, ''ஏனம்மா, நீ ஏன் இங்கே கால் கடுக்க நின்று கொண்டிருக்கிறாய்? அதோ, அந்தச் சீட்டில் இடம் இருக்கிறதே !'' என்று சொல்லித் தன்னுடைய ஆசனத்தைச் சுட்டிக் காட்டினான். தயங்கி நின்ற அவள் மெள்ள நடந்து போய் அவன் காட்டிய ஆசனத்தில் ஒடுங்கி உட்கார்ந்து கொண்டாள். மிஸ்டர் அவசரமும் அதே இருக்கையில் அமர்ந்தான். பிறகு இருக்கையின் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

விழுப்புரத்தில் வண்டி நின்றது.

மிஸ்டர் அவசரம் தன் இருப்பிடத்திலிருந்து எழுந்து சென்று கதவைத் திறந்து வைத்துக் கொண்டு அங்கேயே நின்று கொண்டிருந்தான். வண்டி பல ஸ்டேஷன்களைக் கடந்து போய்த் திண்டிவனத்தில் நின்றது.

தங்கக் காப்புக்காரர் பரபரப்புடன் எழுந்து மூட்டை முடிச்சுகளை வாரிக் கொண்டு கீழே இறங்கினார். இறங்கின அவசரத்தில் அவருக்குக் கால் இடறி விட்டது. தாழ்வான பிளாட்பாரத்தில் போய்த் தடாரென விழுந்து விட்டார். பாவம்! நெற்றியில் பலத்த அடிபட்டு இரத்தம் பெருக்கெடுத்தது. கம்பார்ட்மென்டிலிருந்த சிலரும், ரயில்வே சிப்பந்திகள் சிலருமாக ஓடி வந்து அவரைத் தூக்கி விட்டு ஆசுவாசப்படுத்தினர். இந்தச் சிறிய விபத்துச் சம்பவத்தினால் ஒரு நிமிடம் தாமதமாகப் புறப்பட்டது வண்டி.

இவ்வளவையும் தன் கண்ணெதிரே மிக மிக அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம், எவ்வித அநுதாபமோ பரபரப்போ காட்டாமல், கதவின் மேல் ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டு அமைதியாக நின்றிருந்தான்.

அவனுடைய இந்த இரக்கமற்ற போக்கைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பிரயாணி, ''என்ன சார்! உங்களை விரோதிபோல் பாவித்துக் கடைசி வரை எதிர்ப்புக் காட்டிய அந்தக் கல்லூரி மாணவனுக்கு ஓடி ஓடி உதவி செய்தீர்கள்; ஆனால், உங்கள் அவசரத்துக்குக் கதவைத் திறந்து உள்ளே விட்ட இந்தப் பெரியவர் கீழே விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டதை வேடிக்கை பார்த்துக் கொண்டு பேசாமலிருந்து விட்டீர்களே! இதுவா மனிதத் தன்மை?'' என்றார் உள்ளடங்கிய ஆத்திரத்துடன்.

சாவதானமாகத் திரும்பிய மிஸ்டர் அவசரம், அவரை நிதானமாக ஏறிட்டுப் பார்த்து, ''நல்ல கேள்வி கேட்டீர்கள்! அந்த ஆசாமி கீழே விழுந்ததை நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன் என்பதென்னவோ உண்மைதான். ஆனால், அதற்கொரு காரணம் உண்டு: இன்றிரவு மாயவரம்ஸ்டேஷ

னில் வண்டி புறப்பட்ட பின் நான் ஓடிவந்து ஏறிய போது இந்தப் பெட்டியிலிருந்த பலரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தார்கள். அப்படி ஏறியது தவறுதான் என்பதை நானுமுணர்ந்தேன். பிறகு உள்ளே அனுமதிக்கப் பட்டேன். ஆயினும் என்னுடைய அடுத்த தவற்றை, அக்கல்லூரி மாணவன் மட்டும் கடைசி வரை மன்னிக்க மறுத்தான். நான் செய்த தவற்றை எனக்குச் சுட்டிக் காட்ட இறுதிவரை என்னை எதிரியாகவே பாவித்தான். இது ஒரு சிறந்த குணமல்லவா? இதன் பொருட்டுத்தான் நான் அவனுக்கு வலியச் சென்று உதவி செய்தேன். அவனுடைய உதாசீனத்துக்கெல்லாம் பணிந்து போனேன். அதனால், மற்றவர்களே, நான் கொடுத்த மாம்பழ அன்பளிப்பில் மயங்கி, எனது. தவற்றை ஒப்புக் கொள்வது போல் என்னை மன்னித்து விட்டார்கள். இது வெறுக்கத் தக்க மனப்பான்மை. தவறு செய்பவர்கள் திருந்த உதவாத குணம். இப்படிப்பட்டவர்களில் தங்கக் காப்புக்காரரும் ஒருவராயிருந்தார். அதனால்தான் அவர் தடுக்கி விழுந்ததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்!'' என்று செருக்குடன் சொல்லிக் கொண்டே தன் இருப்பிடத்தில் போய் அமர்ந்தான்.

ஆத்திரத்தோடு கேள்வி கேட்டவரின் வாய் அடைத்து விட்டது.

நாட்குறிப்புப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம், யாரோ செருமியழும் குரல் கேட்டுத் திடுக்குற்று நிமிர்ந்தான். அவனருகில் உட்கார்ந்திருந்த அந்த இளம் பெண்தான் சன்னல் பலகையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் விழித்த அவன் உடம்பை வளைத்து அவளை உற்றுப் பார்த்தபடி, ''ஏன்? எதுக்கு நீ அழறே?'' என்று பரபரப்பான குரலில் கேட்டான்.

துடித்துப் பதறி நிமிர்ந்த அவள் அவசரமாகத் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு உடல் குன்றத் தலைகுனிந்தாள்.

''சொல்லம்மா! ஏன் அழுகிறே?''

அவள் வாயைத் திறக்கவே இல்லை. சற்று நேரம் அமைதியாக இருந்த அவன் இதமான குரலில், ''நீ எதுவரைக்கும் போறே?'' என்று கேட்டான்.

''பட்டணம் வரை போயாக வேண்டும்..'' என்று நடுங்கும் குரலில் இழுத்தாள் அவள்.

''போக வேண்டுமா? அல்லது போயாக வேண்டுமா?'' அவள் மீண்டும் மௌனம் சாதித்தாள்.

''ம்...எந்த ஊரிலிருந்து வருகிறே?''

''கடலூரிலிருந்து.''

''அதுதான் சொந்த ஊரா?''

''இல்லே.''

''பின்னே?''

''பாண்டிச்சேரியிலிருந்து நான் கடலூருக்கு வந்தேன்.''

''அப்படியானால் பாண்டிதான் உனக்குச் சொந்த ஊரா?''

''இல்லே; பட்டணத்திலிருந்து அங்கு போனேன்.''

''தனியாகவா?''

''இல்லே; என் பள்ளிச் சிநேகிதன் அழைத்துக் கொண்டு போனான்.''

''அப்புறம்?''

''என்னை அங்கு ஒரு ஹோட்டலிலே தனியே விட்டு விட்டு அவன் எங்கோ போய் விட்டான்!

''ஓகோகோ!....''என்று பெரிதாக நகைத்தான் மிஸ்டர் அவசரம். ''அப்படியானால் சரி; நீ நன்றாக அழ வேண்டியவள்தான்!''

அவள் விம்மிப் பொருமினாள். அவன் அலட்சியமாக வேறு பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டான்.

அச்சரப் பாக்கத்தில் வண்டி நின்றது. மிஸ்டர் அவசரம், ஏனோ அவசரமாகக் கீழே இறங்கி ஓடினான். சற்றைக்கெல்லாம் அதே வேகத்தில் திரும்பி வந்து வண்டியில் ஏறிக் கொண்டான். ரயில் புறப்பட்டது.

அவன் தன் இசைக் கருவியை எடுத்துச் சோக மயமான பாட்டொன்றை வாசிக்க ஆரம்பித்தான். அந்தப் பாட்டைக் கேட்கக் கேட்க அப்பெண்ணின் விம்மலும்பொருமலும் மிகுதியாயின. உறங்கிக் கொண்டிருந்த பிரயாணிகளெல்லாம் விழித்துக் கொண்டனர். விடியற்சாமத்து குளிர்க் காற்று சில்லென்று வீசியது. தேய் பிறைச் சந்திரனின் மங்கலான ஒளியில் பச்சைப் பயிர்களெல்லாம் சாம்பல் பூத்தாற் போல் வெளிறிக் காட்சியளித்தன.

வண்டி, ஒத்திவாக்கம் ஸ்டேஷனில் ஓரிரு நிமிடங்கள் நின்றுவிட்டுக் கிளம்பியது. மிஸ்டர் அவசரம் இன்னும் தன் இசை மோனத்திலேயே ஆழ்ந்திருந்தான்.

''டிக்கெட், பிளீஸ்!''

இசை வெள்ளம் வடிந்தது. அவன் மெள்ளத் தலை நிமிர்ந்தான். எதிரில் டிக்கெட் பரிசோதகர் நின்று கொண்டிருந்தார். தன் ஜேபியிலிருந்து மணிபர்சை எடுத்துக் கொண்டு பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தினான். அந்தப் பெண்ணின் உடல் கிடுகிடுவென நடுங்கிக் கொண்டிருந்தது. முகம் சவமாக வெளுத்துக் கண்ணிமைகள் படபடத்தன.

''டிக்கெட், பிளீஸ்!''

மிஸ்டர் அவசரம் வெகு அலட்சியமாக இரண்டு டிக்கெட்டுகளை எடுத்துப் பரிசோதகரிடம் நீட்டினான். அவற்றை அவர் விளக்கு வெளிச்சத்தில் திருப்பிப் பார்த்தார். மாயவரத்திலிருந்து சென்னை எழும்பூருக்கு ஒரு டிக்கெட்டும், அச்சரப்பாக்கத்திலிருந்து சென்னை எழும்பூருக்கு ஒரு டிக்கெட்டும் இருந்தன.

''என்ன சார் இது? இரண்டு டிக்கெட்டுகளும் வெவ்வேறு ஸ்டேஷனிலிருந்து எடுக்கப் பெற்றிருக்கின்றனவே?'' என்று கேட்டார் பரிசோதகர்.


''ஏன் அப்படி எடுக்கப்படாதோ?'' என்று முறைப்பாக வினவினான் மிஸ்டர் அவசரம்.

''நோ....நோ! நான் கேட்பது என்னவென்றால் ..............''

''நானும் என் மனைவியும் வெவ்வேறு ஊர்களில் வண்டியேறி இருப்பது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது இல்லையா என்ன செய்வது? எங்களுக்கு அப்படியொரு நிலைமை ஏற்பட்டு விட்டது!''

''மன்னியுங்கள்!'' என்றவாறு டிக்கெட்டுகளைக் கொடுத்து விட்டு அடுத்த வரிசைக்கு நகர்ந்தார் அவர்.

மிஸ்டர் அவசரம் மெல்லத் திரும்பிப் பார்த்தான். வியப்பால் வெலவெலத்துப் போன அந்தப் பெண், அவனையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.



# ஜெடார் 3011 (30/33 எச் பி)

**ஜெடார் 3011 டிராக்டரின் முக்கிய அம்சங்கள் :**

- சக்தி மிக்க, 3 ஸிலிண்டருள்ள, எளிதில் இயங்கும் என்ஜின்.
- டிரான்ஸ்மிஷன் மற்றும் பி.டி.ஒ ஷாப்டுகளை இயக்கும் இரட்டை க்ளட்ச.
- முன்செல்லும் வேகங்கள் 10, பின்செல்லும் வேகங்கள் 2
- ஹைட்ராலிக் மற்றும் மெகானிகல் ப்ரேக்குகள்.
- 3-முனைகளில் பிணைப்புள்ள ஹைட்ராலிக் பவர் லிப்ட்.
- டயர்களை உப்பச் செய்யும் ஏர் கம்ப்ரெஸர்.
- பெல்ட் புல்லி-ட்ரைவும், பி.டி.ஒ. ஷாப்டும்.
- இணைந்துள்ள சுழற்சியைக் காட்டும் கருவியும், ஹவர் மீட்டரும்

விலை-பம்பாயில் கிடங்கு வாசலில்
**ரூ. 10,575/-**
(வரிகள், எக்ஸைஸ், சுங்கத்தீர்வைகள் தனி)

விவரங்களுக்கு எழுதுக :

**ஜே. என். மார்ஷல் & கோ.,**
5, வாலஸ் ஸ்ட்ரீட், பம்பாய்-1
போன் : 264506 தந்தி : 'எலக்ட்ரான்'

ஆபீஸ்கள் :
புது டில்லி-கல்கத்தா-சென்னை
ஹைதராபாத்-பூனா-அஹமதாபாத்
சட்லம்-கோடா-ஜெய்பூர்

கிளை ஆபீஸ் :
12. தம்பு செட்டி தெரு
சென்னை-1

maa, JNM, 1073-TM

பொழுது புலரும் வேளையில் வண்டி செங்கல்பட்டை அடைந்தது. புளிமூட்டைகள் போல் அடைந்து கிடந்த வடநாட்டு யாத்திரீகர் கூட்டம் ஏக இரைச்சல் போட்டுக் கொண்டு கீழே சரிந்தது. அத்துடன் ஒரு பெரிய மனிதரும் இறங்கினார். அவருடைய ஏழெட்டுப் பெட்டிகளும், ஐந்தாறு கூடைகளும், மூன்று படுக்கைகளும் வண்டியிலேயே இருந்தன. அவற்றைக் கீழே இறக்கப் போர்ட்டர்கள் கிடைக்காமல் அவர் அல்லாடினார். வண்டி கிளம்ப இன்னும் சில விநாடிகளே இருந்தன.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த மிஸ்டர் அவசரம் சடாரென்று எழுந்து போய் அந்தச் சாமான்களை யெல்லாம் மள மளவென்று கீழே இறக்கிப் போட்டான்.

பெரியவரின் முகம் மலர்ந்தது. ''ரொம்பத் தாங்ஸ் மிஸ்டர்!'' என்று குழைந்தார் அவர்.

''தாங்ஸ் இருக்கட்டும் ஸார்! உங்கள் சாமான்களை இறக்கியதுக்குண்டான கூலியைக் கொடுங்கள்!'' என்று சிறிதும் கூச்சமில்லாமல் கையை நீட்டினான் மிஸ்டர் அவசரம்.

அவர் இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து மன நிறைவோடு கொடுத்தார். ''தாங்க்ஸ்'' என்று அதைப் பெற்றுக்கொண்டு தன் இடத்தில் வந்து அமர்ந்தான்.

அதே சமயம் அந்தப் போலீஸ்காரன் விரைந்து வந்து ஒரு தூண் அருகில் மறைந்து நின்று கொண்டு இந்தக் கம்பார்ட்மெண்டை எட்டிப் பார்த்தான். மிஸ்டர் அவசரமும் அவனைக் கவனித்தான். உடனே அவன் முகம் கருமையடைந்து சிறுத்தது. போலீஸ்காரன் அங்கிருந்து நழுவினான். வண்டி கிளம்பியது.

பிரயாணிகள் தமக்குள் இரகசியம் பேசிக் கொண்டனர். வண்டி வாயு வேகமாக விரைந்து கொண்டிருந்தது.

எங்கோ தன் பார்வையைச் செலுத்தியபடி உட்கார்ந்திருந்த மிஸ்டர் அவசரம், தன் வலக் கை விரலில் ஏதோ பனிக்கட்டி பட்டாற்போல் உணரவே, சட்டெனத் திரும்பினான். அப்போதுதான் அவனது கைவிரல் மீது வைத்திருந்த தனது கையை அந்தப் பெண் எடுத்துவிட்டு நாணம் தேங்கிய நன்றிக் குரலில், ''நீங்கள் செய்த பேருதவியை நான் என்றென்றும் மறக்க மாட்டேன்!'' என்றாள்.

நீரில் நனைந்திருந்த அவளது அழகிய நயனங்கள் வைர மீன்களென மின்னின.

அவன் அவளைக் குறும்பாக ஏறிட்டு நோக்கி, ''மிக்க மகிழ்ச்சி! அத்துடன் இன்று ஏற்பட்ட இந்த அநுபவத்தையும் மறக்காமல் இருப்பது நல்லது'' என்றான்.

பதிலேதும் சொல்லாமல் சற்று நேரம் தலை குனிந்திருந்த அவள் மிகத் தணிந்த குரலில், ''நீங்கள் ஒரு நாளைக்கு என் வீட்டுக்கு வர வேண்டும். விலாசம் தருகிறேன்'' என்று குழைந்தாள்.

''நான் ஏன் வர வேண்டும்?''

''என் அம்மாவிடம் உங்களை அறிமுகப் படுத்தப் போகிறேன்.''

''அப்புறம்?''

''சற்றுமுன் நீங்கள் அந்த டிக்கெட் பரிசோதகரிடம் சொன்னதையும் அவளிடம் சொல்லப் போகிறேன்!''

''அதன் பின்?''

''பிறகு? அதுபற்றி உங்களிடமே கேட்கப் போகிறேன்!''

அவன் இதைக் கேட்டுக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். சிரித்துக் கொண்டே உறுதியான குரலில் சொன்னான்: ''இங்கே பாரம்மா! நீ என்ன எண்ணத்தோடு இப்படிச் சொல்கிறாய் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. உன்னைக் கடத்திச் சென்ற கல்லூரிக் காதலன் நான்தான் என்று என்னைக் கொண்டு போய் உன் அன்னையின் முன் நிறுத்தி, உன்னுடைய வாழ்க்கைக்கு ஒரு பிடிமானம் தேடிக் கொள்ள நினைக்கிறாய். அப்படித்தானே? உன்னுடைய இக்கட்டான நிலையைச் சமாளிப்பதற்காக அந்த டிக்கெட் பரிசோதகரிடம் உன்னை என் மனைவி என்று சொன்னதன் பேரில் உனக்கு இத்தகைய துணிவு வந்திருக்கிறது! இது உண்மையானால் நீ பாராட்டுக்குரியவளே! ஆனால் நான் அந்தளவு இளிச்சவாயன் அல்ல என்பதை நீ அறிந்து கொள்ளவில்லையே? அது பரிதாபத்துக்குரியது! மேலும், இதைக் கொண்டு உனக்கு இன்னமும் நல்ல புத்தி வரவில்லை என்று தெரிகிறது! இதே போலத்தான் இதே வண்டியில் இன்னொரு பெண்ணும் என்னுடைய 'மௌத்—ஆர்கன்' வாசிப்பைக் கேட்டு மயங்கி என்னைக் காதலிப்பதாக ஒரு கடிதமே எழுதிக் கொடுத்து விட்டாள். ரயில் பிரயாணத்தின்போது மனிதர்களுக்குக் காதல் உணர்ச்சி மிகுதியாய் இருக்கும் போலும்! அவளுக்கு நான் பதில் கடிதமாக எழுதியதையே உனக்கும் சொல்கிறேன், கேள். நான் அக்குத் தொக்கு இல்லாத தனி மனிதன். எனக்கென்று ஒரு தனி வாழ்க்கையோ தனி லட்சியங்களோ எதுவும் கிடையாது. சித்தம் போக்கு சிவன் போக்கு என்பார்களே அது போன்ற போக்குடையவன் நான். இன்றைக்குச் சென்னையில் இருப்பேன், நாளைக்குத் தஞ்சையில் இருப்பேன், மறு நாள் மதுரையில் இருப்பேன். இதற்குத் தோதான ஒரு தொழிலையும் தேடிக் கொண்டிருக்கிறேன். என்னைப் பற்றிச் சொல்லக்கூடிய விஷயம் இவ்வளவுதான். நீ நினைப்பது போல நான் நடக்கத் தலைப்பட்டால் வாரத்துக்கு நாலு தடவை கல்யாணம் செய்து கொள்ள வேண்டி நேரிடும்! வழி நெடுக என் காதலிகள் 'க்யூ' வரிசையில் நிற்பார்கள்! இன்றைய இந்த ரயில் பிரயாணத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களெல்லாம் மிக மிகப் பழகிப் போன அனுபவங்கள். இம்மாதிரி ரயில் பிரயாணத்தின் போது நான் காதலனாகவும், சகோதரனாகவும், தந்தையாகவும், போக்கிரியாகவும், போர்ட்டராகவும், குடிகாரனாகவும், பரோபகாரியாகவும் வேடம் போட்டு நடிப்பதிலே எனக்கு எப்போதுமே ஒரு தனி உற்சாகம். ஆனால் இவற்றில் ஒன்றுக்குக்கூட லாயக்கில்லாத வெறும் மனிதன். இதனால்தான் எனது வாழ்நாளின் பெரும் பகுதியை, ரயில் வண்டி என்னும் இச்சிறிய உலகத்தில் இந்த விதமாகவே கழித்து வருகிறேன். இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் நீ ஏதேதோ எண்ணத் துணிந்து விட்டாய். எளிதில் உருகிவிடும் வெண்ணெயைப் போலப் பெண்கள் இருக்கக் கூடாதம்மா! அப்படி இருந்து விட்டால் இன்றைய இந்தக் கண் மூடி உலகத்தில் அவர்களால் கண்ணிய

மாக வாழ முடியாது அம்மா! இதற்கு உன்னையே ஓர் உதாரணமாக எடுத்துக் கொண்டு பார்! இன்று முதலாவது உன் வாழ்க்கையை ஒரு நல்ல பாதையில் திருப்பிக் கொள்வாய் என்ற நம்பிக்கையில் தான் இவ்வளவும் சொல்கிறேனே தவிர, உனக்கு நான் புத்தி சொல்லி என்னைப் பெரிய மனிதனுக்கிக் கொள்வதாக நினைத்துக் கொள்ளாதே!''

குரல் கம்மிக் கரைய இவ்வாறு கூறி முடித்த மிஸ்டர் அவசரம், தன்னிடமிருந்த இரண்டு டிக்கெட்டுகளில் ஒன்றை அந்தப் பெண்ணின் மடியில் போட்டு விட்டு அமைதியாக எழுந்து போய்க் காலியாகக் கிடந்த ஓர் ஆசனத்தில் காலை நீட்டிப் படுத்தான். அடுத்த சில நிமிடங்களில் தூங்கியும் விட்டான்.

எழும்பூரில் வண்டி நின்றது.

''சார்! சார்!'' என்ற குரல் கேட்டு அரக்கப் பரக்க விழித்தான் மிஸ்டர் அவசரம். அவன் எதிரில் ஆயுதம் தாங்கிய போலீஸ்காரன் புன்முறுவல் பூத்தவனுக நின்றுகொண்டிருந்தான்.

சோம்பல் முறித்தவாறு எழுந்து நின்ற மிஸ்டர் அவசரம் சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தான். அந்த அழகிய இளம் பெண் அமர்ந்திருந்த ஆசனம் வெறுமனே கிடந்தது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே கீழே இறங்கிய அவன், தன் கான்வாஸ் பையைத் திறந்து அதில் பத்திரமாக வைத்திருந்த நெய் ஜாடியொன்றை எடுத்து அந்தப் போலீஸ்காரனிடம் கொடுத்தான்.

''உங்களுக்கு ரொம்பவும் சிரமம் கொடுத்து விட்டேன். நான் இந்த வண்டியிலே டியூட்டி மேலே வர வேண்டியிருந்ததால் இதைக் கையோடு வைத்திருக்க முடியவில்லை. அதனுல்தான் மாயவரம் ஸ்டேஷனில் உங்களிடம் கொடுத்து வைத்தேன். நீங்களும் பத்திரமாகக் கொண்டு வந்து விட்டீர்கள். உங்களுக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று குழைந்த குரலில் கூறிக் கொண்டே நெய் ஜாடியைப் பெற்றுக் கொண்டான் போலீஸ்காரன்.

''எல்லாம் சரிதான். இதற்காக நீங்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஓடி வந்து என்னைக் கண்காணித்து விட்டுச் சென்றிருக்க வேண்டியதில்லை. அப்படிச் செய்ததால், பல பேர்கள் என்னைப் பற்றிப் பல விதமாக எண்ணும்படியாகி விட்டது. பரவாயில்லை!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னுன் மிஸ்டர் அவசரம்.

''இந்தாருங்கள்! அச்சரப்பாக்கத்தில் ஒரு டிக்கெட் எடுப்பதற்காக உங்களிடம் நான் கை மாற்றுக வாங்கிய பணம்!'' என்றவாறு இரண்டு ரூபாய் நோட்டொன்றை எடுத்துப் போலீஸ்காரனிடம் கொடுத்தான். அது செங்கல்பட்டு ஸ்டேஷனில் மூட்டை இறக்கிப் போட்டுக் கூலியாகப் பெற்ற பணம்.

போலீஸ்காரன் ஒரு சல்யூட் அடித்து அவனிடமிருந்து விடைபெற்றுச் சென்றுன்.

மிஸ்டர் அவசரம் தன் பெட்டி படுக்கையுடன் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து, சென்னை நகரின் அந்த விசாலமான நெடுஞ்சாலையில் அவசர யந்திரங்களாக இறங்கிச் செல்லும் பல்லாயிரம் மனிதத் துளிகளோடு தானும் ஒரு துளியாக இறங்கிக் கலந்து மறைந்தான்.

# புதுவெள்ளம்

## அகிலன்

### அத்தியாயம் முப்பத்தைந்து

## இரு கலைஞர்கள்

குணச்சித்திர நடிகனும் நகைச்சுவைச் செல்வனுமான குருசாமி இடையில் பலமுறை முருகையனைச் சந்தித்து விட்டான். முருகையனுடன் சிறிது நேரம் பேசிப் பொழுது போக்குவதில் அவனுக்குப் பெரிதும் ஆறுதல் கிடைத்தது. சமயங்களில் பொருள் உதவியும் கிடைத்தது. ஆனால் குருசாமி மிகவும் சிரமப்பட்ட வேளைகளில் மட்டும் முருகையனின் உதவியை ஏற்றுக் கொண்டானே தவிர, மற்ற போதெல்லாம் அன்புக்காகவே அவனிடம் வந்தான்.

சென்னையிலிருந்த 'அமெச்சூர்' நாடகக் குழுக்களில் சிற்சில சமயங்களில் அவனுக்கு வேடங்கள் கிடைத்தன. எப்போதாவது திரைப்படங்களிலும் கூட்டத்தோடு கூட்டமாகத் தலை நீட்டி வந்தான். அவனும் அவனுடைய நாடக ஆசிரிய நண்பனான ரத்தினமும் முன் போல் அதே அறையில் தான் குடியிருந்து வந்தார்கள்.


நாடக ஆசிரியன் ரத்தினத்தின் பிழைப்பு ஏதோ ஒரு விபரீதமான முறையில் நடந்து கொண்டிருந்தது. தன்னுடைய வசதிகளையும் சிரமங்களையும் அவன் தாராளமாகக் குருசாமியுடன் பகிர்ந்து கொண்டான். எப்படியாவது வயிற்றுப்பாட்டுக்குக் காசு தேடி முதலில் உயிரையும் உடலையும் ஒட்ட வைத்துக் கொண்டால், பிறகு தானும் முன்னேறித் தன் நண்பனையும் முன்னுக்குக் கொண்டு வந்து விடலாம் என்பது ரத்தினத்தின் எண்ணம்.

ஒருமுறை தன்னுடைய நாடகம் ஒன்றை எடுத்துக் கொண்டு ஒரு திரைப்படக் கம்பெனிக்குச் சென்றான். கம்பெனியில் திரைக்கதை ஆசிரியரிடம் கைகாட்டி விட்டார்கள். அவரிடம் தன்னுடைய நாடகத்தைக் கொடுத்தான். பிறகு அவரை அடிக்கடி சென்று சந்தித்தான். அவரோ அவனுடைய அந்த நாடகம் திரைக்கு ஒத்து வராது என்று சொல்லி விட்டு, அவன் மீது அநுதாபம் கொண்டவர் போல் சிறிது பணம் கொடுத்து அனுப்பினார். மறுபடியும் தம்மை வந்து பார்க்கச் சொன்னார். பலமுறை அலைந்த பிறகு ரத்தினத்துக்கு அவரிடமே ஒரு வேலையும் கொடுத்தார். மாதம் நூறு ரூபாய்ச் சம்பளத்துக்காக அவர் சொல்லிய வேலைகளை உற்சாகமாகக் கவனித்தான் ரத்தினம். வேலை ஒருவகையில் அவனுக்குப் பிடித்த வேலைதான்; மற்றொரு வகையில் அது அவனுக்கு அருவருப்பைத் தந்தது.

முக்கியமாகத் தமிழ்நாட்டுக் கதாசிரியர்களின் நாவல்களையும் சிறுகதைகளையும் படிக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு. அது வரையில் அவனுக்கு அது பிடித்திருந்தது. அதற்கடுத்த வேலைதான்.....!

அவனை வேலைக்கு வைத்துக் கொண்ட திரை உலகத் தில்லையப்பன் அவனைத் தமது ரகசிய அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே நூற்றுக்கணக்கான சிறுகதைத் தொகுப்புக்களும் நாவல்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நாடக ஆசிரியன் பிரமித்தான்; எத்தனை ஆர்வம் இவருக்குப் புதுமைத் தமிழ் இலக்கியங்களைப் படிப்பதில்!

தில்லையப்பன் கூறினார்: ''ரத்தினம்! பத்திரிகையிலேயும் புஸ்தகத்திலேயும் எழுதுகிற பயல்களையெல்லாம் இங்கே நான் காசு கொடுத்து விலைக்கு வாங்கி அடைச்சு வச்சிருக்கேன். இவன்களோட கதைகளிலே பத்துக்கு ஒண்ணு நமக்குத் தேறும். இதுகளைப் படிச்சுப் பார்த்து,



பொறுக்கி எடுத்து, உயிரைப் பிழிஞ்சு என்கிட்டே நீங்க கொடுக்கணும்.''

''உயிரைப் பிழிஞ்சு கொடுக்கிறதா?''

''ஆமாம்! உயிரும் எலும்புக் கூடுந் தான் நமக்கு முக்கியம். அது ரெண்டும் நமக்குக் கிடைச்சிட்டாப் போதும். மற்ற வேலைகளை நான் பார்த்துக்கிறேன். இல்லேன்னு அதுக்குன்னு இருக்கிற ஆட் களை வச்சுக் கவனிக்கச் சொல்றேன்.''

'உயிராவது, எலும்புக் கூடாவது!' நாடக ஆசிரியன் ரத்தினத்துக்கு ஒன்றும்

விளங்கவில்லை. 'இதேது கசாப்புக்கடை விவகாரமா யிருக்கிறதே!' என்று நினைத்தான்.

''என்ன முழிக்கிறீங்க? ஒரு நாவலை எடுத்துக்கிட்டா அது என்ன நோக்கத்துக்காக எழுதப்பட்டதுங்கிறதுதான் 'உயிர்'னு சொல்றது. அது வெளியிலே தெரியாமல் கதைக்குள்ளே மறைஞ்சு கிடக்கும். நமக்கெல்லாம் உயிர் இருக்கே, அது கண்ணுக்குத் தெரியுதா? அதுபோலத்தான் கதையோட 'திம்' இருக்கே, அதுவும் தெரியாது. அதை நாம் கண்டுபிடிக்கணும்!''



''அப்புறம்?''

''அப்புறம் எலும்புக்கூட்டைப் பிச்சு எடுக்கணும். ஆயிரம் பக்கத்திலே ஒரு நாவல் இருந்தா அதைச் சுருக்கிப் பத்து வரியிலே எலும்பெடுக்கலாம். 'பிளாட்'டுன்னு சொல்ற இந்த எலும்பை வச்சுக்கிட்டுத்தான் கதை எழுதுறவன் பக்கம் பக்கமாகக் கதை எழுதுகிறான். அதை வச்சுக்கிட்டுத்தான் நம்ப லட்சம் லட்சமாகக் கொட்டிப் படம் எடுக்கிறோம்.''

''ஓஹோ புரிஞ்சுது'' என்றான் ரத்தினம்.

''ஒரு சிறுகதையோட புதுப் பிளாட் கிடைச்சா எனக்குப் போதுமே! ஒரு வரியிலே அவன் எழுதி யிருக்கிறதை வச்சுக்கிட்டு, நாலு 'சீன்' தயார் பண்ணி, நாற்பது பக்கம் வசனம் எழுதிப் புடுவேனே? — அந்த ஆசிரியனே வந்து பார்த்தாலும் அவனுக்கே ஒண்ணுந் தெரியாது. கூட்டத்தோடே சேர்ந்து அவனையும் கை தட்ட வைப்பேன்!''

''நீங்க ரொம்பத் திறமைசாலிங்க!'' என்றான் ரத்தினம்.

''கவலைப் படாதீங்க. கொஞ்ச நாள் இருந்து என்னிடம் வேலை செய்யுங்க. உங்களோட திறமையைத் தெரிஞ்சுக்கிட்டுப் பிறகு உங்களையும் நம்பளைப் போலத் தயார் செய்து விடுகிறேன்.''

நாடக ஆசிரியன் ரத்தினசாமிக்கு அந்த வேலை ஈனத்தனமான வேலை என்பது நன்றாகத் தெரிந்திருந்தது. என்றாலும் வேறு வழியில்லை. வயிற்றுக்குச் சோறு கிடைத்தது; புத்தகங்களைப் படிக்க முடிந்தது. தன்னுடைய தோழனான குருசாமியின் நிலையையும் நினைத்துப் பார்த்து ஒப்புக் கொண்டான்.

முதல் முதலாக ஒரு புத்தகத்தைப் புரட்டியபோது அதில் இந்த வரிகளை ஒரு பேராசிரியர் எழுதியிருந்தார்.—

''சொந்தமாகக் கற்பனை செய்து எழுதும் ஆற்றல் எல்லோருக்கும் எளிதில் வாய்த்து விடாது. மக்களுக்கு நல்ல கதைகள் சொல்லும் பிறவி எழுத்தாளர்கள் சிலர் இப்போதும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் கோடிக்கணக்கில் அடர்ந்து வளர்ந்த காட்டு மரங்களிடையே தோன்றும் சில நூறு சந்தண மரங்களைப் போன்றவர்கள். சந்தண மரம் எப்படித் தன்னை அழித்துக் கொண்டு மற்றவர்களுக்கு மணம் தருகிறதோ அதே போல் எழுத்தாளன் தன் சொந்த வாழ்வைப் பற்றிக் கவலைப்படாமல், மனிதாபிமானம் வாழ்வதற்காக எழுதுகிறான். பழங்காலத்தில் அவர்களை மன்னர்கள் போற்றி வளர்த்தார்கள். இப்போது மக்கள்தாம் காப்பாற்ற வேண்டும். சந்தண மரங்களைப் பாதுகாக்காமல் விட்டுவிட்டால் அது நாட்டுக்குத்தான் நஷ்டமாகும்.''

ரத்தினம் அந்த வரிகளையே திரும்பத் திரும்பப் படித்தான். எழுத்தாளன் எவ்வளவு பரிதாபமான நிலையில் பாதுகாப்பின்றி வாழ்கிறான் என்பது அப்போது தான் தெரிந்தது. அவர்கள் வாழ வேண்டுமென்று பேராசிரியர் ஆசைப்படுகிறார். திரை உலகத் தில்லையப்பனோ அவர்களுடைய உயிரைக் கசக்கிப்பிழிந்து எலும்பை எண்ணி எடுக்கும் வேலையை அவனுக்குக் கொடுத்திருக்கிறார்!

சந்தண மரங்கள் தங்களையே தேய்த்து அழித்துக் கொண்டுதான் மணம் தருகின்றன. ஆனால், அவை ஏற்கனவே படும் துன்பம் போதாதென்று, மணமாகிய உயிரை உறிஞ்சி விட்டு அவற்றை விறகு போல் நெருப்பில் போட்டுக் கொளுத்துவதென்றால்...?

கண்களில் கண்ணீர் வழிந்தது ரத்தினத்துக்கு. புத்தகத்தின் எழுத்துக்கள் கண்களுக்குள் தடுமாறின. தில்லையப்பன் கூறிய சொற்கள் மீண்டும் அவன் செவியில் நாராசம் போல் ஒலித்தன. ஒரு வரியில் வருகிற கதைக் கருத்தை வைத்துக் கொண்டு, நாலு சீன் தயார் செய்து, நாற்பது பக்கம் வசனம் எழுதி நாற்பதாயிரம் ரூபாய் வாங்கக் கூடிய மிகத் திறமைசாலி அவர்!

ஆனால் சொந்தப் பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் மூலக்கதை ஆசிரியர்கள்? சொந்தமாகக் கதைகளையும் நாடகங்களையும் கற்பனை செய்து எழுதுகிறவர்கள்?... 'நாளைக்கு, நாடகம் எழுதுகிற எனக்கும் இதே கதிதானா?'.....

பசி எடுத்தது ரத்தினத்துக்கு. வயிறு நிறைகிற வரையில் எதையாவது செய்து தொலைக்க வேண்டுமே! ஓரிரு மாதங்கள் வரையில் தில்லையிடம் காலத்தை ஓட்டலாம் என்று முடிவு செய்து கொண்டு, மனச்சாட்சியை அழிப்பது போல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வேலையில் இறங்கினான்.

கதைகளின் உயிரை உறிஞ்சும் வேலையும், அவற்றின் எலும்புகளை எண்ணியெடுக்கும் வேலையும் சுறுசுறுப்பாக நடக்கத் தொடங்கின.

மாதம் நூறு ரூபாய் கிடைத்ததால் அது ரத்தினத்துக்கு மட்டுமல்லாமல் குருசாமிக்கும் உதவியாக இருந்தது. சரியான சமயம் பார்த்துத் தில்லையிடம் சொல்லி எப்படியாவது குருசாமியைத் திரை உலகத்துக்குள்ளே தள்ளி விடப் பார்த்தான் ரத்தினம். அந்த நாளும் விரைவில் வந்து விடும் போலிருந்தது.

குணச்சித்திர நடிகனான குருசாமி அந்தக் கோட்டைக்குள்ளே புகுந்து விட்டால் மளமளவென்று முன்னேறி விடுவான் என்று ரத்தினம் நம்பினான்.

## அத்தியாயம் முப்பத்தாறு

# எதிர்பாராதது

சகுனாவின் நினைவிலிருந்து தன்னுடைய மனத்தை விடுவித்துக்கொள்ளக் குருசாமி எவ்வளவோ பாடுபட்டுவிட்டான். ஒரு புறம் தனது கலைத் திறனைச் சரிவர மக்களிடம் வெளிப்படுத்திக் கொள்ள முடியவில்லையே என்ற கவலை; மறுபுறம் அதனால் ஏற்பட்ட வயிற்றுப் போராட்டம்; இவ்வளவும் போதாது என்று சகுனாவின் நினைவு வேறு...

எதேச்சையாகச் சில சமயங்களில் சகுனா அவனுடைய கண்களுக்குத் தென்படுவது வழக்கம். அப்படித் தென்படுபவள் தனியாகத் தென்பட்டிருக்கக் கூடாதா? தனிமையில் சந்தித்திருந்தால் அவன் அவளிடம் மன்றாடியிருப்பான்; கெஞ்சியிருப்பான்; உள்ளத்தில் மூடி மறைத்து வைத்திருந்த அவனுடைய அன்பின் வேதனையை யெல்லாம் கொட்டித் தீர்த்திருப்பான்.

முன்பு அவளிடம் ஒன்றும் புரியாதது போல் நடந்து கொண்டதெல்லாம் வெறும் நடிப்பென்றும், அவள் பிரிந்து சென்றபிறகுதான் அவளுடைய அருமை தெரிகிறது என்றும் அவளிடம் கூறிக் கண்ணீர் வடிக்கத் துடித்தான் குருசாமி. 'உன் விருப்பப்படியே நாம் இருவரும்


# பின்டெக்ஸ்

## கைத்தறித் துணிகள்

அழகானவை; நீடித்து
உழைப்பவை;
சாயம் போகாதவை

**பின்னியால் விற்பனை செய்யப்படுபவை**


லுங்கிகள்



தலையணை உறைகள்



புடவைகள்



படுக்கை விரிப்புகள்




வேஷ்டிகள்



அலங்காரத் துணிகள்



டவல்கள்



ஷர்ட்டிங்குகள்



பின்டெக்ஸ் கைத்தறித் துணிகளை தயங்காமல் வாங்குங்கள். நெசவாளர்களுக்கு, அறுகாத கடினமான நூலை கொடுக்கவும், சிறந்த ஆலோசனை கூறவும், நல்ல டிசைன்களை தேர்ந்தெடுத்துக் கொடுப்பதிலும் பின்னி உதவுகிறது. பின்டெக்ஸ் துணிகள் நீண்ட நாள் உழைக்க வல்லதென்றும், சாயம் போகாததென்றும் பின்னி உறுதியளிக்கிறது.

இந்த அடையாளம் காணப்படும் அனுமதி பெற்ற பின்னி மில் கடைகளில் பின்டெக்ஸ் கைத்தறித் துணிகள் கிடைக்கின்றன

QUALITY FABRICS
BINNY & CO. (MADRAS) LTD

**பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்**
**மதராஸ்**

JWT/BY/BX-1396

## ஈறு உபாதை மற்றும் பற்சிதைவிலிருந்து குணமடைந்ததைப்பற்றிய

# வியக்கத்தக்க செய்திகள்

தாமாகவே விரும்பி எழுதப்பட்ட அத்தாட்சிக் கடிதங்கள்

## போர்ஹான்ஸ்

பற்பசையின் பிரத்தியேகமான மதிப்பை நிரூபிக்கின்றன.

"எனக்கு இப்போது 55 வயதாகிறது.

என்னுடைய எல்லாப் பற்களும் சீராகவே இருக்கின்றன ஆனால் 1943 ல் என்னுடைய இரண்டு பல்வரிசைகளிலும் உள்ள முன்புற, மற்றும் பக்கவாட்டிலுமுள்ள பற்கள் அசையத் தொடங்கின. அவை விழுந்துவிடுமென்றே நான் நினைத்தேன். 1943-ல் ஒரு நாள் போர்ஹான்ஸைப்பற்றிய குறிப்புகளைக் கண்டேன். நான் அதை உபயோகிக்கத் தொடங்கினேன். இப்போது போர்ஹான்ஸ் என் பற்களைக் காப்பதுடன் அவற்றை வலுவுள்ளதாகவும் செய்திருக்கிறதென்பதைக் கூற மகிழ்கிறேன்."

---

"நான் எப்பொழுதும் போர்ஹான்ஸையே குறிக்கிறேன்.

பற்கள் அல்லது ஈறுகளிலுள்ள கோளாறுகளுக்காக என்னிடம் சிகிச்சைபெறுபவர்களும் எப்பொழுதும் அதற்காக நன்றி கூறுகிறார்கள். சிகிச்சைபெறும் குழந்தைகளுக்கூட போர்ஹான்ஸ் உபயோகிக்கும்படி நான் சிபார்சு செய்கிறேன். மேலும் என்னுடைய ஆஸ்பத்திரிக்கு வருபவர்களில் பலர் அவர்களின் குழந்தைகளுக்குப் போர்ஹான்ஸையே உபயோகிக்கிறார்கள்."

---

"நான் மிகச் சிறந்த பலனை அடைந்திருக்கிறேன்.

போர்ஹான்ஸ் உபயோகிப்பதால், என் தகப்பனார்மூலம் நான், போர்ஹான்ஸ் ஈறுகளுக்குப் பலனளிக்கக் கூடியது என்று கேட்டிருக்கிறேன். ஆதலால், எனக்கு ஈறுகளில் உபாதை ஏற்பட்டவுடன், என் தந்தையின் புத்திமதிப்படி போர்ஹான்ஸ் உபயோகிக்கத் தொடங்கினேன். அன்றிலிருந்து இன்றுவரை போர்ஹான்ஸையே உபயோகித்து வருகிறேன்."

**போர்ஹான்ஸ்**

ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை.




GEOFFREY MANNERS & CO., LIMITED



# சித்திரை

முத்திரை மாற்றிடும் சித்திரை வந்தது
நித்திரை விட்டெழுவீர் — எங்கும்
புத்தொளி வீசியே நித்தமும் காத்திடும்
உத்தமனைத் தொழுவீர்!

காடு விளைந்துமே நாடு செழித்திட
வீடோ டுழைத்திடுவீர் — எந்த
நாடும் வியந்துமே நம்மைப் புகழ்ந்திட
மாடு, பயிர் வளர்ப்பீர்!

நஞ்சம் பஞ்சமென்றே அஞ்சும் நிலைகெட
நெஞ்ச உரம்பெறுவீர் — இந்தப்
பஞ்சம் வந்திடப் பண்டம் பதுக்கிய
வஞ்சகரை ஒறுப்பீர்!

ஆய கலைகள் அத்தனையும் நெஞ்சில்
தோயப் பயின்றிடுவீர் — அந்தத்
தூய கலையால் துன்பம் களைந்திடும்
தொண்டினை மேற்கொளுவீர்!

பத்தரை மாற்றிடும் பைம்பொன் மேனியர்
சித்தம் மகிழ்ந்திடவே — எங்கும்
பத்திரிகை வைத்தே சித்திரைத் திங்களில்
முத்த மணம் புரிவீர்!

இன்னல் களைந்து இன்பங் கண்டிட
அன்பால் ஒன்றுவீர் — எல்லா
நன்மையும் இவ்வாண்டில் நம்மை யணுகிட
நல்லவரைப் பணிவீர்!

— கவி. பொன். பாநு



கல்யாணம் செய்து கொள்வோம்; கல்யாணம் செய்து கொண்டு இருவரும் வேலையில்லாமல் திண்டாடுவோம்; ஒருவருக்காக ஒருவர் துன்பப்படுவதில் உள்ள ஆறுதலாவது நமக்குக் கிடைக்கும் அல்லவா? உன் கண்ணீரை நான் துடைக்கலாம்; என் கண்ணீரை நீ துடைப்பாய். குடும்ப வாழ்வு தரும் இந்த ஒரு சுகத்துக்காகவாவது நான் உன்னை இப்போதே மணந்து கொள்ளுகிறேன்' என்று அவளிடம் முறையிட விரும்பினான் குருசாமி.

ஆனால் கருணைதான் தனிமையில் வருவதில்லையே! எப்போது வந்தாலும் ஓர் இளைஞனுடன் கூடத்தான் வந்து கொண்டிருந்தாள். நவநாகரிகமாக உடை உடுத்தியிருந்த அந்த இளைஞன் பார்ப்பதற்கும் கவர்ச்சிகரமாக இருந்தான். பெண்மையின் சாயல் கலந்த ஆணழகன் அவன். ஓரளவுக்குப் படித்தவன் என்பதும் அவன் தோற்றத்திலிருந்து தெரிந்தது.

கடற்கரையில் ஒரு முறை அந்த இளைஞனும் அவளும் சிரித்துப் பேசியபடியே நடந்து வந்து கொண்டிருந்தபோது, குருசாமி திடீரென்று எதிர்ப்பட்டுவிட்டான். அந்தக் கவர்ச்சியைக் கண்டவுடன் அவனது உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையில் மின்சாரம் பாய்வது போலிருந்தது. கருணையோ அதற்கு மாறாக எவ்வித அதிர்ச்சியும் அடையவில்லை. கோபத்தோடு ஒருகணம் வெறித்து நோக்கிவிட்டுச் சட்டென்று வேறுபுறம் திரும்பிக் கொண்டாள்.

அடுத்த விநாடி அவர்கள் இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். அவர்களுடைய குதூகலச் சிரிப்பொலி குருசாமியின் செவிகளில் நாராசம் போல் விழுந்தது.

சில மாதங்களுக்குமுன் அப்படியெல்லாம் கண்ணீர் விட்டுக் கதறித் தவித்தவளா அதற்குள் இவ்வளவுதூரம் மாறிப் போனாள்? அவன் பார்த்த பார்வையில், 'நீ எங்கே எதிரில் வருகிறாய்? நீ இல்லாவிட்டால் என்னால் வாழவே முடியாதா?' என்ற கேள்வி பளிச்சிட்டது.

கூட வந்த இளைஞன் ஏதும் விசாரித்திருந்தால், 'நாகரிகமில்லாமல் வெறித்துப் பார்க்கிறானே என்றுதான் நானும் பார்த்தேன்' என்று பதில் சொல்லியிருப்பாள். இல்லாவிட்டால் வேறு எதற்காக அவர்கள் இருவரும் உடனடியாகச் சேர்ந்து சிரிக்க வேண்டும்?

மெதுவாக அந்த இளைஞனைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள முயன்றான் குருசாமி. அவளுடைய 'அப்பா'வும் இப்போது அவளுடன் இல்லையாம்; சென்னை நகரத்தை விட்டே போய்விட்டானும் கோடம்பாக்கத்தில் கருணை

குடியிருந்த வீட்டுக்கு அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களை விசாரித்துப் பார்த்தான். அந்த இளைஞனின் பெயர் ராஜூவாம். ஏதோ வசதியுள்ள வீட்டுப் பிள்ளையென்று தெரிய வந்தது. படிப்பைப் பாதியில் விட்டு விட்டு நடிப்பதற்காகச் சென்னைக்குத் திரையுலகத்தைத் தேடிக் கொண்டு வந்தானாம்.

கோடம்பாக்கம் பக்கத்தில் நடமாடிக் கொண்டிருந்த போது எப்படியோ கருணாவின் 'அப்பா' பழக்கம் கிடைத்து விட்டது. அப்பாவின் மூலம் கருணாவுடன் பழகினான். கடைசியில் அப்பாவை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டு அவனை வீட்டுக்குள் அநுமதித்து விட்டாள் கருணா.

இவ்வளவு தூரம் கருணா செய்து விட்ட பிறகும் குருசாமிக்கு அவளைத் தவறாக நினைக்க மனம் வரவில்லை. அவனுக்காக எந்தக் கஷ்டத்தையும் தாங்குவதாகக் கூறி வழக்காடியவள் அதற்குள் எப்படி அவனை மறந்திருப்பாள்? எப்படி மற்றொருவனுடன் மனம் துணிந்து வாழச் சம்மதித்திருப்பாள்?

தன் மீது உள்ள விருப்பமே வெறுப்பாக மாறி, தனக் கெதிராக வாழ்ந்து காட்டவேண்டுமென்ற வீண் பிடிவாதத்தால் அவள் இப்படி அவசரப்பட்டு விட்டதாக நினைத்தான் குருசாமி.

கருணாவின் உறவுக்குப் பாத்திரமான ராஜூ உலகம் தெரியாத பணக்காரப் பிள்ளை. விரைவில் கதாநாயகனாக வெள்ளித்திரையில் மின்னப்போவதாக வீட்டுக்கு எழுதிக்கொண்டே அடிக்கடி பணம் வரவழைத்தானும். அவனால் கதாநாயகனாகத்தான் வர முடியவில்லையென்றாலும் சாதாரணத் துணை நடிகனாகக்கூட வர முடியவில்லை. கருணா என்ற கதாநாயகி அவனுக்குக் கிடைத்ததுதான் லாபம்.

இடையில் ஆறேழு மாதங்களாகக் குருசாமியின் கண்களுக்குக் கருணா தென்படவில்லை. குருசாமியும் அவளைப்பற்றி நினைந்து உருகுவதுடன் தன் வேதனையை அனுபவித்து வந்தானே தவிர, அவளைத் தானாகச் சந்திப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வில்லை. இன்னொருவனுக்குச் சொந்தமானவளைப் பற்றி நினைப்பதுகூடத் தவறு என்று கருதினான். ஆனால் அந்த ஒரு தவறை மட்டும் அவனால் செய்யாமல் இருக்க முடியவில்லை.

ஒரு நாள் நாடக ஆசிரிய நண்பன் ரத்தினம் மகிழ்ச்சிப் பரபரப்போடு குருசாமியிடம் வந்து ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்தான். இல்லையப்பனிடம் செய்துவந்த சிபாரிசு பலிக்கத் தொடங்கி விட்டதென்றும், மறுநாளே ஒரு திரைப் படத்தில் அவனுக்கொரு சிறு வேடம் கிடைக்குமென்றும் கூறினான். அந்தச் சிறு வேடத்தில் அவன் திறமையுடன் நடித்து விட்டால், பிறகு அடுத்தாற் போல் துணைப் பாத்திரங்களாக நடிக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்றான். குருசாமிக்கு எப்படித் தன் நண்பனுக்கு நன்றி செலுத்துவது என்றே தெரியவில்லை. எப்படியும் நடித்துப் பெயரெடுத்து முன்னேற முடியும் என்றே நம்பினான்.

மறுநாள் காலையிலேயே படப்பிடிப்பு நிலையத்துக்கு நண்பனுடன் போய்ச் சேர்ந்தான் குருசாமி. அவனுக்கு முன்பே ஆண்களும் பெண்களுமாக நூற்றுக்கணக்கான பேர்கள் கூடியிருந்தனர். திருவிழாக் காட்சி ஒன்றைப் படம் பிடிக்கத் திட்டம் இட்டிருந்தனர்.

''இந்தக் கூட்டத்தில் நிற்பதற்கா என்னை ஏற்பாடு செய்தாய்?'' என்று கேட்டான் குருசாமி.

''இல்லை; இவர்களுக்கு மூன்று ரூபாயோ, ஐந்து ரூபாயோ தினக் கூலி கொடுப்பார்கள். உங்களுக்கு அப்படி யில்லை. நீங்கள் கூட்டத்துக்கு முன்னால் இருந்து வசனம் பேச வேண்டும். ஐம்பது, நூறு கிடைக்கும்'' என்றான்.

குருசாமி கூடியிருக்கும் கூட்டத்தை அநுதாபத்துடன் சுற்றிப் பார்த்தான். இவர்களில் பாதிப் பேர்களாவது கதாநாயகனாகவோ கதா நாயகியாகவோ நடிக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டு வந்தவர்கள். பரிதாபம் நிறைந்த அவர்களது முகங்களையும் எலும்புக்கூடுகளான அவர்களதுஉருவங்களையும் பார்த்துப் பெருமூச்செறிந்தான் குருசாமி. இந்த வெள்ளித்திரையின் மேல்தான் எத்தனை மோகம்? எத்தனை பேர்களை இது வாழ வைக்கிறது? எவ்வளவு பேரை இது தாழ வைக்கிறது?

''தினம் இவர்களுக்கு வேலை கிடைக்குமா?'' என்றான் குருசாமி.


''மாதத்தில் ஐந்து நாட்களுக்கோ ஆறு நாட்களுக்கோ கிடைத்தால் கிடைக்கும். சேர்ந்தாற்போல் சில மாதங்களுக்கு ஒன்றுமே கிடைக்காமலும் போவதுண்டு.''

''இவர்கள் எப்படி வாழ்கிறார்கள்?''

நாடக ஆசிரியன் ரத்தினம் தயங்கினான். பிறகு, ''அது இங்கு கோயில் கொண்டருளியிருக்கிறானே வடபழனி யாண்டவன் அவனுக்குத்தான் வெளிச்சம்!'' என்றான்.

கூட்டத்தில் ஒரு பகுதிக்கு வந்த போது அழுக்குப் படிந்த புடவையும், பரட்டைத் தலையும் உள்ள ஒரு பெண், குருசாமியைக் கண்டு விட்டுக் கூட்டத்துக்குள் மறைந்து கொள்ள முயன்றாள். குருசாமியின் கண்கள் அவள் பக்கம் சென்றன. அவளும் திரும்பிப் பார்த்தாள். அவள் நிறைமாதக்காரி; தாயாகிக் கொண்டிருந்தவள். அவள் கருணா.

இரண்டு கைகளாலும் தலையைப் பற்றிக் கொண்டு வெளியில் ஓடி வந்தான் குருசாமி. அவனுடைய நண்பனும் அவனைத் தடுக்கவில்லை. (தொடரும்)



**ஜேராட் ரேடியோ** — **JEYRAD RADIO**

- அறிமுகம் செய்யும் மற்றுமோர் புதிய
- குறைந்த விலை 5 வால்வு
  ஆல்வேவ் 3 பாண்ட்ஸ் செட்
- பெரிய செட்டின் இயக்க முடையது

மாடல் U 147 விலை ரூ. 185/- மட்டும்

**ஜேராட் எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரீஸ்**
38, தங்கசாலை வீதி - - - சென்னை-3

# ராம்தீர்த் பிரம்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)



கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

பெரிய பாட்டில் விலை ரூ. 4.50 : சிறிய பாட்டில் விலை ரூ. 2.25

## யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்கியமாக வாழ்வீர்கள்

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

## SHRI RAMTIRTH YOGASHRAM

**DADAR, BOMBAY-14**

மதராஸ் டிப்போ: 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3

பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்

# ஜீவாம்ருதம்

ஆரோக்யத்துக்கும் பலத்துக்கும்

ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிட்.
மதராஸ்-17

# ராஜா ஸர் ராமசாமி முதலியார்



தருமம் செய்வதையே தங்களுடைய வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு சென்னையில் கோடீசுவரரான வர்த்தகப் பிரமுகர் ஒருவரும், அவருடைய மனைவியாரும் அற வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ராஜா ஸர் ராமசாமி முதலியாரும், அவருடைய மனைவியார் ராணி தையல்நாயகியம்மாள் அவர்களும்தான் இந்தச் சிறப்புத் தம்பதிகள்.

வைத்திய சாலைகள் அமைப்பது, வாசகசாலைகள் கட்டித் தருவது, அன்னதான விடுதிகள் அமைப்பது, கல்விக் கூடங்களுக்கு உதவுவது, கோவில் திருப்பணிகள் மேற்கொள்வது என்று அநேகம் அநேகம் பணிகளை இவர்கள் நிறைவேற்றி வந்தார்கள். மனிதர்களுக்கு மட்டுமல்ல, மிருகங்களிடமும் பரிவு கொண்டு சென்னையில் நூற்றுக் கணக்கான இடங்களில், கால்நடைகள் பருகுவதற்காகத் தண்ணீர்த் தொட்டிகள் கட்டியதைப் பற்றியும் கூறவேண்டும்.

இவற்றில் பல தொட்டிகளைச் சாலை அபிவிருத்திக்காக அரசாங்கம் அப்புறப் படுத்தி விட்டது. மறைந்தவை போக இன்னும் பல இடங்களில் இந்தத் தண்ணீர்த் தொட்டிகளில் நகரசபைத் தண்ணீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு, சென்னைக்கு வரும் வண்டிமாடுகளுக்குப் பயன்பட்டு வருகின்றன. இந்தத் தொட்டிகளின் அடியில் ''ராஜா ராமசுவாமி முதலியார் தர்மம்'' என்று பெயர் செதுக்கப்பட்ட கற்பலகைகளை இன்றும் காணலாம். மயிலாப்பூரில் உள்ள ஒரு தண்ணீர்த் தொட்டியின் பெயரால் அங்கு 'தண்ணீர்த் துறை மார்க்கெட்டு' என்ற பெயரே நிலைத்து விட்டதைப் பார்க்கலாம். நகரசபைத் தண்ணீர்க் குழாய்கள் இல்லாத இடங்களில், குடிதண்ணீர்க் கிணறுகள் எடுத்து அவற்றை மக்களுக்கும், மாடு கன்றுகளுக்கும் பயன்படுமாறு செய்திருந்தார்கள். இவ்வாறே சுமைதாங்கிக் கற்கள் நிலைநாட்டிய பண்பையும் குறிப்பிட வேண்டும்.

சென்னையில் மட்டுமில்லாமல், சென்னையின் எல்லை தாண்டிச் செல்லும் பெருஞ் சாலைகளில் மூன்று மைல் தூரத்துக்கு ஒரு சுமைதாங்கிக் கல் வீதமும் வழி நெடுகக் களைப்பாறும் மண்டபங்களும் கட்டி வைத்தார்.

திரு முதலியார் அவர்கள் 13-10-1840 அன்று பிறந்தார். இவருடைய சொந்த ஊர் வந்தவாசி வட்டத்தைச் சேர்ந்த மாணாமதி என்ற கிராமம். இந்தக் கிராமத்தில் இவர்களுடைய வீட்டுத் தோட்டத்தில் ஒரு கற்சிலை கண்டெடுக்கப் பட்டதால், இவர்களுடைய குடும்பத்தினருக்குச் 'சிலைவீட்டுக்காரர்கள்' என்று பெயர் ஏற்பட்டது. அது காலப் போக்கில் மருவி, 'சவலை வீட்டுக் காரர்கள்'' என்று மாறியது. இந்தப் பெயர் திரு ராமசாமி முதலியாரையும் வந்தடைந்தது. 'சவலை ராமசாமி முதலியார்' என்று தான் சென்னை மக்கள் இவரை அழைத்து வந்தார்கள். சில உறவினர்களுடன் திரு ராமசாமி முதலியார் அவர்கள் சென்னைக்கு வந்து வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டார். நூல்களுக்கான அவுரிச் சாயம் இறக்குமதி வர்த்தகம் செய்து வந்தார். ஜெர்மனி நாட்டினர் விஞ்ஞான முறையில் செயற்கைச் சாயங்கள் உற்பத்தி செய்யத் தொடங்கி அவற்றை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கத் தொடங்கினார்கள். இதனால் திரு ராமசாமி முதலியார் அவர்கள் பார்த்து வந்த அசல் அவுரிச் சாய வர்த்தகம் தடைப்பட நேர்ந்தது. ஆகவே அதைக் கைவிட்டு, தோல் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடலானார். இதில் நல்ல வருமானம் வந்ததோடு, புதுச்சேரிக்குச் சென்று அங்கும் வர்த்தக ஸ்தாபனங்கள் ஆரம்பித்தார். வர்த்தகத் துறையில் இவருடைய புகழ் பரவுவதற்கு வேறொரு காரணமும் உண்டு. மேனாட்டு வர்த்தகர்களுக்கும் இந்திய வர்த்தகர்களுக்கும் இடையே 'துபாஷ்' ஆக விளங்கி வந்தார். இரண்டு பாஷைகளுக்கு மேல் அறிந்த வர்த்தகர்களை 'துபாஷ்'கள் என்று கூறுவார்கள். எனவே, இவருடைய செல்வாக்கும், உதவியும் மேனாட்டு வாணிகர்களுக்கும், இந்திய வாணிகர்களுக்கும் பயன்பட்டன. திரு முதலியார் அவர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டவாறே அறப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

சென்னையில் முன்னர் பிரபலமாக விளங்கிய அர்பத் நாட் பாங்கில் இவர் ஒரு டைரக்டராக — இயக்குனராக— விளங்கினார். சென்னை நகரசபை மூலமாகவும் பல சேவைகள் புரிந்திருக்கிறார். சர்வ கலாசாலை வளர்ச்சிக்காக இவர்கள் பல நிதிகள் ஏற்படுத்தியதோடு திறமைக்கான பரிசுத் திட்டங்களும் தமது பெயரால் வழங்கச் செய்திருக்கிறார்கள்.

அறுபது ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் பல இடங்களில் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டது. வட ஆர்க்காடு ஜில்லாவில் இது கடுமையாகத் தலைவிரித்தாடிற்று. அப்போது ஆயிரக் கணக்கில் கிராமவாசிகள் சென்னையை நோக்கி ஓடி வந்தார்கள். இவர்களுக்கெல்லாம் திரு முதலியார் அவர்கள் செய்த உதவிகள் பிரமிக்கத் தக்கனவாகும். கடற்கரைச் சாலைக் கட்டிடங்களில் அவர்களுக்கு இட வசதி செய்து கொடுத்து, பல நாட்கள் வரையில் உணவு அளித்ததோடு உடைகளும், பணமும் கொடுத்து ஆதரித்தார்கள்.

அப்போது அதிகாரம் வகித்த பிரிட்டிஷ் அரசாங்கம் திரு ராமசாமி முதலியாரின் பொதுச் சேவைகளைப் பாராட்டிப் பலவிதமான பதக்கங்களும் 'விருது'களும் வழங்கின. மிக உயர்ந்த கௌரவப் பட்டங்களில் ஒன்றான ராஜா ஸர் பட்டமும் அவருக்கு அளித்தது. இதைவிடப் பொது மக்கள் அவருக்கு அளித்த பட்டங்களுக்கும் வாழ்த்துரைகளுக்கும் ஓர் அளவே இல்லை.

காசி க்ஷேத்திரம் முதல் ராமேசுவரம் வரை இவர்கள் கட்டி விட்ட இலவச உணவு விடுதிகள் பலப் பல. மருத்துவ மனைகளும் இவ்வாறே. கடலூரில் கூட இவர்கள் கட்டிய மருத்துவ மனை ஒன்று இன்றும் நடந்து வருவது குறிப்பிடத் தகுந்த ஒன்று.

சென்னையில் இவரை அரசாங்கம் 'ஷெரீப்' ஆக நியமித்துக் கௌரவப் படுத்தினார்கள். ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு அழைக்கப்பட்டு, — பிரிட்டனுக்குப் போய் வந்தார். ரஷ்ய நாட்டிலிருந்து வந்த ராஜகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு கோமகனைச் சென்னையில் தமது மாளிகையில் உபசரித்த பெருமையும் இவருக்கு உண்டு.

திருப்பதியிலும், தஞ்சையிலும் இவர் கட்டிய யாத்திரிகர் விடுதிகள் இன்றும் சிறந்து பயன்பட்டு வருகின்றன. சென்னையில் இவர் பெயரால் விளங்கி வரும் 'ராஜா ராமசாமி முதலியார் தர்ம மாளிகை' நாடெங்கும் பிரபலமானதாகும். இந்திய ரயில்வே கால அட்டவணை ஒவ்வொன்றிலும் இதன் சேவையைப் பற்றிக் குறிப்பிட்டு வருகிறார்கள். தமிழ் நாட்டுக்கு க்ஷேத்திராடனமாக வரும் வட இந்திய யாத்திரீகர்கள் தினந்தோறும் இங்கு நூற்றுக் கணக்கில் வந்த வண்ணமாயிருக்கிறார்கள். இங்கு தாங்களே சமையல் செய்து கொள்ளவும் இட வசதிகள் அமைத்துத் தந்திருக்கிறார்கள். சென்டிரல் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள இந்த மாளிகையே திரு முதலியார் அவர்களுக்கு என்றும் அழி

யாத சின்னமாகும் என்று கூறலாம். இங்கு தான் அவருடைய உருவச் சிலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் ராஜா ஸர் ராமசாமி முதலியார் அவர்கள் பெயரால் விளங்கும் தர்மங்கள் மட்டுமல்ல; அவரது துணைவியாரின் பெயரால் விளங்கி வரும் பணிகளும் பிரசித்தமானவை களாகும். அவற்றில் வண்ணாரப் பேட்டைப் பகுதியில், ''ராணி ஆஸ்பத்திரி'' என்ற பெயரோடு விளங்கி வரும் 'மகவுப் பேறு மருத்துவ மனை'யைக் குறிப்பிட வேண்டும்.

ஒரு சமயம் ராஜா ராமசாமி முதலியார் அவர்கள் தமது குதிரை வண்டியில் அவ்வழியே செல்லும்போது சாலை, மரத்தடியில் சில பெண்கள் கூட்டமாக நின்று அவ்வழியே ஆடவர்கள் வராமல் தடுத்துக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். திரு முதலியார் அவர்களையும் அவர்கள் நிறுத்தினார்கள். நடுச்சாலையில் வரும் போது ஒரு ஸ்திரீ பிரசவ வலி கண்டு மரத்தடியில் படுத்து விட்டதாகத் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் ராஜா அவர்கள் மனம் பதறி, அந்த மரத்தருகிலேயே ஒரு பிரசவ ஆஸ்பத்திரி கட்டிவிடத் தீர்மானித்தார். அவ்வாறே அங்கு உடனேயே ஒரு பிரசவ ஆஸ்பத்திரி கட்டப்பட்டது.

சென்னை வண்ணாரப் பேட்டையில் இன்றும் சிறப்பாகப் பணியாற்றிவரும் ''ராணி ஆஸ்பத்திரி'' தான் அது. ராஜா சர் ராமசாமி முதலியார் பெயராலேயே இது கட்டப்பட்டிருந்தும், அந்தப் பகுதியில் வாழும் தாய்மார்கள் இதை ராணியின் பெயராலேயே அழைத்து வருவதையும் குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு ராஜா அவர்கள் தாம், திரட்டிய செல்வத்தில் பெரும் பகுதியை அறப் பணிகளிலேயே செலவிட்டு வந்திருக்கிறார். அவர் இதற்கெல்லாம் பிரதிபலனை எதிர்பார்க்கவும் இல்லை; பெயருக்கு ஆசைப்படவும் இல்லை. ஆனால், அவர் கட்டிய சில ஸ்தாபனங்களைப் பல ஊர்களில் ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்றுக் கொண்ட பின் அவருடைய பெயருக்குப் பதிலாகத் தங்களுடைய பெயர்களைப் போட்டுக் கொண்டிருப்பது சரியல்ல; நேர்மையுமல்ல. ராஜா ராமசாமி முதலியார் அவர்கள் மறைவு நிலைபெற்று இப்போது ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகின்றன. எனினும் அவரும் அவரது துணைவியாரும் அறம் வளர்க்க ஆற்றிய பணிகளின் புகழ் சென்னை மக்களின் மனத்தில் என்றென்றும் விளங்கி வரும் என்பது திண்ணம்.—'கதிர்'

# சொந்த ஊர்

விடியற்காலையில் எங்கள்வீட்டுக்கு அருகே விருந்து காகங்களின் கூச்சலைக் கேட்டுக் கண் விழித்ததும் தான் நான் சொந்த ஊரிலே இருக்கிறேன் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. பனிக்காலம் விடைபெறுகிற தருணம். அதனால் இலேசான குளிர் விடிய விடியக் கனத்துக் கொண்டிருந்தது. ஊரில் இருபது வருஷங்களுக்கு மேலாக இருந்து பழைய வீட்டில் சண்டை போட்டு இடம் பிடித்து இளமையில் பெருமிதத்தோடு தூங்கிய அதே பழைய கட்டிலின் மீது இருக்கிற உற்சாகத்தாலும் அடுக்கடுக்கான இனிய ஞாபகங்கள் மனத்தைக் கப்பிய காரணத்தாலும் எனக்கு அதற்கு மேல் தூக்கம் வரவில்லை. எழுந்து ஜன்னலைத் திறந்து வைத்து விட்டு, உடம்பின் மேல் போர்வையை நன்றாகச் சுற்றிக் கொண்டு சௌகரியமாக உட்கார்ந்து கொண்டேன். விஸ்தாரமான வயல் வெளியும், சாயம் போய்க் கொண்டிருக்கும் பரந்த வான்வெளியும் ஜன்னலில் தெரிந்தன. காலைப் பனி பயிர்களின் மேல் படிந்திருக்கும் ஒரு நூதன வாசனை மெல்ல வீசிற்று.


ஊரை விட்டுப் போய் நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. வரும்போது எதிர்பார்த்தபடி ஊர் அப்படி யொன்றும் மாறிவிட வில்லை. புதுமையின் முத்திரைகள் அங்கங்கே விழுந்திருந்தாலும் எல்லாம் பழையபடியே சாந்தியில் தூங்கிக் கொண்டிருந்தன. இன்னும் பழைய நண்பர்களையும், அவர்களும் நானும் நிர்த்தூளிப்படுத்திய பழைய இடங்களையும் பார்க்கவில்லை. அவர்களில் யாராவது மாறிவிட்டிருப்பார்களா!

என் இளமையை எங்கே, எப்போது எண்ணும்போதும், நினைவுப் பாதையில் முதலில் இரண்டு உருவங்கள்தான் நடந்து வருகின்றன-இருபானந்தனும், விசுவநாதனும். வடக்கும் தெற்கும் போல் நேர் எதிர்க் குணச் சித்திரங்கள். இருவர் வீட்டிலும் எனக்கு இருந்த சுதந்திரம் அளவற்றது. சாப்பாட்டு வேளையோ தூக்க வேளையோ நான் எந்த வீட்டில் இருக்கிறேனோ அந்த வீட்டிலேயே கழியும். நான் என் வீட்டில் இல்லையென்றால் யாரும் கவலைப்பட மாட்டார்கள். அப்படிப் பழகிய அந்த நண்பர்கள்!

இருபானந்தன் செல்வச் செழிப்போடு ஆற்றங்கரையில் கவலையற்று வளர்ந்த மரம் போல் தன்னிச்சையாக வளர்ந்தவன். அவன் தந்தை பெரிய மிராசுதார். எங்கள் ஊர்—சொல்ல மறந்து விட்டேனே—பெரிய பட்டணக் கரை இல்லாவிட்டாலும், பட்டிக்காடும் அல்ல. நால் வேஷ்டியில் ஜரிகை இழைத்தாற் போல் நாகரிக இழைகளும் ஓடின. அழகான வீடு அவர்களுடையது. பாட்டரி ரேடியோ செட்டுக்களை அவர்கள்தான் ஊரே கும்பல் கூடிப் பார்க்க அறிமுகப்படுத்தினர்கள். அவன் ஐந்து பெண்களுக்கு முன் முதலாவதாகத் தோன்றிய பையன்.

விசுவநாதன் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிம்மதியும் மருந்துப் பொருள்கள். அவனுடைய அப்பா சுப்புசாமி கைதேர்ந்த சமையல்காரர். சுற்றுப் பக்கம் பதினறு ஊர்களில் அவருடைய பெயர் பரவியிருந்தது. சுப்புசாமி சமையல் என்றால், நாலு மைல் நடந்து போய்ச் சாப்பிட்டு விட்டு வருவதற்கு ஆட்கள் உண்டு. ஆனால் வீட்டின் வறுமை இருக்கிறதே, அதை நினைக்க நெஞ்சு நடுங்குகிறது. விசுவநாதனின் தாயார் ஆற்றில் குளிக்கப் போய் அவன் இளமையிலேயே காலமாகி விட்டாள். ஐந்து சகோதரிகள் அவனுக்கு. சுப்புசாமியின் தாயும் தந்தையும்; அவருடைய விதவைச் சகோதரி கனகம்; அவளுக்கு இரு பெண்கள். சுப்புசாமியை நான் பார்க்கிற போதெல்லாம் சம்சார பந்தம் என்ற மகாபாரதத்தில் பீஷ்மாச்சாரியாரைப் போலத்தான் எனக்குத் தோன்றும். வறுமையும் விசாரங்களும் அமைந்த அம்புப் படுக்கையின் மீது வாய் பேசாமல் கிடந்த பீஷ்மர் அவர்.

விச்சு அந் நாட்களிலே பெரிய இடங்களில் சமையல் செய்ய அவன் தந்தை போகும் போது, பள்ளிக்கூடத்துக்கு லீவ் போட்டு விட்டுக் கூடப் போவான். நெடு நெடுவென்று ஒற்றைநாடியான உரு



வம். முகத்தில் என்ன உணர்ச்சி இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாத ஓர் இருட்டு. தன்மானமும் பிடிவாதமும் நிறைந்தசுபாவம். துண்டுப் பென்சிலோ காகிதமோ கூட இரவலாகவோ இனாமாகவோ வாங்கப் பிடிக்காது அவனுக்கு. பள்ளிக்கூட நாட்களில் மற்றவர்களோடு சேர்ந்து கொண்டு 'மடைப்பள்ளி விச்சு' 'மடையன் விச்சு' என்று கேலி செய்த ஞாபகம் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் இன்று எனக்கு மீண்டு வந்து வெட்கமடையச் செய்கிறது. விச்சு தான் எத்தனை பெரிய லட்சியவாதி! எந்தக் கலாட்டாக்களுக்கும் கொஞ்சங்கூட விட்டுக் கொடாது சலனமுறாது ஒரு விக்கிரகம் போல அவனது பள்ளி வாழ்வு ஓடியிருக்கிறது. அவன் வறுமையைக் குறித்துக் கவலைப்பட்டதில்லை. மூன்று நாட்கள் தொடர்ந்தாற் போல் சமையலுக்குப் போய் விட்டு வகுப்புக்கு வந்தால் நண்பர்களின் வக்கணையான விசாரணைக்குச் சளைத்ததில்லை.


விச்சு....விச்சு....எதிர் ஜன்னலில் பனி மூட்டம் கலைந்து போய் வெளேரென்று உலகமாகிய நாடகமேடையின் திரை ஒதுங்கிச் சூரிய ஒளிக்காகக் காத்து நின்றது வானம். விச்சு என்ற திரைக்குப் பின்னால் என்னென்ன இருந்தனவோ? ஒன்று மட்டும் எனக்கு நன்கு தெரியும். அம்புலு—குனிந்த தலை நிமிராமல் இடுப்பில் குடத்தோடு அவள் தண்ணீர் எடுக்க வரும் காட்சிதான்—அம்புலு என்ற பெயர் எழுந்தவுடனே என் நினைவில் உதயமாகிறது. ஆற்றங்கரை ஓரத்தில் ஞானத் தபஸில் ஆழ்ந்தாற் போன்ற அந்தப் பழைய விக்னேசுவரர் ஆலயத்தில், பொலவென்று நட்சத்திரங்கள் உதிர்ந்தாற் போல் பவழ மல்லிகை மலர்கள் சிந்திக் கிடக்க, அவற்றின் மேலே ஒரு புஷ்ப தேவதை போல் மண்டியிட்டு அவள் நமஸ்கரிக்கிற காட்சி வருகிறது. அந்தச் சமயங்களில் எல்லாம் எளிய உடையோடும், மருண்ட கண்களிலும், இளம் இதழ்களிலும் ஒரு மாபெரும் சோகம் அணையாத ஜோதிபோல் சுடர்விட அவள் நடமாடினாள்.

சற்று நேரங்கழித்து எல்லோரையும் போய்க் காணப் போகிறோம் என்ற நிச்சயமான மகிழ்ச்சியுடன், கழிந்த காலத்தையும் ஒவ்வொருவரைப் பற்றியும் இன்னும் பார்க்காமல் நினைக்க எவ்வளவு வியப்பாக இருக்கிறது? விந்தையான வருத்தம் தோன்றுகிறது! அம்மாவிடம் ஆற்றங்கரைக்குப் போய்க் குளித்து விட்டு வருவதாகச் சொல்லிச் சோப்பையும் துண்டையும் எடுத்துப் புறப்பட்டேன்.

ஒவ்வொரு வீதியும் ஒவ்வொரு வீடும், நானும் என் நண்பர்களும் சேர்ந்து செய்த அட்டகாசத்தின் சின்னங்களாகத் தோன்றி என் நினைவெல்லாம் மணத்தன. ஆறாத ஒரு தாகத்துக்கு யாரோ சிறுகச் சிறுக அமிர்தத்தைப் புகட்டுவது போல் வாழ்க்கையின் அமளியிலிருந்து வந்த எனக்கு இந்தச் சிற்றூர் பிரபஞ்சத்தையே தித்திக்க வைத்தது. சொந்த ஊர்.....எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் மனக் கவலைகளைச் சிறிது நேரம் பறக்கடித்து, அந்த மண்ணை மிதித்துப் பார்த்தால் என்ன ஆத்மானந்தம் ஏற்படுகிறது என்று அவர்களே ஒப்புக் கொள்வார்கள்.

துயில் நீங்கிச் சிரிக்கும் இளங் குழந்தையைப் போல், என் மனத்தில் இன்னுணர்வுகள் ஒளிர்கையில், நான் அம்புலுவைப் பார்க்க நேர்ந்தது. அந்தப் பழைய அம்புலுவா இவள்? நான் திகைத்தேன். மெருகிட்ட பொன் போல் ஒரு தனி சோபை சிவந்த மேனியில் ஒளிர, அழகிய பட்டுச் சேலையோடு, காதுகளில் ஜிமிக்கியும், கழுத்தில் தங்கச் சங்கிலியும் பிரகாசிக்க, காலை வேளையில் உதய தேவதையைப்போல் பளிச்சென்று நெற்றியில் குங்குமம் துலங்க அவளைச் சுற்றிலும் ஒரு செல்வக் களை பரவி நிற்க, குடமேந்தி ஆற்றங்கரையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு நேருக்கு நேரே நான் எதிர்ப்பட்டு விட்டதால் என்னை நிமிர்ந்து பார்த்தாள். ஒரு நிமிஷம் எதையோ தேடுவது போல் அவள் பார்வை தயங்கியதையும், சட்டென்று மறக்க முடியாத மின்னல்போல் ஒரு துக்கம் பளீரிட்டுத் தாழ்ந்ததையும் கண்டு நான் இன்னும் குழம்பினேன். மெட்டிகள் சப்திக்க அவள் என்னைக் கடந்து விட்டாள்.

அவளுக்குத் திருமணம் ஆகி விட்டது. ஆனால் அந்தப் பார்வைக்கு அர்த்தம் என்ன? சிறிது நேரம் நின்றேன். பிறகு புறப்பட்டுவிட்டேன். எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் அந்தப் பார்வை என்னை விடுவதாயில்லை. வண்டின் ஓயாத ரீங்காரமாய் என்னை உள்ளுக்குள் என்னென்னமோ யோசனைகளுக்கு அது தூரத்திற்று. தெரிந்தவர்கள் எல்லாம் ஆர்ப்பாட்டத்தோடு குசலம் விசாரித்தார்கள்.



ஒன்றும் பாதியுமாய்ப் பதில் சொன்னேன். இந்த வீதி திரும்பியதும், எதிரில் கிருபானந்தனுடைய அரண்மனை போன்ற வீடு கம்பீரமாக என்னை வரவேற்றது. நான் உள்ளே நுழைந்தேன். வாசலில் ஒரு சின்னப் பயல் மூன்று சக்கர சைக்கிள் விட்டுக் கொண்டிருந்தான், பார்க்கத் துறுதுறுவென்று.... அவன் கன்னத்தைத் தட்டிக் கொடுத்துவிட்டு, கூடத்தில் நுழையும் போதே ''கிருபா.... கிருபா'' என்று குரல் கொடுத்தேன். வீட்டுக்குள்ளே பற்றுத் தேய்க்கிற ஒலி கேட்டது. என் குரலுக்கு அப்புறம் அது நின்று, ஓர் இளம் யுவதி, மரியாதையாக மேலாக்கை இழுத்துப் போர்த்திய வண்ணம் வந்தாள்.

''யார் வேண்டும்?''

''கிருபானந்தன் இல்லையா?''

''அவாள்ளாம் வீட்டை வித்துட்டு, மதுரைக்குப் போய்ட்டாளே. நாங்க தான் இப்போ இங்கே குடியிருக்கோம்!''

ஒரு கணம் எனக்குப் பேச்சு வரவில்லை. அப்புறம் சமாளித்துக் கொண்டு ''ஓஹோ, அப்படியா? எனக்குத் தெரியாது. ஊருக்கு வந்து நிரம்ப நாளாகி விட்டது. மன்னிக்கணும்!'' என்று கூறிவிட்டுக் கூச்சத்தோடு வெளி வந்து விட்டேன். இது எனக்கு இரண்டாவது அதிர்ச்சி. கிருபானந்தனுக்கு வீட்டை விற்று விட்டுப் போகிறமாதிரி என்ன சந்தர்ப்பம்? எங்கள் நண்பர்களிலேயே அவன்தான் வாழ்க்கை முழுதும் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருப்பான் என்று நான் முழுக்க நம்பினேன். ஏதேனும் பொருள் நஷ்டமா? என்ன காரணம்? அவனை இந்தத் தடவை பார்க்கவே முடியாதோ என்ற உறுத்தலோடு, வீட்டை விற்று விட்டான் என்ற செய்தியும் சேர்ந்து என் மனத்தைக் கலக்கி விட்டன.

கிருபானந்தன் வீட்டைத்தாண்டிக் கொஞ்ச தூரத்தில்தான் விசுவநாதன் வீடு. ஆனால் உள்ளே நுழைய எனக்கு அச்சமாக இருந்தது. அங்கு போலவே இங்கும் என்ன மாற்றமாவது தோன்றி, விசுவநாதனின் மகிழ்ச்சியையோ, அல்லது விசுவநாதனையையோ பார்க்க முடியாது போய்விட்டால்?... நான் அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய காலத்தை ஒத்திப் போட்டேன். அவனுடைய வீட்டைக் கடக்கும் போது மனம் அடித்துக் கொண்டது. மனத்தைச் சுற்றியும் பாசி போல் ஒருவேதனை மூடியது. அர்த்தமற்று என்னென்னவோ எண்ணிக் கொண்டு ஆற்றங் கரைக்குச் சென்றேன்.

ஆற்றங்கரை ஹோவென்று விரிச்சிட்டிருந்தது. ஆற்றின் குறுக்கே ஓடிய மின்சாரக் கம்பிகளில் அமர்ந்து, ஒரு மரங்கொத்திப் பறவை 'டொக் டொக்'கென்று கம்பியைக் கொத்தி, மூக்கின் கூர்மையைப் பரீட்சித்தது. தென்னங் கீற்றுகள் சிலுசிலுவெனக் காற்றில் பேசின. நதி நாலம் வெட்கப்படும் கல்யாணப் பெண்ணைப் போன்று, சப்தமின்றி அலையின்றி மென்ன ஓடிக் கொண்டிருந்தது. மொத்தத்தில் தண்ணீர் குறைந்து விட்டது. நான் சட்டை வேஷ்டியை அவிழ்த்து வைத்துவிட்டு, ஆர்வத்துடன் நீரில் பாய்ந்தேன்.

''அடே ரகு....'' என்று கரையிலிருந்து ஒரு கூச்சல் கேட்டது. திரும்பினால் விச்சு! நெடுநெடுவென்று வளர்ந்து விட்டிருக்கிறான். நான் கரையை நோக்கித் தாவினேன்.. அப்படியே ஈர உடம்புடன் சென்று அவனைத் தழுவிக் கொண்டேன்.

இருவரும் சிறிது நேரம் அற்புதமான அதே மௌனத்தில் இருந்தோம். நான் மணலில் சாய்ந்து கொண்டு, ''எப்படி இருக்கிறாய் விச்சு? உட்கார்'' என்றேன்.

''டேய் நீ குளிக்கல்லியா? குளிச்சுட்டு வாயேன். நிறையப் பேசுவோம். நீ வந்திருக்கேன்னு தெரிஞ்சுதான் காலையிலேயே ஒங்க வீட்டுக்கு ஓடினேன். ஒங்கம்மா நீ குளிக்கறதுக்குப் போயிருக்கிறதாகச் சொன்னாங்க. அதுதான் நேரே இங்கே வந்தேன். சரி, நீ போய்க் குளிச்சுட்டு வா.'' அதே கடமை உணர்ச்சி மாறாத விச்சுதான். அவன் அப்படியே இருக்கிறான்.

''இருக்கட்டும்டா. நீ சொல்லு. கொஞ்ச நாழி இப்படியே பேசுவோம். குளிக்கிறதுக்கென்ன? எப்ப வேணுன்னாலும் குளிக்கலாம் அல்லவா?''

''ரகு! எனக்காகப் பாதிக் குளியிலே நிறுத்திட்டியே. வா. நான் கரையோரமா வந்து உக்கார்றேன். நீ குளிச்சிண்டே பேசுவே'' என்று என் கையைப் பற்றிக் கொண்டு என் முன்னே நடந்தான் விச்சு. நான் ஊருக்கு வந்த பின், சற்று நேரத்துக்கு முன் ஏதோ இழந்து விட்டாற் போலத் தோன்றிய மகிழ்ச்சி மீண்டும் கிடைத்து விட்டது.

''ரகு, எனக்கென்ன? நான் நன்றாகத்தான் இருக்கிறேன். அப்பா இறந்து விட்டார். தங்கைகளுக்கெல்லாம் திருமணம் செய்து வைத்து விட்டேன். பிழைப்பு பழையபடியே சமையலில் ஓடிக் கொண்டிருக்கிறது. ஏதோ அந்தக் காலத்திலே அப்பா எடுத்த பேரை விருத்தி செய்ய முடியலேன்னாலும் காப்பாத்திண்டிருக்கேன்...''

விச்சு மடமடவென்று பேசிக் கொண்டு போனான். ஒவ்வொன்றும் துக்கம்தான். ஒவ்வொன்றும் கசப்புத்தான்.

''நீ எப்படியிருக்கேடா ரகு?''

நான் சீக்கிரமாகவே குளித்துக் கரையேறி விட்டேன்.

''எனக்கென்ன விச்சு, நான் நன்றாகத்தான் இருக்கிறேன். கூடிய சீக்கிரம் பக்கத்திலேயே எங்காவது மாற்றிக் கொண்டு வந்து விடலாமென்று பார்க்கிறேன்.''

''சரிதாண்டா. ஆனா அமெரிக்காவிலே உனக்கிருக்கிற நல்ல மதிப்பு இங்கே கிடைக்குமா?....''

''அது போகட்டும். நீ ஏன் எனக்கு, எவ்வளவோ விஷயங்கள் நடந்த பிறகும் ஒரு தபால்கூடப் போடல்லே?'' என்று கேட்டவாறே பனியனையும் டிராயரையும் பிழிந்து எடுத்துக் கொண்டேன்.

''ரகு! நீ பெரிய மனிதனாயிட்டே. வாழ்க்கையிலே, ரொம்ப உயர்ந்து, பத்திரிகைகளிலே எல்லாம் ஒன் பேருஅடிபடத் தொடங்கிடுத்து. என்றோ பழகிய ஒரு பால்ய நண்பன் — தற்சமயம் அவனோட அந்தஸ்து சமையல் வேலே; கடிதாசை மதிச்சுப் பதில் போடுவையோ, மாட்டாயோன்னுதான் நான் ஒனக்குக் கடிதம் எழுதவில்லே!''

எனக்கு அவன் வார்த்தைகளைக் கேட்டு ஒரு பக்கம் ஆத்திரமாகவும் வந்தது; பெரும் வருத்தமாகவும் இருந்தது.


எல்லா ஸீலிங் விசிறிகளுக்கும் நீண்ட கால வாழ்வுக்காக டபிள் பாள் பெயரிங்ஸ் உண்டு.
செயல் குணம் பாணி
'ஹையர் பர்ச்சஸ்' முறையிலும் கிட்டும்
உஷா
குணத்தை எடுத்துக் காட்டும் பெயர்
மிக அதிகமான விற்பனையுள்ளது
ஜே எஞ்சினீரிங் ஒர்க்ஸ் லிமிடெட்., கல்கத்தா-31.

''சீ! என்னடா, விச்சு! என்னை அவ்வளவு அல்பமானவன் என்று நினைத்தாய்? யாரோ டெல்லாம் என் வாழ்க்கையின் முற்பாதி கழித்ததோ அதை வெகு சீக்கிரத்தில் மறந்து விடுகிற அளவு நான் மோசமானவனா? பரவாயில்லேடா பரவாயில்லே !''

விச்சுவின் முகம் சட்டென்று மாறிற்று.

''இல்லே ரகு. அப்படியில்லே. நான் பார்த்த உலகம் — நீ என்னை விட்டுப் பிரிந்த பின் நான் பார்த்த உலகம்—அப்படியிருந்தது. இப்போ ஒண்ணும் நான் அப்படி நெனக்கல்லேடா. மன்னிச்சுக்கோ.''

''பரவாயில்லேடா பெரிய மனுஷா! நீ பெரிசா எந்தக் குற்றமும் பண்ணல்லே. ஒனக்கு மன்னிப்பும் கிடையாது. சரி விச்சு, உன்னைப் பார்த்தவுடனே கேக்கணும்னு நினைச்சேன். எனக்குக் கல்யாணப் பத்திரிகை கூட அனுப்பாமே காரியத்தை முடிச்சுக்கிட்டியே. வர்ற வழியிலே தான் அம்புஜுவைப் பார்த்தேன். எனக்கு ரொம்ப சந்தோஷமப்பா. கடைசியிலே அவ பிரார்த்தனை பலிச்சுதே.''

விச்சு எனக்குப் பதில் சொல்லவில்லை. வேண்டுமென்றே மௌனம் சாதிப்பது போல் கம்மாயிருந்தான். நான் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். வானில் பறந்து சென்ற ஒரு பறவையைப் பார்க்கிறாற் போல், அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். மெல்ல வீசிய காலைக் காற்றில் அவன் கருட்டை முடி அலை அலையாகக் கலைந்தது.

''என்ன விச்சு?''

விச்சு என் குரலில் ஒலித்த ஆதங்கத்தைக் கேட்டு, மெள்ளத் தலையைத் தாழ்த்தினான். உடனே பேசாமல் இன்னும் சில அடிகள் நடந்து சென்றோம். என்ன தோன்றிற்றோ, நின்று என் கையை உறுதியோடு பற்றிய படியே சொன்னான்.

''ரகு, நீ போன பின் என்னென்னவெல்லாமோ மாறி விட்டது. என் கனவுகள் மாறி விட்டன. அம்புஜு வேறு வீட்டுக்குப் போய் விட்டாள். நமது தேவநாராயணனுக்குத்தான் அவளைக் கொடுத்தோம். இன்னும் நான் திருமணம் செய்து கொள்ளவில்லே. ரகு, உன்னிடம் சொல்வதற்கென்ன? இனி எனக்குத் திருமணம் இல்லே.''

விச்சுவைப் பற்றி என் மனத்தில் வளர்ந்திருந்த ஒரு பசுமையான நம்பிக்கையை, ஆசையை, அவனுடைய வறட்சியான குரலில் வந்த வார்த்தைகள், பச்சை மரத்தை ஒரே சிவாகச் சீவித் தள்ளினாற் போலச் சாய்த்து விட்டன. அம்புஜு....பேதை. அவள் இருந்த தவமும், அவள் கோரிய வரங்களும் இவ்வாறாகப் பொய்த்தா போயின? எனக்கு விச்சுவை நிமிர்ந்து மீண்டும் பார்க்கப் பிடிக்கவில்லே. ஆற்றிலிருந்து ஊரின் பிரதான வீதியை நோக்கிப் பிரிந்த ஒற்றையடிப் பாதையில், அவரவர் உணர்ச்சிகளோடு, அவன் முன்னும் நான் பின்னுமாக நடந்து கொண்டிருந்தோம். கொஞ்ச நேரங் கழித்து விச்சு, இடக்கைப் பக்கமாகத் தூரத் தொலைவில், தெரிந்த தென்னை வரிசைகளை அர்த்தமற்றுப் பார்த்தவாறு மீண்டும் பேசினான்.

''ஏன் பேசாமல் ஆகிவிட்டாய் ரகு? தற்சமயம் என்னைப் பற்றி உன் மனத்தில் எடை தாழ்கிறது இல்லேயா?''

# கோல வெறி

நீல மலைமுகட்டில் — ஒரு
நீண்ட பகற்பொழுதில்
பாலின் நிறம்திரட்டிப் — புனல்
பாயும் அருவியிலே
மாலை வெயில்சரிந்து — இள
மஞ்சட் பொன்னுருகக்
கோல வெறிபடைத்தேன் — மனக்
கூத்தின் உருவெடுத்தேன்.
சித்திரை நிலவினிலே — இளந்
தென்றல் குலவிவரப்
பத்தரைப் பசும்பொனின் — மிகு
பாவை மகளொருத்தி
நித்திரைக் கனவினிலே — தனி
நேர்ந்து தெரிகையிலே
எத்தனை மகிழ்ந்திருந்தேன் — நான்
ஏதோ அயர்ந்திருந்தேன்.
நெஞ்ச விளிம்பினிலே — பல
நேரந் ததும்புகிற
பஞ்சைத் துயரங்கள் — சிறு
பஞ்சிற் புகைந்தெரியக்
கொஞ்சம் களிப்பினொடு — மனக்
கூத்தின் உருவெடுப்பேன்
மிஞ்சும் மகிழ்ச்சியிலே — பெருங்
கோல வெறிபடைப்பேன்.

— மணிவண்ணன்



நான் அதற்கு உடனடியாகப் பதில் சொல்லி விடவில்லை. ''நீ சொன்னதற்கு அர்த்தமென்ன விச்சு?'' என்றேன்.

''எதைக் கேட்கிறாய்?''

''இனி உனக்குத் திருமணம் இல்லை என்றாயே......''

அவன் மீண்டும் மௌனமானான்.

''ரகு! மங்களம் கிருபானந்தனை மணந்து கொண்டாளடா!'' என்று தொடங்கி, எந்த விச்சுவை என் பால்யமெல்லாம் நான் தேடியும் அகப்படவில்லையோ, அந்தத் துக்கமான விச்சு உருக்கமான வார்த்தைகளில், தொண்டை அடைத்துக்கொள்ளப் பல தினங்களாக உள்ளே நின்றுவிட்ட மூன்லை எடுப்பது போன்று, பேசினான்.

''அந்த நாட்களில் நீ அவ்வளவாகத் தெரிந்து கொண்டிருக்க மாட்டாய் ரகு. மங்களத்தை ஒப்பில்லாத பொருளை நேசிப்பது போல் நான் நேசித்தேன். மங்களம் என் இளமை வாழ்வில் நண்பர்கள் மத்தியில் நான் பட்ட அவமானங்களுக்கும், என் வறுமைக்காக என்னை நானே வெறுத்த சந்தர்ப்பங்களுக்கும் எதிரில் ஜுவாலையாக இருந்தாள். என் துக்கம், வருத்தம், இழிவு யாவையும் எரித்து பஸ்மமாக்கினாள். அவள் எனக்கு உரியவளாய் இருக்கும் வரையில் என் தகுதி உயர்ந்தது தான் என்று நான் எண்ணுமளவு சதா ஆர்வத்தோடு லோக விவகாரங்கள் எதை எதையோ பேசி என் மனத்தில் ஒரு ஜோதியை நிறுவி விட்டாள். அவள் என்ன நினைத்து, எதற்காக என்னோடு பழகினாள் என்று புரிந்துகொள்ள இப்போதும் முடியவில்லை. ரகு பள்ளிக்கூடம் முடிந்ததும் நேரே ஆற்றங்கரைக்கு நாம் வருவோமே நினைவிருக்கிறதா? சாயந்திரம் கிழக்கே போகும் எக்ஸ்பிரஸை வேடிக்கை பார்த்து விட்டு நான் உங்களை விட்டுப் பிரிவேனே. அந்நேரத்தில் அவள் வீட்டு மாடத்தில் விளக்கு வைத்துக் கொண்டிருப்பாள். அந்த வீதியில் ஜன நடமாட்டம் இராது. தெருவில் நின்றவாறே சிறிது நேரம் சிரித்துப் பேசிவிட்டு நான் செல்வேன். அவளுக்காக விடியற்காலையில் குளிக்க வந்து காத்திருப்பேன். குளித்து விட்டு, குடத்தில் நீர் எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சிறிது தூரம் வரையில் அவளோடு பேச்சு... பேச்சு....சதா சிரிப்பும் பேச்சும் தான்.

''இதையெல்லாம் இப்போது உன்னிடம் சொல்கையில், எனக்கு வெட்கமோ, துக்கமோ இல்லை ரகு. அவளிடம் நான் பழகத் தொடங்கிய நாளிலிருந்து, அது ஒரு தப்பான காரியமென்றே நான் கொள்ளவில்லை. கற்பூர ஜுவாலையாய், என் மனத்தில் ஒரு தெளிவும், தூய்மையும் சுடர் விட்டன. அவள் என் மீதே எனக்கு நம்பிக்கை ஏற்படுத்தினாள். ஒரு சக்தி தந்தாள். எத்தனைக் கெத்தனை கொடுத்தாளோ அப்படியே என்னிடமிருந்து அகலும் போது எடுத்துச் சென்று விட்டாள். அவள் மீது நான் வைத்திருந்த அன்பு அவளுக்கு நன்கு தெரியும். இருந்தும் நான் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகத் தெரிவித்து விட்டு, சம்பிரதாயத்துக்கு மாறாக என் அம்மாவையே அவர்கள் வீட்டுக்கு அனுப்பிப் பெண் கேட்ட போது மூக்கை உடைப்பது போல் பேசி அனுப்பி விட்டாளே. அவளுடைய தந்தை கேட்ட கேள்வி இன்னும் என் காதிலேயே நின்று கொண்டிருக்கிறது ரகு.

'' 'சமையல்காரப் பயலுக்கு என்ன திமிர்?' என்றாராம். ஒன்று உறுதியாகச் சொல்கிறேன். வாழ்நாளில் ஒரு பெண்ணைச் சீராகப் புரிந்து கொள்ளமுடியாது ரகு. கடைசியில் அவளைக் கிருபானந்தனுக்குக் கொடுத்தார்கள். அந்தக் கல்யாணத்துக்கு, கிருபானந்தன் என்னை வருந்தி அழைத்திருந்தான். எனக்குத் துளிக்கூட இஷ்டமில்லா விட்டாலும் கிருபானந்தனுக்காகப் போனேன். மணப்பந்தலில், துக்கமற்றவள் போல் களிப்பு நிறைந்த முகத்தோடு என்னைப் பார்த்துச் சற்று சிரித்தாள். மனத் திருப்தியோடு கிருபானந்தனுக்கு மாலை யிட்டாள். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சகிக்கவும் முடியவில்லை. எந்த ஏழைமையை என் மனசில் போட்டு எரித்தாளோ, அதே ஏழைமைக்காக அவள் என்னைப் புறக்கணித்து என் சொந்த நண்பனுக்கு மாலை யிட்டாள்.''

இடை வெளியில்லாத விச்சுவின் நீண்ட பேச்சு நின்றது.

''போகட்டும் விச்சு! நீ எப்படி அம்புஜுவைத் தேவநாராயணனுக்குக் கொடுக்க ஒப்புக் கொண்டாய்?'' என்று கேட்டேன்.

''ஏன் ரகு, என்றைக்கிருந்தாலும் அவள் ஒரு வீட்டுக்குப் போக வேண்டியவள்தானே!''

அவன் பேச்சு எனக்கு விசித்திரமாக இருந்தது. ஏதோ ஒன்றை மூடி மறைக்கிறாற் போல் தென்பட்டது.

''அடேய் விச்சு! பார்த்துப் பேசடா. பேதை அம்புஜுவை எனக்கும் தெரியும். ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு நொடியும் உன்னையே நினைந்து, உனக்காகவே நாச்சியார் மாதிரி தவமிருந்தாளடா. அதிர்ந்து அறியாத சொர்ணச் சிலை போல் மௌனத்தில் அவள் மனத்துக்குள் உன்னோடு எவ்வளவு பேசியிருப்பாள்? ஆற்றங்கரை விக்னேசுவரருக்குத் தெரியும் அவள் மன அலைகள். தூங்காமணி விளக்கு மாதிரி நிதான ஜோதியுடன் அவள் உன்னை எவ்வளவு நேசித்தாள்? நீயே என்னிடம் சொல்லி யிருக்கிறாய். 'சீ இதெல்லாம் என்ன பேதைமை' என்று அவளைக் குறித்து என்னிடம் கடிந்திருக்கிறாய். நான் அப்போது சொன்ன வார்த்தைகளைக் காற்றில் விட்டு விட்டாய். நீ சொன்ன அதே குற்றச் சாட்டை உன் மீது சுமத்துவேன் விச்சு! மங்களம் போன பின்னால், உனக்காக இதயத்தையே சமர்ப்பணம் செய்து மலர்ந்து கொண்டிருக்கும் அந்தத் தீபத்தை நீ ஏனடா அங்கீகரிக்கவில்லை? அம்புஜுவை வருகிற வழியில் பார்த்தேன். என்னைக் கண்டதும் அவள் முகம் வாடி, கதியற்ற பாவனைகளோடு ஒரு பேதைமைப் பார்வை பார்த்தாள். நீ அவளுக்குச் செய்தது மங்களம் உனக்குச் செய்ததை விடப் பெரிய அநியாயம் விச்சு. சொல், நீ ஏன் அவளை நிராகரித்தாய்?''

என் மனத்தில் தோன்றியதை யெல்லாம் ஒரு புள்ளி விடாமல் வந்த உணர்ச்சியோடு விசுவநாதனிடம் கொட்டி விட்டேன். விச்சு, சிலை போல், நிஷ்டையில் உட்கார்ந்திருந்தான். எனக்கும் இன்னும் பேச வேண்டுமென்று தோன்றியது.

# பாமாலிவ் லவண்டர்

## வசீகரிக்கும் நறுமணம்....

## பெருமிதத்தையும், அழகையும் அளிக்கிறது!






வசீகரம்...பாமாலிவ் லவண்டர் டால்கம் பெருமிதத்திற்கும், அழகிற்கும் உற்ற நண்பன். சிறிது பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பின்மேல் தூவிக்கொண்டால், அதன் இனிய நறுமணம் உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள். பாமாலிவ் உபயோகித்து எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும், நறுமணத்துடனும், அழகுடனும் விளங்குங்கள்.

பாமாலிவ் டீலக்ஸ்—மயக்கும்
**17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை!**

PT-G-6-TAM.

''எது காரணமென்றாலும், வெட்கமின்றி என்னிடம் சொல்லுடா விச்சு! மனிதன், தன்னைத் தாண்டி விட்டு உலகத்தைப் பார்க்கிறான். எல்லாம் தப்பும் தவறுமாகக் குற்றமும் குறையுமாகத் தோன்றுகிறது. எதையும் தன்னிடமிருந்து முதலில் ஆரம்பிக்கட்டும். நீ சொல்லு விச்சு, எதுவாக இருந்தாலும் நீ சொல்லு.''

தொண்டையை ஒரு தரம் கனைத்துக் கொண்டு, விசுவநாதன் சொன்னான்:

''ரகு! நீ என் மேல் சாட்டிய குற்றத்தை நான் உணர்ந்து எத்தனையோ நாளாயிற்று. மெய்யாகச் சொல்கிறேன். ஒன்றுமறியாப் பிள்ளைப் பருவத்திலிருந்த அவளோடு நான் பழகினேன். அம்புஜம், அழகிதான். உத்தமமான ரத்னம்தான். மங்களத்துக்காக நான் காத்திருந்த வேளையில் அவள் திருமணம் முடிந்துவிட்டது. இன்னார் தான் வரன் என்று நிச்சயிக்கப்பட்டதும், ஹோவென்று அழுத வாறே, தன் உணர்ச்சியைச் சிறிதும் வெளிப் படுத்திக் கொள்ளாத அந்த அம்புஜம் என் அம்மாவிடம் வெட்கத்தை விட்டு என்னைத் தவிர யாரையும் மணந்து கொள்ள மாட் டேன் என்று சொல்லி யிருக்கிறாள். அவள் போற்றி வந்த காதலை, மங்களம் என்னைக் கைவிட்ட நாளிலிருந்து நான் நினைத்து நினைத்து வருந்துகிறேன். சொல்லக் கூச்சமாக இருக்கிறது. ரகு! அம்புஜம் என்னைப் போன்ற ஒரு சமையல்காரரின் புதல்வி. விதி வசத் தினால் இந்த மடைத்தொழிலில் மாட்டிக் கொண்ட எனக்கு, இந்த முக்கியமான காரணத்துக்காக, அம்புஜத்தைப் பிடிக்கவில்லை, ரகு. நானும் குறைகளும் குற்றங்களும் உள்ள சாதாரண மனிதன் தான். என் பள்ளி வாழ்வில், சமையலுக்கு என்று விடுமுறை எடுத்துக் கொண்டு திரும்பி வருகையில் எல்லாம், பள்ளிப் பிள்ளைகளின் பரிகாசம், என் இதயத்தில் சாகாத விஷம் போல் தேங்கி நின்று விட்டது. அந் நாட்களில் இத் தொழிலை அவ்வளவு வெறுத்தேன். அம்புஜத்தின் நஷ்டம் மங்களத்தின் நஷ்டத்தைவிட எத்தனை மதிப்பு வாய்ந்தது என்று நான் அறிவேன்.

''அதனால்தான் ரகு எனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை. ஒரு முறை நான் ஏமாந்தேன். இன்னொருவரை ஏமாற்றினேன். மங்களம் பரவாயில்லை. ஊரை விட்டுப் போய் விட்டாள். அம்புஜம் இதே ஊரில் பிரதி தினமும் குறைந்தது இரண்டு தடவையாவது என் கண்களுக்குத் தென்படுகிறாள். ஒவ்வொரு முறையும் என் குற்றம் என்னை உறுத்துகிறது. இது உனக்குப் பைத்தியக்காரத் தனமாகத் தோன்றலாம்.

ஆனால் ரகோத்தமா, என் நிலைமையில் நீ இருந்து என்னுடைய எண்ணங்களைச் சரி பார்த்தால் ஒப்புக் கொள்வாய். காதல் என்பது உணர்ச்சிகளில் பெரியதொரு பிரச்னை. இங்கே அம்புஜத்துக் கெதிரிலேயே திருமணம் செய்துகொண்டு, திருப்தியோடோ அதிருப்தியோடோ என் குடும்ப வாழ்க்கை போனால் அம்புஜத்துக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்?

''என் தங்கைகளுக்கெல்லாம் திருமணம் நடத்தி வைத்து விட்டேன். வாழ்க்கையில் என் எல்லாக் கடமைகளும் நிறைவேறி விட்டன. இனி சுகமில்லை. துக்கமுமில்லை..... இதற்குமேல் எதற்கடா புதிய தொல்லைகள்?''

விச்சு அழுத்தந் திருத்தமாக, வார்த்து எடுத்த உருக்கைப் போல் பேசி முடித்தான். அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவன் சுபாவத்தையும் சேர்த்துப் பார்த்த போது இனி நிச்சயமாய் விச்சு, இவ்வளவு தான் என்று எனக்குத் தோன்றியது. இளமையிலிருந்தே விக்கிரகம் போல் கம்பீரமாக மௌனியாக, அசையாத அவன் வாழ்க்கை முழுதும் அதே நிலையில் பிரதிஷ்டையானது துல்லியமாய்த் தெரிந்தது.

எனக்கு இன்னும் ஒரு கேள்வி பாக்கி.

''ஏண்டா விச்சு, கிருபானந்தன் எங்கே?''

''எல்லாவற்றையும், கோர்ட்டுக்கும்,— ரேஸுக்கும், மங்களத்தின் ஆடம்பரச் செலவுகளுக்கும் தொலைத்து விட்டு மதுரைக்குப் போய் விட்டான்.''

''மதுரையிலா? எங்கே எந்த இடத்தில் இருக்கிறான்?''

''கங்கா பவன் என்றொரு ஹோட்டலில் சமையல்காரருக்கு அஸிஸ்டெண்டாக இருக்கிறானாம். மங்களம், யாராவது ஒரு சமையல்காரனுக்கென்றே விதிக்கப்பட்டவள் போல் இருக்கிறது'' என்றான்.

யாரோ தெருவில் போகும் போது, பேச்சுப் போக்கில் பரிகாசமாகச் சிரித்தார்கள். கரகரவென்று மஞ்சள் பொன்னாய் வெயில் ஏறி விட்டது. பக்கத்திலிருந்து கவலை இறைக்கும் கிணற்றில் மாட்டை மிரட்டும் ஓசை கேட்டது. எனக்கு நல்ல பசி. விச்சுவைச் சாயந்திரம் பார்ப்பதாகக் கூறிவிட்டு நான் விடை பெற்றபோது, பழையபடியே நீண்ட நாட்களாக நான் இவ்வூர்வாசி போலவே எனக்குத் தோன்றியது.






## ரவீந்திர நாத டாகுர் நூல்கள்

மகாகவி ரவீந்திரநாத டாகுரின் நூற்றாண்டு விழாவை யொட்டி டில்லி சாகித்திய அகாடமியார் டாகுர் நூல்களில் முக்கியமான சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்து, பிரசுரமும் செய்துள்ளார்கள். நம் கைகளில் இன்று அழகான முகப்புப் பொலிவுடன் உருவாய் உள்ளவை நான்கு புத்தகங்கள்.

1. கவிதைத் திரட்டு; 2. கதைத் திரட்டு; 3. நாடகத் திரட்டு. (முதல் பாகம்); 4. விநோதினி (நாவல்).

டாகுரின் நூற்றியொரு கவிதைகளை த. நா. குமாரசாமி அவர்கள் தமிழாக்கியுள்ளார். வங்க பாஷையைத் தம் வசப்படுத்தியவருக்கு இது ஒரு பெரிய காரியமல்ல. எத்தனையோ நூல்களை வங்கமொழியிலிருந்து தமிழில் தந்த பெருமை அவருக்கு உண்டு. ஆயினும் ரவீந்திர நாத டாகுருடைய கவிதைகளைத் தமிழர்களுக்கு வழங்குவதால் அருமையும் சிறப்பும் அவரை வந்து எய்துகின்றன.

டாகுருக்கு நோபல் பரிசு கிடைத்த அந்த நாளில் ஆங்கிலத்தில் டாகுருடைய கீதாஞ்சலி, சிசு, சாதனா முதலிய நூல்களை வாசித்தவர்கள் தாங்கள் வேறொரு உலகுக்கே சென்ற விதமாக மெய்ம் மறந்தார்கள். இன்று ஆங்கில ஆடையை மட்டும் ரவீந்திரர் கவிதைகள் பூணவில்லை. பாரத நாட்டுப் பல பாஷைகளில் அவை அலங்காரமும் சோபையும் பெற்று உலவி வருகின்றன. மற்றப் பாரத மொழிகளில் டாகுரின் கவிதைச் சுவை எவ்விதம் இருக்குமோ தெரியாது. ஆங்கிலத்தில் அவர் சொற்களின் இனிமையும் தண்மையும் போல் தமிழில் இல்லாமை முதலில் சற்று மனக் குறையை உண்டாக்குகின்றன. மொழி பெயர்ப்புத் தமிழில் சுவை யில்லையென்றோ, அல்லது அவைகளில் கருத்து நன்கு வெளியாக மறுக்கின்றன என்றோ கூற இடமில்லை. ஆயினும் ஏதோ ஒன்று நம் உள்ளத்தில் தட்டுகிறது. கவிதையின் வரப்பிரசாதத்தை அள்ளிக் குடிக்க முன் வரும் நம்மை ஏனோ சொற்கள் முழுதும் வசீகரிக்க இயலாமல் விழிக்கின்றன?

டாகுரை மொழிபெயர்ப்பது சுலபமல்ல; ஆனால் சதா பாரதப் பண்பாட்டைப் போற்றிய அவருடைய இலக்கியங்கள், பாரத தேசம் முழுவதற்கும் சொந்தமான பண்பாட்டையும் மரபையுமே அநேகமாகக் கையாளுவதால் இந்நாட்டு இதர மொழிகளில் வங்க பாஷையின் உயிரோட்டம் சிதைந்து விடாது என்று நம்ப இடமுண்டு. கவிஞர் தாமே சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்; சிலவற்றைப் பிறர் ஆங்கிலத்தில் தந்துள்ளதைத் தாம் மேற்பார்வையிட்டுப் பிரசுரிக்க அநுமதி அளித்துள்ளார். அவரே ஆங்கில உருவத்தில் செய்துள்ளவைகளில் கவிதைகளை நுகர்ந்தவர்கள் வங்க பாஷையைப் பயிலாத குறையை உணர மாட்டார்கள் என்று தீர்மானமாகக் கூறலாம். கவிஞருடைய ஆங்கிலமும் மிகவும் ருசியானது; வழுவழுப்பும் வனப்பும் கொண்டது; வெள்ளைக்காரர்கள் முதன் முதலில் அவரது கவிதைகளை ஆங்கில மொழிபெயர்ப்பின் வடிவில் கண்டே வியப்பில் மூழ்கினார்கள்; அவைகளில் நோபல் பரிசு ஏற்கும் தகுதியை உணர்ந்தார்கள். மொழிபெயர்ப்பு எவ்விதமிருப்பின், உட்கருத்தும் உள்ளப் பெருக்கும் அந்நிய பாஷையிலும் சொந்த மொழியில் உள்ளதைப் போல் இதயங்களை வலியக் கட்டி இழுக்கும் என்பதை அவை ருசுப்படுத்தின. தமிழிலும் அவ்விதமே இருக்க வேண்டும் என்ற ஆசை கவி ரவீந்திரரை வங்கத்திலோ அல்லது ஆங்கிலத்திலோ அறிந்தபின் இருக்கும் அல்லவா ? இந்த ஆசை நன்கு பூர்த்தியாகாததை நினைந்து ரசிகர் உள்ளங்கள் சிறிது ஏக்கம் கொள்ளவே முற்படும்.

ஆனால் இக்குறையை ஒருவாறு மறக்கடிக்கவே செய்கிறார் த. நா. குமாரசாமி அவருடைய மற்ற மொழிபெயர்ப்புக்களால். சிறுகதைத் திரட்டை வாசிக்கையில் நம் உள்ளம் எழும்பி வழிகின்றது. அற்புதங்களுக்கு இங்கு எல்லையே இல்லை. ஆனால் ஊன்றிப் பார்க்கையில் இங்கும் ஆங்கில மொழி பெயர்ப்பிலுள்ள சில கருத்துக்கள் நழுவியிருப்பதைக் கவனிக்கவே தோன்றும். உதாரணமாக 'திருஷ்டிதான' என்ற பிரசித்தி பெற்ற கதையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் கதாநாயகி குமுதினியின் சிற்சில உவமை கலந்த பேச்சுக்கள் வருகின்றன. தன் கணவனும், தன் தமையனும், ஒருவரோடொருவர் தனது கண் வைத்தியத்துக்காகச் சண்டையிடுவதையும், அதனால் ஒருவிதமாயும் பரிகாரம் தேட வகையற்ற நிலையில் தான் இருந்ததையும் அழகான ஓர் உவமையினால் சாதித்து விடுகிறாள் குமுதினி; இல்லை; கவிஞர் நம் இதயங்களில் அழுத்தமாய்ப் பதிய வைக்கின்றார் என்று சொல்லுவோமே.

> When they were quarrelling I was saying to myself that it was always the poor grass that suffered most when two kings went to war.

என ஆங்கிலப் பெயர்ப்பில் வரும் இந்த வாக்கியம் தமிழில் காணவே இல்லை. வங்கத்திலில்லாமல் ஆங்கிலத்தில் இது வந்திருந்தாலும் இதன் ஆழத்தை நினைக்காமலும், அதிலடங்கிய நகைச்சுவையை அநுபவிக்காமலும் மேலே செல்லா ரசிகர் உள்ளங்கள். மேலும் 'திருஷ்டிதான' என்பதற்குக் ''கண் கொடை'' என்ற தமிழ் மகுடம் பொருளை விளக்கவில்லையோ என்றே தோன்றுகிறது. வெளிப் பார்வையை விலக்கிய நோக்கை;

—ஆந்தர திருஷ்டியை — 'கண்கொடை' என்பதால் வாசகர்கள் எளிதில் அறிவார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

'விநோதினி' அருமையான படைப்பு. தமிழில் ஓட்டத்துடன் செல்லுகிறது. சமீபத்தில் சாகித்திய அகாடமியின் செயலாளரான கிருஷ்ண கிருபளானி அழகாய் வங்க மொழியில் உண்டான விதமே ஆங்கிலத்தில் தந்திருக்கிறார். அதற்கு இணையாக வரக் கூடியது தான் இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பும்.

விநோதினி ஓர் அற்புத சிருஷ்டி; அவளைக் கொண்டே பாரத சமுதாயத்திலுள்ள இளம் விதவைகளின் மனத் தத்துவத்தை ஆராய்ந்து பார்க்க முடிகிறது. ஒழுக்கத்தை விடவே முடியாத அளவில் கட்டுப்பாடும், அடக்கமும், பெண் இனத்தை எவ்வளவு மேன்மையாய் வைத்துள்ளன என்பதை இந்த நவீனம் மிகத் தெளிவாய்ப் புகட்டுகின்றது. விஹாரியின் இட சித்தமும், நெறியில் உள்ள நம்பிக்கையும் ஆடவர் குலத்தையே எழச் செய்கின்றன. இந்த நாவலைப் பருகாது இருக்க ஒருவராலும் முடியாது.

டாகுரின் நாடகங்கள் தனி இனத்தைச் சேர்ந்தவை. அவைகளுக்கு எவை ஆதாரங்களாக இருக்க முடியுமென்று நினைப்பவர்களுக்கு, 'அவைகளுக்கு அவையே தான் உதாரணங்களாயிருக்கின்றன' என்று பதிலளிக்கலாம். மூன்று சிறந்த நாடகங்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன. ஜீவபலி, சித்திராங்கதா, பிரம்மச்சாரி சங்கம், இம்மூன்றும் வங்கத்தில் பேர் போனவை. மொழிபெயர்த்தவர் டி. எஸ். பார்த்தசாரதி; வங்க மொழியில் நல்ல பயிற்சி பெற்றவர். தமிழாக்கம் சுலபமாயும், நடையின் தெளிவுடனும் இருப்பது பெரும் பாக்கியம்.

மூன்று நாடகங்களும் தனித்தனியே கருத்து விசேஷங்களை விளக்குகின்றன. பிரம்மச்சாரி சங்கம் என்ற மூன்றாவது நாடகம் சமூக வாழ்க்கையிலுள்ள சிற்சில சிக்கல்களைக் குறித்து எழுந்த கலை சிருஷ்டி. நாடகம் முழுவதும் வேடிக்கையும், விஷயங்களைத் துருவி ஆராயும் வேட்கையும் மண்டிக் கிடக்கின்றன. உள்ளத்தை உந்திக் தள்ளும் போராட்டங்கள் உள்ளுக்குள்ளே புரளுகின்றன. சரியான விடையும், வாழ்க்கைப் பயனும் பெறவே நாடகக் காட்சிகள் அமைக்கப் பெற்றுள்ளதை உணர்கிறோம்.

மொழி பெயர்ப்பாளருக்கு இரு மொழிகளிலும் தேர்ச்சி அவசியம். அதோடு முதல் நூல் ஆசிரியரின் கவிதை உள்ளத்தையும், கருத்துச் செறிவையும் சொந்தத்தில் வாங்கி வழங்கத்தகுந்த ஆற்றலும் இருக்க வேண்டும். இந்த அம்சங்களைப் பெற்றுப் பணியாற்றிய இரு மொழி பெயர்ப்பு ஆசிரியர்களுக்கும் நமது மனப்பூர்வமான நன்றியைச் செலுத்தி, அழகாய் அச்சிட்டு அளித்த 'கலைமகள்' காரியாலயத்தாருக்கும் பாராட்டை வழங்குவோம். சாகித்திய அகாடமியார் செய்துள்ள நன்மை தரும் பணிகளில் இதைவிட உயர்ந்தது எது?

—கி. ச.

இந்த நான்கு நூல்களையும் வெளியிட்டோர் சாகித்திய அக்காதெமி, புது தில்லி. விற்பனை உரிமை: கலைமகள் காரியாலயம், சென்னை-4; விலை: முறையே ரூபாய் 5, 7, 6, 5.




சந்திரகிரி அரண்மனை திலகமிடாத நெற்றியைப் போல் களையிழந்து கிடந்தது.

மன்னர் வெங்கடராயர் மஞ்சத்தில் துவண்டு கிடந்தார். வாழ்க்கையை அணு அணுவாகச் சுவைத்து அனுபவித்த சரீரம் தெம்பிழந்து கிடந்தது. எத்தனையோ போர்களில் விரோதிகளைப் புறங் கொண்டோடச் செய்து வெற்றி வாகை சூடிய பரந்த தோள்கள் பலமிழந்து கிடந்தன. அடிக்கடி நினைவு தப்பியது மன்னருக்கு. அவருக்கு நினைவு திரும்பும் வேளையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் மகாராணி பாயம்மா. அவருக்குப் பணிவிடை செய்வதற்காக அல்ல; பட்டத்து இளவரசரைப் பற்றி விவகாரம் பேசி முடிவு கட்ட. கட்டுக்குலையாத மேனியழகோடு கட்டிலின் அருகே உட்கார்ந்திருந்த பாயம்மா, அரசர் கண் விழிக்கிறாரா என்று அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரசரும் கண் விழித்தார். ஆயாசம் அழுத்திய இமைகளை மெல்லத் திறந்து பார்த்த போது பாயம்மா தான் அவர் பார்வையிலே பட்டாள். வெறுப்போடு மறுபடி கண்களை மூடிக்கொள்ள முயன்ற போது ராணி படபடத்தாள். ''என் பிள்ளைக்கு அரசுரிமை மறுக்கப்படுவது அநீதி. உங்கள் முடிவை நான் ஏற்கமாட்டேன்.''

மன்னரின் நெஞ்சு விம்மி உயர்ந்தது. தனது தெம்பை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டாரோ என்னவோ, ''பாயம்மா, என்னை நிம்மதியாகச் சாக விடு. வீண் சாகஸம் செய்யாதே'' என்றார்.

விம்மலும் விசும்பலும் பீறிற்று. ''இருந்தும் என் வாழ்வைக் கெடுத்தீர்கள். இறக்கும் போதும் என் உரிமையைப் பறித்துக் கொண்டு போகாதீர்கள்.'' தேம்பினாள் தேவி.

''உரிமை...? யாருக்கு என்ன உரிமை பாயம்மா? சிக்கராயன் உன் பிள்ளையா? நீ பத்து மாதம் சுமந்து பெற்றாயா அவனை? உன் உயிரின் உயிரா அவன்? உன் ரத்தத்தின் ரத்தமா அவன்? சொல் பாயம்மா.'' அதற்கு மேல் பேச முடியவில்லை. உணர்ச்சி வசப்பட்டு உரக்கப் பேசியதினால் மூச்சு வாங்கிற்று. அப்படியே இமைகளை மூடி மூச்சை நிதானப்படுத்திக் கொண்டு பேசினார். ''உன் தத்துப் பிள்ளையை நான் என்றுமே என் மகனாக ஏற்றுக் கொண்டதில்லை....''

பாயம்மா பத்திர காளியானாள். ''ஏற்றுக் கொள்ளவில்லையா? அப்படியானால் அன்று நான் ஆசையோடு கேட்டதற்கு, 'அப்படியே செய்' என்று அனுமதியளித்தீர்களே, அதன் கருத்தென்ன?''

மன்னர் இதற்கு உடனே பதில் சொல்லவில்லை. சில விநாடிகள் மௌனத்துக்குப் பின் ''எவ்வளவு பெரிய வீரனானாலும் மனிதன் பல சந்தர்ப்பங்களில் பலவீனனாகி விடுகிறான். அதுவும் வயது காலத்திலே வாலிபப்பெண்ணை மணந்து கொண்ட கிழக் கணவனுக்கு அம்மாதிரிச் சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுவது சகஜம்'' என்றார். அவர் இமைகள் மூடியே இருந்தன.

''எந்தச் சந்தர்ப்பத்திலே எது சொன்னாலும் அதைக் காப்பாற்றுவது அரச தர்மம் இல்லையா?'' விவகாரம் பேசினாள் இளைய ராணி பாயம்மா.

''நீ உன்னைக் கைகேயியாக எண்ணிக் கொண்டாலும் நான் தசரதனாக முடியாது பாயம்மா! என்றோ ஒரு நாள் உன் இளமை அழகிலும் இனிய பேச்சிலும் மயங்கிக்கிடந்த நிலையில் குழந்தை இல்லாக் குறையைத் தெரிவித்தாய். ஏதாவது ஒரு குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளட்டுமா என்று கேட்டாய். உன் அறியாமையை எண்ணி நான் உள்ளூறச் சிரித்துக் கொண்டாலும் உன் அழகிலே மயங்கிக் கிடந்த நான் உன் ஆசையை அழிக்க விரும்பாமல் அப்படியே செய் என்றேன். ஆனால் அவனுக்கு அரியணையை ஒழித்துக் கொடுப்பேன் என்று நான் அறிவிக்கவில்லையே?'' ஆத்திரம் மேலிட்ட பேச்சினால் நெஞ்சிலே ஏற்பட்ட புகைச்சல் இருமலாகி மூச்சை கொக்கி போட்டு இழுத்தது. இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு மன்னர் படுக்கையிலே புழுவாகத் துடித்தார்.

அந்த நிலையிலும் கூடப் பதிலைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளவில்லை பட்டத்தரசி. ''இது அநீதி. அக்கிரமம். நம்பிக்கைத் துரோகம்'' என்று ஆர்ப்பரித்தாள்.

இருமலோடும் இளைப்போடும் தவித்துக் கொண்டிருந்த வெங்கடராயர் சட்டென்று திரும்பினார். ''எது அநீதி? எது அக்கிரமம்? ஊர் பெயர் தெரியாத யாரோ ஒரு தாதியின் பிள்ளையை உன் பிள்ளை என்று சொல்லிக் கொண்டு சந்திரகிரியின் சிம்மாசனத்துக்கு

# சரித்திர நெடுங்கதை

உரிமை கொண்டாடுவது அந்நியா? இல்லை—'' இருமல் அவரைப் பேச விடவில்லை.

இத்தனை நேரமும் அறையின் மூலையில் குரோதப் பார்வையுடன் குமுறிக் கொண்டிருந்த ஓர் உருவத் திடமிருந்து வார்த்தைகள் வெடித்தன. ''பாயம்மா, ஏன் வீணாக வாதாடுகிறாய்? செத்துக் கொண்டிருக் கும் கிழவனுக்கு மூளை பேதலித்து விட்டது. என்ன முடிவு வேண்டுமானாலும் செய்து விட்டுப் போகட் டும். நான் உயிரோடிருக்கும் வரை உன் பிள்ளை யைத் தவிர வேறு யாரும் சந்திரகிரி சிம்மாதனத் திலே உட்கார்ந்துவிட முடியாது. சிக்கராயனுக்குச் சிங்காதனம் இல்லையானால் நாடு சின்னாபின்னமாகி அழிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை வெங்கடராயர் உணர்ந்து கொள்ளட்டும்.''

''கொப்பூரி ஜகராயரே, ஏன் கொக்கரிக்கிறீர்?'' என்றார் வெங்கடராயர். ''உமது மகள் பெறாத பிள்ளை மீது இத்தனை பற்று எப்படி ஏற்பட்டது என்பது எனக்குத் தெரியும். எனக்குப் பின் அந்த அநாதைப் பயலுக்கு அரசுரிமை கிடைக்கும் என்ற ஆசையிலே பாவம், உம் சகோதரியின் பெண்ணைக் கொடுத்துச் சம்பந்தியுமாகி விட்டீர். மாப்பிள் ளைக்கு மகிமை கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத் தில் கோபம் வருவது நியாயம்தானே?'' என்றார் ஏளனச் சிரிப்புடன்.

அப்போது சுந்தரமான தோற்றத்தோடு கூடிய ஒரு கம்பீர உருவம் உள்ளே நுழைந்து மன்னரின் கட்டிலை நோக்கி வந்தது.

''ரங்கராயா...!'' என்றார் மரணப் படுக்கையி லிருந்த மன்னர் வெங்கடராயர். அவர் முகத்தில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது.

''சித்தப்பா, வெலுகோட்டி எச்சம்ம நாயக்கர் வந்து கொண்டிருக்கிறார்'' என்றார் ரங்கராயர். மன்னரைத் தவிர மற்றவருக்கு அவரைப் பிடிக்க வில்லை என்பதைக் கடுத்த முகங்கள் காட்டின.

''இந்த நாட்டின் பாளையக்காரர் எல்லாரும் என் பக்கம் என்பது நினைவிருக்கட்டும் வெங்கடராயரே'' என்றார் கொப்பூரி ஜகராயர் — பட்டமகிஷி பாயம் மாளின் தந்தை.

மன்னர் அலட்சியமாகச் சிரித்தார். 'இந்த நாட்டை முப்பது வருடங்களாக நான் ஆண்டு வரு கிறேன். என் சிற்றரசர்களும் பாளையக்காரரும் எப்படிப்பட்டவர்கள் என்பது எனக்குத் தெரியும். வீணாக இந்தப் பூச்சாண்டி காட்ட வேண்டாம்'' என்றார்.

இந்தச் சமயத்தில் மன்னர் படுத்திருந்த அறை யின் திரைச் சீலை விலகியது. ஐம்பது வயது மதிக் கத்தக்க ஒருவர் உள்ளே நுழைந்தார்.
உருண்டு திரண்ட உடல். முறுக்கி





விட்ட மீசை, நிமிர்ந்த நடை, நேரான பார்வை. அந்த நெடிதுயர்ந்த உருவம் மன்னரின் கட்டிலைநோக்கி வேகமாக வந்தது. மன்னரின் அருகிலிருந்த ரங்கராயர் குனிந்து ''சித்தப்பா, எச்சம்மநாயக்கர் வருகிறார்'' என்றார்.

அந்தப் பலவீனமான நிலையிலும் மன்னர் முழங் கைகளை ஊன்றி நிமிர்ந்து உட்கார முயன்றார். அவர் உடலில் ஒரு பரபரப்புத் தோன்றியது. தன்னை வரவேற்க மன்னர் சிரமப்படுவதைக் கண்ட எச்சம்ம நாயக்கர் ஓடோடி அருகில் வந்தார்.

''தங்கள் உடல் நிலை இவ்வளவு மோசமாகி விட்டதென்று எனக்குத் தெரியாது மகாராஜா. தாங்கள் காண விரும்புவதாகக் காலையில் வந்து அறிவித்த தூதுவன்தான் தங்கள் நிலையையும் விளக்கினான். ஓடோடி வந்தேன்'' என்றார் வெலுகோட்டி எச்சம்ம நாயக்கர். இந்த உடலும் வளையுமா, வணங்குமா என்று ஐயப்படும்படி இருந்தது அவர் கைகட்டி அடக்கமுடன் நின்ற நிலை.

''இனி என்னை நம்புவதற்கில்லை எச்சம்மரே. எனக்குப் பின் இந்த நாட்டை யார் கையில் ஒப்படைப்பது என்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அதை நிறைவேற்றி வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு'' என்றார் மன்னர்.

''மன்னரின் கட்டளை எதுவானாலும் அதைச் செயலாக்கக் காத்திருக்கிறான் இந்த எச்சம்மன்'' என்றார் வெலுகோட்டியார்.

''என் ஆணைக்கு உட்பட்ட சிற்றரசர்களையும் பாளையக்காரர்களையும் வரவழைத்து விட்டேன்.''

''ஆலோசனை மண்டபத்திலே அத்தனை பேரையும் பார்த்தேன் மகாராஜா'' என்ற போது எச்சம்மரால் ஜகராயரின் பார்வையைச் சந்திக்காமலிருக்க முடியவில்லை.

''எச்சம்ம நாயக்கரே, எச்சரிக்கிறேன்! மன்னரின் சதித் திட்டத்திலே பங்கு கொள்ள வேண்டாம்'' என்றார் ஜகராயர் தனது இடி முழக்கம் போன்ற குரலில்.

எச்சம்மரின் இதழ்கள் இலேசாக முறுவலித்தன. ''உம்மிடமிருந்து எச்சரிக்கை பெறும் காலம் இன்னும் வரவில்லை. கொப்பூரி ஜகராயரே! என் மன்னர் இன்னும் உயிரோடு தான் இருக்கிறார்'' என்றார்.

மன்னருக்கு நேரத்தை வீணாக்க மனமில்லை. தனது முடிவை எச்சம்மரிடம் தெரிவிக்கத் துடித்தார். 'ஆகவே தொடர்ந்து பேசினார். ''சந்திரகிரி ராஜ வம்சத்தின் ரத்தத்தை மாசுபடுத்த எனக்கு விருப்பமில்லை. ஊர் பெயர் தெரியாத சுவீகாரப் பிள்ளையை விடத் தாயாதியின் பிள்ளையே அரச பதவிக்குத் தகுதியானவன் என்று முடிவு செய்து விட்டேன். ஆகவே என் அண்ணா ராமராயரின் இளைய பிள்ளை ரங்க ராயனை....''தொடர்ந்து பேசியதினால் அவருக்கு இளைப்பு மேலிட்டது. மூச்சுத் திணறியது.

மன்னரின் அவஸ்தையைக் காணப் பொறுக்காத எச்சம்மர், ''எல்லாம் கேள்விப் பட்டேன். தங்கள் முடிவு நல்ல முடிவு. நியாயமான முடிவும் கூட.'' என்று அவர் விருப்பத்தை ஆமோதித்து முடித்தார்.

தன் முன்னாலேயே தன் விருப்பத்துக்கு மாறாகத் திட்டங்கள் தீட்டப்படுவதைக் காணச் சகியாத ஜகராயர் சீறினார். ''நியாயமான முடிவா? அதையும் பார்த்து விடுகிறேன். எச்சம்ம நாயக்கரே, ரங்கராயன் எத்தனை நாளைக்குச் சிங்காதனத்திலே உட்கார்ந்திருக்கிறான் என்பதையும் பார்க்கப் போகிறீர்'' என்று சொல்லி விட்டுத் தன் மகளின் பக்கம் திரும்பி, ''பாயம்மா, எழுந்திரு. இனி உனக்கு இங்கு வேலை இல்லை'' என்று பார்வையினால் கட்டளையிட்டு விட்டுப் படபடப்புடன் வெளியேறினார். தந்தையைப் பின் தொடர்ந்தாள் பட்டத்து ராணி பாயம்மா.

அவர்கள் வெளியேறியதும் மன்னர் ஆலோசனை மண்டபத்தில் கூடி இருக்கும் சிற்றரசர்களையும் பாளையக்காரர்களையும் அழைத்து வரும்படி ரங்கராயனிடம் கூறினார். எல்லோரும் மன்னர் வெங்கடராயரின் கட்டிலருகில் வந்து கூடினார்கள். மன்னரின் நிலையைக் கண்டு அத்தனை பேரின் முகமும் வாட்டமுற்றது. அவர் கூறப் போவதை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

மன்னர் வெங்கடராயர் தனது சக்தியை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு பேசினார். ''என் மதிப்புக்குரிய பாளையக்காரர்களே, சிற்றரசர்களே! இத்தனை காலமும் என்னிடம் உண்மையுடன் நடந்து வந்த உங்கள் விசுவாசத்தை என்றும் மறக்கமுடியாது. என் முடிவு காலம் சமீபித்து விட்டது. எனக்கு எத்தனையோ போர்களில் வெற்றி தேடித் தந்திருக்கிறீர்கள். உங்கள் சேவையை இந்த நாடு மறக்காது. என்னை உங்கள் மன்னராக உள்ளன்போடு ஏற்றுக் கொண்டது போல என் வாரிசான ரங்கராயனிடமும் நீங்கள் விசுவாசத்துடன் நடந்துகொள்ள வேண்டும். வயதிலும் அனுபவத்திலும் முதியவரான வெலுகோட்டி எச்சம்ம நாயக்கரின் பொறுப்பில், அரசியல் அறிவோ போர்த்திறமையோ இல்லாத ரங்கராயனை ஒப்படைத்து விட்டுப் போகிறேன். கொப்பூரி ஜகராயர் சிக்கராயனைப் பொம்மை மன்னனாக்கித் தான் அதிகாரம் செலுத்த ஆசைப்படுகிறார். அவரது சூழ்ச்சியிலிருந்து ரங்கராயனைக் காப்பாற்றுவது உங்கள் பொறுப்பு'' என்று சொல்லி விட்டு அப்படியே படுக்கையில் ஆயாசமிகுதியால் சாய்ந்து விட்டார். இமைகள் மூடிக் கொண்டன. இதயம் அலை அலையாக மேலெழும்பித் தணிந்தது.

''மகாராஜா! இங்குள்ள பிரபுக்கள், பாளையக்காரர்கள், சிற்றரசர்களின் சார்பில் நான் வாக்குறுதி செய்து தருகிறேன். இது உங்கள் கட்டளை மட்டுமல்ல, எங்கள் கடமையும் கூட. ராஜ வம்சத்திலே பிறந்த ரங்கராயரையே நாங்கள் சந்திரகிரியின் மன்னராக ஏற்போம். நீங்கள் கவலையே பட வேண்டாம்'' என்றார் வெலுகோட்டி எச்சம்மர். அவர் குரல் தழுதழுத்தது.

அணையும் விளக்கான வெங்கடராயர் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தார். ''எச்சம்மரே!'' என்று அழைத்து அவரது கரத்தைப் பற்றிக் கொண்டார். அவர் அருகிலே உள்ள ஓர் ஆசனத்தின் மீது மணிமகுடமும் போர் வாளும் ஒளி வீசி ஒய்யாரமாகக் கொலுவீற்றிருந்தன. எச்சம்மரின் கரத்தை அதன் மீது வைத்து ''இதோ இந்த மகிமை பொருந்திய எனது மூதாதையரின் மணிமகுடத்தையும் வீர வாளையும் ரங்கராயனுக்காகக் காப்

---


பார்த்துக் கொடுப்பது உமது பொறுப்பு'' என்றார். அடுத்த வினாடி அவர் பிடி தளர்ந்தது. கரங்கள் துவண்டு தொய்ந்து விழுந்தன.

1564 தக்காணத்தின் தலைவிதி நிர்ணயிக்கப்பட்ட வருடம். பாமினி சுல்தான்களின் கூட்டுறவினால் தலை நிமிர்ந்து நின்ற விஜயநகர சாம்ராஜ்யம் தரைமட்டமாக்கப்பட்டது. ராமராயரின் தலையைக் கொய்து ஈட்டி முனையிலே செருகிக் கொண்டு கூத்தாடினார்கள், இந்து சாம்ராஜ்யத்தைக் கொள்ளை யிட்ட கொடியவர்கள். தலைக் கோட்டைப் போரிலே தலைவனின் தலை போன செய்தி கேட்டதும் அரண்மனை அல்லோல கல்லோலப் பட்டது. முடிந்ததை அள்ளிக் கொண்டு தெற்கே ஓடினார்கள், தலைநகருக்குள் புகுந்து பகைவர்கள் வெறியாட்டம் ஆடுவதற்குள் வெளியேறி விட வேண்டுமென்ற தவிப்போடு. நிச்சயமாகத் தோல்வியையே எதிர்பார்த்துப் போரிட்ட பகைவர்களுக்கு – போர்க்களத்திலும் கூடப் பொழுது தோல்விமுகமாகப் போய்க் கொண்டிருக்கையில், திடீரென்று அற்பனுக்கு அருநிதி கிடைத்தது போல வெற்றி தேவதையே சதி செய்து வினைர்களின் தோளிலே போய் உட்கார்ந்து கொண்டால்? அவர்களுக்குத் தலைகால் புரியுமா? சுந்தர நகரத்தைச் சுட்டெரித்துச் சுடுகாடாக்கினார்கள். எதையுமே விட்டு வைக்கவில்லை. என்றுமே தலைதூக்க முடியாதபடி சிதைந்த விஜயநகர சாம்ராஜ்யத்தின் அழிவிற்குப் பின் அரவாடு வமிசத்தினர், சந்திரகிரியைத் தலைநகரமாகக் கொண்டு தலையெடுக்க முயன்றார்கள். வாழ்ந்து கெட்ட வமிசத்தின் வாரிசாக – சிற்றரசை நிறுவிச் சிறப்புடன் ஆண்டார் திருமலைராயரின் இரண்டாவது மகனான வெங்கடராயர். தன் வாரிசாக அரியணையில் அமர ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்ற குறை அவரைக் காலமெல்லாம் வாட்டி வந்தது. அதற்காகக் காலங்கடந்து கூட ஒரு கலியாணம் செய்து கொண்டார். பாயம்மாவின் கரம் பற்றினார். ஆனால் பலன் கிடைக்கவில்லை. பகையை வளர்த்துக் கொண்டதுதான் மிஞ்சிற்று. நாடு இரண்டு பட்டது. வெங்கடராயரின் மறைவிற்குப்பின் ரங்கராயன் அரியணை ஏறினாலும், அவரை அமைதியோடு ஆள விடவில்லை கொப்பூரி ஜகராயர். சிக்கராயனை வைத்துக் கொண்டு சின்னத்தனம் செய்யலானார். சிற்றரசர்களையும் பாளையக்காரர்களையும் தம் பக்கம் இழுத்துக் கொள்ளப் பல வழிகளைக் கையாண்டார். அதில் வெற்றியும் கண்டார்.

அரசியல் சாகசங்களில் அனுபவம் இல்லாத ரங்கராயருக்கோ மனிதர்களை எடைபோடும் திறமையில்லை. யார் எதைச் சொன்னாலும் அதை நம்பும் அப்பாவியாக இருந்தார். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் மன்னரை வினைர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். உடன்பிறந்தே கொல்லும் வியாதியைப் போல அருகிலிருந்து கொண்டே அவருக்குத் துரோகம் செய்தார்கள். அத்தகைய தன் ஆட்களை ஜகராயர் அரண்மனையில் உலவ விட்டிருந்தார்.

வெங்கடராயரின் மரணப் படுக்கையிலே, அவர் முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதாக வாக்களித்த பாளையக்காரர்கள், சிற்றரசர்களில் பலர் இன்று ரங்கராயருக்கு எதிராக ஜகராயரோடு சேர்ந்துகொண்டார்கள். அவர்களாகவே சேர்ந்தார்களா? இல்லை. ஜகராயரின் சூழ்ச்சி திம்மநாயக்கரின் உருவிலே சந்திரகிரி அரண்மனையிலேயே எத்தனையோ வேலைகளைச் செய்தது.

எச்சம்ம நாயக்கரைக் கண்டால் எப்போதுமே பிடிக்காது திம்மநாயக்கனுக்கு. வெங்கடராயர் கடைசிக் காலத்தில் வெறுகோட்டி எச்சம்மருக்கு அளித்த மரியாதையிலே மனம் புழுங்கிப் போனான். இது போதாதா கொப்பூரி ஜகராயருக்கு? ஆகவே அடுத்துக் கெடுக்கும் காரியத்தை அழகாகச் செய்யும்படி அவனை ரங்கராயரின் அருகிலேயே இருக்கும்படி ஏற்பாடு செய்தார்




ஜகராயர். விசுவாசமுள்ள சிற்றரசர், பாளையக்காரர் ஒவ்வொருவரையும் பற்றி விகல்பமாக ஏதாவது வதந்திகளைக் கிளப்பி விட்டுக் கொண்டிருந்தான் திம்ம நாயக்கன். யாரையும் சந்தேகக் கண் கொண்டே பார்க்கும்படி கற்பித்தான் துரோகி திம்மன்.

இந்நிலையில் எச்சம்ம நாயக்கர்...?

வெங்கடராயருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முழு மூச்சோடு முனைந்து நின்றார். அரசர் இப்படி யெல்லாம் நடப்பது முறையல்ல என்று தம் எதிர்ப்பைத் தெரிவித்தார். தம் சுதந்திரத்தில் எச்சம்மரின் ஆதிக்கம் அளவுக்கு மீறி இருப்பதாக ஓர் எண்ணத்தை திம்ம நாயக்கன் மன்னரின் மனதில் விதைத்து விட்டான். அந்த விஷ வித்து வேரூன்றி மரமாக வளர்ந்து பலன் தரும் பருவத்தையும் எதிர்பார்த்திருந்தான்.

கோட்டையை எழுப்புவது தான் கஷ்டம்; இடித்துத் தரை மட்டமாக்குவது வெகு சுலபம். வெங்கடராயருக்காக எச்சம்மர் பாளையக்காரர்களைக் கொண்டு ரங்கராயரைச் சுற்றி எழுப்பிய நல்லெண்ணம் என்ற கோட்டையில் நாலாபக்கமும் விரிசல் கண்டு, விழும் நிலையிலிருந்தது. தன் மீது அரசரின் உள்ளத்திலே கசப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை





அறிந்தும்கூட எச்சம்மர் தம் கடமையை மறக்கவில்லை.

ஒரு நாள்.....

''மகாராஜா, தங்கள் சிறிய தகப்பனுர் மரணத் தறுவாயில் சொன்ன வார்த்தைகளை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். சிற்றரசர்களும் பாளையக்காரர்களும்தான் நமது பலம். அவர்களில் பலரை நீங்கள் பகைத்துக் கொண்டிருப்பது..''என்று முடிக்காமல் நிறுத்தினுர் எச்சம்மர்.

''என் எதிரிகளுடன் உறவாடும் துரோகிகளையா நமது பலம் என்று நினைக்கிறீர்கள்?'' கிழவர் எச்சம்மரைப் பார்க்காமலேயே பதில் சொன்னுர் மன்னர் ரங்கராயர்.

''எதிரியிடம் சேரும் எண்ணமுள்ளவனின் மனத்தையும் மாற்றி நம்மை விட்டுப் போகாமல் செய்வதுதான் அரசியல் தந்திரம் அரசே. அவர்கள் மீது யாரோ சொன்ன ஆதாரமற்ற செய்திகளை நம்பிக் கொண்டு....''

''பொறுப்பற்ற முறையிலே நடந்து கொண்டதாகக் குற்றம்சொல்லுகிறீர்களா?''

''உங்கள் மீது குற்றம் சாட்டுவது என் நோக்கமல்ல. அன்று உங்கள் தலைமையை ஏற்க முடியாதென்று இரண்டு பேருடன் வெளியேறிய ஜகராயரின் பக்கத்திலே இன்று இருபது பேர் துணை சேர்ந்து விட்டார்கள். இந்த நிலையை வளர விடக் கூடாது என்று தான் சொல்லுகிறேன்.''

மன்னரின் ஒவ்வோர் அசைவையும் கண்காணித்து வரும் இம்ம நாயக்கன், எச்சம்மரோடு மன்னரைத் தனித்துவிடுவானு?

''மகாராஜா கொப்பூரி ஜகராயரிடமிருந்து ஒரு தூதுவன் தங்களைக் காண வந்திருக்கிறுன். ஏதோ ஒரு லிகிதம் கொண்டு வந்தான். இதோ அதை நானே வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று உள்ளே நுழைந்தான் குள்ளநரி இம்மன்.

மன்னர் ரங்கராயரின் புருவங்கள் நெரிந்தன. ' ஜகராயர் எனக்குக் கடிதம் அனுப்பும் படியான காரணம் எதுவாக இருக்கும்?'' என்று அவராகவே கேட்டுக் கொண்டார்.

''புதுமையாக என்ன இருக்கப் போகிறது? அவரது சூழ்ச்சியிலே இது ஒரு புதிய திருப்பமாக இருக்கலாம். அரசே, அவசரப்பட்டு எவ்வித முடிவுக்கும் வர வேண்டாமென்று மட்டும் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றுர் எச்சம்மர்.

ரங்கராயர் இம்ம நாயக்கரிடமிருந்து கடிதத்தை வாங்கிப் படிக்கலானுர்.

''சந்திரகிரி வம்சத்தின் அரியணைக்கு உரிமையானவர் தாங்கள் இல்லை என்று கருத்து வேறுபாடு கொண்டு உங்கள் தலைமையை ஏற்காமல் தனித்துப் போன நானும் எனது சகாக்களும் இன்று மனம் மாறி, ராஜ வம்சத்தின் ரத்தக் கலப்புள்ள தாங்களே நாட்டையாளும் உரிமையாளர். தகுதி வாய்ந்தவர் என உணர்ந்து கொண்டோம். ஆகவே பழைய பகைமையை மனத்தில் கொள்ளாமல் உங்கள் ஆட்சியின் கீழ் விசுவாசமுடன் உழைக்க முன் வரும் எங்களைக் கௌரவமுடன் வரவேற்று ஏற்றுக் கொள்ளுவதானுல் நாங்கள் உங்கள் முன்வந்து விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேம். இப்படிக்கு

**கொப்பூரி ஜகராயர்.**

கடிதத்தைப் படித்த ரங்கராயரின் முகத்திலே சிந்தனைத் திரையிட்டிருந்தது. மௌனமாக அதை எச்சம்மரிடம் நீட்டினுர். கடிதத்தைப் படித்த எச்சம்மர் இடிபோன்ற குரலில் சிரித்தார். ''விந்தையான கடிதம், வியப்பூட்டும் செய்தி! ஒரு பூனை இனி தான் மரக்கறி உணவைத் தவிர வேறு எதையும் தொடப்போவதில்லை என்று சொல்கிறது.''

கடிதத்தின் வாசகம் முன்பே தெரிந்தாலும் படிப்பது போலப் பாவனை செய்து கொண்டிருந்த இம்மனுக்கு எச்சம்மரின் சிரிப்பு எரிச்சலைக் கொடுத்தது. ''நம் விரோதி என்பதற்காக அவர்கள் சொல்லும் எதையுமே விபரீதமாக எடுத்துக்கொள்ளுவது அழகல்ல'' என்றுன் அவன்.

''இம்மநாயக்கரே! உம்மை விட எனக்கு ஜகராயரைப் பற்றி அதிகம் தெரியும்'' என்றுர் எச்சம்மர்.

''அப்படியானுல் இந்தக் கடிதத்தில் அவர் தனது உண்மையான உள்ளத்தைத் தெரிவிக்கவில்லை என்கிறீர்களா?''

''அதில் யாருக்குச் சந்தேகமிருந்தாலும் எனக்குக் கொஞ்சமும் கிடையாது!''

இவர்கள் சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல் சிந்தனையிலிருந்த ரங்கராயர், ''உன்





மைதான். நேற்றுவரை என் பரம வைரியாக இருந்த ஜகராயர் இன்று எனக்குப் பணிந்து வருவதாக எழுதி இருப்பது விந்தையாகத் தானிருக்கிறது'' என்றார்.

''தன் தவற்றை உணர்ந்து கொண்டு விட்டதினால் ஏன் இருக்கக் கூடாது? குற்றம் செய்வது இயற்கை. அதை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் போது நாம் மதிப்புக் கொடுப்பது தான் மனித தர்மம் அரசே!'' என்றான் இம்ம நாயக்கன்.

எச்சம்மரின் விழிகள் வியப்பைத் தெரிவித்தன. ''ஏது இன்று இம்மநாயக்கரின் பேச்சு முற்றிலும் புதிய பாதையில் செல்லுகிறதே!'' என்றார். பிறகு மன்னரிடம், ''மகாராஜா! இந்தக் கடிதத்தை நீங்கள் நம்ப வேண்டாம். இதன் பின்னால் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது'' என்று எச்சரித்தார்.

இம்ம நாயக்கன் சும்மா இருப்பானா? ''அரசே, இன்று தங்களுடைய பெருமையையும் பலத்தையும் தகுதியையும் உணர்ந்து கொண்டு விட்டார் ஜகராயர். தங்களை விரோதித்துக் கொண்டு வாழ முடியாது என்பதை அறிந்து தங்கள் நட்பை வேண்டுகிறார். இதில் சந்தேகப்பட ஏதுமில்லை'' என்று இச்சகம் பேசினான் நீசன். எச்சம்மரின் மீசை துடித்தது. ''பாயம்மாவின் ஸ்வீகாரப் புத்திரன் சிக்கராயனைச் சிங்காதனத்தில் அமர்த்த இது ஒரு சூழ்ச்சி. புலி பதுங்குவது பாய்வதற்காகத்தான் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டாம்.''

''புலி பதுங்கவில்லை. தன் எதிரியின் பலம் கண்டு பயந்து ஓடி வருகிறது - சரணாகதி யென்று!''

மன்னர் குழம்பினார். இம்மன் மனத்துக்குள் குதூகலித்தான். எச்சம்மரோ தவித்தார்.

''வெங்கடராயருக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றக் கடமைப் பட்டவன் என்ற முறையில் சொல்லுகிறேன்; ஜகராயரின் இந்தப் பணிவின் பின்னால் ஏதோ பயங்கரம் இருக்கிறது'' என்றார் எச்சம்மநாயக்கர்.

இம்ம நாயக்கன் தனது கடைசி ஆயுதத்தை வீசினான். ''அடிக்கடி இறந்து போன அரசரை நினைவு படுத்தி, மன்னர் ரங்கராயருக்குத் திறமைக் குறைவு என்று குத்திக் காட்ட வேண்டாம். நமது அரசருக்கும் ஆராய்ந்து பார்க்கும் திறனுண்டு என்பதை மறந்து விடாதீர்கள், எச்சம்ம நாயக்கரே!''

தன் கௌரவத்தைக் காக்கப் பேசிய இம்ம நாயக்கன் அரசரின் எண்ணத்திலே உயர்ந்து விட்டான். ''ஜகராயரின் கடிதத்திலுள்ள வாக்கியங்கள் உண்மையானால் நான் அதிர்ஷ்டசாலிதான். இம்மநாயக்கரே, ஜகராயரின் நட்பும் ஒத்துழைப்பும் நமக்குக் கிடைக்குமானால்....'' கனவு காண ஆரம்பித்து விட்டார் ரங்கராயர்.

''உங்கள் புகழும் வலிமையும் பெருகும். அழிந்த விஜயநகர சாம்ராஜ்யத்தின் பெருமையைக் கூட மறுபடி நிலைநாட்டி விடலாமே!'' ஆசையை வளர்த்தான் இம்மன்.

''இச்சகம் பேசி ஏன் இப்படி மன்னரின் மனத்தைக் கெடுக்கிறாய் இம்மா? நீரும் நெருப்பும் ஒன்று சேர முடியுமா? பகலும் இரவும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் தான் தோன்ற முடியுமா?''

''கலகமும் குழப்பமும் போரும் புகைச்சலுமாக நாடு இரண்டு பட்டுத் திண்டாட வேண்டும்; அமைதியின்றி அரசர் அல்லல் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்—இதுதானே உமது விருப்பம்? அப்போது தானே நீர் இங்கு செல்வாக்குடன் வாழ முடியும்''— சந்தர்ப்பமறிந்து சாகசமாகப் பேசினான்.

''இம்மா! திமிராகப் பேசாதே. நீ யார் என்பது எனக்குத் தெரியும். நான் உன்னைக் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன்'' என்றார் எச்சம்மர்.

''எச்சம்மரே! ஏன் வீண் வாதம்? இம்ம நாயக்கர் சொல்லுவதிலும் நியாய மிருக்கிறது'' என்றார் ரங்கராயர்.

''அரசே, தங்களைக் குறை கூறுவதற்கு மன்னிக்க வேண்டும். நல்லவர்களை, உங்கள் நலனில் அக்கறை கொண்டுள்ளவர்களைப் பகைத்துக் கொள்ளுகிறீர்கள். சூழ்ச்சிக்காரர்களின் கைப் பொம்மையாகி விடுவீர்களோ என்று அஞ்சுகிறேன்.''

''பார்த்தீர்களா, பார்த்தீர்களா? என்னைச் சூழ்ச்சிக்காரன் என்று வர்ணிப்பதை?'' பதறினான் பாசாங்குக்காரத் இம்மன்.

''சூழ்ச்சிக்காரர் மட்டுமல்ல; இம்மநாயக்கர் துரோகி என்பதையும் சந்தர்ப்பம் வரும் போது நிரூபித்துக் காட்டுவான் இந்த எச்சம்மன்'' என்றார் வெறுகோட்டி வீரர்.

கிழவனின் வீர முகத்தைச் சந்திக்க முடியாத இம்மன் அரசரின் சலுகையை நாடினான். ''அரசே! எச்சம்ம நாயக்கரின் எதேச்சாதிகாரத்தை வெறுத்துத் தான் இன்று பலர் உங்கள் பக்கமிருந்து விலகிக் கொண்டிருக்கிறார்கள்.''

தன் பலம் குறைந்து வருவதை எண்ணி உள்ளூறப் புழுங்கிக் கொண்டிருந்த நிலையில் அதற்கு மாற்றானைக் காரணமாக்கிக் காட்டவே மன்னரின் புண்பட்ட மனத்துக்கு அது இதமாக இருந்தது. எச்சம்மரின் மீது எரிந்து விழுந்தார். நோயைக் குணப்படுத்தும் மருந்து கசப்பாக இருக்கும். அதை நோயாளி வெறுப்பதும் சகஜம்தானே? ''எச்சம்ம நாயக்கரே, நீங்கள் இப்படி என் சுதந்திரத்தில் குறுக்கிடுவதை இனி என்னால் பொறுக்கவே முடியாது. உங்கள் ஆலோசனைகளை வரவேற்கிறேன். ஆனால் என்னை அடக்கி ஆளுவதை நான் விரும்பவில்லை'' என்றார்.

மன்னரின் இந்தக் குற்றச் சாட்டினால் கோபங் கொள்ளவில்லை எச்சம்மர். இப்படி ஒரு நாள் நேருமென்று எதிர்பார்த்தவர் தானே! ''இம்மாதிரி எண்ணம் உங்கள் மனத்தில் தோன்றியதற்காக வருந்துகிறேன் அரசே. உங்கள் தந்தை வெங்கடராயர் என்னைக் கலக்காமல் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டார்'' என்றார்.

''அதற்காக நானும் உங்கள் விருப்பப்படி வெல்லாம் ஆட வேண்டு மென்று கட்டாயப் படுத்துகிறீர்களா?''

''கட்டாயமில்லை. என் கடமையைச் செய்கிறேன். மன்னர் சாகும் போது எனக்கிட்ட கட்டளை இந்த நாட்டை விரோதிகளிடமிருந்து காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்பது. ஆகவே......''

எச்சம்மரைப் பேச விடவில்லை இம்மன். எங்கே தான் விரித்த வலையில் இழிசல் கண்டு மன்னர் தப்பி விடுவாரோ என்று பயந்தான்



குளுமை... இதம்...
சௌகரியம்...

இயற்கையான குளுமையைப் பெற மிகச் சிறந்த சாதனம்

ஒரு டிராபிகல்
மின்சார விசிறி



ஒரு S.E.I. தயாரிப்பு

**Tropical**

**DE LUXE**

**ட்ராபிகல் டீலக்ஸ்**

டபிள் பால்பேரிங்குகளோடு கூடியது

★

ஏஜண்டுகள்:

தி ஓரியண்டல் மெர்க்கண்டைல் கம்பெனி லிமிடெட்

கல்கத்தா, பம்பாய், கான்பூர், டெல்லி, சென்னை

# ஆஸ்தமா பிராங்கைடீஸ் குளிர்சுரம்

முதலியவைகளை எப்படி அடக்குவது

மூச்சுத் திணறல், இருமல், சிரமப்பட்டு மூச்சு விடுதல், சுவாசம் தடைப்படுதல் ஆஸ்த்மா, ப்ராங்கைடீஸ், ஜலதோஷம், குளிர், சுரம் முதலிய உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இப்பொழுது மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டு நிவாரணம் அடையலாம். இந்த நவீன விஞ்ஞான அமெரிக்க மருந்து, இரத்தத்தின் மூலமாக சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மற்றும் மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் மற்றும் சிரமப்பட்டு மூச்சு விடுதல் இல்லாமல் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். பூரண திருப்தி உங்களுக்கு அது நிச்சயமாக அளிக்கும்.

# கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு எக்சீமா முதலிய உபாதைகளை உங்களால் தாங்கமுடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி, மூலகாரணமான இந்தக் கிருமிகளை ஒழிக்கும் வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி, மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேலாகப் பரவும் படை, முகப்பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர்தாமரை முதலிய உபாதைகளை குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தி அது நிச்சயமாக அளிக்கும்.

பாவி. ''படை திரட்டிப் போர் புரிந்து வெற்றி கொள்ள வேண்டிய விரோதி, வலிய வந்து நமக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகச் சொல்லும் போது நாம் ஏன் அவனை வரவேற்கக் கூடாது?

''உண்மைதான்'' என்று ஒத்துப் பாடினார் மன்னர். உண்மை ஒளிந்து கொண்டு விட்டது என்பதை உணர்ந்தார் எச்சம்மர். இருந்தாலும் அமைதியாகவே, ''அரசியல் சூழ்ச்சிகளிலே ஆயிரம் முறைகள் உண்டு. ஜகராயரின் இந்தக் கடிதத்தை என் மனம் நம்ப மறுக்கிறது'' என்றார்.

''எனக்கு நம்பிக்கை ஏற்படுகிறது'' என்றார் மன்னர். இல்லை, விதி அப்படி அவரைப் பேச வைத்தது.

''ஜகராயரைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்பதாகத் தீர்மானித்து விட்டேன்.''

''உங்கள் முடிவை ஏற்கவோ, ஜகராயர் வருவதைப் பார்க்கவோ நான் இங்கு இருக்க மாட்டேன். இன்றே எனது கோட்டைக்குத் திரும்புவது என்று முடிவு செய்து விட்டேன்'' என்றார் வெலுகோட்டியார்.

''உங்கள் ஒருவருக்காகச் சந்திரகிரி மன்னன் தன் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்ள விரும்பவில்லை.'' மன்னரின் வாக்கில் சனி வந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் போது பாவம் அவர் என்ன செய்வார்? ஆனால் உள்ளுணர்வின் உறுத்தலைத் தாள முடியாமல், ''எச்சம்மரே! ஏன் இந்தப் பிடிவாதம்? விரோதியையும் நண்பனாகப் பாவிப்பது நமது பண்பாடல்லவா?'' என்றார்.

''படமெடுத்தாடும் பாம்பு அழகென்று சொல்லி அருகில் போய் அதைப் பிடித்து விளையாட ஆசைப்படும் குழந்தையைப் போல் இருக்கிறது உங்கள் செயல். மன்னிக்க வேண்டும் மகாராஜா! என் மனத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை. ஆனால் மறுபடியும் கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டுச் சொல்கிறேன். வெங்கடராயருக்கு வாக்குக்கொடுத்த நாக்கல்லவா? அதனாலே மறுபடியும் எச்சரிக்கிறேன். ஜகராயரை நம்ப வேண்டாம். அவன் உங்கள் விரோதி.'' பதிலை எதிர்பார்த்து நிற்கவில்லை. கிளம்பி விட்டார்.

''எச்சம்ம நாயக்கரே, நில்லும்'' என்று தழு தழுத்தார் ரங்கராயர்.

''இனி உங்கள் சுதந்திரத்துக்குக் குறுக்கே நான் நிற்க மாட்டேன் அரசே. நண்பனாக வருகிறான் ஜகராயன் என்று நினைத்துப் பாதுகாப்பு இல்லாமல் இருக்காதீர்கள். எதற்கும் காவல் படையுடன் எச்சரிக்கையாக இருங்கள். நான் வருகிறேன். ஆனால் இந்த எச்சம்மன் எங்கிருந்தாலும் மன்னனின் க்ஷேமத்தில் நினைவுள்ளவனாகத்தான் இருப்பான்.'' சத்தியத்தின் பாதுகாப்பு, தர்மத்தின் கவசம் ரங்கராயரை விட்டு விலகிச் சென்றது.

''அப்பா! உங்களைச் சுற்றி இருந்த கட்டுக்கள் அறுந்தன'' என்றான் துரோகி திம்மன்.

''திம்மராயரே!'' என்றார் அரசர். அவர் விழிகள் நெருப்புக் கோளங்களாயின. ''வாயை மூடும். எச்சம்மரைப் போன்ற ஒரு ராஜ விசுவாசியைக் காண்பதரிது.'' கை நழுவிப் போன பொக்கிஷத்தை எண்ணிக் கலங்கி என்ன பயன்?

மன்னனின் மனம் மாறி விடுமோ என்று பயந்தான் சூழ்ச்சிக்காரன். உடனே, ''எனக்குத் தெரியாதா அரசே! நல்லவர்களும் அறிவாளிகளும் கூடச் சில சமயங்களில் தவறிவிடுகிறார்கள் என்று சொல்ல வந்தேன்.'' பசப்பினான் பாவி.

மனம் குழம்பிப் போயிருந்த மன்னர், ''என்ன சொல்கிறீர்?'' என்று கேட்டார்.

''உங்கள் நட்பை வேண்டி, உங்கள் தலைமையை ஏற்றுப் பணிந்து வரும் ஜகராயரைப் பகைவனைப் போலப் படையுடன் வரவேற்கச் சொல்லி விட்டுப் போகிறாரே எச்சம்மர், அதைத்தான் சொல்லுகிறேன்'' என்றான் திம்மநாயக்கன்.

''அப்படியானால் காவல் படையின் பாதுகாப்புக்கூட வேண்டாம் என்கிறீர்களா?''

''வேண்டாம், மகாராஜா! கோட்டை வாசலிலும் நகரத்திலும் அரண்மனையிலும்



வீரர்களை நிறுத்தி வைத்து வரவேற்றால் உங்கள் நல்ல எண்ணத்தில் சந்தேகம் கொள்வார் ஜகராயர். பரஸ்பர நம்பிக்கையும் நட்பும் வளர அது தடையாக இருக்கலாம்.''

''உண்மைதான். பணிந்து வருபவனை வரவேற்கப் படைகள் எதற்கு? விருந்தாளியாகவே வரவேற்போம்.''

விரோதியை விருந்தாளியாகவே வரவேற்றார் மன்னர். அந்தக் கடிதம், இந்த வரவேற்பு, இவற்றின் பின்னால் எல்லாம் திம்மநாயக்கனின் சூழ்ச்சி எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை அறியவில்லை அப்பாவி ரங்கராயர். கொப்பூரி ஜகராயரைக் கோலாகலமாக வரவேற்கக் காத்திருந்தார் அரசர். கோட்டையின் காவல் பொறுப்பை கயவன் திம்மநாயக்கன் ஏற்றிருந்தான். ஆபத்தை உணராத மன்னர் பகைமை மறைந்தது, பாடு தீர்ந்தது என்ற மகிழ்ச்சியோடு உப்பரிகையில் இருந்து ஜகராயரின் வரவை எதிர்நோக்கிக்

கொண்டிருந்தார். புழுதிப் படலம் புயல் போலத் தெரிந்தது. திகைப்போடு திரும்பினார்! செம்புழுதியின் செய்தி கேட்க?

உடனே திம்மன், ''விருந்தாளியாக வருபவர்கள் தங்கள் மதிப்புக்கு ஏற்றபடி தக்க பரிவாரங்களுடன் வரவேண்டாமா?'' என்று குழப்பினான்.

''பரிவாரங்களா? பெரும் படையே அல்லவா வருகிறது? எனக்கென்னவோ சந்தேகமாகவே இருக்கிறது திம்மநாயக்கரே!''

''அவசரப்படாதீர்கள், அரசே! இன்னும் அருகில் வரட்டும் பார்க்கலாம்'' என்றான் திம்மன். அரசரின் மயக்கம் தெளிந்துவிடக் கூடாதே என்ற தவிப்பு கலந்திருந்தது அவன் பேச்சில்.

மன்னர் மயக்கத்திலிருந்து விடுபட்டுக் கொண்டுதான் இருந்தார். ஆனால் காலம் கடந்துவிட்டது. அடக்கமில்லாத பெண்ணைப் போலக் கோட்டையும் கொத்தளமும் பாதுகாப்பின்றி எதிரியை வரவேற்கத் திறந்து கிடந்தன. புயலைப் போல முன்னேறி வந்து கொண்டிருந்தார்கள் பகைவர்கள். அரசர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே காவலாளிகளைக் கொன்று குவித்தார்கள் ஜகராயரின் குதிரைப் படை வீரர்கள்.

''ஐயோ! மோசம் போனேன்'' என்று கத்தினார் ரங்கராயர். ''யாரங்கே? சிங்கா, திருமலை, பெத்த வெங்கடா'' என்று கூவி அழைத்தார். மன்னரின் குரலுக்கு யாருமே அசையவில்லை.

அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டு உருவிய வாளுடன் முன்னால் வந்து நின்றது கொப்பூரி ஜகராயர்தான். ''ஹ...ஹ...ஹா! ஏன் வீணாகக் கத்துகிறாய்? உன் குரலுக்குக் கும்பிடு போட்டு இனி யாரும் ஓடி வர மாட்டார்கள்'' என்றார்.

''திம்மா......?'' என்றார் திகைப்போடு.

திருடன் தன் உண்மைச் சொரூபத்தைக் காட்டினான். ஜகராயரின் அருகில் போய் நின்று கொண்டு ''இந்த நிமிட முதல் நீங்கள் ஜகராயரின் கைதி. ஆர்ப்பாட்டம் செய்யாமல் அமைதியாக இருந்தால் உயிர் பிழைக்கலாம். இல்லையேல்.....'' என்று ஏளனமாகச் சிரித்தான்.

''அட, துரோகி!'' என்றார் அடி வயிற்றிலிருந்து அரசர். பிறகு அமைதியாக, ''எச்சமரின் எச்சரிக்கையை உதாசீனம் செய்ததற்குத் தகுந்த பலன் கிடைத்து விட்டது'' என்றார் தலை கவிழ்ந்தபடி.

''ரங்கராயா! இன்றோடு உன் அரச வாழ்வு முடிந்தது. மறுபடியும் அரியணை ஏறலாம் என்ற எண்ணத்தை விட்டுவிடு'' என்று கொக்கரித்தார் கொப்பூரியார்.

''இது நம்பிக்கைத் துரோகம். நண்பனாக வருகிறேன் என்று சொல்லி விட்டு நயவஞ்சகமாக நாட்டைப் பிடிப்பது பெருமையில்லை'' இனிப் பேசிப் பயனில்லை என்று தெரிந்தே பேசினார்.

''துரோகம், வஞ்சனை என்பதெல்லாம் கையாலாகாதவனின் கதைப்புக்கள். இது அரசியல் விளையாட்டு'' என்றவர் தம் தம்பியின் பக்கம் பார்த்து. ''எதிராஜ்! ரங்கராயனையும் அவன் குடும்பத்தையும் தனி அரண்மனையிலே தகுந்த காவலுடன் வை'' என்று கட்டளையிட்டார்.

''கைதியாக வைத்துக் காப்பாற்றுவதை விடக் கொன்று விடுவதே நல்லது அண்ணா. உயிரோடு இருந்தால் உரிமை கொண்டாடி உபத்திரவம் கொடுத்துக் கொண்டிருப்பான்'' என்றான் எதிராஜ். ஜகராயர், தம்பியைப் போல அரக்க மனம் படைத்தவரல்ல. ஆகவே அவன் விருப்பத்துக்கு ஒப்பவில்லை. காவல் தெய்வமான எச்சம்மரை இழந்த ரங்கராயர் கைதியானார்.

சிக்கராயன் சிங்காதனம் ஏற்றப்பட்டான். ரங்கராயர் கைதியாக்கப்பட்டதை அறிந்த வேலுகோட்டி எச்சம்மர் தவித்துப் போனார். தான் அவசரப்பட்டு, உணர்ச்சிவசப்பட்டு விட்டதனால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்று தம்மையே நொந்து கொண்டார். 'வெங்கடராயருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் மன்னரை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்து விட்டேனே பாவி' என்று புலம்பிப் புலம்பிப் புண்பட்டது அவர் நெஞ்சம். 'எப்படியும் என் மன்னரைச் சிங்காதனம் ஏற்றுவேன். அது வரை அமைதி கொள்ள மாட்டேன்' என்று சபதம் செய்தார்.

எச்சம்மரின் வீரம் நாடறிந்தது. எதிரியே புகழும் போர்த் திறமை கொண்டவர். எப்படியும் அவரைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டுவிட வேண்டும் என்று ஜகராயர் எத்தனையோ வழிகளைக் கையாண்டார். ஆனால் எதுவும் பலிக்கவில்லை. ஒரு நாள் ஜகராயரின் அவைக்கு ஒரு தூதுவன் வந்தான்.


''நீதிக்கும், நேர்மைக்கும், உண்மைக்கும் தலை வணங்கும் எங்கள் மன்னர் எச்சமநாயக்கரின் தூதுவன் நான். உங்கள் கடிதம் குறித்து அவர் உள்ளத்தை உள்ளபடி உரைக்க எனக்கு இச்சபையில் அனுமதி வழங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். தூதுவனின் தோற்றமும் பேச்சும் புதுமையாக இருந்தன. எச்சம்மரிடமிருந்து எந்தச் செய்தியையும் எதிர்பார்க்கும் ஆவலில் இருந்தது அவை. ஆகவே, ''தூதுவன் என்பதனால் உன் தலை வணங்காத் தன்மையை மன்னிக்கிறோம்... உன் மன்னனின் பதிலைத் தெரிவிக்கலாம்'' என்று உத்தரவிட்டார் ஜகராயர்.

''யாரோ ஒரு அனாதையை அரியணையிலே ஏற்றி வைத்து விட்டு அவனை மன்னனாக ஏற்கும்படி கேட்டிருந்தீர்கள். ஊர் பெயர் தெரியாதவனின் தலைமையை ஏற்க எங்கள் தலைவருக்கு விருப்பமில்லை. எங்கள் மன்னரின் மன்னர் ரங்கராயர். வெங்கடராயரின் வம்சத்தில் உதித்த அந்த ரங்கராயருக்கே எங்கள் மன்னர் தலை வணங்கி நிற்பார். எங்கள் மன்னரின் போர் வாள் உறங்கிக் கிடப்பதும் அவர் ஆட்சியிலேதான்.''

தூதுவன் பேசப் பேச ஜகராயரின் தம்பி எதிராஜின் மீசை துடித்தது. ''எத்தனை அகம்பாவமான பேச்சுப் பார்த்தீர்களா அண்ணா? இவன் நாக்கைத் துண்டித்து அந்த அயோக்கியனுக்கு அனுப்ப வேண்டும்'' என்று படபடத்தான்.

''அது அத்தனை சுலபமான காரியம் அல்ல, எதிராஜரே!'' என்றான் தூதன்.

''அவனுக்குப் பேச உரிமை கொடுத்திருக்கிறோம் தம்பி. ஆத்திரப்படாதே!'' என்று கை அமர்த்தினார் ஜகராயர்.




# rotaflex

## the exciting lighting

Designed to enhance the beauty
of the most modern interiors.
Rotaflex shades, wallbrackets,
table and floor lamps set a new
standard of inexpensive luxury
in colourful lighting effects.

**BAJAJ ELECTRICALS LIMITED**

Bombay • Calcutta • New Delhi • Madras • Kanpur • Patna • Indore • Wardha • Gauhati

"நாலாயிரம் வீரர்களை வைத்துக் கொண்டு இந்த எச்சம்மன்தான் எப்படித் துள்ளுகிறான்?" திம்ம நாயக்கன் திகைப்போடு பேசினான்.

"உங்களிடம் உள்ள நாற்பதினாயிரம் பேர்களுக்கு எங்கள் நாலாயிரம் வீரர்கள் சமம் என்பது தெரியுமா? ஆனால் உன்னைப் போலப் பட்டத்துக்கும் பதவிக்கும் நாயடிமை செய்து பல்லைக் காட்டி நிற்கும் அடிவருடி அல்ல எங்கள் அரசர்." தூதுவனின் பேச்சிலே சூடு ஏறியது.

"டேய், அதிகப் பிரசங்கி! அளவாகவே பேசு" என்று வெகுண்டான் திம்மன்.

"அதிகமாக எதுவும் சொல்லவில்லையே. நாலாயிரம் வீரர்கள் என்று நகைத்தீர்களே என்று சொன்னேன். போரைக் கண்டு புன்னகை புரியும் எங்கள் எச்சம்மர் உங்கள் பெரும் படையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."



"தூதுவனே, உங்கள் தலைவரின் வீரத்தையும் பெருமையையும் அறிந்தே அவரைத் தக்கபடி கௌரவிப்பதாகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தோம்" என்றார் ஜகராயர்.

கடகடவென்று நகைத்தான் தூதுவன். "கௌரவமா? யார் யாருக்குக் கொடுப்பது? எச்சம்ம நாயக்கரைப் பகைத்துக் கொண்டு எவருமே நிம்மதியுடன் வாழ்ந்ததில்லை. வீரத்தினால் சாதிக்க முடியாததை வஞ்சனையினால் சாதிக்க எண்ணி எங்கள் மன்னரின் வீரத்தைப் பற்றிப் புகழ் பாடினீர்கள். பொம்மை மன்னனை ஏற்றுக் கொண்டால் பொன்னும் பொருளும் பட்டமும் பதவியும் அள்ளித் தருவதாக ஆசை காட்டினீர்கள். இல்லையா?"

தூதுவனின் பேச்சினால் திம்மனின் உடல் பற்றி எரிந்தது. "ஜகராயரே! எச்சம்மரின் தூதுவனை எல்லை மீறிப் பேச அனுமதிக்கிறீர்கள்!" என்றான்.

தூதுவனோ அவனை லட்சியமே செய்யவில்லை. "அது மட்டுமா? சிக்கராயருக்குப் பணிந்து வந்தால் நாட்டின் ஒரு பகுதியையே—அதன் வருமானத்தையே—எச்சம்மர் ஏதேச்சாதிகாரமாக அனுபவிக்கலாம் என்று கூடத் தேன் ஒழுகத் தீட்டி இருந்தீர்கள் லிகிதத்திலே!"

"ஆமாம். எழுதியது உண்மைதான். ஆனால் ஏமாற்றும் நோக்கத்தோடு அல்ல" என்றார் அமைதியாக ஜகராயர்.

"ஏமாற எச்சம்மர் ரங்கராயர் இல்லை. யாருடைய நாட்டை யார் யாருக்குத் தானம் செய்வது? நாடும் அதன் வருவாயும் ரங்கராயருக்குச் சொந்தம். அதைத் தானம் செய்யக் கொப்பூரி ஜகராயருக்குக் கொஞ்சமும் உரிமை இல்லை."

கொதித்தெழுந்தான் எதிராஜ். "அண்ணா, இந்தத் திமிர் பிடித்த தூதுவனின் பேச்சை இன்னுமா பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? என் ரத்தம் கொதிக்கிறது." பற்கள் பொடிபடும் ஒலி எழும்பின.

"பதறாதே தம்பி! சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிடட்டுமே?" என்றார்.

"இனிச் சொல்ல எதுவும் இல்லை, ஜகராயரே. வெங்கடராயரின் ஆணையிலே அடங்கி ஒடுங்கிக் கிடந்த அத்தனை பாளையக்காரரும் உங்களுடன் சேர்ந்து வந்து எதிர்த்தாலும் சரி, எங்கள் எச்சம்மர் சிக்கராயரை மன்னராக ஏற்க மாட்டார். ரங்கராயரை வஞ்சனையாகக் கைது செய்ய உடந்தையாக இருந்து உதவிய துரோகிகளையும், அவரைச் சிறைச்சாலைக்கு இழுத்துச் சென்ற போது அத்தகைய அக்கிரமத்தைக் கண்டிக்காமல் வாயடைத்துப் போய் நின்றிருந்தவர்களையும் பழிக்குப் பழி வாங்காமல் இருக்கப் போவதில்லை எங்கள் எச்சம்மர்."

உறையிலிருந்து கத்தி உறுமிக்கொண்டு வெளிப்பட்டது. எதிராஜினால் தூதுவனின் ஏச்சுப் பேச்சைச் சகிக்க முடியவில்லை. ஜகராயர் தடுத்தும் ஓங்கிய வாளை நிறுத்தவில்லை. தூதுவன் இதை எதிர்பார்த்தவனே போல லாகவமாக வளைந்து கொடுத்தான். அவனது தலைப்பாகைதான் உருண்டு விழுந்தது. அதுமட்டுமா? அத்துடன் அவனது பொய்த் தாடி மீசையும் கூடவே ஒட்டிக் கொண்டிருந்தது.

"வெளுகோட்டி எச்சம்ம நாயக்கரல்லவா?" என்று பல குரல்கள் ஏககாலத்தில் ஒலித்தன.

"பிடியுங்கள்.... தப்ப விடாதீர்கள்.... கட்டுங்கள்" என்று குதித்தான் குள்ளநரித் திம்மன்.

அடுத்த விநாடி தூதுவனாக வந்த எச்சம்மரின் இடையிலிருந்த வாள் அவர் கையிலே மின்னியது. தன் மீது பாய்ந்த வெறி கொண்ட அத்தனை கத்திகளையும் சமாளித்தது இளஞ் சிங்கம்.

"அடே துரோகி திம்மா! உன் தந்திரம் என்னிடமா பலிக்கும்?" என்று சொல்லிக் கொண்டே வாளைச் சுழற்றினார். ஈட்டிகள் முறிந்தன. எதிர்த்தவர்களை மிரட்டி எள்ளி நகையாடியபடியே ஏறிக் குதித்து எங்கோ புகுந்து எப்படியோ மறைந்தார் எச்சம்மர்.

"தப்ப விட்டுவிட்டார்கள் மடையர்கள். அந்தக் கிழட்டுப் புலிக்குத்தான் எத்தனை துணிச்சல்! நம் அரண்மனைக்குள்ளேயே புகுந்து நம் முன்னாலேயே நின்று நம்மையெல்லாம் நிந்தித்துவிட்டுப் போய் விட்டானே!" தோல்வியினால் துவண்டு போன திம்மன் அங்கலாய்த்தான்.

"நான் அப்போதே சந்தேகப்பட்டேன். சாதாரணத் தூதுவனின் பேச்சாக இல்லையே என்று. ம்.... எச்சம்ம நாயக்கரை எந்த விதத்திலும் நம் வழிக்குக் கொண்டு வர முடியாது போல் இருக்கிறதே" என்று ஏங்கிப்

போனார் ஜகராயர். அந்தக் கிழவனின் வான் வீச்சு அவர் கண்ணிலேயே நின்றது.

''மற்றைய பாளையக்காரர்கள் இன்றைய நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டால் ஏகவார்களே அண்ணா....'' என்று அவமானத்தினால் அரற்றினான் எதிராஜ்.

ஆனால் ஜகராயர் அதை லட்சியமே செய்ய வில்லை. ''இருக்கட்டும். எல்லோருமே வெலுகோட்டி வீரராகிவிட முடியுமா? புதிய மன்னர் சிக்கராயர் பாளையக்காரர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் விருதுகளை அள்ளி வழங்குவார். பணத்துக்கும் பதவிக்கும் மயங்காதவன் எச்சம்மன் ஒருவன்தான் எதிராஜ்!'' என்றார் எங்கோ பார்த்துக் கொண்டு.

அதே போலப் பணத்தாலும் படை பலத்தாலும் பட்டம் பதவிகளாலும் எல்லாரையும் தனதாக்கிக் கொண்டிருந்தார் ஜகராயர். எச்சம்மரைத்தவிர. அநியாயத்தை எதிர்த்துத் தனித்து நின்றார் வெலுகோட்டி எச்சம்மர். எந்த உபாயமும் அரசியல் சூழ்ச்சியும் அந்த உண்மை ராஜ விசுவாசியிடம் பலிக்கவில்லை.

ரங்கராயரை மறுபடி அரியணை ஏற்றிவிட வேண்டும் என்று எச்சம்மரும் எத்தனை எத்தனையோ முயன்றார். எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. அதனால் கிழவர் தம் முயற்சியில் தளர்வடைய வில்லை.

ஒரு நாள் ரங்கராயரைச் சிறை வைத்திருக்கும் அரண்மனைக்குள், மன்னருக்கான துணிகளைச் சலவை செய்து எடுத்துக்கொண்டு நுழைந்து கொண்டிருந்தவன், ''காவல்கார ஐயா, பழைய ராசாவுக்கு வெள்ளை கொண்டு போறேன். கூடையைச் சோதனை போட்டுக் கிடறீங்களா?'' என்று கேட்டான்.

'வேலய்யா தானே? போ, போ. நீதான் வழக்கமா வெளுக்கிறவனாச்சே' என்றது காவல்.

''வாடிக்கையாளுலும் வம்பு தும்பு கூடாது பாருங்க'' என்றபடி ''விட்டல நாதா, விருபாட்சா! என்னிக்குத்தான் நீ கண்ணைத் திறந்து பார்க்கப் போறியோ?'' தள்ளாடிக் கொண்டு உள்ளே சென்றான் வண்ணாரக் கிழவன். கடவுளை அழைத்தபடி வரும் அவனது குரல் சிறைப்பட்டிருந்த ரங்கராயரின் சிந்தையைக் கலக்கிற்று. ''கண்ணும் காதுமற்ற கடவுள் அவரை நம்பித்தான் நாசமாகிக் கொண்டிருக்கிறேன்'' என்று வெறுத்துக் கொண்டார்.

''மகாராஜா! கடவுளைக் குறை சொல்லாதீங்க. கருணை வள்ளலுங்க அவர்'' என்று துணிக் கூடையை இறக்கினான் வேலய்யன்.

''கல்லான தெய்வத்துக்குக் கருணை உள்ளம் எப்படி வரும்?'' என்று பெருமூச்செறிந்த மன்னர், வெள்ளைகளை எடுத்து வைக்கும் கிழவனைப் பார்த்து, ''சிறைச்சாலை வாசிக்குச் சிங்கார உடைகள் எதற்கு? அந்த மூலையிலே எறிந்து விட்டுப் போ'' என்றார்.

''மகாராஜா! இந்தப் பட்டுச் சால்வையை மட்டும் பாருங்க'' என்று நீட்டினான் வேலய்யா. அதைப் பாராமலே ''உன் திறமையைப் பாராட்டிப் பரிசு கொடுக்க இன்று என்னிடம் எதுவும் இல்லையப்பா!'' என்றார்.

''அள்ளிக் கொடுத்த போதெல்லாம் இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிக்கலையா? அதை யெல்லாம் மறந்துட்டா வாழ்வேதுங்க?'' என்றான் கிழவன்.

''மறந்தவர்கள்தான் இன்று வாழ்கிறார்கள்.''

''அப்படிப்பட்டவங்க வாழ்வுக்கு முடிவு கட்டத்தானுங்க இந்தப் பட்டுச் சால்வையைப் பார்க்கச் சொல்கிறேன்'' என்றான் வேலய்யா.

''பட்டுச் சால்வையைப் பார்த்தால் என் பட்டத்தைத் திரும்பப் பெற்று விடலாமா? பைத்தியம்!'' என்று விரக்தியோடு சிரித்தார் மன்னர்.



''வந்தாலும் வரலாம்.... பிரித்துப் பாருங்கள்.'' வேலய்யனின் பேச்சில் ஏதோ உட்பொருள் இருப்பதை அப்போதுதான் அவர் உணர்ந்தார். அவன் நீட்டிய சால்வையை வாங்கிப் பிரித்தவரின் விழிகள் வியப்பினால் விரிந்தன. பட்டுச் சால்வையிலே முத்து முத்தான கையெழுத்திலே எழுதியிருந்தது! வெலுகோட்டி எச்சம்மர்தான் எழுதி யிருந்தார்.

''தங்களை விடுவிக்கும் முயற்சிகளில் தோல்வி கண்டாலும் மனம் தளர்ந்துவிட வில்லை. தாங்கள் சிறையிலிருந்தாலும் தங்கள் மகனைச் சிங்காதனமேற்றி உரிமைக் குரலை எழுப்ப உத்தேசித்துள்ளேன். சலவைக்கார வேலய்யா என்னைப் போலவே ராஜ பக்தி கொண்டவன். அவனிடம் இளவரசர்களில் ஒருவனை ஒப்படையுங்கள். காவலைக் கடந்து இளவரசனைக் காப்பாற்றிக் கொண்டு வந்து என்னிடம் சேர்ப்பித்து விடுவான். இந்த உடலில் மூச்சு உள்ளவரை உங்களை விடுவித்துச் சந்திரகிரிச் சிங்காதனத்திலே உட்கார வைப்பதற்காகப் போராடுவேன்.''


செய்தியைப் படித்த ரங்கராயரின் பார்வைக்குக் கண்ணீர் வலை பின்னியது. ''எச்சம்ம நாயக்கரே! எங்கிருந்தாலும் என்னை மறக்காத உமது அன்பு உள்ளம் இருக்கும் போது எனக்கு அரசுரிமை எதற்கு?'' என்று விம்மினார் பட்டுச் சால்வையால் முகத்தை மூடிக்கொண்டு.

''மகாராஜா! கால தாமதம் செய்யாதீர்கள்'' என்றான் வேலய்யா.

தன்னைத் தானே தேற்றிக் கொண்டு உணர்ச்சிகளை உள்ளுக்குத் தள்ளியபடி ''இந்தக் கட்டுக்காவல்களை யெல்லாம் கடந்து நீ எப்படிக் குழந்தையை வெளியே கொண்டு போவாய்?'' என்று கேட்டார்.

''தகுந்த ஏற்பாட்டோடுதானுங்க வந்திருக்கேன். அழுக்குத் துணிக் கூடைக்குள்ளே வைச்சு வெளியே கடத்திக்கிட்டுப் போயிடறேன். ஆனால் பட்டத்து இளவரசரான மூத்த ராஜகுமாரரைக் கொண்டு போக முடியாதுங்க'' என்றான் வேலய்யன்.

''என் வமிசத்தில் ஒருவன். என் ரத்தத்தின் ரத்தமான பிள்ளைகளில் யாராயிருந்தால் என்ன. இளைய மகன் ராமதேவராயனையே அழைத்துப் போ'' என்றபோது பேச்சுக் குரல் கேட்டு உள்ளிருந்து தேவி வந்தாள். எச்சம்மரின் ஏற்பாட்டை அறிந்த போது, ''அவரும்தான் உங்களை அரியணையிலே ஏற்றிப் பார்க்கப் படாத பாடெல்லாம் படுகிறார். ஆனால் விதியின் பிடியோ வலுவாக இருக்கிறது. நம் குழந்தைக்காவது அந்தப் பாக்கியம் கிடைக்கட்டும். அனுப்பி வையுங்கள்'' என்றபோது அவளது விழிகள் கண்ணீரை வெள்ளமாக்கின.



''நீ அழாதே அம்மா. நான் வெளியே போய்ச் சண்டைபோட்டு உன்னையும் அப்பாவையும் விடுதலை செய்து வைக்கிறேன்'' என்றான் ராமதேவராயன்.

பெற்ற மகனை வாரி அணைத்தாள் அன்னை. ''அப்படியே செய்யடா, என் கண்ணே! அந்த நாளை எதிர்பார்த்து நாங்கள் இந்தச் சிறையிலே இன்னும் எத்தனை கஷ்டங்களானாலும் சகித்துக்கொண்டு காத்திருக்கிறோமடா.''

''குட்டி ராஜா! வாங்க, கூடைக்குள்ளே உட்காருங்க'' என்று அழைத்தான் வண்ணார வேலய்யா.

இளவரசன் எல்லாரிடமும் விடைபெற்றுக் கொண்டு கூடைக்குள் போய் முடங்கிக் கொண்டான். ''பட்டு மெத்தையிலே புரள வேண்டிய உனக்கு, அழுக்குக் கூடைக்குள்ளே ஒளிந்து போகும் நிலை இன்று ஏற்பட்டிருந்தாலும் நானே அரசாளப் போகிறாய் என்ற மகிழ்ச்சியோடு அனுப்பி வைக்கிறேன், போய் வா. வெற்றி உன்னைத் தொடர்ந்து வரட்டும்'' என்று குரல் கம்ம வாழ்த்தினார் மன்னர் ரங்கராயர்.

''குப்பையிலே கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கம்தானுங்க மகாராசா! இந்த நிலை மாறாமலா இருக்கப் போகுது? நான் வருகிறேனுங்க'' என்று கிளம்பினான் வேலய்யா.

''விட்டலநாதா, விரூபாட்சா...!'' என்று ஆண்டவனையே துணைக்கு அழைத்து, கைத்தடியைப் பலமாக ஊன்றி ஆயாசம் மேலிட்டவனாக நடித்தபடி நடந்தான் கிழவன் வேலய்யா. ''அப்பா, விட்டலநாதா! இது என்ன நாய்ப் பொழைப்பு? நீ என்னிக்குத் தான் கண்ணைத் தொறக்கப் போறியோ?''

''ஏ, வேலய்யா? நீ என்ன கண்ணை மூடிக்கிட்டே போறே? ஏது இன்னிக்குக் கோபுரம் மாதிரி கூடையிலே அழுக்குத் துணி?'' என்று அதட்டி நிறுத்தினான் காவல்.

''அத்தையேன் கேக்கறே அண்ணே! சிறையிலே இருந்தாலும் மனுசனோட பவிஷுக்குக் குறைவில்லே. தினமும் எம்மாம் அழுக்குச்சேர்ந்துப் புடுது. பாவி மகன் என் பிராணனை வாங்குறான்'' என்று கேலியாக அரசரை நிந்தித்து நடித்தான் கிழவன். அப்போதும் காவல்காரனின் சந்தேகம் தீரவில்லை.

''இந்த மாதிரி இத்தினி துணி என்னிக்கும் பார்த்ததில்லையே.... ம்... கூடையிலே பூராத் துணிதானா?'' என்றான்.

''இல்லே, மகராசாவை ஒளிச்சு வைச்சுக் கிட்டு வெளியே கொண்டு போறேன்'' என்று உண்மையைப் பொய்யாக நம்ப வைக்கும் கேலிக் குரலில் பேசினான். ''நீ ஒண்ணு! வேணுமின்னுக் கூடையைச் சோதனை போட்டுக்கிறியா அண்ணே? இந்தா, ஒரு கை புடி. இப்படி இறக்கறேன்'' என்று கூடையை அவன் மீது விழும்படி சாய்த்தான் கிழவன்.

''டேய், டேய்! எட்டப் போ. அழுக்குத் துணியெல்லாம் மேலே விழுகிறது.''

''சிக்கு வாடைக்கே மனுசன் இப்படி ஓடறியே? இவ்வளவையும் வெளுக்க நான் எம்மாம் பாடுபடுவேன்'' என்று சரிந்தாடும் கூடையைச் சரி செய்து கொண்டே விட்டலநாதனையும் விருபாட்சனையும் துணைக்குக் கூப்பிட்டபடி மெல்ல நகர்ந்து நடந்தான் வேலய்யா.

இளவரசன் ராமதேவராயன் எச்சம்மரின் கோட்டைக்குப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தான். சந்திரகிரியின் உண்மையான அரசர் என்று பிரகடனப்படுத்தினார் வெலுகோட்டியார். பாளையக்காரர்களும் சிற்றரசர்களும் திகைத்தார்கள். ஜகராயர் கொதிப்படைந்தார். இளவரசனை எப்படிக் கடத்திக்கொண்டு போனார் எச்சம்மர் என்பது எவருக்கும் புரியாத புதிராக இருந்தது. எச்சம்மரின் துணிவைப் புகழாதவர் இல்லை. ஜகராயரின் நுகத்தடியிலிருந்து விடுபட்டு எச்சம்மரின் பக்கத்திலே எப்போது சேரலாம் என்று தவிப்புடன் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் நல்ல மனம் படைத்தோர்.

ஏமாற்றத்தின் ஆத்திரத்திலே மன்னர் ரங்கராயரின் கட்டுக் காவலை கடுமையாக்கினார் ஜகராயர். அவரைத் தனி அரண்மனையிலிருந்து வேறு இடத்துக்கு மாற்றினார்கள். கொலை களவு செய்த குற்றவாளிகளைவிடக் கடுமையாக நடத்தப்பட்டார் மன்னர். குற்றேவலுக்குக் கூடப் பணியாட்களை அனுமதிக்கவில்லை. மன்னர் ரங்கராயர் தம் மனைவி குழந்தைகளுடன் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல.

தம் விடுதலை முயற்சிகள் மன்னருக்கு மேலும் துன்பத்தையே தருகின்றன என்பதை அறிந்த போது எச்சம்மரின் இதயம் தவித்தது. ''என் செய்கைக்கு என்னையல்லவா பழி வாங்க வேண்டும்? கைதியாக்கி வைத்துள்ள மன்னரை ஏன் உபத்திரவப்படுத்துகிறான், கையாலாகாத கயவன்?'' என்று மருகினார்.

எச்சம்மரின் தம்பி சிங்கநாயக்கரும் சேனாபதி திருமலை வேங்கடாத்திரி என்பவரும் அசகாய சூரர்கள். எச்சம்மரின் ஏற்றத்துக்குக் காரணமாக இருந்தவர்கள். ரங்கராயரைப் பற்றிய செய்திகளை ரகசியமாகச் சேகரித்து அவ்வப் போது நிலைமையை எச்சம்மருக்கு அளித்து வந்தான் தம்பி சிங்கன்.

''பஞ்சபாண்டவர்கள் கஷ்டப்பட்டதாகக் கதைகளில் படித்திருக்கிறோம். இன்று அதை நமது மன்னர் அனுபவிக்கிறார்'' என்றான் சிங்கன், செய்வதறியாது குழம்பிப் போய் உட்கார்ந்திருக்கும் அண்ணா எச்சம்மரிடம்.

'பஞ்சபாண்டவர்' என்ற வார்த்தை எச்சம்மரிடம் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்தியது. ''தம்பி சிங்கா, என்ன சொன்னாய்? பஞ்சபாண்டவர்...... ஆஹா ! சரியான யோசனை'' என்றார் உற்சாகமாக. ''பஞ்சபாண்டவர்களைக் கொல்லத் துரியோதனன் வாரணாவியிலே செய்த வஞ்சனை என்ன, ஞாபகமிருக்கிறதா?''

''ஐவரையும் உயிரோடு அக்கினி பகவானுக்கு அர்ப்பணிக்க அற்புதமான அரக்கு மாளிகை கட்டினான். அது போல...'' என்று ஒன்றும் புரியாமல் குழம்பினான் சிங்கன்.

''அவசரப்படாதே. ஆனால் பஞ்சபாண்டவர்கள் அந்தச் சூழ்ச்சியிலே இறந்தார்களா? இல்லை. ஏன், துரியோதனன் சதியை விதுரன், மாற்றி விட்டானல்லவா? எப்படி? சுரங்க வழி ஏற்படுத்திக் கொடுத்து....இல்லையா? அதே போல என் மன்னருக்கும் அதே சுரங்க வழி வாழ்வளிக்கப் போகிறது.''

மடமடவென்று பேசிக் கொண்டு போகும் அண்ணனிடம், ''அது எப்படி அண்ணா, சாதிக்க முடியுமா ?'' என்றான் சிங்கன்.

'' எண்ணியதை எப்படியும் முடித்தே தீருவான் எச்சம்மன். நம்பிக்கையும் நாணயமும் உள்ள ஆட்களைத் தேர்ந்தெடுத்துச் சந்திரகிரிக் கோட்டைக்குள் அனுப்பு. அவர்கள் அங்கு பொறுப்பான வேலைகளில் அமரட்டும். நீ தேர்ந்தெடுக்கும் நபர்கள் சிறந்த கட்டடக் கலைஞர்களாகவும் இருக்க வேண்டும்'' என்று தம்பிக்கு உத்தரவிட்டார் எச்சம்மர்.

அதன் பிறகு ஒரு நிமிஷத்தையும் வீணாக்குவாரா சிங்கநாயக்கர்? கட்டுமஸ்தான உடல் அமைப்பும் கட்டடக் கலை அனுபவமும் உள்ள வீரர்கள் திரட்டப்பட்டனர். 'சந்திரகிரிக் கோட்டைக்குள் அவர்கள் பல்வேறு வேலைகளில் போய் அமர வேண்டியது. இரவில் அவர்கள் நகருக்கு வெளியே ஓர் இடத்தில் சந்திக்க வேண்டியது. பகல் வேளைகளில் நகரின் அமைப்பையும் மன்னரைச் சிறை வைத்துள்ள இடத்தையும் அதற்குச் சுரங்கப் பாதை அமைப்பதற்கு ஏற்ற இடங்களையும் நிர்ணயித்துக் கொண்டு இரவெல்லாம் சுரங்கம் தோண்டும் பணியைச் செய்யவேண்டியது. தோண்டிய மண்ணைச் சந்தேகத்துக்கு இடமின்றி அப்புறப்படுத்த வேண்டியது' என்று இப்படியெல்லாம் அவர்களுக்குத் திட்டம் தந்து அனுப்பினார் எச்சம்மர். அவர்களுடன் திருமலையும் சிங்கனும்கூடச் சென்றார்கள்.

ஒரு நாள் இரவு—

தூக்கம் செத்து விட்ட நிலையில் வழக்கப்படி ரங்கராயர் வானத்து நட்சத்திரங்களோடு பேசிக் கொண்டிருந்த போது திடீரென்று இரண்டு பேர்கள் அவர் முன் தோன்றினார்கள். திடுக்கிட்ட ரங்கராயர், ''யாரது? இந்த நள்ளிரவிலே என் அறைக்குள் எப்படி வந்தீர்கள்? ஓகோ! என்னைக் கொல்லும்படி ஜகராயர் அனுப்பிய ஆட்களா?'' என்று கேட்டு விரக்தியோடு வாய் விட்டுச் சிரித்தார். ''நான் உயிரோடு இருப்பது இருவருக்கும் உபத்திரவம்தான். ம்... சீக்கிரம் வந்த காரியத்தை முடியுங்கள்'' என்றார்.

வந்தவர்கள் வாய்க்குள், ''அரசே! மெதுவாகப் பேசுங்கள். காவல் விழித்துக் கொண்டு விடப் போகிறது. நாங்கள் எச்சம்ம நாயக்கரின் ஆட்கள்'' என்றார்கள்.

அரசர் வியப்பினால் திக்குமுக்காடிப் போனார். ''என்ன, நிஜமாகவா? இதென்ன உடலெல்லாம் புழுதியும், சகதியும்? இந்த அறைக்குள் மாயமாக எப்படித் தோன்றினீர்கள்? அறைக் கதவு தாளிட்டபடிதானே இருக்கிறது?''

''பகலெல்லாம் இந்தக் கோட்டைக்குள் ஜகராயரின் ஊழியர்களாக உலவி வந்தோம். இரவெல்லாம் எச்சம்மர் எங்களுக்கு இட்ட

*திட்டத்தினால் நமக்கு என்ன பலன்*

# அதிக
# வேலை
# வாய்ப்புகள்



மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

- தீவிர சாகுபடி மற்றும் நில அபிவிருத்தி மூலம். விவசாயத் துறையில் 35 லக்ஷம் நபர்களுக்கும்
- தொழில், போக்குவரத்து, வர்த்தகம், சமூக சேவைகள் மற்றும் அரசாங்க சர்விசுகளில் 105 லக்ஷம் நபர்களுக்கும்

கூடுதல் வேலை வாய்ப்பை அளிக்கும்

இதனால்
உங்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளும்
சிறந்த வாழ்க்கையும் கிடைக்கும்

*திட்டம் வெற்றி பெற உதவுங்கள்*

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்**

**நாட்டினருக்கெல்லாம நல் வாழ்வு**

ஆணையை நிறைவேற்றி இன்று உங்களை விடுதலை செய்ய வந்திருக்கிறோம்'' என்றார்கள்.

''எப்படி வந்தீர்கள்?''

''சுரங்க வழி மூலமாக. கோட்டைக்கு வெளியிலிருந்து இரண்டு மாதகாலமாக இரவு முழுவதும் பாடுபட்டு உங்கள் அறைக்குச் சுரங்கம் அமைத்து இன்று வெற்றி கண்டோம்'' என்றார்கள் வந்தவர்கள்.

பிறகு மன்னரிடம் எச்சம்மரின் செய்தியையும் கொடுத்தார்கள். தான் ஏசிப் பேசியும் தன்னிடம் மாறாத பக்தி கொண்டுள்ள எச்சம்மரை எண்ணிய போது அவர் உடல் சிலிர்த்தது. குரல் கம்மியது. ''எச்சம்மரே! உங்கள் அன்புக்கு நான் அருகதையற்றவன். உங்கள் கடமை உணர்ச்சி என் உள்ளத்தை உலுக்கி எடுக்கிறது. உங்களைப் போல இன்னும் இரண்டு ராஜ விசுவாசிகளை நாடு உருவாக்கி இருந்தால் போதுமே'' என்று கண்ணீர் விட்டார்.

''அரசே! கால தாமதம் காவலாளிகளை உஷார்ப்படுத்தி விடலாம். சீக்கிரம் கிளம்புங்கள்'' என்றார்கள் வந்தவர்கள்.

மன்னர் தம் மனைவியை எழுப்பி அவளிடம் விஷயத்தைச் சொல்லி விடை கேட்டார். கணவனின் விடுதலையிலே களிப்படைந்தாலும் அவரை விட்டுப் பிரிந்திருப்பதைச் சகியாமல் கண் கலங்கினாள். தானும் உடன் வருவதாகக் கூறினாள். ஆனால் தான் தப்பிச் செல்லப் போவது அவசரத்திலே தோண்டிய சுரங்கப் பாதை வழியாக என்றும், அதில் பல இடங்களில் முழங்காலாலும் முழங்கைகளாலும் தவழ்ந்து செல்ல வேண்டியிருக்கும் என்றும் தன்னுடன் அவளும் வருவதற்கு ஏற்றபடி அது இருக்காது என்றும் சொல்லிச் சமாதானப்படுத்தி விடை கேட்டார்.

''போய் வாருங்கள். என் உள்ளத்தை என்னவோ இனம் தெரியாத பயம் ஒன்று வந்து கவ்வுகிறது'' என்றாள் அரசி.

சிரித்தார் மன்னர். ''பயமா? அந்தச் சொல்லை நீ மறந்து பல மாதங்கள் ஆகியிருக்க வேண்டுமே! இதைவிடவா நமக்கு ஒரு தாழ்வு வரப் போகிறது?'' என்று வந்தவர்களுடன் கிளம்பத் தயாரானார் ரங்கராயர்.

வந்த வீரரில் ஒருவன் எதையோ சொல்ல முடியாமல் தவிப்பதை உணர்ந்த அரசர் என்ன என்று கேட்டார். ''சொல்லவே நாக்கூசுகிறது. நீங்கள் அணிந்துள்ள உடைகள் நமது பிரயாணத்துக்குத் தடையாக இருக்கும்'' என்றனர் வீரர்.

''உண்மைதான். இதோ மேலங்கியைக் கழட்டி விடுகிறேன்'' என்று களையலானார்.

''இடையிலே உள்ள அந்தப் பட்டாடை கூட.....! எங்களைப் போலச் சிறு துணியை மட்டும் இடையிலே மல்லர்களைப் போல வரிந்து கட்டிக் கொள்ளுங்கள். சுரங்கப் பாதையிலிருந்து வெளியேறியதும் கோட்டைக்கு வெளியே தங்களுக்கு உரிய உடைகள் தயாராக இருக்கின்றன'' என்றார்கள்.

''மானத்தையும், உரிமையையும் விட உடை பெரிதல்ல அப்பா'' என்று முழத் துண்டை இடையிலே வரிந்து கட்டிக்கொள்ளலானார். அப்போது விம்மல் ஒலி கேட்டது. தன் கணவனின் நிலை கண்டு மனம் பொறாத அரசி அழுது கொண்டிருந்தாள். ''தேவி, இதென்ன இப்படி? பட்டாடை உடுத்திப் பவனி வர வேண்டிய கணவன் இடையிலே முழத்துண்டு உடுத்திச் சேற்றிலே ஊர்ந்து செல்லப் போகிறானே என்றா?'' அவளது கண்ணீரைத் துடைத்தார் ரங்கராயர்.

வேதனையை விழுங்கிக் கொண்டே விடை கொடுத்தாள். ''வெற்றியுடன் வாருங்கள். தங்கள் வரவிற்காகவே உயிர் தரித்திருப்பேன்.''

முன்னால் ஒருவன் செல்ல அவனைத் தொடர்ந்து ரங்கராயரும் அவருக்குப் பின்னால் மற்றொருவனுமாகச் சுரங்கப் பாதையில் முன்னேறலானார்கள். புழுதியும் புழுக்கமும் மூச்சுத் திணற வைத்தன. பல இடங்களில் நீரொழுக்கு ஏற்பட்டுச் சேறும் சகதியுமாக இருந்தது. மார்பினால் ஊர்ந்து செல்ல வேண்டிய இடங்கள்தான் அதிகமாயிருந்தன. புதிய அனுபவம். மன்னரின் உடலெங்கும் தோல் தேய்ந்து ரத்தக் கசிவு ஏற்பட்டு விட்டது. விடுதலை வெறியில் எந்த வேதனையையும் தாங்கத் தயாராக இருந்தார் மன்னர்.

வழியில் பேசக் கூடாது என்று திட்டமிட்டிருந்தார்கள் அழைத்துச் செல்லும்வீரர்கள். சிறு ஓசையும் கூடப் பாதையில் அதிர்ச்சியை உண்டாக்கி நிலச் சரிவை ஏற்படுத்தக் கூடும் என்று பயந்தனர். முறையோடு தோண்டப்பட்ட சுரங்கமல்லவே! பல தடவைகள், வந்த தும்மலை மன்னர் அடக்கி நிறுத்தப் படாத பாடு பட்டார். பல இடங்களில் மேலே ஆள் நடக்கும் ஒலிகூடக் கேட்டது. பாதையின் முடிவை நெருங்கி விட்டதன் அறிகுறியாகச் சில்லென்று குளிர்ந்த காற்று முகத்தில் பட்டது. தூரத்தில் ஏதோ ஒளியும் கூடத் தெரிந்தது.

''அதோ அது என்ன வெளிச்சம்?'' என்று கேட்டார் ரங்கராயர்.

''நம் வரவுக்காகக் காத்திருக்கும் நண்பர்கள். 'ஆபத்தில்லை வரலாம்' என்று அறிவிக்கச் சுளுந்து கொளுத்தி வைத்திருக்கிறார்கள்.''

''அப்பாடா விடுதலை ..விடுதலை..வெற்றி—வெற்றி'' என்று பலமாகச் சிரிக்கலானார் ரங்கராயர். இத்தனை நேரம் முடங்கிய நிலையில் மூச்சுத் திணற உடல் நோக ஊர்ந்து வந்ததன் பலனை எல்லாம் ஒரு நொடியில் வீணாக்கி விட்டார். பாவம், ஆபத்தின் எல்லையைத் தாண்டு முன் அவசரப்பட்டு உணர்ச்சி மேலிட்டால் உரக்கச் சிரிப்பதற்கும், சுரங்கத்தின் உறுதியில்லாத மேல் பகுதியின் மீது இரவு காவல் படைத்தலைவன் தன்வீரருடன் நடந்து வருவதற்கும் சரியாக இருந்திருக்கிறது. அரசர் கத்திய அதிர்ச்சியில் பூமி சரிந்து படைத்தலைவனோடு அப்படியே அரசர் மீது உட்கார்ந்து விட்டது. அவரால் ஓடவும் முடியவில்லை. காவல்படைத் தலைவனின் கூச்சல் கேட்டு வீரர்கள் வந்து கூடி விட்டார்கள். இடையிலே முழத் துண்டைத் தவிர உடலிலே ஒன்றுமில்லாத நிலையில் ஆயுதபாணிகளான அவர்களிடம் நிராயுதபாணிகளான இம் மூவரும் சிறைப்படுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

மறுபடியும் ரங்கராயர் சிறைப்பட்டார்.

விதி விளையாடும் போது அதை வெல்ல யாரால்தான் முடியும்? இல்லா விட்டால் விடுதலையின் எல்லையை அடைந்தவருக்கு,

சுதந்திரத்தின் தலைவாசலை நெருங்கியவருக்கு அது கிடைக்காமல் போவானேன்?

நள்ளிரவில் அரண்மனை கலகலத்தது. ஜக ராயரின் முன்னே ரங்கராயரைக் கொண்டு வந்து நிறுத்தி யிருந்தான் எதிராஜ்.

''அண்ணு, அன்று ஏமாந்த சமயத்திலே இளவரசனைத் திருடிக் கொண்டு போனதற்கு என் காவல் படையை ஏசிப் பேசினீர்கள். இன்று உடலெல்லாம் சிராய்ப்புக் காயங் களுடன் ரத்தம் ஒழுகத் தொங்கிய தலையுடன் தப்பி ஓட முயன்ற ரங்கராயரையே உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்தி இருப்பதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?''

மன்னனின் நிலை கண்ட கொப்பூரி ஜக ராயர் கொக்கரித்தார். ''அற்புதமானகாட்சி! வெங்கடராயரின் வாரிசான பெருமை பொருந்திய ரங்கராயரின் ராஜ உடை அபாரமாக இருக்கிறது...ஹா.....ஹாஹா! சந்திரகிரியின் சிங்காதனத்துக்கு உரிமை கொண்டாடும் ஒப்பற்ற உருவத்தை மக்கள் பார்த்து மகிழ வேண்டாமா? எதிராஜ், விடிந்ததும் வீதிகளிலே இப்படியே இவனைப் பவனி விட வேண்டும்.''

கலையாத தாக்கமும் கலைந்த ஆடைகளு மாக ஓடி வந்தான் திம்ம நாயக்கன், ''ரங்க ராயரே! மறுபடி மன்னனாக லாம் என்று இன்னுமா மனப் பால் குடித்துக் கொண்டிருக் கிறீர்கள். ஓடிச் சென்று உரிமைக்காகப் போராடலாம் என்ற நினைப்போ?'' என்றான்.

''நினைப்பு மட்டுமல்ல. நடத்தியே காட்டுவேன். என் எச்சம்மநாயக்கர் இருக்கும் வரை நான் இந்த நாட்டு மன்னன்தான். அதை மறக்க வேண்டாம்'' என்றார் மன் னர் ரங்கராயர்.

''ஆண்டியாக எங்கள் முன்நின்று இதைச்சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை?''

''அடே திம்மா! வெட் கப்படவேண்டியவன் நான் அல்லடா. இச்சகம் பேசி என் குடியைக் கெடுத்த நீ இன்று பதவிக்காகப் பல் லைக் காட்டி நிற்கிறயே அதற்காக உன் ஜன்மம் தான் வெட்கப்பட்டுக் குன்ற வேண்டும்.''



''போதும், உன் அகம்பாவப் பேச்சை நிறுத்து'' என்று கர்ஜித்தார் ஜகராயர். ''எச்சம்மன் எனக்கு எம்மாத்திரம்? அவனை நான் துச்சமாக மதிக்கிறேன். அவனல் உன்னை மறுபடி மன்னனாக்க முடியாது. வீண் முயற்சி செய்கிறான் வீணன். இந்த ஜகராயனை வெல்லத் தெய்வத்தாலும் முடியாது.''

''அண்ணு, நான்தான் அப்போதே சொன் னேனே, இவனை உயிரோடு வைத்திருப்பது நமக்கு உபத்திரவம் தான் என்று. காது கொடுத்துக் கேட்டீர்களா?''

''இருக்கட்டும் எதிராஜ். இந்த விஷப் பூச் சியை நசுக்கி எறிவது எனக்குப் பெரிய காரிய மில்லை. சிற்றரசரும், பாளையக்காரரும் வீண் மனக் கசப்படைவார்களே என்றுதான் பார்த் தேன். இன்னுமொரு முறை எச்சம்மன் இந்த அற்பனை விடுவிக்க முயன்றால் அன்றோடு முடிந் தது இவன் ஆயுள். இவனை இப்படியே இந்தக் கோலத்துடன் பாதாளச் சிறையிலே கொண்டு போய்த் தள்ளுங்கள். உடலிலுள்ள சேற்றைக் கழுவக் கூடத் தண்ணீர் கொடுக்காதீர்கள். களிமண் சேறு காயக் காய....'' கடகட வென்று சிரித்தார் ஜகராயர். ''தோலைக் கண்டி இழுக்கும்! மன்னுதிமன்னர் ரங்கராயர் இருளிலே கட்டாந் தரையிலே கையையும் காலையும் உதைத்துக் கொண்டு புரண்டு புழுப் போலத் துடிப்பார்..ஹா..ஹா..ஹா!''

''இழுத்துச் செல்லுங்கள் இந்தக் கேடு கெட்டவனை'' என்று உத்தரவிட்டான் எதிராஜ்.

''இரு தம்பி, பாதாளச் சிறையிலே இவன் தன்னந் தனியாகக் கிடந்து தவிக்க வேண்டும். மனைவி மக்களைப் பார்க்கவும் அனுமதிக்காதே. உணவு ஒரு வேளைக்குத்தான். அதுவும் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?'' என்று குரூர மாகச் சிரித்த அண்ணனின் உள்ளத்தைப் புரிந்து கொண்டான் தம்பி.

செய்தியைக் கேட்டுத் துடிதுடித்துப் போனார் வெலுகோட்டி எச்சம்ம நாயக்கர். 'வெங்கடராயரோடு என் வீரமே போய் விட்டதா?' என்று மனம் புழுங்கினார். மன் னரை மீட்டு வராததற்காகத் தன் தம்பியை யும் இருமலை வேங்கடாத்திரியையும் கடிந்து கொண்டார். தன் முயற்சிகளால் மன்னருக்கு மேலும் மேலும் வேதனைகள் வளருவதை எண்ணித் தாங்கொணுத் துயரடைந்தார். பாதாளச் சிறையிலே அவர் எப்படிப் பரி தவிக்கிறரோ என்று பதைத்தது எச்சம்மரின் இதயம்.

எச்சம்மரின் முயற்சிகள் நேரடிப் பலன் தராவிட்டாலும் வேறு வகையில் ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்கி யிருந்தது. கைதியான அரசருக்குச் செய்யும் அநீதிகளையும் கொடுமை களையும் கேட்ட சிற்றரசரும் பாளையக்கார ரும் மனம் நொந்து ஜகராயரை வெறுக்க லானார்கள். அவருக்கு எதிரான சக்தி ஏதா வது உருவானல் உடனே அதற்கு உதவத் தயாராக இருந்தார்கள் பலர். இதை அறிந்த போது, எச்சம்மரும், இனிச் சூழ்ச்சிகளினல் பயனில்லை, வீரத்தினல் வெற்றி கொண்டே மன்னரை விடுதலை செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். 'எப்படியும் விதியின் பிடியிலிருந்து ரங்கராயரை விடுவித்தே

திருவேன். அதுவரை எனக்கு நிம்மதியே கிடையாது' என்று சபதம் செய்தார்.

வெலுகோட்டியாருக்கு சாந்தகுமாரி என்று ஒரு மகள். அழகின் அவதாரமான அவள் வீரத்தின் இருப்பிடமாகவும் விளங்கினள். வேலூர்க் கோட்டையின் அதிபனுன உப்பலேசன் எச்சம்மரின் பக்கம் இருந்தான். சிறந்த வீரன். காளைப் பருவத்தினன். அடிக்கடி எச்சம்ம நாயக்கரைச் சந்திக்க வந்து விடுவான். தனது தந்தையாகவும் குருவாகவும் மதிக்கும் எச்சம்மரிடம் அரசியல் அறிவு பெறவே அடிக்கடி வருவதாகப் பிறரிடம் சொல்லிக் கொண்டான். அவன் வருகைக்குச் சாந்தகுமாரியும் கூட ஒரு காரணம் என்பதைப் பலர் அறிய மாட்டார்கள்.

இளம் உள்ளங்கள் இணைந்தன. காதலர்கள் தம்பதிகளாவதற்குக் காத்திருந்தனர்.

''சாந்தகுமாரி, நிலாவைப் பார்த்துக் கொண்டு அப்படி ஏன் நிற்கிருய்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் உப்பலேசன்.

''உங்களுக்கும் நிலவுக்கும் உள்ள ஒற்றுமையை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்ருள் காதலனின் வரவுக்காகக் காத்திருந்த காரிகை.

''அப்படி என்ன ஒற்றுமை கண்டாய் கண்ணே?''

''அடிக்கடி நீங்கள் என்னைத் தவிக்கவிட்டுப் போய் விடுவதைப் போல இந்தச் சந்திரனும் தன் மனைவிமார்களைத் தவிக்க விட்டு மாதம் ஒரு முறை தேய்ந்து மறைந்து போகிருன்.''

பிரிவின் வேதனையிலே பேசுகிருள் என்பதைப் புரிந்து கொண்டான் உப்பலேசன்.

''சாந்தகுமாரி, உன் தவிப்பை நான் மட்டும் உணராதவனு? உன் தகப்பனுரிடம் நம் திருமண விஷயமாகக் கேட்டு விடுகிறேன் என்ருலும் நீதானே இப்போது வேண்டாம் என்கிருய்?''

''அப்பாவுக்கு இப்போதெல்லாம் அரசியலைத் தவிர வேறு சிந்தனையே கிடையாது. மகாராஜா ரங்கராயர் சந்திரகிரிக் கோட்டையிலே கைதியாகிக் கஷ்டப்படுகிருர். அப்பாவோ இங்கே அவர் நினைவாகவே ஊணுறக்கமின்றி உருமாறிப் போய்க் கொண்டிருக்கிருர்.''

''உண்மைதான், மன்னரை விடுவிக்காத வரை உன் தந்தைக்கு எதுவுமே வேம்பாகத் தானிருக்கும். இந்த அரசுரிமைப் போர் முடியாத வரை நமக்கும் ஒரு முடிவு கிடையாதா சாந்தா?''

''குடும்ப விஷயங்களைப் பற்றி அப்பாவிடம் பேசவே பயப்படுகிருர் அம்மாரு. இந்த நிலையில் திருமணம் என்ருல், 'மகிழ்ச்சிகரமான காரியங்களுக்கு இது சமயமல்ல' என்று முற்றுப்புள்ளி வைத்து விடுவார்.''

''நான் கூட நினைப்பதுண்டு. இந்த உப்பலேசன், மன்னரை விடுவித்துக் கொண்டுவந்து அதற்கான பரிசாக உன்னை அடைந்தால் எப்படி யிருக்கும் என்று....ம்'' பெருமூச்செறிந்தான் உப்பலேசன்.

''ஐயோ! அப்படி ஏதாவது விஷப் பரீட்சையிலே சிக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் இல்லாவிடில் எனக்கு வாழ்வே இல்லை'' என்று அவன் தோளிலே துவண்டாள் மலர்க்கொடியாள் சாந்தகுமாரி.

''இன்னும் எத்தனை நாளைக்கு நாம் இப்படியே இருப்பது? மலரும் மணமுமாக வீணையும் நாதமுமாக என்று நாம் ஒன்று சேருவது?'' ஏக்கப் பெருமூச்சுக்கள் இணைந்தன.

''காத்திருந்து பெறும் இன்பத்துக்கு இணையே கிடையாது என்று கேட்டிருக்கிறேன். விரைவிலேயே நம் எண்ணம் ஈடேறி விடும். எங்கே மகிழ்ச்சியாகச் சிரியுங்கள், பார்க்கலாம்'' என்று மோகனமாகத் தன் முத்துப் பல்லின் ஒளி சிந்திஞள் சாந்தகுமாரி.

''உன் முல்லை முறுவலை நான் கெஞ்சிப் பெறுமுன் நீ முந்திக் கொண்டு விட்டாயே கண்ணே!'' என்றபடி அவன் அவளை எட்டிப் பிடிக்க முயன்ற போது ''யாரோ வரும் அரவம் கேட்கிறது. நாளை சந்திப்போம்'' என்று துள்ளி ஓடி மறைந்தாள்.

உப்பலேசன் தன் காதலியிடம் சொன்னது போலவே, மன்னரை மீட்கும் சந்தர்ப்பம் அவனுக்கு விரைவிலேயே வாய்த்தது.

கொப்பூரி ஜகராயர் தம் பெரும் படையுடன் செஞ்சிக் கோட்டை அதிபதி கிருஷ்ணப்ப நாயக்கரையும், மதுரை மன்னர் முத்துவீரப்ப நாயக்கரையும் சந்திக்கப் போயிருக்கிருர், சந்திரகிரிகோட்டையில் தலைவன் என்ற தகவல் கிடைத்தது எச்சம்மருக்கு. அதிருப்தி அடைந்துள்ள சிற்றரசர்களையெல்லாம் சந்தித்துப் பலம் தேடக் கிளம்பியிருந்தார் ஜகராயர். கோட்டையிலே உள்ள படை குறைவு. இந்தச் சந்தர்ப்பத்தில் படையெடுத்துச் சென்ருல் சந்திரகிரி சரணடைந்து விடுவது திண்ணம். ஆனுல் தானே படையெடுத்துச் செல்லுவது அறிவுடைய செயலாகாது என்று எண்ணினுர் எச்சம்மர்.

முதலை நீரில் இருக்கும் வரை அதை வெல்ல முடியாததைப் போல எச்சம்மரை அவரது கோட்டையில் இருக்கும் வரை யாராலும் வெல்ல முடியாது.

ஆனுல் இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டாலோ பிறகு அரசரைக் காப்பாற்றவே முடியாமல் போகலாம். திடீர்த் தாக்குதல் நடத்தி வெற்றி காணும் ஒரு மாவீரனை எதிர்பார்த்தார் எச்சம்மர்.



"வெலுகோட்டி வீரர் இந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தால் வெற்றியோடு வருவேன்" என்று முன் வந்தான் வேலூர்க் கோட்டைக்கு அதிபதியான உப்பலேசன். "ஐந்நூறு வீரர்க்கு அதிபதிதானே என்று யோசிக்காதீர்கள். என் ஐந்நூறு வீரரும் அற்புதம் நிகழ்த்துவார்கள்."

"உன் வீரத்திலோ, உன் வீரர்களின் திறமையிலோ நான் சந்தேகம் கொள்ளவில்லை, உப்பலேசா...ஆனால்.." என்று தயங்கினார்.

"ஆனால் என்று அலட்சியங்காட்டாதீர்கள். ரங்கராயரிடம் எனக்குள்ள ராஜ விசுவாசத்தை வெளிப்படுத்த வாய்த்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்க நான் விரும்பவில்லை. உத்தரவு கொடுங்கள். பட்டத்துக்குரிய மன்னரை மீட்டு வருகிறேன்" என்றான் பிடிவாதமாக.


எச்சம்மர் யோசித்தார். ஜகராயர் உப்பலேசனை அலட்சியமாக எண்ணுவார். ஆகவே அவனது தாக்குதலினால் அதிகப் பரபரப்படையமாட்டார். அதையே தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்று தீர்மானித்தவராக "உப்பலேசா, உன் விருப்பப்படியே போய் வா. ரங்கராயரை விடுதலை செய்து வந்தால் உன் அந்தரங்கத்திலுள்ள ஆசையைப் பூர்த்தி செய்கிறேன்" என்றார் புன்சிரிப்புடன். உப்பலேசன் ஒன்றும் புரியாமல் திகைத்தபோது. "உன் உள்ளங் கவர்ந்த சாந்தகுமாரியை உன்னுடையவளாக்கித் தருகிறேன்" என்றார் எச்சம்மர். தங்கள் காதல் அவருக்குத் தெரிந்த விவகாரம் என்பதை அறிந்த போது அவன் வியப்பு அதிகமாயிற்று. உப்பலேசனின் மௌனத்தைத் தொடர்ந்து "சந்திரகிரிக் கோட்டையைத் தாக்கி மன்னரை விடுதலை செய்ததும் எனக்கு மின்னல் வேகத்தில் செய்தி அனுப்பு. உதவிக்கு நான் விரைந்து வருகிறேன்"



பையன் : என்னம்மா இது ! டாக்டர் அம்மா வந்து உனக்கு 'டிரஸ்' பண்ணி விட்டுப் போறாங்களாமே !



" அடியம்மா! நான்பெரியவனாகவே ஆகப் போறதில்லே ! இவ்வளவு பெரிய பூட்சைப் போட்டுக்கொண்டு எவனாலே நடக்க முடியும் ?"



என்றார் எச்சம்மநாயக்கர்.


வேலூர்க் கோட்டைக் கதிபதியான உப்பலேசன், பொறுக்கி எடுத்த வீரருடன் சென்று எதிர்பாராதவிதமாகச் சந்திரகிரியைத் தாக்கினான். எச்சம்மரின் கணக்குச் சரியாக இருந்தது. கோட்டைக் கதவு தகர்ந்தது. உப்பலேசனின் வீரர்கள் அற்புதம் நிகழ்த்தினர். ஜகராயரின் படைகள் சிதறி ஓடின. சிறைச்சாலையை நோக்கி உப்பலேசன் படைகள் முன்னேறின.

போரிலே ஒரு வீரன் உப்பலேசனின் கவனத்தைக் கவர்ந்தான். காரிருளைப் போன்ற குதிரை மீதமர்ந்து காலதேவனைப் போல் வாளை வீசிப் பகைவரைக் கொன்று குவித்து முன்னேறும் அந்த வீரன் யார் என்று மட்டும் உப்பலேசனுக்குப் புரியவில்லை. தன் படையில் பார்த்த ஞாபகமும் இல்லை. ஆனால் அவனது சாகஸம் மகத்தானதாக இருந்தது.

பாதாளச் சிறையிலிருந்து மன்னரை விடுதலை செய்து கொண்டு வந்தார்கள். 'மகாராஜா ரங்கராயருக்கு ஜே' 'ரங்கராயர் வாழ்க' என்ற ஜயகோஷம் வானைப் பிளந்தது.

மன்னர் ரங்கராயரை வணங்கித் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான் உப்பலேசன். "வேலூர் கோட்டைத் தளபதி உப்பலேசன் உங்கள் அடிமை. எச்சம்மரின் இதயம் போன்றவன். தங்களை விடுவிக்கும் பாக்யத்தை அவரிடமிருந்து பெற்றேன். வாருங்கள், அரண்மனைக்குப் போகலாம்" என்றான். தன் சேனாபதி பெத்த வெங்கடேசனைப் பார்த்து "கோட்டை முழுவதையும் நமது வீரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்களல்லவா? ராணியாரையும் குழந்தைகளையும் அந்தப்புரத்துக்கு அழைத்துச் செல்" என்று கட்டளையிட்டுவிட்டு நடந்தான்.

"எச்சம்ம நாயக்கர் எங்கிருக்கிறார்?" என்று கேட்டார் ரங்கராயர்.


உலகிலேயே
மிக உன்னதத்
தயாரிப்பு!
கன் டிரில்
டைப் EG2c
3/8" ஹெவி டியூட்டி டிரில்
டைப் WD3c
Wolf
ELECTRIC DRILLS
Unapproached for POWER
PENETRATION SPEED
DEPENDABILITY
ஜெனரல்
டியூட்டி டிரில்
டைப் SD4c
5/8" ஹெவி டியூட்டி
டிரில்
டைப் WD5c
ஹெவி டியூட்டி
டிரில்
டைப் NW10
உல்ப்
மின்சாரக்
Wolf
கருவிகளையே வற்புறுத்திக் கேளுங்கள்
விற்பனைக்குப் பின் சிறந்த சேவை
விவரங்களுக்கு இன்றே எழுதுங்கள்
அங்கீகரிக்கப்பட்ட டீலர்கள்
இந்தியா முழுவதும் உள்ளனர்
Wolf
இந்தியாவில் தயாரிப்பவர்கள்: ராலீஸ்உல்ப் லிட்.
பூரண விநியோகஸ்தர்கள்: ராலீஸ் இந்தியா லிமிடெட்
பம்பாய் · கல்கத்தா சென்னை புது தில்லி


செக் எழுதும் கை
யாருடையது?
நிச்சயம் இந்தியன் பாங்க்
லிமிடெட்டின் பெருமை
வாய்ந்த ஒரு வாடிக்கை
யாளருடையதுதான்......
ஆசிரியராயினும்—மாணக்கராயினும்—
உத்தியோகஸ்தராயினும்—குமாஸ்தாவாயினும்
தொழிலதிபராயினும்—தொழிலாளியாயினும்
அரசியல்வாதியாயினும்—வர்த்தகராயினும்
இந்தியன் பாங்க் லிமிடெட்டின் பரிபூரணமான சேவையைப்
பயன்படுத்தும் ஓர் சேமிப்பாளர் என்பதில் சந்தேகமில்லை.
G. S. சுந்தரம்
இந்தியன் பாங்க் லிட்.
"இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ்" சென்னை-1.

தான் விடுதலை அடைந்ததை அவரால் நம்பவே முடியவில்லை.

''அவர் கோட்டையை விட்டு வெளிவர முடியாத நிலையிலிருக்கிறார். என் வெற்றிச் செய்தி கிடைத்ததும் படைகளுடன் உதவிக்கு விரைந்து வருவதாகச் சொல்லி யிருக்கிறார்'' என்றான் உப்பலேசன்.

''உடனே செய்திஅனுப்பு. தோல்வி கேட்டு ஜகராயன் துள்ளி வருவதற்குள் எச்சம்ம நாயக்கர் இங்கு வந்து விட வேண்டும்'' என்றார் மன்னர்.

''நீங்கள் அரண்மனைக்குப் போய்க் களைப் பாறிக் கொண்டிருங்கள். நாளைக் காலையி லேயே உங்களைச் சிங்காதனத்திலேற்றி வைக்க எச்சம்மர் இங்கிருப்பார். நான் கோட்டைப் பாதுகாப்பைக் கவனிக்கப் போகிறேன்'' என்று விடை பெற்றான் வேலூர்க் கோட்டை யின் அதிபதி.

''வெற்றிப் போதையிலே விளையாட்டாக இருந்து விடாதே. இத்தனை நேரம் செஞ்சிக் கோட்டைக்குச் செய்தி பறந்திருக்கும். ஜக ராயன் புயலாக வருவான், புரிந்ததா?'' என்றார் ரங்கராயர். இந்த விடுதலையாவது நிலைக்க வேண்டுமே என்ற கவலை அவருக்கு. அனுபவப் பட்டவராயிற்றே!

பாசறையிலே பெத்தவெங்கடன் எச்சம்ம ருக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தான்.

''வேலுகோட்டி எச்சம்மருக்கு உப்ப லேசன் வீர வணக்கம் செய்து தெரிவித்துக் கொள்ளுவதாவது: மேற்கொண்ட பணியிலே வெற்றி கண்டேன். மன்னரும் விடுதலை பெற் றார். ஜகராயர் தனது கடலன்ன படையுடன் காற்றென வருவதாகச் செய்தி கிடைத்திருக் கிறது. எதிர்க்கத் தாங்கள் உடனே வரவேண் டும். அரசரை அழைத்துக் கொண்டு சந்திர கிரியை விட்டுக் கிளம்பி வரலாம் என்றாலும் வழியிலே ஜகராயரின் படையைச் சந்தித்துச் சமாளிக்க என் சிறு படையினால் முடியாது. மறுபடியும் அரசரை அந்தக் கயவன் கையில் கைதியாக்க விரும்ப வில்லை. சந்திரகிரிக் கோட்டையிலேயே தங்கள் வரவை எதிர் பார்த்துக் காத்திருக்கிறேன்.''

எழுதி முடித்து உப்பலேசனிடம் கையொப் பம் வாங்கினான். யாரிடம் கொடுத்தனுப்பு வது என்ற பிரச்னை எழுந்தது.

''காற்றிலும் கடிதாகப் போகக் கூடிய வீரன் வேண்டும்'' என்ற உப்பலேசனுக்குக் காலையில் பார்த்த கருப்புக் குதிரை வீரனின் நினைவு வந்தது. அவனை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். சற்றைக்கெல்லாம் அந்த வீரன் உப்பலேசன் முன் வந்து நின்றான்.

''வீர வாலிபனே, உன் பெயரென்ன? என் படையில் நீ எப்போது சேர்ந்தாய்? உன்னைப் பார்த்ததாகவே நினைவில்லையே?'' என்றான் உப்பலேசன்.

''என் பெயர் — '' என்று சற்றுத் தடுமாற் றத்துக்குப் பின், ''சத்தியதேவன். வெகு நாட்களாகத் தங்கள் படையில்தான் இருக் கிறேன்'' என்றான் இளைஞன். அவனது இள மீசை அழகாக இருந்தது.

''சத்தியதேவனா?'' அந்தக் குரல் பழக்கப் பட்டது போலிருந்தது. ஆனால் சிந்திக்க அவ காசமில்லை. ''சரி, வீரனே! அவசரமான செய்தி. இதை உடனே எச்சம்ம நாயக்க ரிடம் சேர்ப்பிக்க வேண்டும். அதற்கு நீயும்

# சித்திரை வந்தாளே!

★

வண்ணமதுக் கிண்ணியில்தேன்
வார்க்க வந்தாளே !—உடன்
எண்ணமதுக் கிண்ணியில்வான்
ஈர்க்க வந்தாளே !

துள்ளுமலை வெள்ளத்தில்பொன்
துளிர்க்க வந்தாளே !—உடன்
இன்னுமின்ப வெள்ளம்கிளு
கிளுக்க வந்தாளே !

மாந்தளிரில் பூந்தளிர்கள்
மயங்க வந்தாளே !—உடன்
வார்ந்தமுகில் கூர்ந்தமனம்
வயங்க வந்தாளே !

வேம்புகூடத் தேன்பூவாகி
விரும்ப வந்தாளே !—உடன்
ஆம்பலோடு கூம்புமல்லி
அரும்ப வந்தாளே !

குன்றுகளில் நின்றுவளம்
கொழிக்க வந்தாளே !—உடன்
தென்றல்மணக் கின்றபன்னீர்
தெளிக்க வந்தாளே !

சித்திரமும் கைத்திறமும்
சிறக்க வந்தாளே !—கொலு
இத்தினமே சித்திரையும்
இருக்க வந்தாளே !

— தமிழழகன்



உன் குதிரையுமே ஏற்றவர்கள் என்று தீர்மானித்து இதை உன்னிடம் ஒப்படைக்கிறேன்'' என்று லிகிதத்தை நீட்டினான் வேலூர்க் கோட்டை அதிபதி.



''கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன்'' என்று கடிதத்துடன் வெளியேறினான் வீரன். அவன் குரல் உப்பலேசனை அலைக்கழிக்க வாரம்பித்தது. இனம் தெரியாத ஏதோ ஒரு குழப்பம் புகுந்து கொண்டது. எழுந்து உலாவத் தொடங்கினான். ஏதோ காலில் தட்டுப்பட்டது. குனிந்து கையிலெடுத்தவனின் முகம் வியப்பில் விரிந்தது. ''ஆஹா!'' என்று கத்தி விட்டான். ''பெத்த வெங்கடா! அந்த வீரன் போய்விட்டானா?'' என்று கேட்டான்.

''இத்தனை நேரம் நெடுந்தூரம் போயிருப்பானே. ஏன் அரசே?'' என்றான் பெத்த வெங்கடன். உப்பலேசன் முகத்தில் காணப்பட்ட பரபரப்பு அவனிடமும் பரவியது.

''ஒன்றுமில்லை. என் குதிரையைக் கொண்டு வா, சீக்கிரம். நீயும் என்னைப் பின்தொடர்ந்து வர வேண்டும்'' என்று விரைவாக்கினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் உப்பலேசனும் பெத்த வெங்கடனும் கருப்புக் குதிரை வீரனை அணுகிக் கொண்டிருந்தார்கள். தன்னைத் தொடரும் குதிரைவீரர்களைக்கண்டு சந்தேகங் கொண்டு அவன் தன் குதிரையை முடுக்கினான்.

''வீரனே நில். நில்'' என்று குரல் கொடுத்தான் பெத்த வெங்கடன். கடைசியில் இருவரும் அவனைப் பிடித்து விட்டார்கள்.

''பெத்த வெங்கடா, எச்சம்மரிடம் நீயே போய் வா. நிலைமையை நேரில் விளக்கி உதவியுடன் உடனே வா'' என்று தன் சேனாபதிக்கு உத்தரவிட்டான் உப்பலேசன்.

''அரசே, இந்தப் பணியை நானே ஏற்றுச் செய்கிறேன். என்னை அனுமதியுங்கள்'' என்றான் சத்தியதேவன்.

ஆனால் உப்பலேசன் அவனுக்குப் பதில் கூறவில்லை. ''பெத்தவெங்கடா, நீ தாமதிக்காதே. சீக்கிரம் கிளம்பு'' என்று விரைவுபடுத்தி அனுப்பினான். அவன் குதிரை கண்ணுக்கு மறைந்த பிறகு கலகலவென்று சிரித்தான் உப்பலேசன். பிறகு தன் முன்னால் நிற்கும் சத்தியதேவனைப் பார்த்து ''இத்தனை அற்புதமாக வேஷம் போட்டுக் கொள்ள யாரிடம் கற்றுக் கொண்டாய் சாந்தா?'' என்று கேட்டான்.

''அரசே. என்னையா கேட்கிறீர்கள்?'' என்றான் சத்தியதேவன் தடுமாற்றத்துடன்.

''உன்னையேதான் சாந்தகுமாரி! இனியும் என்னை ஏமாற்ற முடியாது. எங்கே அந்தத் தலைப்பாகையை எடு. உன் கற்றைக்குழலைக் கண்குளிரப் பார்க்கிறேன். உன் அழகில் மயங்கினேன். உன் இனிய குரலிலே மெய்ம் மறந்தேன். இன்று உன் வீரத்தையும் கண்டு வியப்படைந்தேன்'' என்று சொல்லியபடியே அவன் அருகில் சென்று தலைப்பாகையை எடுத்தான். கருநாகம் போன்ற கருங்குழல் முதுகிலே சரிந்து விழுந்து சத்தியதேவனைச் சாந்தகுமாரியாக்கியது.

''என் வேஷத்தை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்....?''

''நான் உனக்களித்த மோதிரமெங்கே?''

தன் கையைப் பார்த்துக் கொண்ட சாந்தகுமாரி திடுக்கிட்டவளாக, ''காணுமே! போர்க்களத்தில் எங்கோ நழுவி விழுந்திருக்க வேண்டும்'' என்றாள்.

''சகுந்தலையிலிருந்தே பெண்கள் மோதிரத்தைப் பறிகொடுத்து விட்டு விழிக்கிறார்கள்'' என்று சிரித்தான் உப்பலேசன். அவளை அணைத்துக் கொண்டே ''என்னிடமிருந்து விதம்பெற இரும்புக் கையுறையைக் கழற்றினாயே, நினைவிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''ஆமாம்...''

''அப்போது இந்த மோதிரம் கழன்று விழுந்து விட்டது. பிறகு உன்னை அறிவிக்க இது என் கால்களைத் தொட்டது. சாந்தகுமாரி இது என்ன துணிச்சல்? இப்படி நீ போர்க்களத்துக்கு வரலாமா? இது உன் தந்தைக்குத் தெரியுமா?'' அலைபோலப் புரளும் அவளது கேசத்தை அன்புடன் வருடியபடியே கேட்டான் உப்பலேசன்.

''நான் உங்களோடு பேச மாட்டேன். என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட அல்லவா யுத்தத்துக்குக் கிளம்பிவிட்டீர்கள்?'' என்று அவன் உடலோடு ஒட்டிக்கொண்டாள் சாந்தகுமாரி.

''விடை கேட்டிருந்தால் நீ என்னை விட்டிருக்க மாட்டாயே.''

''உங்களைப் பிரிந்திருக்க என்னால் முடியுமா? அதனால்தான் ஆண் வேடம் பூண்டு அப்பாவுக்கும் தெரியாமல் உங்களைத் தொடர்ந்து ஓடி வந்து விட்டேன்'' என்று தன் மதி முகத்தை நிமிர்த்தி மந்தகாசமாகச் சிரித்தாள் மங்கை.

அதே சமயம் தூரத்தில் பேரிரைச்சல் கேட்டது. குதிரைகளின் குளம்பொலி தடதடவென்று ஒலித்தது. புழுதிப் படலத்துக்கு மேலே ஐகராயனின் கொடியைக் கண்டான் உப்பலேசன். அவன் உடல் பதறியது.



''சாந்தா! ஐகராயனின் படை வெள்ளம் போல் வருகிறது. சீக்கிரம் குதிரை மேல் ஏறு. கோட்டைக்குள் சென்று விடலாம்'' என்று அவளைத் தூண்டினான். ஆனால் அதே

சமயத்தில் உப்பலேசனை நோக்கிச் சீறி வரும் குத்து வாளொன்றைக் கண்டு விட்டாள் சாந்தா. ''அத்தான் ஆபத்து!'' என்ற அவள் வார்த்தைகள் முடியுமுன்னே வாளைத் தன் மார்பில் தாங்கிக் கொண்டாள்.

''ஐயோ சாந்தா! கண்ணே, இதற்காகவா உன்னைப் போகாமல் தடுத்து நிறுத்தினேன்?'' துவண்டு விழும் அவளைத் தாங்கிப் பிடித்த படியே புலம்பினான் உப்பலேசன். அதே சமயம் அவன் முதுகிலும் ஒரு குத்துவாள் பாய்ந்தது.

''ஆ...ஐயோ! அட பேடி! வீரமில்லாதவனே. பின்னால் வந்து குத்துவது தான் யுத்த முறையா?'' என்று கூறிய படி தன் காதலியை அணைத்தபடி அவன் மேலேயே விழுந்தான். இருவரது ஆவிகளும் பிரிந்தன. அந்தக் காதல் மலர்களை அழித்த வெறியோடு வெற்றியை நோக்கி முன்னேறின ஜகராயரின் படைகள்.



முடிவைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? விதியின் பிடியிலிருந்து ரங்கராயரை விடுவிக்கவே முடியவில்லை. மறுபடி கைதியாக்கப்பட்டு ஜகராயரின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப் பட்டபோது ரங்கராயர் தலைநிமிரவே இல்லை. வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. பேசுவதற்கு என்ன இருக்கிறது? தான் வாழப் பிறக்கவில்லை என்ற எண்ணம் உறுதிப்பட்டபின் வாய்திறக்க வழியேது?

தன் அருமை மகள் சாந்த குமாரியும், அன்புக்குப் பாத்திரமான உப்பலேசனும் உயிரிழந்த செய்தி கேட்டு: எதையும் தாங்கும் இதயம் படைத்த வெலுகோட்டி எச்சம்ம நாயக்கர் துடித்துப் போனார்.

ரங்கராயர் இருக்கும்வரை எச்சம்ம நாயக்கரின் தொல்லையும் இருந்து கொண்டே இருக்கும் என்ற முடிவுக்கு வந்த ஜகராயர், ரங்கராயரைத் தன் தம்பி எதிராஜின் கையில் ஒப்படைத்தார். அன்றைக்கே அவரது உயிரைக் குடிக்க வாளை உருவியவனாயிற்றே அந்த எதிராஜ்?

மன்னர் ரங்கராயர் தம் மனைவி மக்களுடன் உட்கார்ந்திருந்தார். இனி என்ன நடக்கும் என்பதை அறிந்துதான் அதை எதிர்பார்த்துத்தான் உட்கார்ந்திருந்தார். அப்போது எதிராஜ் எமனைப் போல வந்தான்.

''மகாராஜாதிராஜ ரங்கராயரே! இப்போது நான் எதற்காக வந்திருக்கிறேன் தெரியுமா?'' என்றான் ஏளனமான நகைப்புடன்.

''தெரியும். நானும் உன்னை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இனியும் உயிர் சுமந்து வாழும் விருப்பம் எனக்கில்லை.''

''நீ விரும்பினாலும் இனி வாழ முடியாது. தப்பிப் பிழைக்கவும் மார்க்கமில்லை. சீக்கிரம் சொல். எந்தவிதமான மரணத்தை விரும்புகிறாய்? என் கையினாலா அல்லது....''

''கவரி மான் தன் உடலிலிருந்து ஒரு ரோமத்தை இழந்தாலும் உயிர் தரியாது. உடை வாளை வைத்து விட்டுப் போ வெளியே. சற்று நேரத்தில் உன் எண்ணம் நிறைவேறி இருப்பதைக் காண்பாய்'' என்றார் ரங்கராயர்.

உடைவாளை வைத்து விட்டு ''இறக்கும்போது கூட இறுமாப்புப் போகவில்லை'' என்று முனகிய படியே அங்கிருந்து வெளியேறினான் எதிராஜ்.

அவன் போனதும் 'தேவி' என்று அழைத்தார் மாஜி மன்னர் ரங்கராயர்.

''பிராணநாதா! நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். எல்லாவற்றையும் நான் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். கண் கலங்குவது உங்களைப் போன்ற வீரர்க்கு அழகல்ல'' என்றாள் பத்தினி.

''மரணத்தைக் கண்டு நான் பயப்படவில்லை தேவி. என்னை மணந்ததால் உனக்குத் துன்பமே வாழ்வாகப் போய் விட்டதே என்பதை எண்ணித்தான் வேதனைப் படுகிறேன்.''

''மரணத்திலும் கூடத் தங்களை விட்டுப் பிரியாமல் இருக்கும் வாய்ப்புப் பெற்றுள்ள நானே பாக்கியவதி. இந்தச் சிறை வாழ்விலிருந்து எனக்குச் சீக்கிரம் விடுதலை அளியுங்கள் பிரபோ!'' என்றாள் மலர்ந்த முகத்துடன். அவள் கண்கள் கலங்கக்கூட இல்லை.

''முடியாது தேவி. என் கைகளால் நான் உன்னைக் கொல்ல மாட்டேன். அது என்னால் ஆகாது.'' விம்மினார் அரசர். ''ஐயோ! எத்தகைய துர்ப்பாக்கியசாலி நான்?'' என்று கவினார்.

''அத்தான்! என் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுங்கள். உங்கள் திருமுகத்தைப் பார்த்துக் கொண்டே நான் இறக்கவேண்டும். என் குழந்தைகளும் நீங்களும் உயிரோடிருப்பதைப் பார்த்துக் கொண்டே மஞ்சளும் குங்குமமுமாக என்னை அனுப்பி வையுங்கள்'' என்று கெஞ்சினாள் தேவி. அவள் நெற்றியில் ரத்தமாக மின்னியது குங்குமம்.

''என்னை இத்தனை கொடியவனாக்கி விட்டதே இந்த விதி'' என்று விக்கி விக்கி அழுதார் ரங்கராயர்.

''கொடியவர் நீங்களில்லை பிரபோ. குடும்பத்தின் தலைவர் என்பதனால், என் மானத்தைக் காக்கும் கணவர், என் சுக துக்கங்களில் அக்கறை கொண்டுள்ள மணாளர் என்பதனால் கேட்கிறேன். எங்கே அப்படியே குத்துவாளைக் கையில் ஏந்தியபடி நில்லுங்கள். கடைசி முறையாக உங்களை ஒரு முறை கண் குளிரத் தரிசித்துவிட்டு...''

தரிசித்தாள். தழுவியும் கொண்டாள். மன்னரின் கையிலிருந்த வாளும் அவளைத் தழுவியது. சற்று முன்பு விம்மி அழுதவர் இப்போது பிரமை பிடித்தவர் போல நின்றிருந்தார். வேதனை மரமாக்கி விட்டது அவர் மனத்தை. தந்தையின் செயலை எதிர்பார்த்து மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள், இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும். பட்டத்து இளவரசனும் இளையவனும் சிரித்த முகத்துடன் சாவைத் தழுவினார்கள். ஒரு முனகல் கூட இல்லை. செல்வ மகளையும் தாய்க்குத் துணையாக்கினார். கடைசிப் பெண் லக்ஷ்மம்மாவும் நிலை குலையாமல் நின்று கொண்டிருந்தாள். இத்தனை நேரமும் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு நான்கு உயிர்களைப் பலி கொடுத்த மன்னர் லக்ஷ்மம்மாவைக் கண்டதும் 'கோ'வென்று கதறி விட்டார். அவரது உள்ளங் கவர்ந்த குழந்தை அவள். குறுகுறுத்த கண்கள். கொவ்வைக் கனி இதழ். மழலை கொஞ்சப் பேசுவதைக் கேட்டு மகிழ்ந்தவர்.




''ஐயோ! உங்களை எல்லாம் என் கைகளாலேயே கொன்று குவிக்கவா பெற்றேன்?'' உள்ளம் வெடிக்கப் புலம்பினார். ''கண்ணே லக்ஷ்மம்மா! உன்னை நான் கொல்ல மாட்டேன். பாபக்கறை படிந்த இந்தக் கரங்களால் புனிதமான உன் உயிரை நான் பறிக்க மாட்டேன்'' என்று வாளை வீசி எறிந்து விட்டு அவளை வாரி அணைத்து உச்சி முகர்ந்து, முத்தமிட்டுக் கீழே விட்டார். ''அப்பா என் அண்ணாவுக்கும் அக்காவுக்கும் கிடைத்த பாக்கியம் எனக்கு மட்டும்கிடைக்கக்கூடாதா? என்னையும் கூட்டிச் செல்லுங்களப்பா'' என்றாள் குழந்தை, தந்தையின் நடுங்கும் கால்களைப் பிடித்துக் கொண்டே.

''முடியாது...முடியாது! விலகிப் போ'' என்று சொல்லியபடியே வெறி கொண்டவராக ஓடிச் சென்று கீழே கிடந்த உடைவாளை எடுத்துத் தன் உடலில் பாய்ச்சிக் கொண்டு மனைவியின் அருகிலே போய் விழுந்தார்.

''அப்பா...அப்பா....என்னைப் பாரப்பா! என்னைத் தனியாக விட்டு விட்டுப் போய் விட்டாயே அப்பா!'' என்று விக்கினாள் லக்ஷ்மம்மா. ஆனால் அவளையும் விடவில்லை கொலைபாதகன் எதிராஜ். ரங்கராயரின் வமிசத்தையே பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டவன். குழந்தை லக்ஷ்மம்மாவைத் தந்தையோடு அனுப்பி வைத்தான்.

ரங்கராயரின் வமிசத்தைப் பூண்டோடு அழித்து விட்டதாகக் கொப்பூரி ஜகராயர் பூரிப்படைய முடியவில்லை. எச்சம்மரின் பொறுப்பில் ரங்கராயரின் ரத்தத்தின் ரத்தமான ராமதேவராயன் இருப்பதை அவரால் மறந்து விட முடியுமா?

விதியின் கைகளிலிருந்து மன்னரை விடுவிக்கப் படாத பாடுபட்டார் வெலுகோட்டி எச்சம்மநாயக்கர். அவரது முயற்சிகள் எல்லாம் மன்னரை மரணத்தின் வாயிலுக்கே தான் கொண்டு போய்விட்டன. அவரது வாழ்வு முடியத் தானே காரணமாகி விட்டதை எண்ணி எண்ணி உள்ளம் புண்ணானார்.

ரங்கராயரின் குடும்பத்தைக் கொப்பூரி ஜகராயர் கொடூரமாகக் கொன்ற பரிதாபத்தைக் கேட்ட பாளையக்காரரில் பலர் கொதிப்படைந்தார்கள். குழந்தை ராமதேவராயனைச் சந்திரகிரி சிங்காதனத்தில் ஏற்றாமல் வாளை உறையில் போட மாட்டேன் என்று வீர சபதம் செய்திருக்கும் எச்சம்மரின் பக்கம் ஒவ்வொருவராக வந்து சேரலானார்கள். தஞ்சாவூர் மன்னர் ரகுநாத நாயக்கரின் உதவியும் கிடைத்தது.

அறுபதினாயிரம் பேர் கொண்ட ஜகராயரின் பெரும் படையை இருபதினாயிரம் பேர் கொண்ட எச்சம்ம நாயக்கரின் படைகள் எதிர்த்தன. வெற்றி நிச்சயம் என்ற இறுமாப்புடனிருந்தஜகராயரின் படைகளை வீராவேசத்துடன் எதிர்த்த எச்சம்மரின் படைகள் சிதறி ஓடச்செய்தன. ஜகராயரின் பாசறையிலே வெற்றிமுழக்கத்துடன் நுழைந்தார்எச்சம்மர்.

ரங்கராயரின் மரணத்துக்குப் பிறகு தான் இந்த வெற்றி கிடைக்க வேண்டுமென் றிருக்கும் போது யார் என்ன செய்ய முடியும்?

சபதத்தை நிறைவேற்றி விட்டார் வெலுகோட்டி வீரக் கிழவர். வெங்கடராயரின் வீர வாளையும் மணிமகுடத்தையும் ஜகராயரிடமிருந்து பறித்துக் கொண்டு அவரை நாட்டை விட்டே ஓட்டினார். ராமதேவராயனைச் சந்திரகிரி சிங்காதனத்திலே அமர்த்திய போது எச்சம்மரின் கண்கள் அருவியாயின. அது ஆனந்தக் கண்ணீரா; அல்லது, ரங்கராயரைக் காப்பாற்ற முடியாமல் எழுதிச் சென்ற விதியின் கை அவர் இதயத்திலே என்றும் ஆறாத புண்ணைக் கீறிச் சென்றதே அதிலிருந்து பெருக்கெடுத்த கசிவா; அல்லது தன் அருமை மகள் சாந்தகுமாரியை அரசியல் சுழலில் பறிகொடுத்ததை எண்ணி வடித்த கண்ணீரா என்பதை யாரும் சொல்ல முடியாது தான். என்றாலும் இத்தனைக்கும் காரணமாக இருந்த ஜகராயரின் புது சாம்ராஜ்யத்தையே கரைத்துவிட்ட ராஜ விசுவாசப் பெருக்கின் ஓர் ஊற்றுதான் அது என்பதைச் சரித்திர வல்லுநர்கள் சொல்வார்கள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited. at the Kalki Press. Kilpauk. Madras-10
Managing Editor. T. Sadasivam.

# கவுரவத்தைக் கொடுக்கக் கூடிய துணிகள் —



## டெட்டினுல் சலவை செய்யப்பட்டதே

- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசமாகத் தோற்றமளிக்கும்.
  டெட்டின் சிறந்த சுத்திகரிப்புச் சலவை உங்களுடைய ஆடைகளைப் புத்தம்புதியதுபோல் பிரகாசிக்கச்செய்கிறது.
- டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் மிக வெண்மையாகத் தோற்றமளிக்கும்.
  டெட் ஆடைகளைச் சுத்தமாகவும், பிரகாசமாகவும் வெளுக்கும் சிறந்த பரிசுத்தகாரணி. டெட்டினுல் துவைக்கப்பட்ட துணிகளுடன் நீலத்தையோ அல்லது வெண்மையாக்கும் பொருளையோ சேர்க்கவேண்டிய தேவையில்லை. காரணம் கண்கவரும் வெண்மையைத்தரும் பொருள் டெட்டில் அடங்கியுள்ளது.
- டெட்டினுல் சலவை செய்தல் என்பது நவீன முறையில் சலவை செய்யப்படுவது என்பது பொருள்.
  வென்னீரிலும், வெள்ளீரிலும் டெட்டை உபயோகித்து நன்கு சலவை செய்யலாம். டெட் அபரிமிதமாக நுரை தருகிறது. காட்டன், ஸில்க், ரேயான், கம்பளி [illegible] அல்லது கலர்த்துணிகள்—எல்லாவிதமான ஆடைகளுக்கும் டெட்டைத் தாராளமாக உபயோகிக்கலாம்.

டெட் வெண்மையாகவும் பளபளப்புடனும் சலவை செய்கிறது.




Shilpi Sem 21 TAM

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்—1.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon




'அழகுவில்லைகளாம்,
அதுபோலே
அழகுவண்ணங்களாம்!
என்கிறார் அழகுக் கலைச்செல்வி
சாவித்திரி




சினிமா நட்சத்திரங்களின் தூய, மென்மைகுலவும் அழகுசாதன சோப்.

LTS. 113-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.